Series 9

ஆகமச் செல்வம்

தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர்
'சிவாகம வித்வான்' 'சிவாகம ரத்னாகரம்' 'சிவாகமவித்வன்மணி'

அமரர் சிவபுரம் **S. சுவாமிநாத சிவாசார்யார்**

அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு



வெளியீடு

சைவாதிகார சேனா

2021



மணிவிழா தம்பதிகள்

சிவஸ்ரீ M. மதுரநாயக பட்டர் (எ) செல்வம் பட்டர்

ஸ்ரீமதீ. S. உமா மகேச்வரீ

அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் திருக்கோயில். மதுரை.

ஆகமச் செல்வம்

தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர்
'சிவாகம வித்வான்' 'சிவாகம ரத்னாகரம்' 'சிவாகமவித்வன்மணி'
அமரர் சிவபுரம் S. சுவாமிநாத சிவாசார்யார் அவர்கள் எழுதிய
கட்டுரைகளின் தொகுப்பு

மதுரை ஸ்ரீமீனாக்ஷி–ஸுந்தரேச்வரர் திருக்கோயில் அர்ச்சகர்

சிவஸ்ரீ M. மதுரநாயக பட்டர் (எ) செல்வம் பட்டர்

சிவஸ்ரீமதீ S. உமாமஹேச்வரீ

தம்பதிகளின்

மணிவிழா மலர்

வெளியீடு

சைவாதிகார சேனா

2021

நூல் விளக்கக் குறிப்பு

நூல் பெயர்	ஆகமச் செல்வம்
ஆசிரியர்	சிவபுரம் S. சுவாமிநாத சிவாசார்யார்
பொருள்	ஆசிரியரின் கட்டுரைத் தொகுப்பு
பதிப்பாசிரியர்	சிவஸ்ரீ G. கார்த்திகேய சிவம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.
மொழி / லிபி	ஸம்ஸ்க்ருதம் / க்ரந்தம்
தாள் /	மேப்லித்தோ 80GSM NS
அளவு	1/8 டெம்மி
ஆண்டு	முதல் பதிப்பு 2021
பக்கங்கள்	248 + 68 = 316
விலை	ரூபாய் 300
ப்ரதிகள்	1000
எழுத்து	11 புள்ளிகள்
ஒளி அச்சு	சிவஸ்ரீ S. விவேக் பட்டர் M.A, மதுரை. சிவஸ்ரீ G. கல்யாணஸுந்தர சிவம், பெங்களூர். ஸௌ K. ஆர்த்தி கார்த்திகேய சிவம், திருப்பரங்குன்றம். குமாரீ K. மனோன்மனி, ஈரோடு. சிவஸ்ரீ அருள்நந்தி சிவம், திருவொற்றியூர். சிர J. விஷ்ணு சிவம், பாக்கம். சிர S. ஸ்ரீசைலேச சிவம், ஊட்டி. சிர K. சுவாமிநாத சிவம், விருத்தாசலம். சிர S. ஸ்ரீராம் சிவம், பொள்ளாச்சி. சிர G. நல்லசிவம், கோவை.
அச்சிடல்	ஸ்ரீ ஸ்வாமிநாதன், ஹைலைட் கிராபிக்ஸ் மதுரை.
வெளியீடு	சைவாதிகார சேனா, சென்னை.

ஸமர்ப்பணம்

தருமையாதீனத்தின் வேதசிவாகம பாடசாலையில்
1942 முதல் 1989 வரை 47ஆண்டுகள்
தலைமை ஆசிரியராக விளங்கி
பல நூறு சிவாகம வல்லுனர்களை உருவாக்கியவரும்,
சிவபுரம் திருத்தலத்தைச் சார்ந்தவரும்,
சிவாகமக் கிரியைகள் பலவற்றைப் புதுமைப்படுத்திச்
செய்துகாட்டியவரும், சிவாகமவித்வான், சிவாகம ரத்னாகரம்,
சிவாகம வித்வன்மணி, சிவாகமச் செம்மல் போன்ற பல
பட்டங்களைப் பெற்றவருமான சிவாகமப் பேராசான், அமரர்
சிவபுரம் சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசார்யார்
அவர்களின் திருவடிக் கமலங்களில்
இம்மலரை ஸமர்ப்பித்துப் போற்றி வணங்குகிறோம்.

\- ஆதிசைவ வித்யார்த்திகள்

குருவந்தனம்

ஶ்ரீகண்ட²-த்³ருஹிணோபமந்யு-தபந-ஸ்கந்தே³ந்த்³ர-நந்த்³யாத³ய:
ப்ராசீநா கு³ரவோ(அ)பி யஸ்ய கருணாலேஶாத்³ க³தா கௌ³ரவம் ।
தம் ஸர்வாதி⁴கு³ரும் மநோஜ்ஞவபுஷம் மந்த³ஸ்மிதாலங்க்ருதம்
சிந்முத்³ராக்ருத-முக்³த⁴பாணி-நளிநம் சித்தே ஶிவம் குர்மஹே ॥

- க, ஶிவதத்த்வவிவேக:, ஶ்ரீஅப்பய்ய தீ³க்ஷித:

திருமால் இந்திரன் பிரமன் உபமனியன்
தபனன் நந்தி செவ்வேளாதித்
தரும முது குரவருக்கும் தனதருளால்
ஆசிரியத்தலைமை நல்கி,
வரும் எவர்க்கும் முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்
கைம்மலரும் வாய்ந்த,
உருவழகும் குறு நகையுங்காட்டி
அருள் தரும் சிவனை உளத்தில் வைப்பாம்

- பா.எ 3, சிவதத்துவ விவேகம் மாதவ சிவஞான சுவாமிகள், மொழிபெயர்ப்பு

மூர்த்தி தலம் தீர்த்தம் இவை முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

– ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள்

[1]ச ஊாஈணூூம் விநதவிஙுயம் ஶீதாஈபெரூபஞ வாவீம்
வநெ ஸாஜ்ஷம் ஶிவகுஈஈவஈம் ஶுஹுஹூஉாஈஸெவூ௴।
விஷூயூூஂஸம் விநதஸுவஉம் விஷூஈாஜம், விஶாவம்
ஶக்திஙநூம் விதாஈணவாஈம் சாஷ௲க்ஷூஷ௲ஸிஃஃ॥

தேவர்கள் வணங்கும் சம்பகாரண்ய க்ஷேத்ரத்தையும், சந்த்ரபுஷ்கரிணியையும், வெள்ளைப்பன்றியால் பூஜிக்கப்பட்ட சிவகுருநாத சுவாமியையும், வணங்குபவர்களுக்கு சுகத்தைக் கொடுப்பவரான விநாயகரையும், இருசக்திகளை உடையவரும், அஷ்டலக்ஷ்மீ அஷ்டஸித்திகளைக் கொடுப்பவருமாகிய முருகக் கடவுளையும் வணங்குகிறேன்.

---

[1]இந்நூலாசிரியர் அவர்களால் தொகுக்கப்பட்டு தருமை ஆதீனத்தின் மூலமாக 1951ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹம்" என்ற நூலை சிவபுரம் திருத்தலம், மூர்த்தி, தீர்த்தம் மூன்றையும் முறையாக வணங்கித் தொடங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த ச்லோகம் உணர்த்துகிறது.

உ

<u>சிவமயம்</u>

திருக்கயிலாயப்பரம்பரைத் தருமை ஆதீனம்
27–ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த
பரமாசாரியசுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001.

குருபாதம்

"ஞாலம் நின்புகழேமிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

ஆசியுரை

பற்றது பற்றின் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
இற்ற விரகின் இளர் ஒளி வானவர்
கற்றவர் பேரின்டம் உற்ற நின்றாரே.

சைவசமயத்தின் வளர்ச்சிக்கு பெரும் பலமாகவும், பாலமாகவும் இருப்பவைகளில் சைவ சமயத் தொடர்புடைய நூல் என்பது இன்றியமையாததாக விளங்குகிறது.

ஓர் நூல் பல ஆண்டுகளுக்கு ஒப்பானது ஓர் நல்ல ஆசான் பல நூல்களுக்கு ஒப்பானவர், அவ்விதம் பல நூல்களுக்கு ஒப்பான நமது தருமபுரம் வேத சிவாகமப் பாடசாலையின் முன்னாள் முதல்வரும், சிவாகம கலாநிதி தெய்வத்திரு S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களின் ஆகம ஞானவிதையானது "ஆகமச் செல்வம்" என்ற பூவாக மலர்ந்து இன்று அனைவரின் ஞானப்பசியை தீர்க்கும் கனியாக மலர்ந்திருப்பது மட்டற்ற மன மகிழ்வை அளிக்கிறது.

நமது சிவாச்சாரியாரின் ஞானத்திற்கு உவமையாக அவருடையக் கட்டுரைகளை கூறுவது சிறப்புடையதாகும். மேலும் ஓர் சிறந்த ஆசானின் கடமைகளில் தலையானது ஆசானைப் போன்றே மாணவர்களை உருவாக்குவது, இதற்கு உதாரணமாக

திகழ்வது நமது பாடசாலையின் முன்னாள் மாணவர்களே ஆகும். பர்த்ருஹரி கூறுகையில்

நாஸ்தி யேஷாம் யச: காயே ஜராமரணஜம் பயம்.

பூதஉடலுக்கே அழிவென்பது உண்டு ஞான உடலிற்கு அழிவென்பது கிடையாது. ஆகையால் இந்நூல் இவ்விழாவில் வெளிவருவது சிவாச்சாரியாரின் ஞானத்திற்கு ஓர் உடலாக அமைவது போல் விளங்குகிறது என்றே தோன்றுகிறது. இக்கருத்தினையே குமரகுருபர சுவாமிகள் நீதிநெறி விளக்கத்தில்

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர் கொவ்வான் மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ் கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

எனக் கூறுகிறார். ஆகவே இதுபோன்ற அறிவுசார்ந்த சைவ சமய தொடர்புடைய நூல்கள் அதிகளவில் வெளிவந்து சைவ சமயத்தின் பெருமைகள் எல்லா திசைகளிலும் பரவுவதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சைவஸித்தாந்த ஆகம ஸாகரம், சிவாகம ஞானபாநு,
சிவாகம கல்பத்ருமம், சிவாகம ரத்னாகரம், சிவாகம திருத்தொண்டர்,
மந்த்ரஸேவாமணி, சிவாகம பாஸ்கர, சிவாகமச் செல்வர்,
சிவாகம வித்யா ரத்னம், சைவ வைதிக ரக்ஷாமணி, சிவாகம வித்யா வாருதி

K. ராஜப்பா சிவாச்சார்யார்

ஸ்தானீகர் - ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானம், ஸ்ரீ கைலாஸநாதர் தேவஸ்தானம்
121-45, ஏகாம்பரநாதர் சன்னதி தெரு, காஞ்சீபுரம் - 631 502. செல்: 94452 57471

ஆசியுரை

1963 ஆம் ஆண்டு நடந்த மதுரை கும்பாபிஷேகத்தில்–தான், நான் முதன்முதலாக சிவபுரம் *ஶி*வஸ்ரீ S. ஸ்வாமிநாத *ஶி*வாசார்யர் அவர்களைச் சந்தித்தேன். மிகவும் எளிமையான தோற்றத்துடன் விளங்கிய அவர்களிடம் என்னை அறியாமலேயே ஒரு ஈடுபாடு உண்டானது.

அதற்குப் பிறகு பல நிகழ்வுகளில் அவர்களோடு கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. சைவ ஆகமங்கள் மட்டுமின்றி சாக்தத்திலும் மிகச் சிறந்த பண்டிதராகிய அவர்கள் இராமேச்வரம் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில் அடியேனுக்கு சண்டீ நவாக்ஷரீ உபதேசம் செய்துவைத்தார்கள்.

தொலைபேசி வசதிகள் அதிகம் ஏற்படாத அக்காலத்தில் அடியேன் பலமுறை அவர்களுக்குக் கடிதம் எழுதி எனது ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்துக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் உடனுக்குடன் பதில் எழுதும் இயல்பினர் அவர்கள்.

எனது வேண்டுகோளுக்கிணங்கி என் இல்லத்திற்கு எழுந்தருளி சண்டீ ஹோமம் செய்வித்தும், அம்பிகை வழிபாட்டுக்கான பிற மந்த்ரங்களையும் அடியேனுக்கு உபதேசித்தும் அருளினார்கள்.

உ
ஸ்ரீ மூகாம்பிகை துணை

சாதக சிந்தாமணி
சிவாகம செம்மல்
சிவாகம அருட்செல்வர்
சிவாகம சார்வ பௌமா
சிவாகம க்ரியாகலாநிபுணர்
சோ. சபேச சிவாச்சார்யர்

சாக்தப்ரக்ரியாமஹி
ஆக்மஸ்ரீ

முகவரி : ஸ்ரீ குருக்ருபா நிலையம், நெ. 2, வள்ளலார் கோவில் ஒத்தத்தெரு, மயிலாடுதுறை – 609 001.
போன் : 04364 – 229228, 99765 03503

ஆசியுரை

நமது தமிழகத்தில் புண்யக்ஷேத்ரங்களில் ஒன்றான பொன்னிமாநதி காவேரி தென்பாகத்தில், குடந்தையின் சமீபம் உள்ள சிவபுரம் என்ற திவ்யக்ஷேத்ரத்தில், காச்யப கோத்திரத்தில், சிவஸ்ரீ சுப்ரமண்ய சிவாசார்யார் ஸௌபாக்யவதீ அனந்தலக்ஷ்மி அம்மாளுக்கு சைவ உலகம் போற்றத்தக்க தவபயனால் ஆண்மகவு அவதரித்தது.

ஸ்ரீசுவாமிநாதன் என்னும் பெயரிடப்பட்டு, உபநயனம் சமயதீக்ஷை பெற்று, வேத ஆகம சாஸ்த்ரங்களை தனது தாய்மாமனான பருத்தியூர், சிவஸ்ரீ சுப்ரமண்ய சிவாசார்யார் அவர்களிடத்தில் பயின்று, கும்பகோணம் அக்னிஹோத்ரம் ப்ரஹ்மஸ்ரீ கோபால தேசிக சுவாமிகள் அவர்களிடத்தில் ந்யாய சாஸ்த்ரம் கற்று, ப்ரஹ்மஸ்ரீ யக்ஞசுவாமி தீக்ஷிதரிடத்தில் ஸ்ரீகண்டபாஷ்யம் பயின்றார்.

பழனி காசிவாசி சைவ சித்தாந்த சரபம் அவர்களிடத்தில் சைவ சித்தாந்த பாடம் பயின்றார். திருமணம் செய்து தீக்ஷாபிஷேகம் செய்து கொண்டு, ஆத்மார்த்த–பரார்த்த பூஜைகளையும் செய்து வந்தார்.

இவருடைய வித்வத்தை அறிந்து தருமபுர மடத்தின் 24 ஆவது குருமஹா சன்னிதானம், வேத சிவாகம பாடசாலை நிறுவி, அதற்கு தலைமை ஆசிரியராக நியமித்தார்கள். தன்னிடத்தில்

வேதசிவாகமம் பயின்ற மாணவர்களுக்கு ஆகம ப்ரவீண என்னும் விருது கொடுத்து அருளினார்.

இவருடைய ஆற்றலை அறிந்த சன்னிதானம் சிவாகம வித்வான், சிவாகம ரத்னாகரம் என்னும் விருதுகளை வழங்கி கௌரவித்தனர். தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தில் சிவாகமச் செம்மல் என்ற விருது தந்து கௌரவித்தார்கள்.

ஆலய நிர்மாணம் முதல் குடமுழக்கு விழா வரை சிறப்பாக நடத்துவது அவர் புகழை உயர்த்தியது. இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் குடமுழக்கு விழாவை சீறும் சிறப்பாக செய்தார்கள்.

அன்னார்க்கு இரு புதல்வர்களும் இரு புதல்விகளும் உண்டு. தமிழகத்தில் முதன்முதலாக அகிலபாரத ஆதிசைவ ஸமாஜத்தில் தலைமை பொறுப்பேற்றுச் சிறப்பித்தவர்.

ஓலைச்சுவடிகளில் இருந்து பார்த்து எழுதிய நூல்கள் நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹம், ஸகலாகம ஸாரம், ஸஹஸ்ராகமம், வாமதேவ பத்ததி முதலான நூல்களை தனது கரத்தால் எழுதி ஆதிசைவ சமூகத்திற்கு அர்ப்பணித்தவர். சைவ சித்தாந்த வகுப்புகள், சைவாகம பாடப் பயிற்சி முகாம், பல ஆகம வித்வத் ஸதஸ்கள் நடத்தியவர்.

அவர் பழகுவதற்கு இனியவர், எளிமையானவர், தமிழகத்தில் அவரை தெரியாதவரில்லை என்று சொல்லலாம். இத்தகைய பெருமைவாய்ந்த அண்ணா வெளியிட்ட கட்டுரைகளை புஸ்தகமாக வெளியிடுவது அறிந்து மிக்க அகமகிழ்ந்தேன்.

மதுரை, அர்ச்சகர் சங்கத் தலைவர் சிவஸ்ரீ செல்வம் பட்டர் (எ) மதுரநாயக பட்டர் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் வெளியிடவேண்டும் என்றெண்ணி திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய ஆகம ஆசிரியரும் சிவாகமப் பேரறிஞர்

சிவஸ்ரீ கார்த்திகேய சிவாசார்யர், சிரஞ்சீவி விவேக் பட்டர் இருவரும் மிக்க சிரமப்பட்டு இப்புஸ்தகத்தை வெளியிட்டு நமது சமூகத்திற்கு அர்ப்பணித்துள்ளனர். நூல் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். படித்து பயனுள்ளதாக இருக்கும் என ஆசையைத் தெரிவிக்கும்

S. ஸபேச சிவாசார்யார்
மயிலாடுதுறை

VIKAS RATNA SIVASRI. K. PITCHAI GURUKKAL

Chief Priest, Sri Karpaga Vinayagar Temple,
Principal, Karpaga Vinayakar Veda Agama Vidhyalayam
Founder, Sivaneri Kazhakam
Secretary, Karpaga Vinayakar School,
Pillayarpatti - 630207 Sivagangai District, Tamilnadu, South India.

உ

ஸ்ரீகற்பகவிநாயகர் துணை

ஆசியுரை

போற்றுதலுக்கும் பெருமதிப்பிற்குமுரிய மதுரை ஸ்ரீமீனாக்ஷி ஸுந்தரேச்வரர் திருக்கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ மா. மதுரேச பட்டர் அவர்களின் குமாரனும், மதுரை ஆதிசைவ நலச்சங்கத்தின் தலைவருமான சிவஸ்ரீ மதுரநாயக பட்டர் (எ) செல்வம் பட்டர் ஸ்ரீமதீ உமாமஹேச்வரீ தம்பதிகளின் மணிவிழா நடைபெறும் நன்னாளாகிய 26.02.2021 அன்று தருமை ஆதீனத்தின் வேத சிவாகம பாடசாலையில் 50ஆண்டுகாலம் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவரும், பண்பிற் சிறந்த சான்றோருமாகிய சிவபுரம் சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசார்யார் அவர்கள் பல நூல்களில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து ஆகமச்செல்வம் என்ற பெயரில் வெளியிடுவதை அறிந்து பேருவகை கொள்கிறோம்.

சிவபுரம் சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசார்யார் அவர்கள் சிவநெறிக்கழகத்தின் மூலமாக நடத்திய முதல் சைவாகமக் கருத்தரங்கிற்கு எழுந்தருளி வழிநடத்தியவர். நித்யபூஜாலக்ஷண ஸங்க்ரஹம், வாமதேவ பத்ததி ஆகியநூல்களைத் தொகுத்து வெளியிட்டவர். பலநூல்களில் தனிக்கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். சின்ன சின்ன குறிப்புகளும் நிறைய எழுதியுள்ளார்கள்.

தொலைபேசி வசதிகள் அதிகம் இல்லாத அக்காலத்தில் நாம் அவ்வப்போது கடிதம் மூலம் பல விஷயங்களுக்கான சந்தேகங்களை அவர்களுக்கு எழுதியிருகிறோம். அதற்கான தக்க பதில்களை தக்க சான்றுகளுடன் நமக்கு அவர்கள் உடனுக்குடன் எழுதி அனுப்பியிருக்கிறார்கள்.

வேதம், சிவாகமம், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சில்பம், ஜோதிடம் என பன்முகப்பட்ட அறிவாற்றல் படைத்த அவர்கள் அதே சமயத்தில் எளியவர்க்கு எளியவராக விளங்கினார்கள்.

அவர்கள் எழுதிய கட்டுரைகளையெல்லாம் தொகுத்து வெளியிடுவது அவசியம் செய்யவேண்டிய ஒன்று. இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு பணிசெய்யும் திருப்பரங்குன்றம் கார்த்திகேய சிவம், மற்றும் சைவாதிகார சேனா அமைப்பினர் அனைவருக்கும் நமது பாராட்டுகள்.

நூல்வெளியீடு சிறக்கவும், விழா தம்பதிகள் சதாபிஷேக கனகாபிஷேக பூர்ணாபிஷேகங்கள் கண்டு வாழ்வாங்கு வாழவும் எல்லாம்வல்ல ஸ்ரீகற்பகவிநாயகப் பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

அன்புடன்

சிவஸ்ரீ கி. பிச்சை குருக்கள்

பிள்ளையார்பட்டி.

சிவஸ்ரீ நாகநாதசிவம்
தலைமை அர்ச்சகர்
லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம்

உ
சிவமயம்
ஸ்ரீ கணபதி துணை ஸ்ரீ முருகன் துணை

ஆசியுரை

இறைவனால் கருணையோடு அருளப்படுகின்ற பல்வேறு பிறவிகளில் மனிதப்பிறவி மிக முக்கியமானதாகும்.

சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் என்ற மாணிக்கவாசகர் வாக்கிற்கிணங்க அரிதாகக் கிடைத்த மனிதப் பிறவியை அறிந்து தெளிந்து பயனுள்ளதாக ஆக்கி அறியாமையை புறந்தள்ளி ஞானியர் உபதேசம் பெற்று ஞானம், கிரியை, யோகம், சரியை என்ற நான்கு வேதங்களுக்கும் இணையான நன் மார்கங்களில் பயணித்து சிவாகமம் என்னும் பேரமுதைப் பருகி சிவனோடு இரண்டறக்கலக்கும் முக்தியை பெறுவதே இப்பிறவியில் பெறும் பயனாகும்.

மனிதப்பிறவியில் சிறுவயது முதற்கொண்டு ஞானமும் ஞானத்தின் வழியே கிரியா விளக்கங்களும் கிரியானுபவத்தினால் யோகமார்க்கமும் யோகமுதிர்ச்சியினால் சரியை தொண்டு செய்து சிவானுபவம் அடையவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் நல்லதொரு ஞானாசாரியன் கிடைப்பது நம்முடைய பிறவிப்பயனாகும். தருமத்திற்கும் ஞானத்திற்கும் இறையருள் குருவருள் பிரகாசத்திற்கும் உன்னதமான ஸ்தானமாக விளங்குவது தருமபுர ஆதீன மடாலயமாகும்.

ஆன்மாக்களின் அக்ஞானம் நீக்கி மெய்ஞானம் அருளுகின்ற பண்ணையாக விளங்கும் இங்கு வேதம், சிவாகமம்,

புராணம், இதிஹாசம், சித்தாந்தம், திருமுறை என ஆன்ம ஈடேற்றத்திற்கான அனைத்தும் தகுந்த ஆசார்யர்களினால் முறையாக பயிற்றுவிக்கப்படுகிறது.

இறைவன் உறைந்து மாயா மல பாசங்களையும் கர்ம வினைகளையும் வேரறுத்து பேரானந்தமருளும் ஆலயங்களில் நித்ய – நைமித்திக – காம்ய வழிபாட்டு விதிகளை இறைவனே அருளியவண்ணம் பரார்த்த பூஜையில் பாரம்பரியம் மிக்க ஆதிசைவ மாணாக்கர்களுக்கு முறைப்படி கற்பித்து உலகெங்கும் இறை வழிபாடு செழித்தோங்க வேண்டி வேத சிவாகம பாடசாலை சிறப்பாக நடத்தப்பட்டுவருகிறது.

பெருமை மிகு இப்பாடசாலையில் கடந்த 1942 முதல் 1989 வரை முதல்வராக பணியாற்றி கல்விச்சாலைகளுக்குகெல்லாம் முன் உதாரணமாக விளங்கி ஏறத்தாழ நேரிடையாகப் பயின்ற முன்னூறு மாணவர்களையும் ஆயிரத்திற்கும் அதிகமான மானசீக பகுதிநேர சிஷ்யர்களையும் உருவாக்கி, உலகெங்குமுள்ள இந்து சமய வழிபாட்டுத் தலங்களில் வேத சிவாகம முறைப்படி பூஜைகள் நடைபெற அவரது வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்தவர் சிவாகம வித்வான், சிவாகம ரத்னாகரம், சித்தாந்த ஞான சாகரம் தருமபுர ஆதீன வித்வான் சிவபுரம் சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசார்யர் அவர்கள். பூஜை வழிபாடு என்பது கிரியைகளும் சம்பிரதாயங்களும் பழக்க வழக்கங்களும் மட்டுமே என்ற நிலையிலிருந்து சற்றே மாறுபட்டு பக்தர்களும் மந்திரங்களையும் திருமுறைகளையும் செவிமடுத்து பஞ்சபூதங்களாலான பரம்பொருளின் பேரருளை கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் தன்மாத்ரைகள் மற்ற அனைத்து தத்வங்களும் அனுபவமாக்கும் வண்ணம் பிரகாசப்படுத்தியவர் தருமபுரம் வாத்தியார் அண்ணா அவர்கள்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசித்து மகிழும் மகா கும்பாபிஷேகங்களிலும் சண்டீ – ஹோமம் முதலான

மஹாயாகங்களிலும் யாகசாலை, குண்டம், வேதிகை இவற்றை ஆகம விதிகளுக்கு முரண்படாமல் "சேஷம் யுக்த்யா பிரகல்பயேத்" என்ற ஆகம வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு அனைவரும் ரசித்து தரிசித்து மகிழும் வண்ணம் புதுமைகளைப் புகுத்தியவர் ஸ்ரீ வாத்தியார் அண்ணா அவர்கள்.

தருமபுர ஆதீன ஆளுகைக்குட்பட்ட பெரிய சிவாலயங்களிலும் மற்றும் பழனி முதலான ஏராளமான திருக்கோயில்களிலும் மஹாகும்பாபிஷேகங்களை சிறப்பாக தலைமையேற்று நடத்தியும், இலங்கை, யாழ்ப்பாணம், திருக்கேதீச்வரம் முதலான வெளிநாட்டு திருத்தலங்களிலும் மஹா கும்பாபிஷேகம் செய்தும் உலகப் புகழ்பெற்ற சிவாசாரியாராக திகழ்ந்தவர் சிவபுரம் ஸ்ரீ சிவாசாரியார் அவர்கள்.

பழநி சிவஸ்ரீ ஈசான சிவாசார்யர், திருவாவடுதுறை சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்யர் போன்ற பேரறிஞர்களிடம் மரியாதையும் பெருமதிப்பும் கொண்டவர் திருவாடானை சிவஸ்ரீ ஐயாமணிசிவம், அல்லூர் சிவஸ்ரீ விச்வநாத சிவாசார்யர், திருப்புகலூர் சிவஸ்ரீ வைத்யநாத சிவாசார்யர், சென்னை காளிகாம்பாள் சிவாசார்யர் போன்ற பல பேர்களுக்கு நல்ல ஆலோசகராகவும் ஏராளமான சிவாசார்யர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கி பெருமைபெற்றவர் தருமபுரம் வாத்தியார் அண்ணா அவர்கள்.

இவரிடம் சிவாகமம் பயின்ற மாணவர்கள் குறிப்பாக திருப்பதி சந்திரசேகர சிவாசார்யர், வைத்தீச்வரன் கோவில் ரவி சுவாமிநாத சிவாசார்யர் முதலான அநேக சிவாசார்யப் பெருமக்கள் பாடசாலை முதல்வர்களாகவும் சிவாகமப் பேராசிரியர்களாகவும் விளங்கி வருகிறார்கள்.

சுவாமி விக்ரஹங்களுக்கும் யாகசாலைகளிலும் அலங்காரம் செய்து புஷ்பமாலைகள் சாற்றி சாத்துபடி செய்வதிலும்

திருமுறைகள் பாடுவதிலும் சிவாசார்ய மாணவர்களுக்கு பயிற்சி அளித்ததோடு திருமுறை ஓதுவாமூர்த்திகள், ஆலய நிர்மாண ஸ்தபதிகள், இசைக் கலைஞர்கள், நாதஸ்வர தவில் வித்வான்கள், சொற்பொழிவாளர்கள் என அனைவரிடமும் அன்பாகப் பழகி ஆலோசனைகள் நல்கி அவர்கள் முன்னேற வழிகாட்டியவர் சிவாசார்யார் அவர்கள்.

இந்தியத்தலைநகரம் புதுடில்லியில் நூதனமாக கற்கோயில் கட்டப்பட்டு உத்தமபக்ஷமாக 33 குண்டங்கள் அமைக்கப்பட்டு காஞ்சி புதிய சங்கராசாரியர் முன்னிலையில் பிரமாண்டமாக நடைபெற்ற மஹா கும்பாபிஷேக வைபவத்தில் திருவாடானை சிவஸ்ரீ ஜயாமணி சிவம் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று பிரதான ஆசாரியமாக இருந்து ஏழு கண்டங்களின் சமுத்திர தீர்த்தம் கங்கை முதலான ஏழு புண்ய நதிகளின் தீர்த்தம் இவற்றால் அபிஷேகம் செய்யப் பெற்று சிவாகமத்தில் கூறப்பட்ட ஆசாரிய லக்ஷண விதிப்படி உபசாரம் செய்யப் பெற்று உத்தர சுவாமிமலை ஸ்ரீசுவாமிநாத சுவாமிக்கு மஹாகும்பாபிஷேகம் செய்வித்து உலக நன்மைக்காக பிரார்த்தித்தவர் தருமபுரம் ஸ்ரீ வாத்தியாரண்ணா அவர்கள்.

தனது வாழ்க்கையை இமைப்பொழுதும் வீணாக்காமல் இறைவனுக்காகவும் சிவாகமங்களுக்காகவும் சிவாசாரிய பரம்பரையினருக்காகவும் வாழ்ந்த தருமபுரம் அண்ணா அவர்கள் சிவாகமங்களின் நுணுக்கமான விஷயங்களையும், ஆத்மார்த்த பரார்த்த பூஜை தத்வவிளக்கங்களையும், மஹா கும்பாபிஷேகத்தின் கிரியா விளக்கங்களையும், மஹோத்ஸவ கிரியா முறைகளையும், விரத நிர்ணயங்களையும், வாமதேவ பத்ததி முதலான ஆகம நூல்களையும், வேத மந்திரங்களை தொகுத்து ரிக் சமூகம் என்ற வேதமந்திரத் திரட்டையும் எழுதியும் தொகுத்தும் வெளியிட்டும் பெரும்பணிகளை செய்துள்ளார் ஸ்ரீ வாத்தியாரண்ணா அவர்கள்.

தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் சிவாசார்ய குல மேன்மைக்காகவும் முறையான ஆலயவழிபாட்டிற்காகவும் இந்து சமய வளர்ச்சிக்காகவும் செலவிட்டு சிவாசார்ய குலதிலகமாக விண்ணில் பிரகாசித்துவரும் தருமபுரம் சிவபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்யர் அவர்களுடைய கருத்தாழமிக்க கட்டுரைகளையும் செயற்கரிய தொகுப்புகளையும் ஆர்வத்துடன் திரட்டி மதுரை சிவஸ்ரீ செல்வம் பட்டர் ஸ்ரீமதீ உமா தம்பதிகளின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மணிவிழா மலராக வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். ஸ்ரீவாத்யார் அண்ணாவின் எண்ணற்ற மாணவர்களில் ஒருவனாக விளங்கும் பாக்கியத்தைப் பெற்றதை பெருமையோடு நினைத்து பெருமை கொள்கிறோம்.

எங்கள் வாத்யார் அண்ணா சிவபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்யார் எழுதியருளிய அனைத்து கட்டுரைகளையும் புத்தகங்களையும் கவனமாகத் திரட்டி அச்சிட்டு மணிவிழா மலராக வெளியிடும் திருப்பரங்குன்றம் சிவஸ்ரீ கார்த்திகேய சிவம் அவர்களின் சிவாகமத் திருப்பணியை போற்றி வாழ்த்தி மகிழ்வதோடு, அவரின் சேவைகள் தொடர்ந்து நடைபெற்று சாதனை பல புரிந்து பெருமையுற வேண்டியும், மணிவிழா தம்பதிகள் பல்லாண்டு வாழ்ந்து ஆயிரம் பிறைகண்டு சதாபிஷேகம் செய்துகொண்டு சிறப்புறவும் எல்லாம்வல்ல லண்டன் ஸ்ரீமுருகப் பெருமானை வணங்கி ப்ரார்த்தித்து மகிழ்கிறேன்.

உ

சிவமயம்

மஹா சாஸ்த்ரம் விச்வகோப்த்ரம் சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதாசார்ய குருப்யோ நம:

ஆகம ப்ரவீண், வ்யாகரண சிரோமணி, சைவாகமக் சூடாமணி, சைவாகம வித்வான், வ்யாகரண விசாரத,

சிவாகம ஸார்வபௌம, சிவஸம்ஹித் ஸபர்யா பாராவாரீண், சிவாகம அருட்செல்வர், ஸம்ஸ்க்ருத சேவாரத்னம்,

சிவாகம வாசஸ்பதி, வாஸ்து வித்தகர், சைவாகமஸ்ரீ, ஆகம கல்பத்ரும, ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம்,

சாக்தயாக ஸாம்ராட், வைதீகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம், சிவாகமக் கலாநிதி,

சைவாகம பரீக்ஷாதிகாரி, யாக ஸர்வோத்தம திலகம், சாஸ்தா உபாஸகர், அகோசிவம் என்கிற

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் M.A.,

ஆகம & ஆலோசகர், யாக இயக்குனர், சைவசமயபோதகர், ஆகம ஆய்வாளர், சமயநூல் எழுத்தாளர்

குருமுதல்வர்	:	சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை-1.
சாக்தாலய ஆகமஆசார்ய விஜயம்	:	மஹாசக்திபீடம், திருவேதகுலம், தேவிஸ்ரீ கருமாரியம்மன்க்ஷேத்ரம். (மாதம் இருமுறை). (2009-2017)
முதல்வர் & ஆலோசகர், ஆகமநூல் எழுத்தர்	:	சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சிவாசார்யார் அறக்கட்டளை, (பதிவு) சென்னை - 1. (2009-2016)
உயர்நிலைக்குழு கௌரவஆகம ஆலோசகர்	:	அ.இ. ஆதிசைவ சிவாசார்யார்கள் சேவாசங்கம், (பதிவு) சென்னை. (2013 - 2016) (முன்னாள் இணைச்செயலாளர்)
ஆலய அர்ச்சகர் & (இந்துமதகுரு பதிவாளர்)	:	கனடா, டோரன்டோ, ஹிந்து டெம்பிள் சொசைட்டி. (கணேஷ் டெம்பிள்). (1992 - 1996).
ஆகமசிரோமணி, (முன்னாள் ஆகம போதகர்)	:	தமிழ்நாடு மாமல்லபுரம் அரசினர் கட்டிட மற்றும் சிற்பக் கலைக்கல்லூரி (1987 - 1992).
சிவாகமபண்டிட், முன்னாள் ஆகம அத்யாபகர்	:	சென்னை சேத்துப்பட்டு, மஹரிஷி வேதபாடசாலை, தர்ம்ரக்ஷ்டான். (1981 - 1986).

மொபைல் : 98402 99352

முகவரி : ப்ளாட் நெ. T-1, மூன்றாம் தளம், மல்லேஸ் மல்லிகாஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், மனை எண். 8/4, 49வது தெரு, 7வது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை - 600 083.

உ

குருவருள் துணை

ഓങ്കാരം ബിന്ദു സംയുക്തം നിത്യം ധ്യായന്തി യോഗിനഃ।

കാമദം മോക്ഷദം ചൈവ ഓങ്കാരായ നമോ നമഃ॥

അജ്ഞാനതിമിരാന്ധസ്യ ജ്ഞാനാഞ്ജനശലാകയാ।

ചക്ഷുരുന്മീലിതം യേന തസ്മൈ ശ്രീഗുരവേ നമഃ॥

மகிழ்ந்துரை

சிவதருமத்தை செழிக்கச் செய்திடும் தருமதேவன் வழிபட்ட சிவஸ்தலமாய் விளங்கிடும் தருமபுரத்தில், திருக்கயிலாய பரம்பரையாக, அருள்நெறியாட்சி செய்யும் திருத் தருமபுர ஆதினத்தின் வேத சிவாகம பாடசாலையில், 1972 ம் ஆண்டு, சிவனாரின் மரு உருவாய்த் திகழ்ந்த குருநாதர் சிவாகமவித்வான் சிவபுரம். சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களின் சீடனாகச் சேர்ந்திடும் வாய்ப்பைப் பெற்றேன்.

தருமையாதீனத்தின் 26வது குருமஹாசன்னிதானம். அவர்கள், திருவாமூர் & கொங்கராயனூர் கிராமத்தின் ஆலய அர்ச்சக குடும்பத்தினராக எனது தந்தையை நன்கு அறிந்தவர். ஆதலால் முதலில் குருமஹா சன்னிதானத்தின் அறிமுகம் மற்றும் அனுமதியுடன் பாடசாலையில் இனணந்தேன். எனது அன்னை, அம்மான் இருவரின் ஆலோசனையாலும், ஆசியாலும் எனக்கு சன்னிதானத்தின் தரிசனமும் அவர்களால் குருநாதரின் தொடர்பும்

இறையருளால் கைகூடியதை இன்றும் எண்ணி மகிழ்கிறேன். பள்ளிப்பயிற்சியினின்று விலகி, 13வதுவயதில் பாடசாலைப் பயிற்சியைத் தொடர்ந்தபொழுதில் ஆகம ஆலயத்துறை அனுபவங்கள் முதலில் எனக்கு கிடைத்தன.

ஆகமப்பேராசானாகிய எனது குருநாதர், எனக்கு அந்த வயதிலேயே நடமாடும் தெய்வமாகத் தோன்றினார். எனக்கு முன் அறிமுகமில்லாததால் அவரிடம் அச்சமும், அதே தருணம் அவர் போதித்த முறையாலும், ஆகமப்படிப்பில் என்னை உற்சாகப்படுத்திய முறையாலும், அவரிடம் இனம்புரியாத அன்பு கலந்த பாசமும் விளைந்தது.

"ஆசார்ய தேவோ பவ" என்ற வேதவாக்கின்படி அவரே எனது தெய்வமாகத் திகழ்ந்தார். அடிக்கடி வியந்து சிரித்திடும் எனது இயல்பைக்கண்டு அவர் கோபித்து, காரணமற்று சிரிப்பதைத் தவிர்க்க வேண்டுமென எச்சரித்து என்னை நெறிப்படுத்தியது மறக்க இயலாதது.

குருநாதரின் கையேட்டுப் பிரதிகளை அடியேன் அக்காலத்தில் தனியே எழுதியும், ஆய்வுசெய்தும், வரை படங்களைத் தயாரித்தும் அவரது நல்லாசிகளைப்பெற்றது இன்றும் பசுமையாய் என் நினைவில் உள்ளது. குருவிடம் பாடங்களைப் பெறுவதே சிறப்பானது. தருமபுரத்திலோ ஆலயக்கிரியை அனுபவத்திற்கு குறைவில்லை. இருபெருங்கோயில்களில் பேராயிரம் பரவி ஏத்தும் லக்ஷார்ச்சனை வைபவம், துர்கை அம்மனுக்கு கோடி குங்குமார்ச்சனை வைபவம், சதசண்டீ யக்ஞம், ஆலயத்தின் மஹோத்ஸவம், ஆலயப் பிரதிஷ்டை யாகங்கள், நைமித்திகச் சிறப்புக்கிரியைகள் இவற்றை குருநாதரின் வழிகாட்டுதலில் பங்கேற்றது எமக்கு ஈடில்லாத பட்டறிவைத் தந்தது என்பது என்றும் போற்றுதற்குரியது.

ஆதீன சிவாகமவித்வானாக விளங்கிய எமது குருநாதர் கூறும் வண்ணமே, ஆதீனத்தின் பல ஆலயங்களின் கிரியைகள் யாவும் நடைபெற்றதால் அங்கு பயின்ற மாணவர்கள் ஆகம விதிமுறைகளை அறிந்தும், கண்டும், தெளிவுபெற முடிந்தது. குருநாதர் பல கும்பாபிஷேகங்களைத் தலைமைப் பொறுப்பேற்று நடத்தியதால், அவரது முயற்சிகளைக் கூர்ந்து கவனித்து, அதன் வழிமுறைகளையும், கும்பாபிஷேக பொருட்பட்டியல் தயாரித்தல், யாகசாலையை அமைத்தல், உரியவர்களை நியமித்து நிர்வகித்தல் போன்றவற்றையும் நான் அறிந்தேன். எனக்கு முற்றிலும் வழிகாட்டியாகவும் உலகில் உதாரண புருஷராகவும் ஒப்பற்ற முதல் குருநாதராகவும் விளங்கியவர், பாடசாலையின் முதல்வரான சிவபுரம் சிவாசாரிய சுவாமிகள் ஆவார். மேலும் ஆகமபாடம் மட்டுமின்றி யாகஜப பாராயணத்தின்பொருட்டு, விநாயகர் மந்திரம் , சண்டீநவாக்ஷரீ மந்திரம் இவற்றை முதலாவதாக எனக்கு உபதேசித்து, என்னை ஆசீர்வதித்த ஆசாரியரும் இவரே ஆவார். அவருடன் பலதலங்களில் பலக்ரியைகளில் பணிசெய்யும் பாக்கியத்தையும் அடியேன் அப்போது பெற்றுவந்தேன்.

எடுத்துக்காட்டாக திருக்கடையூர் கோயிலில் லக்ஷார்ச்சனைகள், கார்த்திகை சோமவாரத்து சங்காபிஷேக வைபவம், திருபுவனம் கோயிலில் சரபேச்வரரின் லக்ஷார்ச்சனை, வைதீச்வரன் கோயிலில் கிருத்திகைதின ஷண்முகார்ச்சனைகள், சீர்காழியில் திரிபுரசுந்தரீ பீஜமந்திரநாம லக்ஷ புஷ்பாஞ்ஜலி வைபவம், வனதுர்க்கையின் மந்த்ர ஆனுகூல்ய காம்யஜபம், சில கும்பாபிஷேகம் முதலியன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இதன் பயனாக ஐந்தாண்டு பயிற்சியை முடித்து தொடர்ந்து மேல் படிப்புகளை முடித்தபோதும், எங்கெல்லாம் ஆகம பாடம் பயன் படுத்தப்படுகிறதோ அங்கெல்லாம் அவ்வப்பொழுது மனக்கண்ணில் சிந்திக்கப்படும் ஒரே தெய்வமாக எமது குருநாதர் விளங்குகிறார்.

ஓரெழுத்தை அறிவித்தவரேயாயினும் "எழுத்தறிவித்தவன் இறைவனாகிறார்" என்ற கூற்றுக்கேற்பவும்,

ஊகாக்ஷரவ்ரஉாதாரரஂ ஹுரொாநூஂ ந உாநயெகு।
சாமிஜூவஜூசவெஷ ஜெஷாசாயபூவஜூசவெகூ॥
கூசாயுஂ மிஜூஉதிபூஷ ஹுஹுாாதெகதி வஉஜயெகு।

என்ற மகுடாகம கட்டளைக்கேற்ப நாம் அவரை 'நடமாடிய சிவமாகவே கண்டோம்' என்பதில் ஐயமில்லை. "உலகில் கிடைப்பதற்கு அரியது ஸத்குருவே" என்று அறநூல்கள் கூறும். அவ்வாறு வேதம், ஆகமம், சாஸ்திரம் மணி, மந்திரம், ஔஷதம். முதலிய பலவகை ஞானங்களின் உறைநிதியாக ஞானார்ணவமாயும், ஆகமத்தின் சதுஷ்பாதத்திறன்மிக்கவராயும், பன்முகச் செயல்பாட்டுத்திறன் மிக்கவராயும், எமது குருநாதரைக் கண்டும் வியந்தும் பணிந்து பணியாற்றினோம்.

ஹுரவொ ஬ஹவஸ்ஸுி ஷஉஜொஷயி வெஉிநஃ।
நிமஉாமஉஸாஷ்ஜூாகு உஜஜொ உுஷூஹொ ஹுவி॥

என்ற சிவபக்தரான பரசுராமரின் கல்பசூத்திரக் கூற்றின்படி எங்களுக்கு கிடைப்பதற்கு அரிய குருவாக விளங்கினார்கள்.

ஶிவஜூாநாகு வரஂ ஜூாநஂ ந ஹி ஶொகெஷு விஜூதெ।
ஶிவஃ ஊகஂ விஜாநீயாகு உஜஉதிபூ: வரஂ ஶிவஃ॥

என்பதாகக் கூறும் வாதுளாதி ஆகம கூற்றின்படி அவரே சிவமெனத் திகழ்ந்தார். மாணவர்களுக்கு மட்டுமின்றி உலகத்தோருக்கும் சைவசமயத்தினருக்கும் அவர் மஹாதேவரின் வடிவமாகவே அவரது பெயருக்கு ஏற்ற பொருள் வடிவிலேயே ஞானபண்டித சிவகுருவாகவே விளங்கினார்கள். தமது அறிவுச் சிதறல்களைப் பல நூல்களாயும் பல கட்டுரைகளாயும், ஐயமகற்றும் சான்றுகளாயும், ரத்தினக்கூற்றுகளாயும், செய்முறைக் கையேடுகளாயும் எப்போதும் தொடர்ந்து உதிர்த்திட்ட சிவஞான

கல்பகத் தருவாக விளங்கினார்கள் என்பது மிகையல்ல பலர் கண்ட உண்மையே.

> ஶ்ரூவாயபூஸ்ராஸநம் கூகூா ஶ்ரூவாயபூாத்ராநஶாநயெகூ।
> தஸ்ராஶாவாயபூஶூவுஙு ஜஹாஜெவாத்ரூஶூவுகூ॥

என்கிறது மகுடாகமதீக்ஷாவிதி. அவ்வாறு அவரைக் கண்டும், அவர் சொல்கேட்டும், அவர்கூறிய வழிநடந்தும், அவரால் உயர்ந்தவர்களாய் பல சீடர்கள் இன்றும் உலகுக்கெல்லாம் சமயத் தொண்டாற்றுகின்றனர். "ஶ்ரூவாஹநாஶி கூாமெ தூ ஶ்ரூவாயெபூா ஶுஶூஶூவு யூகூ" என்ற ஆகமவாக்கின்படி யாவரும் பூஜையில் முன்பும் முடிவிலும் தமது குருவை சிந்தித்து வணங்கிய பின்பு, தன்னை குருவாக எண்ணியே பூஜிக்க வேண்டும் என்கிறது ஆகமம். குருவை தெய்வமாகக் கருதாமல் ஒரு மனிதனாகக் கருதுபவன் நரகத்தை அடைவான் என்கிறது அறநூல்.

> ஶுரள ஶாநுஷஙுஷிஙு ஜஜெ வாக்ஷாஹாவநு।
> வுதிஶாயாம் ஶிஶாஜ்ஞாநம் கூவுபூாணொ நரகம் வுஜெகூ॥
> யூாநஶூஷம் ஶுஶொஜூஶிபூ: ஜஜூஶூஷம் ஶுஶொவுபூவ:।
> க்ரியாஶூஷம் ஶுஶொ: வாஜம் ஶொக்ஷஶூஷம் ஶுஶொ: கூவா॥

என்றவாறு குருவின் சொற்களே மந்திரமாகும். குருகூற்றின்படியே மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன. குருவருள் நிறைந்த மந்திரக்கூற்றே உலகத்துயர் நீக்கி சிவஞானஒளி தந்து முக்திதர வல்லது. இதனாலேயே மந்திரம் பயன்தருவதாகிறது.

> ஜநம் விஶ்வவிஜ்ஞாநம் ஶ்ராணம் ஸம்ஸாரவஙுநாகூ।
> யத: கூஶொதி ஸம்ஸிஜெ்யா ஜஜெ ஐதூஹூஜெ ஶுயெ:॥

காட்டில் வண்டுகள் தேனில் ஆசைகொண்டு மலரிலிருந்து எவ்வாறு மறுமலரை அடைகிறதோ, அவ்வாறு மனிதகுலமானது உலகில் ஞானவேட்கையுடன் பலகுருமார்களை தேடித்தேடி நாடிச்சென்று அருள்பெற முயல வேண்டும் என்கின்றன நமது அறநூல்கள்.

ஐயுஷுவெஹ்ஹோ யயா ஹூஜ்ஜோ உஷ்ஷாத் உஷ்ஷாஞாரம் வ்ரஜேத்।
ஜ்ஞாநஷுவ்ஷஸி தயா ஶிஷ்ய: ஶுரொரமூவபூஞாரம் வ்ரஜேத்॥

பூர்வஜன்மத்து புண்ணியப் பயனாலேயே ஸத்குரு ஒருவருக்கு கிடைக்கப் பெறுகிறார். ஆசான் மற்றும் சிவன் இவர்களிடையே இடைவெளியை அதாவது மாற்றத்தைக் காண்பவன் இழிவைக் கீழ்நிலையை அடைவான் என்கிறது நூல்.

ஆசாயூஶ்ஸிவ ஊவ ஸ்யாத் கூநயொரஞாரம் ந ஹி।
ய: வஶ்யேத் கூநயொஹெூஉம் ஸொர்யொமதிஜவாஷ்யாத்॥

என்னும் உத்தரகாமிகாகம உத்ஸவபடலக் கூற்று, குருவைக் கருதும்முறையைக் கூறியுள்ளது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. தெய்வங்களின் மந்திரங்கள் குருவருளால் மட்டுமே பயன் தருபவையாகும். இதனைத் தெரிவிக்கும் குலபிரகாச தந்திரம் எனும் நூல்

உவஶேஶஸ்ய ஸாஜயூர்யாத் ஸ்ரீஶுரொஶ்ய வ்ரஸாஉத:।
ஜந்த்ரஹாவத் ஹக்ஷ்யா ச ஜந்த்ரஸிஜி: வ்ரஜாயதே॥

என்கிறது. காரணாகமம் ஆசாரியரின் மகிழ்ச்சியே சிவனின் மகிழ்ச்சி என்றும், ஆசார்யருடைய கோபமே சிவனாரின் கோபமென்றும் கூறுகிறது.

ஆசாயூஜநஸஷ்டுஷ்டி: ஶெவ ஸந்தொஷகாரணம்।
ஆசாயூகொவாஜெவொ்வி கூஷ்யதெ நாகு ஸம்ஶய:॥

என்கிறது. குருவையே பரம்பொருளாகக் கண்டு தொழுவோர் யாவரும், எப்பொழுதும் வாயினால் சிவ சிவ என மொழிபவர்களாய் உலகில் புனிதம் எய்துவர். இறைபருள் பெறுவர் என்பது திண்ணம்.

ஶிவெதி ஜஜஉம் நாஜ ஶுவெ யஸ்ய நிரஞரம்।
தஸ்யைவ உஶூநாஉநெ்ய வவித்ராஸ்ஸஜி ஸவூஉா॥

என்பதால் விளங்கும். புலன்வழியில் உழன்று வாழ்நாளை வீணாக்கியவாறு இறைவனைக் காணவிழையாமல் தான் உள்ளதை குருவருளால் அறிந்து, அவரோடு ஒன்றியவனாக தெளிவுபெற்ற மனிதனே பாக்கியசாலியாகிறான்.

ஶுுணாநநெூா யநூ॰ வூாவொூாதி ததூ௨௪। என்கிறது சிவஞானபோதம். எனவே சைவசமய அறிஞர்கள் சிவனைப்போல் குருவை எண்ணி வணங்குதலும், சிவனுடைய இருப்பிடத்தை அதாவது மோக்ஷதேசத்தைக் காட்டுவதாலேயே "தேசிகர்" எனப்படுகிற ஆசார்யரைத் தந்தையைப்போலவும், ஸாதகர்களை ஸத்வகுணத்தினராயும், புத்ரகர்களை தனது உடலைப் போலவும், சைவசமயத்தோரை நண்பர்களைப் போலவும், சிவனை அடையவிரும்புபவர்கள் வாழ்நாளில் கொள்கையாக ஏற்றும் கண்டும் வாழ்வது சிவநெறியாகும். இதனை ஷட்ஸஹஸ்ரிகா என்ற நூல் அறிவிக்கிறது.

> ஶிவவச் ஹி ஶுுு॰ வூஜூ॰ விதூ வஜெஶிகஃ ஸூதஃ।
> ஸாயகாஸூகூவஜூஶூாஃ வுுகுகாஃ ஶாகுவக் ஸஉா॥
> ஜிகுவக் ஸஊயஸூாஶு ஜூஷ ஹூா ஶிவஜிூதா।

இவ்வகையில் நம்முன் வாழ்ந்து, மார்கதர்சிகளான பல ஆதிசைவ சிவாசார்யப் பெருந்தகைகளாலும் போற்றத்தக்கவராகத் திகழ்ந்து ஆகமத்தின் நான்குபாதத்திறத்தினையும் வெளிப்படுத்தி, பல உத்தமபக்ஷயாகங்களையும், கும்பாபிஷேகங்களையும் செய்துகாட்டிய, நமது குருநாதர் என்றென்றும் சைவர்களால் போற்றத்தக்கவராகிறார்.

இவரது நற்சிந்தனையில் வெளிவந்த பல கட்டுரைகளை மிகுந்த சமயப்பற்றுடனும், குருபக்தியுடனும், பெருமுயற்சியுடன் சேகரித்து, "சைவாதிகார சேனா" என்னும் அமைப்பினர் அவற்றை ஒருநூலாக வெளியிடும் முயற்சி என்றும் போற்றுதற்குரியது.

எங்கள் குருநாதரான சிவாகம ரத்னாகரத்தின் கட்டுரையாகிய ரத்தினங்கள் இவ்வுலகில் சூரியசந்திரர்கள் வானில் உள்ளவரையில் சைவசமய உலகில் அறிவொளியைத் தருபவையே ஆகும். குருவின் பெருமை அளப்பரியது. தெளிவு குருவின் திருப்பணிகள் போற்றவல்லவையாம். எமது குருவருளைச் சிந்திக்கவைத்த திருவருளைப்போற்றி, அடியேனையும் ஒரு பொருட்டாக்கி புத்தக வெளியீட்டு வைபவத்தில் இணைத்த உள்ளத்தினர் யாவரும், மணிவிழாக் குழுவினரும், இதுபோன்று பல்லாண்டுகாலம் வாழ்ந்து சிவபுண்ணியத்தொண்டினைத் தொடர்ந்திட எனது இஷ்ட தெய்வத்தை இறைஞ்சி, இதயம் கனிந்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

சுபம்

இங்ஙனம்

வி. சோமசேகர சிவாசாரியார், சென்னை

உ

சிவாகமப்ரவீனர், ஆகமவித்வான், அலங்காரகலாரத்னம்
சிவாகமவாசஸ்பதி, சிவாகமவித்யாரத்னம்
தத்புருஷசிவம்

சிவஸ்ரீ. T.G. கல்யாணசுந்தரசிவாசாரியர்

ஸ்ரீ அஷ்டாதசபுஜமஹாலக்ஷ்மிதுர்கையம்மன் ஆலயம், அர்ச்சகர்
சிவாகமவித்யாபீடம் முதல்வர் (SVP)
பூர்வ பாகம், உத்தரபாகம் பயிற்சி

No.2/3, கோகுலம் காலனி மேற்கு மாம்பலம், சென்னை - 600033
Res : பிளாட்நெம்பர் 23, ஷாவாலஸ்காலனி, கணேஷ் கார்த்திக் அபார்ட்மெண்ட்
சிட்லபாக்கம், சென்னை - 64. Tel : 044-2223 7052, Mob: 99529 29765

परात्परेभ्यो नमः

ओं श्रीगुरुभ्यो नमः

வாழ்த்துரை

ஶிவஶ்ரீரோ ஜநஸ்துத்ய வாஸிநம் யஜ்ஞபுரே।
கல்யாணஸுந்தரார்யாய பஹுஶிஷ்யை: ஸுஶோபிதை:॥
ஶிவஜ்ஞாநப்ரவாஹை: நாகோஜ்ஜ்வலப்ரகாஶித:।
யாவஜ்ஜீவநபர்யந்தம் ஶுஶ்ரூஷாநபராயண:॥

ஆதிசைவப் பெருந்தகைகள் அனைவரையும் மனம் மெய் மொழிகளால் வணங்குகிறேன். சைவாதிகாரசேனா ஆற்றும் பணிகளின் பெருமையை உணராதவர்கள் இலர் என அனைவரும் அறிவோம். இறையருளைப்பெற குருவருள் ஒன்றே என சான்றோர்களின் வாக்கு என்பதனை மறுக்கவோ மறக்கவோ இயலாது. எழுத்தறிவித்தவன் இறைவன். இறையறிவித்தவன் ஆசான் என பழமொழி.

பொதுவாக மனிதர்களுக்கு மாதா பிதா குரு தெய்வம் என்ற சொல்லை கேட்காதவர்கள் உலகில் இருக்க மாட்டார்கள். இங்கு மாதா பிதா குரு தெய்வம் என்பதைப்பிரித்தால் நான்கு சொல்லாக புலப்படும். இவைகளைச் சிந்தித்து தெளிவு பெறவேண்டுமானால் மாதா முதலாவதாகவும், பிதா இரண்டாவதாகவும், குரு மூன்றாவதாகவும், தெய்வத்தை நான்காவதாகவும் அறிந்த அறிஞன் எது நிறைவாகச் சொல்லப்படுகிறதோ அது தான் முதலும் முடிவும் என்று உணர்ந்தவன். தெய்வம் மாதா தெய்வம் பிதா தெய்வம் குரு

என்று திருவருளைப்பெற்றவனாவான். குரு மன்னிக்காவிடில் தெய்வமும் மன்னிக்காது என்று ஆன்றோர் சொல்.

தருமபுரத்தில் – 1942ம் ஆண்டு 24வது குரு மஹாசன்னிதானம் அவர்கள் திருவாக்கின்படி அவர்கள் திருக்கரங்களால் வேதசிவாகமபாடசாலை துவங்கப்பெற்றது. சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியர் அவர்கள் அன்று முதல் தன்னுடைய வாழ்க்கையை இறைவனுடன் இரண்டறக்கலக்கும் வரை 48 ஆண்டுகள் தான் பெற்ற வித்வத்தை (கல்வியை) பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு போதித்து அனைவரையும் குன்றின் மேல் ஒளிரும் ஒளியாக (விளக்காக) விளங்கச்செய்தார் என்பது அவரிடம் பயின்ற மாணவர்கள் அறிந்த உண்மையாகும். குருவின் பெருமைகளை எடுத்துரைக்கும் எனத்தொடங்க முடியுமே தவிர நிறைவு செய்ய இயலாது.

அவரிடம் பயின்ற மாணவர்களில் அடியேனும் ஒருவன் ஆவேன். அவரிடத்தில் பயிலும் காலத்தில் நிறைவு பெறும் ஆண்டில் யான் பெற்ற உபதேசங்கள் பல. அதில் குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் அவர் சான்றிதழ் அளித்த அன்று உபதேசித்தது 'ஆகமத்தை நீ நம்பு ஆகமம் உன்னைக்காக்கும்' என்று (உதாரணத்துடன், தர்மோரக்ஷதிரக்ஷித) சொன்ன சொல் இன்றும் என் செவியில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. குருவின் அருமை பெருமைகளைத் தொகுத்து வழங்கும் மலரில் நானும் ஒரு இடம் பெற்றுள்ளேன் என்பதை நினைத்துக்கண்ணீர் மல்கும் தருணத்தில் உணர்ந்த உண்மையாகும்.

குருநாதர் அவர்கள், எனது மாதாமஹர் (செட்டிநாடு கொத்தமங்கலம் சிவஸ்ரீ ஏகாம்பர குருக்கள்) அவர்களை நன்கு அறிந்தவர். அவரால் சிறுவயதில் எனக்கு ப்ருமோபதேசம் சமயதீக்ஷை செய்வித்து பாடம், பயிலத்தொடங்கப்பெற்றவன் என்றும் இராஜகோபாலபுரம் பாடசாலையில் ஐந்தாண்டு பயின்றதையும்

அல்லூர் பாடசாலையில் இரண்டாண்டு பயின்றதையும் அறிந்து எனது ஆர்வத்தையும் கண்டு என்னை மாணாக்கனாக ஏற்று பல விஷயங்களை தனித்தன்மையாக போதித்து அருளியவர் ஆவார்.

அவரிடத்தில் பயிற்சியின் நிறைவு ஆண்டில் மஹா சன்னிதானத்தின் வாக்கிற்கு இணங்கி என்னை ஸ்ரீஅஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மி துர்க்கையின் சன்னதியில் 1977ம் ஆண்டு நடைபெற்ற சாரதா நவராத்ரியில் ஒரு நாள் ஸ்வஸ்தி வசனம் சொல்லச்சொல்லி சந்தோஷம் அடைந்து ஆசிர்வதித்தார்.

எனக்குத் தெரிந்தவரை தருமையில் உள்ள ஆலயங்களில் வாத்தியார் அண்ணா அல்லது அவரால் சொல்லப்படும் வைத்தீச்வரன் கோவில் பட்டண்ணா, சந்த்ருண்ணா, ராஜம் அண்ணா போன்றவர்கள் ஸ்வஸ்தி வசனம் சொல்வது என்பது பழக்கம். இதை அறிந்தவர்கள் பல மாணாக்கர்களும் பெரியோர்களும் உண்டு. இதில் இடம் பெறச்செய்த பெருமை எனது மாதாமஹறரையும் குருநாதரையும் சாரும்.

தருமையில் 1977ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற சித்தாந்த வகுப்பில் பழநி சிவஸ்ரீ ஈசான சிவம் அவர்களின் மாணாக்கர்களில் சிறந்தவராகவும் போற்றுதலுக்கும் உரிய ஆடூர் சிவஸ்ரீ வைத்யநாத சிவாசார்யர் அவர்கள் முன் நின்று நடத்திய சைவ சமய சித்தாந்த வகுப்பில் பங்கு பெறச்செய்து சான்றிதழ் பெரும் பாக்யத்தைப் பெற்றவனாவேன் என்பது குறிப்பிட வேண்டியதொரு கடமையாகும்.

பயிலும் சமயத்தில் ஒரு முறை தன்னிடத்தில் உள்ள தியானங்களைத்தந்து இதை எழுதிக்கொள். இத்துடன் உனது மாதாமஹறரிடத்தில் உள்ள தியானங்களையும் நீ சந்திக்கும் பல சான்றோர்களிடத்தில் பெறப்படும் தியானங்களையும் சேர்த்து தொகுத்து ஸஹஸ்ரதியானரத்னாவளி (ஆயிரம் தியானங்கள்

அடங்கிய) என்று வெளியிட்டு அனைவரும் பயன்படும் வகையில் செய், செய்வாய் எனப்பணித்தார்.

குருவருளால் என் சிற்றறிவிற்கு எட்டியவரை தொகுத்தும் வெளியிட்டேன். வெளியிட்டு விழாவானது அடியேன் பூஜித்து வரும் சென்னை தாம்பரம் சானிடோரியம் பகுதியில் காமகோடி நகர் என்ற இடத்தில் எழுந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீஅஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மி துர்கையின் சன்னதியில் 2016ம் ஆண்டு சாரதா நவராத்ரியின் விஜயதசமியன்று சென்னை ஸம்ஸ்கிருத கல்லூரி பேராசிரியர் வ்யாகரண சிரோமணி சிவஸ்ரீ அருணசுந்தர சிவம் அவர்களால் வெளியிடப்பட்டு முதற்பிரதியை முடிச்சூர் வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் சிவஸ்ரீ சுரேஷ் சிவம் அவர்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் அமைந்தது என்பது குறிப்பிடவேண்டிய செயலாகும். ஸஹஸ்ர தியான ரத்னாவளி என்ற நூலைப்பெற்ற மாணவர்களும் பெரியோர்களும் மனமகிழ்ந்த பெருமை குருவையே சாரும்.

எனது தந்தையின் மறைவுக்குப்பிறகு நான் பல முறை சென்று எனது விருப்பத்தைக்கூறியதால் என்னை மாணாக்கனாக ஏற்று அருளாசி வழங்கி அவர் மனதில் நீங்கா இடம் பெற்றதின் பயனாக என்னையும் சில மாணாக்கர்களுக்கு போதிக்கும் பணியினை செவ்வனே செய்யும்படிச் செய்துள்ளதை எண்ணி மனம் மகிழ்கிறேன்.

குருவருளும் திருவருளும் என்றென்றும் துணை செய்ய எல்லாம் வல்ல ஸ்ரீ சுந்தர குசாம்பிகா ஸமேத ஸ்ரீ தேஜினீ நாதப்பெருமானையும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மி துர்கா பரமேச்வரியையும் ப்ரார்த்தித்து எல்லோருக்கும் எல்லா நலமும் ஏற்பட வேண்டுகிறேன்.

ஆலவாய் உறையும் அங்கையற்கண்ணி உடனுறை சொக்கநாதப்பெருமானை முப்போதும் திருமேனி தீண்டும் பேறு

பெற்ற ஆதிசைவப்பெருமகனார் சிவஸ்ரீ மதுரநாயக பட்டர் (செல்வம் பட்டர்) உமாமஹேச்வரீ தம்பதிகளின் மணிவிழாவில் மலர் வெளியிட்டு குருநாதருக்கு பெருமை சேர்த்திட்ட அனைவரும் பதினாறு செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும் என்பதையும் அறப்பணியில் சைவாதிகார சேனாவில் பங்கு பெற்றவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

லோகாஸ்ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து.

இப்படிக்கு

T.G. கல்யாணசுந்தர சிவம்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

கந்தன் பாதம் கனவிலும் துணை செய்யும்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி

சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர்

ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்

அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி – ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

உ

திருச்சிற்றம்பலம்

வேதியா வேத கீதா விண்ணவர் அண்ணா என்றென்று
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே.

– ஸ்ரீமத் திருநாவுக்கரசர் பெருமான்

வாழ்த்துரை

நமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய சிறிய தகப்பனார் மதுரை அருள்மிகு மீனாக்ஷி–ஸுந்தரேச்வரர் திருக்கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ M. மதுரநாயக பட்டர் – ஸ்ரீமதீ S. உமாமஹேச்வரீ தம்பதிகளின் மணிவிழா நன்னாளில் "ஆகமச் செல்வம்" என்ற பெயரில் சிவாகமக் கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிடுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

நூலாசிரியர் சிவபுரம் சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசார்ய சுவாமிகளின் பெருமைகள் சொல்லில் அடங்குவன அல்ல. நம் குருநாதர் அல்லூர் சிவஸ்ரீ சிவாசார்ய சுவாமிகள், சிவபுரம் சிவாசார்ய சுவாமிகள் மீது பேரன்பும், பெருமதிப்பும் கொண்டவர்கள். சிவபுரம் சிவஸ்ரீ சிவாசார்ய சுவாமிகள் நாம் படிக்கின்ற காலத்தில் பலமுறை அல்லூர் பாடசாலைக்கு எழுந்தருளி ஆசி வழங்கியுள்ளார்கள். நம் ஆசார்யர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க "சிவாகம ப்ரயோக சந்த்ரிகா" என்ற நூலை முழுவதுமாகப் பார்வையிட்டு வேண்டிய திருத்தங்கள்

செய்து நூல் நல்லமுறையில் வெளிவர உதவி அருளியவர்கள் சிவபுரம் சிவஸ்ரீ சிவாசார்ய சுவாமிகள். அவர்கள் பல தலங்களிலும் எழுதிய கட்டுரைகளை இணைத்து "ஆகமச் செல்வம்" என்ற பெயரில் வெளியிடுவது மிகவும் போற்றத்தக்க ஒரு செயல்.

சிவாகம வளர்ச்சிப் பணிகள் பலவற்றிலும் ஈடுபட்டிருக்கும் சைவாதிகார சேனா அமைப்பினர் இந்நூலை வெளியிடுவது மிகப் பொருத்தமானது.

மணிவிழா தம்பதிகள் சதாபிஷேக – கனகாபிஷேக – பூர்ணாபிஷேகங்கள் கண்டு சிறப்புடன் வாழவும், அவர்கள்தம் குடும்பத்தினருக்கு ஸகலநலன்களும் உண்டாகவும், சைவாதிகார சேனா மிகச் சிறந்த நற்பணிகளைச் செய்யும் நிறுவனமாக வளரவும் ஆலவாயதனில் வீற்றிருந்தருளும் அருள்மிகு அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணல் சொக்கநாதப் பெருமானின் திருவடி மலர்களையும், திருப்பரங்கிரிதனில் கோயில் கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் இணையடி மலர்களையும் சிந்தித்து வணங்கி வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

K. ராஜா [signature]

திருப்பரங்குன்றம்

உ
சிவமயம்

"சிவாகம கலாநிதி", "சிவாகமச் செல்வர்", "சைவசித்தாந்த சரபம்"

சிவஸ்ரீ A.V. சுவாமிநாத ஶிவாசார்யார்

முதல்வர் & நிறுவனர்

சிவபுரம் வேத சிவாகம பாடசாலை, மயிலாடுதுறை.

email: avssivachariyar@yahoo.com ◆ Website: www.sivapuramtrust.com

ஆசியுரை

யஸ்ஸிவொ நாஊஉவாஹூாஂ யா ஜெவீ ஸவுஜஜுஊ ।
தயொஃ ஸஂஸ்லுஊணா த்ஹுஂஸாஂ ஸவுதொ ஜயஜஜுஊ॥

ஜமதஃ விதாஊ வநெ வாவுதீ வாஊஜெஸ்லுஊ ॥ என்று மஹாகவி காளிதாசர் கூறுகிறார்.

ஸ்வரூபநிலையில் ஸர்வவ்யாபியாக இருந்து அனுக்ரஹம் செய்யும் இறைவன், இந்த உலக ஆன்மாக்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்பொருட்டு அம்மையப்பர் கோலம் கொண்டு நமக்கு காட்சியருளுகின்றார்.

ஆன்மாக்கள் உய்தி பெற வேண்டுமென்றால் சிவபூஜை செய்ய வேண்டும். சிவபூஜை செய்யவேண்டுமென்றால் அதற்கான ஆகமாந்தமான சாஸ்த்ரங்களைச் சொல்லவேண்டும். அந்த ஆகம சாஸ்திரங்களுக்கான உபாகமங்கள் பத்ததிகள் இவற்றைச் சொல்லவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் எழுத்துக்கள், வரிவடிவங்கள், சொற்கள், சப்தபிரபஞ்சம் இவைகளெல்லாம் வேண்டும். எனவே பரமேச்வரன் இந்த உலக உயிர்கள் அனைத்தும் நன்மைபெறவேண்டுமென்ற பெருங்கருணைத் திருவுள்ளம் கொண்டுதான் வேதாகமங்களை அருளினார்.

"ஆரண ஆகமங்கள் அருளினால் உருவுகொண்டே
காரணன் அருளானாகில் கதிப்பவர் இல்லையாகும்

நாரணர் முதலாயுள்ள சுரர் நரர் நாகற்கெல்லாம்
சீரணி குருசந்தான செய்தியும் சென்றிடாவே"
" அருளது சக்தியாகும்"

– சிவஞானசித்தியார்

என்ற வாக்குகளுக்கிணங்க சக்தியாகிய அருளே வடிவமாகக் கொண்டு பெருமான் வேதாகமங்களை அருளிச்செய்கிறார்.

இக்கருத்தை ஶக்தி: வித்தநு: ஶம்போரஸ்ய காரணம் என்று சித்தாந்த சாராவளி கூறுகிறது. சிவபெருமானுடைய ஞானத் திருமேனியாக வித்யாதேஹமாக விளங்குபவள் உமையவள்.

அரூபமாக இருந்து அருளினால் நம் போன்றவர்கள் விளங்கிக்கொள்ள இயலாது என்ற காரணத்தால் ஸ்ரீகண்ட பரமசிவமாக உருக்கொண்டு ஆகமங்களை அருளியது ஆன்மாக்கள் உய்தற்பொருட்டேயாம்.

இதன்வழி இந்த வேதாகமங்கள் இப்பூவுலகிற்கு சிவபெருமானாலே தீக்ஷிக்கப்பெற்ற பஞ்சகோசர மஹரிஷிகளினாலே அவர்களுடைய பாரம்பர்யத்தின் மூலமாகப் பரப்பப்பட்டது. இதுதான் சிவாசார்யார்களுடைய திருக்கயிலாய மரபு. ஆதிசைவர்கள் ப்ரஹ்மஸ்ருஷ்டியைச் சார்ந்தவர்கள் அல்ல; சிவ ஸ்ருஷ்டியைச் சார்ந்தவர்கள். பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா: என்று ஆகமங்கள் சொல்லுகின்ற முறையிலே சிவபெருமானாலேயே தீக்ஷை செய்விக்கப்பட்டவர்கள்.

ஸாதாரம் நிராதாரம் என்ற இருவகை தீக்ஷையிலே நிராதார தீக்ஷையின் மூலமாக திருக்கயிலாயத்திலே தொடங்கியது இம்மரபு. அந்த ஐந்துகோத்ர பரம்பரையில் வரும் ஆசார்யர்களுடைய திருமேனியை சிவபெருமான் அதிஷ்டித்துத் தான் ஆணவ–மாயா–கர்மங்களாகிய மலங்களை அழித்து அருள்புரிகிறான்.

ஆசார்யபரம்பரையை சிவாசார்யார்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விடத்து ஆசார்யன் என்பது சிவபெருமானைத்தான் குறிக்கும். அவர்தான் முதல் குருநாதர். அந்த ஆசார்ய பரம்பரையிலே அவராலே ஸ்ருஷ்டிக்கப்பட்டு அவராலே தீக்ஷிக்கப்பட்ட பெருமைமிக்கவர்கள் ஆதிசைவர்களாகிய சிவாசார்யார்கள். அந்நிலை உணர்ந்து நாம் இந்த மண்ணுலகிலே ஆகமமரபினைக் காப்பாற்ற வேண்டும் என்று முன்னவர்களாகிய நம்முடைய பெரியவர்கள் அரும்பாடுபட்டு மாணவர்களை உருவாக்கி வேதாகமங்களை இன்றளவும் காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

நாம் இன்று ஆகமங்களை அச்சுப்புத்தகத்தில் படிக்கின்றோம். அந்த காலத்தில் இதுபோன்ற வசதிகள் கிடையாது. ஓலைச் சுவடிகளிலேயும் எழுதாக்கிளவியாகவும் சுருதியாகவும் உபதேசக்கிரமத்தில் மட்டுமே இருந்து வந்திருக்கின்றது.

அப்பொழுது சிவாசார்யார்கள் பெரும்பாலும் அந்தந்த ஊர்களிலே குருத்துவமாக இருந்திருக்கிறார்கள் என்பதையும் அறியமுடிகிறது. ஆலயத்தில் பூஜைசெய்தும் சிவாசார்ய மாணாக்கர்களுக்கு வேதாகமங்களை போதித்தும், மற்ற சைவப் பெருமக்களுக்கு ஆசார்யராக விளங்கியும், அவர்களில் பக்குவ ஆன்மாக்களுக்கு தீக்ஷை செய்வித்தும், மற்றையோர்க்கு நல்லுபதேசங்களை வழங்கி நெறிப்படுத்தியும், அந்தந்தப் பகுதிகளிலே அவரவர்களே அருளாட்சி செய்திருக்கிறார்கள் என்பதனை பல வரலாற்று ஆதாரங்களினாலே நாம் இன்று அறிந்துக்கொள்ளலாம்.

அப்படி வளர்ந்துவந்த ஆசார்யமரபு இடைப்பட்ட காலங்களிலே சுமார் 100 வருடங்களுக்குள் பல விதமான ராஜீக நிகழ்வுகள், அந்நியர் ஆட்சி, பல அதிகாரிகள் மற்றும் ஏனையோர்களாலே ஏற்பட்ட நெருக்கடிகள், கோயில்களுக்கு வருமானம் குறைந்து அர்ச்சகர்களுக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட

சூழ்நிலையில், அவர்களையும் ஆகமங்களையும் காப்பாற்றமுன் வந்தவர்கள் பல பெரியவர்கள். முற்காலத்தில் அரசர்கள் காப்பாற்றி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வேதங்களைக் காப்பாற்றினாலும் கூட ஆகமங்களை அவ்வளவாகக் காப்பாற்றினார்கள் இல்லை.

இந்நிலையில் குறிப்பாக ச்ரேஷ்டிகள் = சிறந்தவர்கள் என்ற சிறப்புப் பெயர்கொண்ட நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஊர்தொறும் ஊர்தொறும் வேதபாடசாலைகள், ஆகம பாடசாலைகள் ஆகியவற்றை நிறுவி சிவாசார்யர்களுக்கும் மாணவர்களுக்கும் தங்குவதற்கு இடமளித்து, உணவளித்து பொருள்களையும் அளித்து நிபந்தங்களையும் எழுதி வைத்து இந்த தர்மத்தைப் பரிபாலனம் செய்து வந்திருக்கிறார்கள். அதாவது மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் அவற்றை முறையாக காப்பாற்ற உதவி செய்து மேல்நிலைக்கு கொண்டு வந்தவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் என்றால் அது மிகையாகாது. சிவாசார்யர்கள் மற்றும் சிவாகமங்களின் வரலாற்றில் அது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. கராவலம்பம் = கைகொடுத்துத் தூக்கியவர்களை நாம் என்றென்றும் மறக்கக்கூடாது. பின்னாளில் வேத பாடசாலைகளும் ஆங்காங்கே செழித்து வளர்ந்து கொண்டிருந்தன.

சிவாகமப் பாடசாலைக்கென்று தனியே ஒரு பாடத்திட்டம் வகுத்து சிவாசார்யர்கள் வேத சிவாகமங்களையும் மற்ற சைவர்கள் தேவாராதி திருமுறைகளையும் கற்றுணர்ந்து நித்யநைமித்திகாதி பூஜைகளைச் செய்யவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு வேத சிவாகம பாடசாலையென்ற பெயரிலே 1942ஆம் ஆண்டு தருமையாதீனத்தின் 24வது குருமஹா ஸந்நிதானம் அவர்கள் தருமபுரத்திலே நிறுவினார்கள்.

அப்பொழுது அந்த பாடசாலைக்கான தலைமை ஆசிரியரை தேடியபொழுது சிவபுரத்திலே ஸ்ரீசிங்காரவல்லி உடனுறை

சிவகுருநாதப் பெருமானைப் பூஜிக்கும் ஆதிசைவ மரபிலே உதித்த நந்தமர் ஆசார்யரவர்கள் உமையொருபாகனின் திருவருளினாலே குருமஹாசந்நிதானங்களுக்கு அடையாளம் காட்டப்பட்டவர். அவர்களால் அந்த பாடசாலை சிறப்புற விளங்கியது. ஒரு பாடசாலை நன்றாக நடக்க வேண்டுமென்றால் அந்த ஆசிரியர் ஸர்வஜ்ஞனாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் அந்த பாடசாலையை நடத்துகின்ற தர்மகர்த்தாக்களுக்கும் அந்த புண்ணியகாரியம் செய்வது சுலபமாக இருக்கும்.

இன்றைக்கு நமக்குக் கிடைப்பதைப்போல பெரிய சன்மானம் வசதிகள் போன்றவையெல்லாம் இல்லையெனினும் அவற்றையெல்லாம் எதிர்பாராமல் சற்றேறக்குறைய ஐம்பது ஆண்டுகாலம் அந்தப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக விளங்கியவர்கள் நம் குருநாதராகிய சிவபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்யார் அவர்கள். நாம் அதில் பயின்றோம் என்பது நாம் இந்த பிறவியில் செய்த புண்ணியப்பேறு. ஆசார்யர்களுடைய உபதேசம், அவர்களுக்குப் பணிவிடை செய்கின்ற பாக்கியம், பாடங்களை அவர் சொல்லச்சொல்ல எழுதுகின்ற பாக்கியம் ஆகியவையெல்லாம் கிடைக்கப் பெற்றோம் அடியோம்.

அந்தக் காலம் பரபரப்பில்லாத ஒரு அமைதியான காலம். பொதுவாக மக்களுக்கு எதிர்பார்ப்புகள் அதிகம் இல்லாத காலம். அதுதான் நாம் செய்த புண்ணியம். இன்றுபோல் நவீன வசதிகளெல்லாம் அன்று இருந்திருந்தால் இதுபோன்ற பொக்கிஷங்களெல்லாம் நமக்கு கிடைத்திருக்குமா? என்பது சந்தேகம் தான். ஏனென்றால் அந்த ஒரு கால சூழ்நிலையில் எழுதப் பட்ட நூல்கள், அந்த நூலிலே சொல்லப்பட்ட கருத்து ஆழம், அந்த கருத்திலே அமைந்திருக்கின்ற அழுத்தம் ஆகியவற்றை இனிவரும் காலங்களில் காண்பது என்பது சந்தேகமே. எங்களுடைய ஆசார்யர் அவர்கள் ஆதிசைவ உலகில் அனைவராலும் அறியப்பட்ட 'நித்யபூஜா

லக்ஷண ஸங்க்ரஹம்' என்ற நூலை தொகுத்து வெளியிட்டார்கள். எல்லோராலும் ஏற்றுப் போற்றத்தக்கதாக அந்நூல் இன்றளவும் விளங்கி வருகின்றது.

உஷ:காலம் தொடங்கி அர்த்தஜாமம் வரையிலான அனைத்து பூஜைகள், அவற்றின் காலங்கள், திரவ்யங்கள், மந்த்ரங்கள் போன்ற அனைத்தையும் ஆராய்ந்து அமைத்து தந்திருக்கிறார்கள். அதற்கு நம்முடைய சிவாசார்ய சமுதாயம் என்றென்றும் கடப்பாடுடையதாம். ஏனென்றால் அவர்கள் மற்றநூலை ப்ரதிசெய்தோ வேகமாகவோ ஒரு பணியைச் செய்யமாட்டார்கள். அவர்களே ஆய்வு செய்து அவர்கள் கைகளாலேயே தான் எழுதுவார்கள். பாடம் நடத்துவதும் கூட அவரது கையெழுத்து ப்ரதியை பார்த்தேயன்றி நூல்களை பார்த்து அல்ல. அக்காலத்தில் அதிகமாக நூல்களும் வெளிவரவில்லை. ஒருசில மூலாகமங்கள் தான் வந்திருந்தன.

அவர்களது கையெழுத்துப் ப்ரதிதான் இன்று உலகெங்கிலும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை ஆசார்யர்களை நிறுவச்செய்திருக்கிறது. எண்ணிலடங்காத புத்தகங்களைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்த அவர்கள் பாடம் நடத்துவதற்கு தனது கைப்பிரதியை மட்டுமே பயன்படுத்தினார்கள். அதைக்கொண்டு அவர்கள் பாடங்களை விரிவாக உபதேசிப்பார்கள். அந்த குரல் இன்னும் காதிலே ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. இன்றைக்கு நினைத்துக்கூட பார்க்கமுடையாத கண்டிப்பான சட்டதிட்டங்களுடன் கூடிய குருகுலவாச மரபு அது. மாணவர்களை மிகுந்த கண்டிப்புடன் வைத்திருந்தார்கள், படிக்கவில்லையென்றால் அடித்து திருத்துவார்கள். அதே சமயத்தில் அன்பு பாராட்டுவார்கள். அடிக்கும்போது மனம் வருந்தினாலும், பிறகு அவர்கள் அன்பு பாராட்டி "இந்த சந்தர்பத்தில் நீ படிக்கவில்லையென்றால் பின்னாளில் உன்னால் படிக்க இயலாது, நீ நன்றாக இருக்கவேண்டும் என்பது

தான் எனது நோக்கம்" என்று கூறுவதை இன்று நினைக்கும்போதும் கண்களில் நீர்வழிகிறது.

பரமகருணாமூர்த்தி அவர்கள். அந்தகாலச்சூழல் அவர்களால் நல்ல கட்டுப்பாட்டோடு பாடசாலையை நடத்த முடிந்தது. நல்ல நூல்களை எழுத முடிந்தது. அவற்றுள் அற்புதமான ஒரு நூல் நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹம். பிறர் எழுதிய பல நூல்களுக்கு வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்கள். பல விழா மலர்களுக்கு அற்புதமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.

நாம் பயின்றுகொண்டிருந்த காலத்தில் அவர்கள் சொல்லி நாம் சில கட்டுரைகளை எழுதியிருக்கிறோம்.

தருமை ஆதீனத்தின் ஞானசம்பந்தம் மாதப் பத்திரிக்கையில் அற்புதமான பல கட்டுரைகளை எழுதி இருக்கிறார்கள். "சிவாகம ஸார ஹாரம்" என்ற பெயரில் ஒரு தொடரை எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் இவ்வளவு காலம் யாருமே அறியாததாக இருந்தது சிவாகம ஸார ஸர்வஸ்வம். ஸர்வஸ்வம் என்ற பெயரில் பல நூல்கள் வெளி வந்திருக்கின்றன. சப்தசதி ஸர்வஸ்வம், மந்த்ரசாஸ்த்ர ஸர்வஸ்வம் எனப் பல. ஆகமத்திற்கு ஸர்வஸ்வம் என்ற பெயரில் முதல்முதலாக எழுதியவர்கள் நம் ஆசார்யப் பெருந்தகை அவர்கள்.

ரசித்து ரசித்து எழுதுவார்கள். அதுபோன்ற பாங்கினை இப்பிறவியில் மற்றொருவரிடத்தில் காண்பது அரிது. பாடம் நடத்தும்போது ரசித்துப் பாடம் நடத்துவார்கள். எழுதிக் கொண்டிருக்கும்போது அவரைச்சுற்றி எது நடந்தாலும் அவருக்கு தெரியாது. அவர்களது அருகிலே இருந்து நாம் இதை அனுபவித்திருக்கிறோம். அவர்களை யாரும் தொந்தரவும் செய்ய விரும்பமாட்டார்கள். கைகளைக் கட்டிக்கொண்டு பலமணி நேரங்கள் நின்றுகொண்டிருக்க வேண்டியது தான். எதேர்ச்சையாக

நாம் இருப்பதை அவர்கள் பார்த்தால் ஏனப்பா கூப்பிட்டிருக்கக்கூடாதா என்று கேட்பார்கள். அதற்கு நம்மால் ஒன்றும் கூற இயலாது.

படிப்பின் மீதும், எழுத்தின் மீதும் அவர்கள் கொண்டிருந்த ஆர்வம், அழுத்தம், மனஉறுதி ஆகியவை நம்மை அவரைப் பின்பற்றச் செய்தது.

வாமதேவபத்ததி முழுவதையும் கையால் எழுதிவிட்டார்கள். அவர்களது கைப்பிரதிகளெல்லாம் ஆதீனத்தின் நூலகத்திலே இருந்தன. சிறிய சிறிய குறிப்புகள் அடங்கிய நோட்டுப் புத்தகங்களும் நிறைய எழுதி இருக்கிறார்கள். பாடநேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் அவற்றை எடுக்க அவர்கள் அனுமதிப்பதில்லை. பணத்தையும் நகைகளையும் நாம் பாதுகாப்பதைப் போல அவர்களது கைப்பிரதிகளைப் பாதுகாப்பதில் அவர்கள் கவனமாக இருந்தார்கள்.

அவர்களைப் பாராட்டுவதற்கெல்லாம் நமக்கு எந்த விதத்திலும் தகுதி கிடையாது. அவர்கள் பெற்றிருந்த ஞானத்தில் ஒரு துளியாவது நாம் பெற்றிருப்போமா என்பது சந்தேகம் தான். நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹம் படித்தவர்கள் சிவாகம ஸார ஸர்வஸ்வம் படித்தால் இன்னும் தெளிவு பெறலாம். இரண்டும் ஒரே பாதையில் பயணிக்கின்ற இரு அற்புத நூல்கள். இதைத்தான் என்னால் அறிமுகமாகச் சொல்லமுடிகிறது.

திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய ஆசிரியர் நமது அன்பிற்கினிய சிவஸ்ரீ கார்த்திகேய சிவம் நம்மோடு அடிக்கடி தொடர்பு கொண்டு நூல் எழுதுவது, நூல் வெளியிடுவது பற்றியெல்லாம் பேசுவார். அவரிடத்திலே தனி ஈடுபாடுண்டு. "கற்றாரை கற்றாரே காமுறுவர்" என்பார்கள். படிப்பிலே ஆர்வம் உள்ளவர்கள். அவரிடத்திலே நமக்கு ப்ரியம் ரொம்ப அதிகம். சிறிய வயதாக இருந்தாலும் சம்பாதிக்கவேண்டிய வயதில் அவற்றை யெல்லாம் விட்டுவிட்டு ஊரூராகச் சென்று மஹாவித்வான்

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சா போன்றவர்கள் பல நூலகங்களுக்குச் சென்று சேகரித்துத்தான் இன்று நமக்கு கோயிற் புராணம், தலபுராணங்கள், தமிழை எளிமையாக்கித் தந்தது போன்ற அரும்பெரும் சாதனைகள் எல்லாம் செய்தார்கள்.

அவர்களைப் போன்ற அந்த வலிமையும் சாதிக்கும் ஆற்றலும், ஞானமும் நம்முடைய கார்த்திகேய சிவத்திற்கு உண்டாகவேண்டி எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கி ஆசீர்வதிக்கிறோம்.

சிவாகம ஸார ஸர்வஸ்வம் என்ற கட்டுரைத் தொகுப்பை வெளியில் யாரும் அறிந்திருக்கவில்லை. அற்புதமான தொகுப்பாக இது அமைந்திருக்கின்றது. நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹ நூல்களில் வரும் விஷயங்களை இன்னும் ஆழமாக பதிவு செய்திருக்கிறார்கள் ஆசார்யர் அவர்கள். நித்யபூஜாலக்ஷண ஸங்க்ரஹத்தை படிக்கும்போது வரும் சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பதாக இது அமைந்திருக்கிறது. குருநாதருடைய எழுத்திற்கு குருநாதருடைய எழுத்தே பதில் சொல்ல முடியும். மற்றைய நூல்களில் விடை காண முடியாது. இதை அவர்கள் மனதில் எண்ணித்தான் இவ்வாறு செய்திருக்கிறார்களோ என்று தோன்றுகிறது.

நாம் அவசியம் தெரிந்திருக்கவேண்டிய நம்முடைய கௌரவம், உயர்ந்த நிலை மற்றும் பெருமைகளை விளக்குகின்ற பல அபூர்வமான ப்ரமாண ச்லோகங்களை மீண்டும் மீண்டும் பதிவு செய்திருக்கிறார்கள்.

அடியேனுக்கு தெரிய பலத் திருத்தலங்களில் உஷ: கால பூஜைக்கு சிவாசார்யரை தீவட்டியோடு அவரது இல்லத்திற்கு சென்றுதான் அழைத்துச் செல்வார்கள். பிற்காலத்தில் அந்த நிலையெல்லாம் மாறிவிட்டது. அந்த தீவட்டி– தீவர்த்திக்கு "சக்தி தீபம்" என்று பெயர் என இந்நூலில் பதிவு செய்திருக்கிறார்கள்.

சக்திதீபம் மற்றும் குடையோடு பைரவர் ஆலயம் வரை செல்லவேண்டும். பிறகு சயனாலயத்திற்குச் செல்ல வேண்டும் என்பதையெல்லாம் மிக அழகாகப் பதிவுசெய்திருக்கிறார்கள். அவ்வாறு செல்லும்போது அவரது ஆசாரம் பாதுகாக்கப்படுகிறது. திருக்கோயிலில் மந்த்ரசாந்நித்யம் நிறைந்து விளங்குகிறது. அதையெல்லாம் நாம் ஏன் இழந்தோம் என்று இந்தச்சூழல் நம்மை சிந்திக்க வைக்கிறது. ஆடம்பரத்திற்கு நாம் குடைதீபங்களை எடுத்துக்கொள்ளச் சொல்லவில்லை. இவையில்லையென்றால் பூஜை நிஷ்பலமாகும் என்று குறிப்பிடுகின்றார்.

அபிஷேகம் செய்வதைப் பற்றி குறிப்பிடும்போது எவ்வாறு அபிஷேகம் செய்யவேண்டும், த்ரவ்யங்கள், தீர்த்தம் எவ்வாறு எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்ற விஷயங்களையெல்லாம் விரிவாக விளக்குகிறார்.

ஒரு முக்கியமான விஷயம் உஷ: காலத்தில் செய்யவேண்டிய ஆசார்ய சந்த்யாநுஷ்டானம் போன்றவை யெல்லாம் மிக விரிவாகச் சொல்லிவிடுகிறார். அதற்குப் பிறகு காலசந்திப் பூஜையைப் பற்றிச் சொல்லும்போது ஆசார்யர் நதியிலே சென்று தீர்த்தம் எடுத்து வரவேண்டும் என்று குறிப்பிடுகிறார். அவ்வாறு கொண்டு வருகின்ற தீர்த்தத்தை பலிபீடத்திலோ, நந்தி தேவரின் சிரஸிலோ அபிஷேகம் செய்தால் தான், முன்னிரவு பள்ளியறை பூஜையின் போது சிவபெருமானுடைய ஜடாமகுடத்தை விட்டு நீங்கிய கங்காதேவீ மீண்டும் பெருமானுடைய சிரஸை அடைவாள் என்ற கருத்தை விளக்குகிறார். இது நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹம் நூலிலும் விளக்கப்பட்டுள்ளது.

இங்கே நமக்கொரு சந்தேகம் எழுகிறது. அது, காலசந்திபூஜைக்குத் தான் தீர்த்தம் எடுத்துவரவேண்டும் என்று சொன்னால், உஷ: கால பூஜைக்கு எந்த தீர்த்தத்தைப் பயன்படுத்துவது? என்பதாகும். அதற்கு அற்புதமான ஒரு

ப்ரமாணத்தை காட்டி விளக்கமளிக்கிறார் குருநாதர். அதாவது உஷ: காலபூஜையை "ராத்ர்யந்தக பூஜை" என்று குறிப்பிடுகிறார். அதாவது உஷ: காலபூஜையானது ஒரு நாளின் முதல் பூஜையன்று கடைசி பூஜை என்பது அதன் பொருள். அர்த்தஜாமப் பூஜைமுடிந்த பிறகு கதவை அடைத்துவிட்டு சூர்யோதயத்திற்கு முன்பாக உஷ: காலபூஜையைச் செய்துவிட வேண்டும். அது மறுநாள் கணக்கில் சேராது. சூர்யோதயத்திற்கு முன்பாக பூஜையைச் செய்துவிட வேண்டும் என்று சொன்னால், முதல்நாள் எடுத்த தீர்த்தங்களையும், புஷ்பங்களையும் தான் அந்த பூஜைக்கு உபயோகிக்க வேண்டும் என்ற கருத்தை விளக்குகிறார். ஏனென்றால் ஸ்ரீமத் காரணாகமம் ஜலஸங்க்ரஹணம், புஷ்ப ஸங்க்ரஹணம் போன்றவற்றை உதயத்திற்குப்பிறகே செய்யவேண்டும் என்று கூறுகின்றது.

ஜலஸங்க்ரஹணம் சைவ புஷ்பஸங்க்ரஹணம் ததா ।
உதயாதேவ கர்தவ்யம் -------------------

இதுபோன்ற தெளிவுகளையெல்லாம் இப்படிப்பட்ட நூல்களைப் படிக்கும்போது தான் நாம் பெறமுடியும்.

இருபத்தைந்து அபிஷேக த்ரவ்யங்களைப் பற்றியும் அவற்றின் வரிசை க்ரமங்களைப் பற்றியும் விளக்குகிறார்கள். ஒவ்வொரு அபிஷேகத்திற்கு இடையில் தூபதீபம் கொடுக்கவேண்டும் என்ற நடைமுறையில் இருக்கின்ற விஷயத்திற்கான ப்ரமாணத்தை தருகின்றார்.

கோயில் பூஜையில்தான் பலரும் வந்து குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள், தேவையற்ற வினாக்களைத் தொடுக்கிறார்கள். ஒரு திருக்கோயிலில் அர்ச்சகர்களைத் தவிர பிற பணியாளர்கள் எவருக்கும் இதுபோன்ற குழப்பமோ, மன உளைச்சலோ கிடையாது. அனைவருக்கும் பதில் தரவேண்டிய இடத்திலே அர்ச்சகர்கள் இருக்கிறார்கள். குருக்களிடத்தில் ஒருகேள்வி கேட்டு அவருக்கு

பதில் சொல்லத் தெரியவில்லை என்பதைப் பெருமையாக நினைக்கிறார்கள் பலர்.

இந்த நிலையில் இந்த நூலை ஒருமுறைப் படித்துவிட்டால் திருக்கோயில் நித்ய – பூஜை தொடர்பான அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையை அளிக்கமுடியும். சிவாசார்யர்கள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் இந்த நூலை முழுமையாகப் படித்து உணருங்கள். பொக்கிஷமாக பாதுகாத்து வைய்யுங்கள். எல்லாக்கேள்விகளுக்கும் விடை தந்திருக்கிறார் நமது ஆசார்யர் அவர்கள்.

கிழக்கு நோக்கியும் கோயில்கள் இருக்கின்றன, மேற்கு நோக்கியும் கோயில்கள் இருக்கின்றன. கோயில்கள் எவ்வாறு நோக்கியிருந்தாலும் சிவலிங்கத்திருமேனியின் கோமுகையானது வடக்கு நோக்கியே இருக்கும். அந்நிலையில் ஆசார்யர் எந்த இடத்தில் நின்று கொண்டு அபிஷேகம் செய்யவேண்டும். கிழக்கு நோக்கிய திருக்கோயில்களில் நாம் பெருமானுக்கு வலப்புறத்தில் அதாவது தென்கிழக்கில், வடக்கு நோக்கி நின்றுகொண்டு பூஜை செய்கிறோம். மேற்கு நோக்கிய கோயில்களில் பெருமானுடைய இடப்புறத்தில் தென்மேற்கில் வடக்கு நோக்கி நின்றுகொண்டு பூஜை செய்கிறோம். மற்ற இடங்களில் நிற்கக் கூடாது.

அதிகாரம் கொடிகட்டி பறக்கின்ற இக்காலத்தில் பலரும் நம்மை இங்கே நிற்காதே, அங்கே நிற்காதே என்று ஆட்டிவைக்கிறார்கள். ஆனால் மற்ற இடங்களில் நின்றுகொண்டு அபிஷேகம் ஏன் செய்யக்கூடாது என்பதற்கு பிரமாணத்தை மிக அற்புதமாக இந்நூலில் தந்திருக்கின்றார் ஆசார்யர். கோமுகை இருக்கின்ற பகுதியானது அம்பிகையின் இருப்பிடம். எனவே, அங்கு நின்று பூஜை செய்யவே கூடாது. என்று விளக்குகிறார். மூலநூல்களில் தேடிப்பிடித்து அறியக்கூடிய விஷயங்களை எல்லாம்

இது போன்ற ஆய்வு நூல்களை படிப்பதன் மூலம் நாம் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

ஆவாஹன காலத்தில் ஆசார்யன் குருரூபமாக இருக்கிறார். அபிஷேக காலத்திலும் அலங்கார காலத்திலும் ஆசார்யன் இறைவனுக்கு அம்மா ஸ்தானத்தில் இருக்கிறார். ஒரு குழந்தையை எப்படி அந்த குழந்தையுடைய அம்மா குளிப்பாட்டுகிறாளோ, அது போலத்தான் ஆசார்யன் இறைவனை குளிப்பாட்ட வேண்டும். நிவேதன காலத்தில் ஆசார்யர் மந்த்ரவடிவினராக இருந்து நிவேதனம் செய்யவேண்டும். சூஉாயெடூா ஊஜுவிமுஹஃ என்று குமார தந்திரத்தில் கூறியுள்ளது. அதில் மந்த்ரமாகிய ஆசார்யன் அந்த நிவேதனத்தை அம்பாளிடம் கொடுத்து, அம்பாள் அதை சுவாமியிடம் கொடுப்பதாக ஆசார்யர் கூறியிருக்கிறார். பிரதக்ஷிண நமஸ்காரங்களின் பொழுது ஆசார்யர் பக்த வடிவில் இருக்கவேண்டும். இதெல்லாம் இவருடைய நூல்களில் காணக்கிடைக்கின்ற அற்புதங்கள். மந்த்ரான்னம், சுத்தான்னம், விசேஷபக்ஷ்யபோஜ்யாதி நிவேதனங்கள், சந்தனாபிஷேக–மானவுடன் மந்த்ரான்னம், அலங்காரம் ஆன பிறகு சுத்தான்னம், உபசார தீபாராதனை செய்யும் பொழுது மற்றைய சித்ரான்னம், பக்ஷணங்கள் ஆகியவற்றை நிவேதனம் செய்யவேண்டும். இதில் மந்த்ரான்ன நிவேதனம் என்பது மிகவும் முக்கியமான விஷயம்.

நான் கூறும் விஷயத்தை எல்லோருடன் கலந்து கொள்ளுங்கள். உஷ:காலத்தில் நேரடியாக பூஜை செய்கின்றோம். காலஸந்தி பூஜைகாலத்தில் ஸௌராதி சண்டபர்யந்த பூஜை, சாயரக்ஷையில் விநாயகர் மற்றும் நடராஜருக்கு பூஜை செய்துவிட்டு மற்றவர்களுக்கு பூஜை செய்யவேண்டும். அந்த காலத்தில் ஒவ்வொரு சுவாமிக்கு ஒவ்வொரு நைவேத்யம் என்று வழக்கத்தில் வைத்திருந்தனர். அப்பொழுது ஈஹஸ்யூம் ஊஜுஸிதூ்ஃகும் என்ற வாக்கியத்திற்கிணங்க மந்த்ரான்னத்தை ரஹஸ்யமாக நிவேதனம்

செய்வார்கள். அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்தவுடன் திரையை எடுக்காமல் வெறும் நிவேதனம் மட்டும் செய்துவிட்டு வெளியே வந்துவிடுவார்கள். அடுத்தது பரிவாரபூஜைகளுக்கு பின்னர் நேரடியாக நிவேதனம் மட்டும் தான்.

இன்றும் நாம் அறிந்தவரையில் திருவிடைமருதூர், வைத்தீச்வரன் கோயில், திருவையாறு, மதுரை போன்ற கோயில்களில் நாம் இதை நேரில் கண்டிருக்கிறோம். ப்ரதான மூர்த்தியான சுவாமிக்கு இவ்வளவு முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டும். ஒரு முக்கியமான விஷயம் இதை அனைவராலும் எளிதாக புரிந்துகொள்ளமுடியாது. சிவாசார்யர்களுக்கு மட்டும்புரியும் படியாக நமது ஆசார்யர் கூறியிருக்கிறார்.

இந்த நூலுக்கு உரை எழுதினாலே அது ஒரு மிகப் பெரிய நூலாக விளங்கும். நமது ஆசார்யர் அவர்கள் இந்நூலை ஒரு விரிவான நூலாகத் தந்திருக்கிறாரா என்பதில் ஒரு ஐயப்பாடுதான். இது ஒரு மூலாகமத்தைப் படிப்பது போலத்தான் இருக்கிறது. எனவே ரஹஸ்யம் ரஹஸ்யமாகவே இருக்கட்டும் என்பது அவரது திருவுள்ளம். ஆனால் இந்தக் காலத்தில் எளிதில் அனைவருக்கும் புரியும்படி இதை ஆக்கவேண்டும் என்றால் இது ஒரு மிகப்பெரிய நூலாக வரும். அப்படியொரு அழுத்தமான நூலாக இதைத் தந்திருக்கிறார்கள்.

எனவே ஆதிசைவ சமூகம் இதைப் படித்து பயன்பெற வேண்டும். இதை ஆசார்யர் அவர்கள் மிகவும் அயராது உழைத்து எழுதியிருக்கிறார்கள் என்பதை மீண்டும் மீண்டும் படிக்கும்போது தான் புரிகிறது. அதனை நம் சமுதாயம் படித்தும், பழக்கத்தில் இல்லாது போனவற்றை மீண்டும் பழக்கத்தில் கொண்டுவந்தும் பணியாற்ற வேண்டும். ஏனென்றால் அனைத்து கோயில்களிலும் எல்லா க்ரியைகளும் நன்றாக நடந்திருக்கிறது. இந்தகாலத்தில் தான் அது சரியாக நடக்கவில்லை.

ஆனால் இன்று ஒரு சரியான சந்தர்பம். பெரும்பாலான கோயில்களில் ஆதிசைவ சிவாசார்யர்கள்தான் நித்யபூஜை உத்ஸவம் கும்பாபிஷேகங்களை முன்னின்று செய்து வருகிறார்கள். அந்தளவு பலத்தை நம் சமூகத்தில் சிலருக்குப் பெருமான் அருளியிருக்கிறார். எனவே நித்யபூஜை, நித்யாக்னி, நித்யோத்ஸவம் இவற்றையெல்லாம் மீண்டும் வழக்கத்தில் கொண்டுவருவதற்கு இந்த நூல் ஒரு நல்ல சூழலை உருவாக்கும் என்று நம்புகின்றோம்.

பெருமுயற்சி செய்து அயராது உழைத்து நம்முடைய திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய ஆசிரியர் சிவஸ்ரீ கார்த்திகேய சிவம் அவர்கள் இந்நூலை தொகுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நம்முடைய பரிபூரணமான ஆசீர்வாதங்களும் பாராட்டுகளும். தொடர்ந்து இதுபோன்ற பணிகளை அவர்கள் நிறையச் செய்யவேண்டும். நம்முடைய ஒத்துழைப்பும் அவர்களுக்கு என்றென்றும் பூரணமாக இருக்கும்.

இந்த நூல் மதுரை சிவஸ்ரீ ம. மதுரநாயக பட்டர் என்ற செல்வம் பட்டர் ஸ்ரீமதீ உமாமஹேச்வரீ தம்பதிகளின் மணிவிழாவில் வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரியது. சொக்கநாதப் பெருமானிடத்தில்தான் வேதங்களுக்கான பொருள் எல்லோருக்கும் அருளிச்செய்யப்பட்டது. அந்த மதுரையில் இந்த நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானதே. இந்த நூல் நல்லமுறையில் வெளிவந்து சிவமணம் பரப்ப உமையொருபாகன் கழலேத்தி வாழ்த்தி மகிழ்கிறோம்.

ஜெய் குருதேவ் உ சிவமயம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ப்ரசன்னா

சிவாகம விசாரதா - சிவாகம பிரவீணா - சிவாகம ஞானத்திலகம்

சிவஸ்ரீ. அவிநாசி. எஸ். சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார்

குருத்துவம் – முதல் ஸ்தானிகம்

அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி

முதல்வர், வேத ஆகம சம்ஸ்க்ருத மஹா பாடசாலை, ஸ்ரீ ஸ்ரீ குருகுலம்,
வேத விஞ்ஞான மஹா வித்யா பீடம், சர்வதேச வாழும் கலை மையம், பெங்களூரு.

A.S. Sundara Murthy Sivam

Principal, Veda Agama Samskrutha Maha Patashala, The Art of Living International Centre,
SRI SRI GURUKULAM, 21st Km, Kanakapura Road, Udayapura, Bengaluru - 560 082
Contact : 080 67262851, 9008499833, E-mail: srisrigurukulinfo@gmail.com / assmsivam20@gmail.com

---

உ

ஸ்ரீ குருப்யோ நமஹ

ஷஷ்டியப்தபூர்த்தி விழா

மதுரை, ஸ்ரீ மீனாக்ஷி அம்பிகா சமேத சுந்தரேஸ்வர ஸ்வாமி ஆலய சிவாசார்யார்
சிவஸ்ரீ மதுரநாயக பட்டர் (எ) செல்வம் பட்டர்
ஸ்ரீமதி உமாமகேச்வரீ

|| ஆகமச் செல்வம் ||

வாழ்த்துரை

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தான்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்பரே.

- திருமந்திரம் -

எல்லாம் வல்ல உமையொருபாகனின் திருவருள் துணைகொண்டு நமது பாடசாலையின் மாணவராகிய மதுரை, ஸ்ரீ மீனாக்ஷி அம்பிகா சமேத சுந்தரேஸ்வர ஸ்வாமி ஆலய சிவாசார்யார் சிவாகம வித்யாநிதி சிவஸ்ரீ விவேக் பட்டர் அவர்களின் பெற்றோர் ஆகிய சிவஸ்ரீ **மதுரநாயக பட்டர்** என்ற **செல்வம் பட்டர்** - ஸ்ரீமதீ **உமாமகேச்வரீ** தம்பதிக்கு சார்வரி வருடம், மாசி மாதம் 14–ம் நாள், வெள்ளிக்கிழமை (26.02.2021) அன்று நடைபெறும் ஷஷ்டியப்தபூர்த்தி வைபவத்தில்,

நமது ஆதிசைவ சமூகத்திற்கு முன்னுதாரணமாய் விளங்கியவரும், நமது சமூகத்திற்காக அருந்தொண்டாற்றியவருமான, தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியருமான சிவாகமவித்வன்மணி அமரர் சிவபுரம் ஸ்ரீ. சுவாமிநாத சிவாசார்யார் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட பல வேத, ஆகம, சாஸ்த்திர கட்டுரைகளை இணைத்து ஒரே நூலாக **“ஆகமசெல்வம்”** எனும் நூல் வெளியிடுவது மகிழ்ச்சியாக உள்ளது.

ஆகமசெல்வம் எனும் புத்தகம் மஹா கும்பாபிஷேகம், பலஸ்தாபனம், மற்றும் நித்யபூஜைகளை முறையாக அறிந்து, உணர்ந்து, சிறப்பாக செய்வதற்கு மிகவும் உபயோகமாக இருக்கும். ஷஷ்டியப்தபூர்த்தி விழாவின் தம்பதியரும் மேலும் இந்த ஞானநூலைப் படிக்கும் அனைவருக்கும் பதினாறு பேறும் பெற்று பெருவாழ்வு வாழ திருப்புக்கொளியூர் ஸ்ரீ பெருங்கருணாம்பிகை உடனுறை அவிநாசியப்பரை பிரார்த்திக்கிறேன்.

இந்த புத்தகத்தில் பல கட்டுரைகளை தொகுத்து வெளியீடு செய்யும் திருப்பரங்குன்றம், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயத்தின் ஆகம ஆசிரியர் சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவாசார்யார் மற்றும் உதவிபுரிந்த சிவஸ்ரீ **விவேக் பட்டர்** அவர்களுக்கு வாழ்த்துக்களை அன்புடன் உரித்தாக்குகிறேன்.

நன்றி – வணக்கம்

இப்படிக்கு

சார்வரி வருடம்,
மாசி – 11
23.05.2021
செவ்வாய்க்கிழமை

A. S. சுந்தரமூர்த்தி
அவிநாசி. எஸ் சுந்தரமூர்த்தி சிவாசார்யர்
முதல்வர், வேத ஆகம ஸம்ஸ்க்ருத மஹா பாடசாலை,
பெங்களூரு, கர்நாடகா – 560 082.

!! மேன்மை கொள் சைவநீதி !!



!! விளங்குக உலகமெல்லாம் !!

அருள்மிகு ஸ்ரீ பாகம்பிரியாள் உடனுறை ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் திருக்கோயில்

"சிவாகமரத்னம்" சிவஸ்ரீ ரா. செல்வம்பட்டர் (எ) கல்யாணசுந்தர சிவாசாரியார்

முதல்வர் ஸ்ரீ ஆலால சுந்தர வேத சிவாகம வித்யாலயம்

இந்து வேத பாடசாலை

238, வடக்கு ரதவீதி, தூத்துக்குடி - 628 002. போன் : 0461 - 2329882 செல் : 94432 5088

Email: selvam_patter@rediffmail.com website : www.hinduvedapadasalai.com

உ

சிவமயம்

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க"

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காத இறைவனின் திருத்தாள் வணங்கி நமது பெருமைக்கும், மரியாதைக்கும் உரிய சிவஸ்ரீ M. மதுரநாயகபட்டர் ஸ்ரீ மதீ M. உமாமகேச்வரீ தம்பதியரின் ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தி விழா சிறப்பாக நடக்க இருப்பதை கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்".

முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவராம் முனிவர்" என்ற பெரியபுராண வாக்கிற்கு இணங்க உலகம் உய்யும் பொருட்டு ஸ்ரீ மீனாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ சொக்கநாதப் பெருமானை பன்நெடுங்காலமாக பூஜை செய்து பேறுபெற்றவர் விழா நாயகர் அவர்கள்.

மேலும் பல திருக்கோவில்களின் கும்பாபிஷேகங்கள் மற்றும் திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளையும் சீரும் சிறப்புமாக செய்து வரக்கூடியவர்.

தான் மட்டுமல்லாது தன்னுடைய சந்ததிகளையும் உலகநலன்கருதி சைவஉலகிற்கு திருத்தொண்டு புரிய வேண்டுமென்று சிறு வயது முதல் அவர்களை அப்பணியில் ஈடுபாடுடன் செயல்படுத்தியதன் பயனாக இன்று அவர்களது குமாரன் 'சிவாகம வித்யாநிதி' சிவஸ்ரீ K. விவேக் பட்டர் அவர்கள் பெங்களூர் வேத சிவாகம வித்யாலயத்தில் பயின்று தந்தையார்

போலவே சிவ கைங்கர்யத்தில் ஈடுபட்டு மேலும் தன்னுடைய சக மாணவர்களை கொண்டு "சைவாதிகார சேனா" என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலமாக சைவத் திருக் கோவில்களில் திருப்பணி செய்தல், ஏழை எளியோர்க்கு கல்விக்கான உதவிகளைச் செய்தல், அன்னதானம், மருத்துவம் போன்ற முகாம்களை ஏற்படுத்துதல் நம்முடைய புராதனமான சைவ நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிடுதல் போன்ற பல திருத்தொண்டுகளையும், சிவத்தொண்டுகளையும் செய்து வருகின்றனர்.

மேலும் சைவ சமயத்தில் கற்றறிந்த சான்றோர்களை கொண்டு அவ்வப்பொழுது வேதசிவாகமம், திருமுறை, சைவ சித்தாந்தம் போன்ற மிகச்சிறந்த கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர், அதற்கு உதாரணமாக இவ்விழாவில் கூட நமது மேன்மைமிகு சிவாகம வித்வான் தருமபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்கள் 1954ம் ஆண்டு முதல் 1975ம் ஆண்டு வரை வெளியிட்ட மாத இதழ் நூல்களின் மூலமாக தொகுத்து வழங்கிய கட்டுரைகளை மறுபதிப்பு செய்து புத்தகமாக வெளியீடு செய்கிறார்கள்.

இது போன்று இன்னும் பல சைவப்பணிகளை சிறப்பாக இவர்கள் செய்யும் பொருட்டு இறைவனை வேண்டி விழா நாயகர் சிவஸ்ரீ M. மதுரநாயகபட்டர் ஸ்ரீமதி M. உமாமகேச்வரி அவர்களுக்கு நமஸ்காரங்களை சமர்ப்பித்தும் மேலும் பீமரத சாந்தி, சதாபிஷேகம், கனகாபிஷேகம், பூர்ணாபிஷேகம் போன்ற சுப நிகழ்ச்சிகளை செய்யும் பெரும்பேறு பெற்று வாழ்வாங்கு வாழ அருள்தரும் ஸ்ரீபாகம் பிரியாள் உடனுறை அருள்மிகு ஸ்ரீ சங்கரராமேச்வரப் பெருமான் திருவடிகளை போற்றி வணங்குகிறேன்.

சிவனடியே சிந்திக்கும்

ரா. செல்வம் பட்டர்

ஸ்ரீகுருப்யோ நம:
திருச்சிற்றம்பலம்

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் அந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதன்
வேரறியாமை விளம்புகின்றேனே

– திருமூலர் திருமந்திரம்

முன்னுரை

அடியேன் சிங்கப்பூர் ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலயத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தபோது, கோயிலுக்கு எதிரிலுள்ள EVS என்ற பழைய புத்தகக் கடைக்கு அடிக்கடி சென்று நம் சமயம் தொடர்பான பழைய நூல்கள் கிடைக்குமா என்று பார்ப்பது வழக்கம்.

அவ்வாறு ஒருமுறை (அநேகமாக 2001ஆம் ஆண்டு) சென்றபோது இலங்கை, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளிலுள்ள திருக்கோயில்கள் பலவற்றின் கும்பாபிஷேக மலர்கள் கிடைத்தன.

அவற்றுள் இலங்கை திருக்கேதீச்வரம் திருக்கோயில் கும்பாபிஷேகம் மற்றும் மண்டலாபிஷேக மலர், மலேஷியா, ஜோகூர்பாரு, ஸ்ரீராஜமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் ஆகியவற்றுள் இந்நூலாசிரியர் தருமை ஆதீன வேத சிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர் சிவாகம வித்வான் அமரர் சிவபுரம் S.சுவாமிநாத சிவாசார்யார் அவர்கள் எழுதிய கட்டுரைகள் இருந்தன.

அவற்றைப் பார்த்த உடனேயே அவர்கள் எழுதிய கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற

எண்ணம் தோன்றியது. அந்த எண்ணம் 20ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நிறைவேறுகிறது.

சிவபுரம் சிவாசார்ய சுவாமிகள் எழுதிய கட்டுரைகள் வேறு ஏதாவது இருக்கின்றதா? என்று பல ஆண்டுகளுக்கு முன்னர் மயிலாடுதுறை, சிவபுரம் வேதசிவாகம பாடசாலை முதல்வர் பெருமதிப்பிற்குரிய ஆசார்யர் சிவஸ்ரீ A.V சுவாமிநாத சிவாசார்யார் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் "சிவாகம ஸார ஹாரம்" என்ற பெயரில் "ஞானசம்பந்தம்" என்ற தருமை ஆதீனத் திங்களிதழில் பல ஆண்டுகள் எழுதியுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எந்த ஆண்டில் அந்த கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன என்று அறிந்து அவற்றைத் தேடிப்பிடித்து எடுப்பது என்பது அப்போது அவ்வளவு சுலபமாகத் தோன்றவில்லை.

இந்நிலையில் மதுரை ஸ்ரீமீனாக்ஷி–ஸுந்தரேச்வரர் திருக்கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ செல்வம் பட்டர் ஸ்ரீமதீ உமா மஹேச்வரீ தம்பதிகளின் மணிவிழாவில் நூல் ஒன்றை வெளியிடவேண்டும் என்று குறிப்பிட்டார் மணிவிழா நாயகரின் திருக்குமாரனாகிய சிவஸ்ரீ S. விவேக் பட்டர் அவர்கள்.

அவரிடம் இத்தகவலைக் குறிப்பிட்டபோது உடனே அவர் தாராளமாகச் செய்யலாம் என்று சொன்னார். அதற்கான பணிகளைத் தொடங்கிச் செய்துகொண்டிருக்கும்போது மணிவிழா நாயகரின் தந்தையார் சிவஸ்ரீ M. மதுரேச பட்டர் அவர்களின் நூல்களைப் பார்க்க நேரிட்டது. அவற்றுள் தருமை ஆதீனத் திங்களிதழான "ஞானசம்பந்த"த்தின் பல இதழ்கள் கிடைத்தன. அதனுள் சிவபுரம் சிவாசார்ய சுவாமிகள் எழுதிய "சிவாகம ஸார ஸர்வஸ்வம்" "ஸஹஸ்ராகமம் அஷ்டபந்தன விதி படல மொழிபெயர்ப்பு" ஆகிய கட்டுரைகளின் சில பகுதிகள் கிடைத்தன.

மேலும் திருவானைக்காவல், இராமேச்வரம் ஆகிய திருக்–கோயில்களின் மஹாகும்பாபிஷேக மலர்களில் "நித்யபூஜையும் அதன் தத்துவமும்" என்ற கட்டுரையும், "ஷோடச உபசாரம்" என்ற கட்டுரையும் கிடைத்தன.

அடியேன் மயிலாடுதுறையில் இருக்கும் எனது ஸஹோதரியின் திருக்குமாரர்கள் சிர சிவப்ரவாஹ், சிர சிவசுதன் ஆகியோரைத் தொடர்புகொண்டு தருமை ஆதீனத்தின் நூலகத்தில் பார்க்கமுடியுமா என்று கேட்டேன். அவர்களும் அங்கு சென்று 1970 முதல் 1973 வரையுள்ள இதழ்களில் இருந்த கட்டுரைகளை கைப்பேசியிலேயே Scan செய்து PDFஆக அனுப்பி விட்டார்கள்.

அவற்றைப் பார்த்தால் கட்டுரை இன்னும் பல காலத்திற்கு முன்பே தொடங்கியிருக்கவேண்டும் என்பதுபோலத் தோன்றியது.

அதனால் சிவஸ்ரீ விவேக் பட்டரை அழைத்துக்கொண்டு தருமபுரம் சென்று நக்ஷத்திர நாயகர் தருமை ஆதீனத்தின் 27வது குருமஹா ஸந்நிதானம் அவர்களைச் சந்தித்து தகவலைத் தெரிவித்தபோது அவர்கள் உடனே நூலகர் திரு. செல்வராஜ் அவர்களை அழைத்து ஆவன செய்துதருமாறு பணித்து அருளினார்கள்.

திருப்பனந்தாள் சிவஸ்ரீ கல்யாணசுந்தர குருக்கள் மற்றும் அடியேனது ஸஹோதரியின் புதல்வர்கள் சிரஞ்சீவி S. சிவப்ரவாஹ் மற்றும் சிரஞ்சீவி S. சிவஸுதன் ஆகியோரின் உதவியுடன் ஒருநாள் முழுவதுமாக அங்கிருந்து நூலகம், அச்சகம் ஆகியவற்றுள் இருந்த "ஞானசம்பந்தம்" இதழ்களில் 1942 முதல் 1980 வரை தேடியபோது 1954 முதல் 1973வரை எழுதியிருக்கிறார்கள் என்பதை அறிய முடிந்தது. ஆனாலும் தொடர் கட்டுரைகள் எதுவுமே முழுமையாகக் கிடைக்கவில்லை.

இணையத்தில் தேடியபோது www.tamildigitallibrary.org, மற்றும் www.archive.org ஆகிய இணையதளங்களில் சில கட்டுரைகள் கிடைத்தன.

மீதமுள்ள பகுதிகளைத் தேடும்பணியில் பலரைத் தொடர்புகொண்டு பேசியும் கிடைக்காத நிலையில் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் பேராசிரியர் சிவ. நடராஜன் அவர்கள் கும்பகோணத்தில் "சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம்" என்று ஒன்று உள்ளது; அங்கு முயற்சி செய்யுங்கள் என்றார். உடனே நமது வித்யாலயத்தின் மாணவர் திருஇன்னம்பர் சிர. நாகநாத சிவத்தைத் தொடர்புகொண்டு அங்கு சென்று பார்த்து வருமாறு கேட்ட உடனே அவர் அங்கு சென்று பார்த்துவிட்டு 1958 முதல் அனைத்து இதழ்களும் இருப்பதாகத் தெரிவித்தார்.

மறுநாளே ஸ்ரீ நாகநாத சிவம் மற்றும் கும்பகோணம் ஸ்ரீவிக்னேஷ் சிவம் ஆகிய மாணவர்களின் உதவியுடன் அங்கு சென்று தேடியபோது தொடர்கட்டுரைகள் முழுமையடைந்ததோடு இன்னும் பல புதிய கட்டுரைகளும் கிடைத்தன.

தனி ஒருவரின் முயற்சியால் உருவான அந்த நூலகத்தின் உரிமையாளர் S. தயாளன் மற்றும் நூலகர் R. ராமகுருநாதன் இருவரும் மிகுந்த அன்போடு நாங்கள் கேட்டவற்றை எடுத்துக் கொடுத்து உதவினார்கள். அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடப்பாடு உடையவர்கள்.

அவற்றுள் "சிவாகம ஸார ஸர்வஸ்வம்" என்ற கட்டுரை மட்டும் நிறைவடையவில்லை என்றும், தாம் அதை நிறைவுசெய்து தருவதாகத் தெரிவித்தும், மிக அருமையானதொரு ஆசியுரையை இந்நூலுக்கு வழங்கியும், அடியேனை வாழ்த்தியருளியுள்ள மயிலாடுதுறை பெருமதிப்பிற்குரிய சிவபுரம் வேத சிவாகம பாடசாலை முதல்வர் சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாசார்யார்

அண்ணா அவர்களுக்கு எனது ஸாஷ்டாங்க நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடியேனிடம் இருந்த நூல்களுள் இலங்கையிலிருந்து வெளிவந்த "சைவசாஸ்த்ர பரிபாலனம்" பத்திரிகையிலும், கடலூரிலிருந்து வெளிவந்த "சைவாலயம்" பத்திரிகையிலும் சில கட்டுரைகள் கிடைத்தன.

நூலாசிரியர் வரலாற்றை விரிவாகக் குறிப்பிடவேண்டும் என்று விரும்பி பல ஆண்டுகளுக்கு முன்னரே சிவபுரம் வேத சிவாகம பாடசாலை முதல்வர் சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாசார்யார் அவர்களைக் கேட்டபோது ஏதோ ஒரு நூலில் திருப்பனந்தாள் 'சிவஸ்ரீ சுந்திரசேகர சிவாசார்யார்' அவர்கள் 'என் குருநாதர்' என்ற தலைப்பில் வாத்யார் அண்ணாவைப் பற்றி எழுதியிருக்கிறார்கள் என்ற குறிப்பைச் சொன்னார்கள்.

அதையும் பல ஆண்டுகளாகத் தேடியும் கிடைக்காத நிலையில் இந்நூலுக்கான சில ஆலோசனைகளைப் பெறவேண்டி சென்னை சிவாகமப்பேராசான் சிவஸ்ரீ V. ஸோமசேகர சிவாசார்யார் அவர்களைத் தொடர்புகொண்டபோது அவர்கள் சைவாலயம் பத்திரிகையில் தான் எழுதியிருக்கிறார்கள்; என்னிடம் அந்த பிரதி உள்ளது என்று சொன்னார்கள். உடனே மயிலாப்பூர் அசோக் சிவம் அவர்களைத் தொடர்புகொண்டு அதைப் பெற்றுத் தருமாறு கேட்ட உடனே அவர் அண்ணா அவர்களிடமிருந்த சைவாலயம் பிரதிகளை வாங்கி அனுப்பினார்கள்.

வாழ்க்கைக் குறிப்புகள் தொடர்பான மேலும் சில தகவல்கள் "ஆதிசைவர் மரபும் சான்றோர்களும்" என்ற நூலிலும், மலேஷியா, ஜோகூர்பாரு, ஸ்ரீராஜமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலரிலும் கிடைத்தன.

இப்பணிகளைச் செய்துவரும்போதே பல ஆண்டுகளாக என் மனதில் இருக்கின்ற ஒரு ஆசை பெரிதாகியிருக்கிறது.

அது "ஆகமம் வளர்த்த ஆன்றோர்கள்" என்ற தலைப்பில் பாடசாலையில் ஆகமம் போதித்தவர்கள், பாடசாலை நிறுவி ஆகமம் போதித்தவர்கள், கட்டுரைகள் – நூல்கள் – சொற்பொழிவுகள் மூலம் சிவாகமக் கருத்துக்களை வளர்த்தவர்கள், தீக்ஷை செய்வித்து சிவாகம நெறியை வளர்த்தவர்கள் என்று ஆகமப்பணி செய்தவர்கள் அனைவரையும் இளம் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதாகும்.

அப்பணியில் முன்னமேயே திருவாடானை சிவஸ்ரீ ஐயாமணி சிவாசார்யார் அவர்கள் எழுதிய கட்டுரைகள் "சிவநெறிக் கட்டுரைகள்" என்ற தலைப்பில் பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ அண்ணா அவர்களின் அனுக்ரஹத்தால் வெளியிடப்பட்டது.

அதேபோல பிற ஆசார்யர்களையும் அவர்களது கட்டுரைகளோடு இணைத்து வெளியிடுவதற்கு பெருமான் அருள் செய்ய வேண்டும் என ப்ரார்த்திக்கிறேன்.

தருமை ஆதீன வேத சிவாகம வித்யாலயத்தின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற நாள் முதல் இறுதிமூச்சுவரை அப்பணியைச் சிரமேற்கொண்டு செய்த இந்நூலாசிரியர் சிவாகம வித்வான் சிவபுரம் சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களின் திருவடிக்கமலங்களை மனம் மொழி மெய்களால் வணங்கி மகிழ்கிறேன்.

சிவாசார்ய சுவாமிகள் எழுதிய கட்டுரைகள் பலவற்றுள் 27 கட்டுரைகள் ஆகமச் செல்வம் என்ற இத்தொகுப்பினுள் அமைந்துள்ளன. கட்டுரைகள் பெரும்பாலானவை 'ஞானசம்பந்தம்' திங்கழிதழிலும், ஆதிசைவர் மாத இதழான சைவ–ஆலயம் பத்திரிகையிலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சைவசாஸ்த்ர

பரிபாலனம் பத்திரிகையிலும், மேலும் சில, ராமேச்வரம், திருவானைக்காவல், திருக்கற்குடி, இலங்கை, யாழ்ப்பாணம், திருக்கேதீச்வரம், காரைநகர் ஆகிய கும்பாபிஷேக மலர்களிலும் வெளிவந்தவை.

ஒரே தலைப்பிலேயே சில கட்டுரைகள் இரண்டு இருந்தாலும் அவற்றுள் உள்ள வேற்றுமை கருதி இரண்டையும் வெளியிட்டுள்ளோம்.

பல கட்டுரைகளில் வந்த விஷயங்களே திருப்பி வருவது போல் தோன்றினாலும், அவைகள் பல தளங்களில் எழுதிய தனிக் கட்டுரைகள் என்பதை வாசகர்கள் மனதில்கொள்ள வேண்டுகிறோம்.

கட்டுரைகளை சிவாகமங்களைப் பற்றிய பொது அறிமுகம், கர்ஷணம் – பிரதிஷ்டை, நித்யம், நைமித்திகம், காம்யம், ஞானபாத விளக்கம், சமயப் பொதுக்கட்டுரைகள் ஆகிய தலைப்புகளுள் அமைத்துள்ளோம்.

ஆசிரியர் அவர்களின் பரந்து விரிந்த ஆழமான ஞானத்திற்குச் சான்றாக இக்கட்டுரைகள் விளங்குகின்றன. ஆசிரியர் அவர்கள் ஆகமங்கள் மட்டுமின்றி, வைதிகநூல்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சில்பசாஸ்த்ரம், ஜோதிஷம் ஆகிய துறைகளிலும் எவ்வளவு ஆழமான ஞானம் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை இந்நூலைப் படிப்பவர்கள் உணர்வார்கள் என்பது திண்ணம்.

நமக்குக் கிடைத்தவரையில் கட்டுரைகளை நாம் வெளியிடுகிறோம். ஆனால் இன்னும் எவ்வளவு கட்டுரைகள் இருக்கின்றன என்பதை நம்மால் ஊஹிக்க முடியவில்லை.

சிவாகம க்ரியா ஸாரம் என்ற கட்டுரைத் தொகுப்பு முழுமையாகக் கிடைக்கவில்லை. சிவாகம ஸார ஸர்வஸ்வம்

என்ற தொகுப்பு முழுமை பெறவில்லை. ஸஹஸ்ராகமத்தின் அஷ்டபந்தன மொழி பெயர்ப்பு தற்போது வெளியிடப்படவில்லை. அவை அனைத்தையும் சேர்த்தால் ஏறத்தாழ 1000 பக்க அளவில் இந்நூல் விரியும் என்பதில் ஐயமில்லை. நூல் முழுமையும் தயாரான பிறகு சென்னை பல்கலைகழகப் பேராசிரியர் திரு பெ திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்களின் மணிவிழா மலரில் மணிவிழா என்ற பெயரிலும், தில்லை ஸ்ரீசிவகாமி அம்பிகை மஹாகும்பாபிஷேக மலரில் "திருக்கோயிலில் சிவமூர்த்தங்கள்" என்ற பெயரிலும் கட்டுரை எழுதியிருப்பதை அறிய முடிந்தது. அவை அடுத்த பதிப்பில் சேர்க்கப்படும்.

அவை அனைத்தும் விரைவாக வெளிவர பெருமான் கருணைபுரிய வேண்டும்.

நூல் முழுவதையும் பொறுமையாக பார்த்துப் பிழைகளைத் திருத்தித் தந்த காஞ்சீபுரம் சிவஸ்ரீ J. செந்தில்நாத சிவாசார்யார் அவர்களுக்கும், ஆகமச் செல்வம் என்ற இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த மதுரை ஹைலைட் கிராபிக்ஸ் உரிமையாளர் ஸ்ரீ சுவாமிநாதன் அவர்களுக்கும், நூலாக்கப் பணியில் உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணிவிழா தம்பதிகளாகிய நாயக–நாயகிகளுக்கு எனது நமஸ்காரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரன்புடன்
சிவசரண–கமலைக–சரண்யன்
சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்,
திருப்பரங்குன்றம்.

உ

சிவமயம்

அறிமுகம்[2]

ஆகம வித்வான்

சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார்

பிரின்சிபால், தருமபுர ஆதீன வேத சிவாகம பாடசாலை

தருமபுரம், மாயூரம் P.O

எனது ஆசிரியர்

(எழுதுபவர்:– ஆகமப்ரவீண, ஸாஹித்ய சிரோமணி,

திருப்பணந்தாள் V. சந்திரசேகர குருக்கள், தருமை)

ஸஉாமிவ௴ ௬ஙஜஙு ஶ்ரீகஶும் ஓுஙாஈ ஆகா௴।
ஶுஹம் விஷ்ணும் ச யாகாரம் ஶுஈஉங் ஸஷ்ஹஸஉாஶ்ரயெ॥

என்று சிவாகமங்களில் கூறியுள்ளபடி சிவபூஜை செய்கின்ற நமக்கு சதாசிவன், அனந்தன், ஸ்ரீகண்டன், அம்பிகை, ஸ்கந்தன், விஷ்ணு, பிரமன் என்று குருக்கள் ஏழுபேர்கள். என்போன்ற மாணவர்களுக்கு ஞானோபதேசம் செய்து அனுக்கிரஹம் செய்யும் பொருட்டு ஸ்கந்தகுருதான் ஸ்ரீஸ்வாமிநாதகுரு என்ற பெயருடன் விளங்குகிறார் என்பது எனது நம்பிக்கை.

ஶுஈவொ ஬ஹவஸ்ஸஂதி ஸஉஞளஷயி-வெஉிநஃ।
நிமஉாமஉ-ஶாஸ்ஹாக்ஷ-உஞஜ்ஞா உுஓூஹொ ஹுவி॥

- வாஈஶுஈாஉகஜூஸஉகு௴

மந்திரங்களுடன் ஓஷதிகளையும் தெரிந்தவர்கள் பலர். ஆனால் வேதம், ஆகமம், சாத்திரம், மந்திரம் இவைகளின் அறிவும் அனுபவமும் பொருந்தியவர்கள் சிலர். அச்சிலரில் ஒருவராக

---

[2] கடலூர் சிவஸ்ரீ சம்பந்த குருக்கள் மற்றும் அவரது சகோதரர் அட்வகேட் சிவஸ்ரீ அருணாசல குருக்கள் ஆகியோர் இணைந்து நடத்திய "சைவாலயம்" மாதப் பத்திரிகையில் 1967ஆம் ஆண்டு வெளிவந்தது.

கருதப்படுபவர் சுவாமிநாத சிவாசாரியார் என்று அழைக்கப்படும் எனது ஆசிரியர்.

இவர் 5-5-1908ல் அதாவது [3]கீலக வருஷம் சித்திரை மாதம் கிருத்திகா நக்ஷத்திரத்தில் "வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்" என்று வாகீசப் பெருந்தகையால் பாடப்பட்டு சோழநாட்டின்கண் காவேரியின் தென்பால் விளங்கும் [4]சிவபுரம் என்னும் பதியில் பிறந்தவர்.

இவருடைய தந்தையார் மந்திரத்தாலும் வைத்தியத்தாலும் வல்லுனரான சுப்பிரமணிய சிவாசார்யர் என்பவர். அன்னையின் பெயர் அனந்த லக்ஷ்மி (நாயகி) அம்மாள்.

சிவாகமத்தில் சிறந்த அறிஞராயும் தனது மாதுலராயுமுள்ள பருத்தியூர் சுப்பிரமணிய சிவாசாரியரிடம் குருகுலவாசமாக இருந்து ஆகமசாஸ்த்ரங்களின் நுண்ணிய அறிவையும், நித்தியம் நைமித்திகம் முதலிய பூஜைகளில் சிறந்த அனுபவத்தையும் பெற்றவர்.

திருக்குடந்தை என்னும் புனித நகரத்திலிருந்த அக்னி ஹோத்திரம் ஸ்ரீபட்டு சுவாமிகளிடத்திலும், அவருடைய சகோதரரான ஸ்ரீகோபாலதேசிக சுவாமிகளிடத்திலும் நியாய சாத்திரம் முதலியதைப் பயின்றவர்.

மன்னார்குடி ஸ்ரீ யஜ்ஞசுவாமி தீக்ஷிதரிடமும் அவருடைய அந்தேவாசியான ஸ்ரீ ஜகதீச சாஸ்திரிகளிடமும் ஸ்ரீ கண்ட பாஷ்யம் படித்தவர்.

பழனி காசிவாசி ஈசான சிவாசாரியர் மூலமாக சைவ சித்தாந்தத்தின் அறிவைப் பெற்றவர்.

---

[3] மலேஷியா ஸ்ரீராஜமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலரில் 'ப்லவங்க' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[4] சிவபுரத்தைச் சார்ந்தவராயினும் தாயாரின் ஊரான பருத்தியூரிலேயே பிறந்தார் என்ற குறிப்பு மேற்கூறிய நூலில் காணப்படுகிறது.

சிற்பசாத்திரங்களின் ஆராய்ச்சியினால் விக்ரஹ லக்ஷணம் ஆலயலக்ஷணம் முதலியவைகளை நன்கு உணர்ந்து ஆங்காங்கு திருப்பணி நடைபெறுமிடங்களில் ஆகம சாஸ்த்ரோக்தமாக ஆலய அமைப்பு, விக்ரஹ அமைப்பு முதலியவைகளையும், ஸ்தான நிர்தேசம் முதலானவைகளையும் நிர்ணயஞ்செய்து கொடுக்கும் ஆற்றலுடையவர்.

சிவாகமம் போல சாக்த மந்திர – தந்திரக் கிரியைகளிலும் திறமையுள்ளவர். தருமையில் நடைபெற்று வரும் சதசண்டீ யஜ்ஞத்தை உடனிருந்து நடத்திவைப்பதுடன் பல தடவை அதற்கு ஆசாரியராகவும் இருந்து பணியாற்றியுள்ளவர். ஆகவே மந்திர தந்திரக் கிரியா பாவனையினால் ஆசாரியராகவிருக்கும் திறமையும் சீலமும் படைத்தவர்.

தேவியிடத்தில் அளவு கடந்த பக்தியுடன் தேவி உபாஸகராக இருப்பவராயினும் ஸ்ரீ சுவாமிநாதனையே குல குருவாக நினைப்பவர். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றபடி தான் அனுபவப்பூர்வமாய் உணர்ந்த மந்திர தந்த்ரங்களை விரும்புகிறவர்களுக்கு அளிப்பவர். ஆயினும் அதை ப்ரகடனம் செய்து கொள்ளாதவர்.

ஹோமியோபதி சித்த வைத்தியங்களைப் பயின்று அதன் தகுதிப் பத்திரம் பெற்றவர். ஆயினும் அதை ஆடம்பரமாக வெளிப் படுத்திக் கொள்ளாதவர்.

ஆலயங்களில் நடைபெற்று வரும் உற்சவம் முதலிய கிரியைகளில் சந்தேகம் ஏற்படும் காலங்களில் தக்க ஆகம பிரமாணங்களோடு நிர்ணயம் செய்து தருமையில் வெளிவரும் ஆதீன பஞ்சாங்கத்தின் வாயிலாகவும் பத்திரிக்கை வாயிலாகவும் வெளியிட்டு வருகிறவர்.

எண்ணிறந்த கும்பாபிஷேகங்களைத் தனது தலைமையில் நடத்திப் புகழ் பெற்றவர். இவருக்கு 14–09–67 ல் புள்ளிருக்கு

வேளூரில் நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தின் போது தருமையாதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ 25வது [5]குருமஹாசன்னிதானம் அவர்களால் பொன்னாடை போர்த்தி "சிவாகம வித்வான்" என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

தருமையாதீனத்தில் [6]நிறுவப்பட்டு நடந்து வரும் வேத சிவாகம பாடசாலையில் சற்றேறக்குறைய 26 வருஷங்களாக தலைமை ஆசிரியராக இருந்து வருவதுடன், இன்று வரையில் பல மாணவர்களை ஆசிரியராக ஆக்கி இருப்பது இவர் மாணவர்பால் கொண்ட அன்பும் ஆசியும் ஆகும் என்று சொல்வது மிகையாகாது.

இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பலர் ஆங்காங்கு கல்லூரிகளில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்கள். மற்றும் பலர் தங்களது சிவாலயங்களில் ஆகமிகர் என்று கௌரவமாய் மதிக்கப் பட்டு "எண்ணிலாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" என்றபடி இறைவனுக்குப் பூஜை செய்துகொண்டு அனுபூதிமான்களாக விளங்குகிறார்கள்.

இவருடைய ஜ்யேஷ்டபுத்திரன் பழநி தேவஸ்தானம் சிவாகமக் கல்லூரியில் தலைமை ஆசிரியர் சாஹித்ய சிரோமணி ஆகம ப்ரவீண சாம்பசிவ சிவாசாரியார்.

குறிப்பாக சிலரை மட்டும் ஞாபகப்படுத்துகிறேன். சாஹித்ய சிரோமணி ஆகமப்ரவீண M. ராஜம் குருக்கள் திருப்பனந்தாள் கல்லூரியில் வடமொழி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்கள்.

---

[5] ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் 1972ம் ஆண்டு புதுடெல்லியில் "சிவாகம வித்வன்மணி" என்ற பட்டத்தை வழங்கி இருக்கிறார்கள்.

[6] 1942ஆம் ஆண்டு 24வது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமஹாஸந்நிதானத்தின் அருளாட்சியில் வேத சிவாகம வித்யாலயம் தொடங்கப்பட்டது.

அடியேன் தருமபுரம் ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்க்கை சன்னதி அர்ச்சகராகவும் ஆகம பாடசாலையில் காவிய ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறேன்.

இன்னும் சாஹித்ய சிரோமணி ஆகமப்ரவீண பால சுப்பிரமணிய குருக்கள், வேளூர் தேவஸ்தானம் ஆகம குருக்கள், சாஹித்ய சிரோமணி ஆகம ப்ரவீண சோமசுந்தர குருக்கள் சீர்காழி தேவஸ்தானம் ஆகம குருக்கள் ஆகியோர்.

மேலும் இவர் தருமையாதீனத்தின் மூலமாக [7]"நித்ய பூஜா லக்ஷண சங்கிரஹம்" என்ற பெயரால் ஒரு நூலை தொகுத்து வெளியிட்டிருக்கிறார். பல பத்திரிக்கைகளுக்கும் மலர்களுக்கும் அடிக்கடிக் கட்டுரை எழுதுபவர்.

[8]இன்னும் எழுதவேண்டிய விஷயம் எவ்வளவோ இருப்பினும் எனக்குத் தெரிந்த வரையில் சுருக்கமாக எழுதித் தெரிவித்தேன்.

---

[7] 1969ஆம் ஆண்டு வாமதேவ பத்ததி என்ற நூலை தொகுத்து அளித்திருக்கிறார்கள்.

கண்டனூர் சிவஸ்ரீ அரு. இராமநாத குருக்கள், யாழ்ப்பாணம், அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள் ஆகியோர் எழுதிய நூல்கள் பலவற்றிற்கும் பார்வையாளராக இருந்து திருத்தங்கள் செய்து உதவியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் எழுதியுள்ள முன்னுரையின் மூலமாக அறியமுடிகிறது.

[8] ஆதிசைவர் மரபும் சான்றோர்களும் என்ற நூலில் காணப்படும் சில தகவல்கள்:– இவருடைய திறமைகளையறிந்த தருமையாதீனம் 24வது குருமஹாஸந்நிதானம் இவர்களை அழைத்து, தமது ஆதீனத்தில் ஒரு வேத சிவாகம பாடசாலை அமைத்து, அதற்கு இவரை தலைமையாசிரியராக அமர்த்தியுள்ளார்கள். ஆதீனத்திற்கு சொந்தமான 27 தேவஸ்தானங்களிலும் உள்ள குறைபாடுகளை நீக்கிடவும், திருப்பணி செய்து கும்பாபிஷேகம் முறையாக செய்யும் பொறுப்பினையும் தந்திடவே, இவர் கற்றகல்விக்கு மெருகிட்டது போல இவர் திறமை எங்கும் பரவிவிட்டது.

சைவாலயம் என்ற இந்த பத்திரிக்கையின் மூலமாக எனது ஆசிரியரின் பெருமையைக் கூறும் பாக்கியம் பெற்றேன். நீடுழி வாழ்க சைவாலயம். சுபம்.

பாடசாலையில் மிகுந்த அளவு மாணவர்கள் வந்து கல்வி கற்றதுடன் மிகுந்த திறமைசாலிகளாகவும் விளங்கி வந்திருக்கிறார்கள். 25வது குருமஹாஸந்நிதானம் அவர்கள் ஆதரவினைக் கொண்டு ஆகமத்திற்கு விரோதமில்லாமல் பஞ்சமுகார்ச்சனை, ஷண்முகார்ச்சனை, அஷ்டமூர்த்தியர்ச்சனை, நவசக்தி அர்ச்சனை, ஷோடசார்ச்சனை, ஏகதின லக்ஷார்ச்சனை, கோடியர்ச்சனை, நவகோடி அர்ச்சனை என பல செய்ததுடன் யாகசாலை ஆகமசாஸ்திர முறைப்படியும் அதேநேரத்தில் புதுமையாகவும் பார்ப்பவர்கள் வியப்படையும் வண்ணம் அமைத்து ஆதிசைவ சிவாச்சார்யர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

திருக்கடையூர் கும்பாபிஷேகத்தில் "சிவாகமரத்னாகரம்" என்ற விருதினை பொற்பதக்கத்தில் பொறித்துத் தந்து பொன்னாடை போர்த்தி சிறப்புச் செய்திருக்கிறார்கள்.

1969ல் அர்ச்சகர் சங்கம் சார்பில் வள்ளலார் கோயில் ஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சார்யார் தலைமையில் "சிவாகமச் செம்மல்" என்ற விருதினை பொற்பதக்கத்துடன் பெற்று ஆசிபெற்றார்கள்.

உலகநலனை வேண்டி விரைவாகவும், சுலபமாகவும், மிகுதியாகவும் பலனளிக்கக்கூடிய மஹாசண்டியாகத்தை, தருமபுரம் ஸ்ரீஅஷ்டாதசபுஜ துர்காபரமேச்வரீ ஆலயத்தின் முன்பு துவங்கி தாமே ஆசார்யனாக இருந்து நடத்தி ஒவ்வொரு நவராத்திரியையும் சிறப்பாக நடத்தி வந்திருக்கிறார்கள்.

பழனி ஸ்ரீ தண்டபாணி ஆலய மஹாகும்பாபிஷேகத்தில் உத்தமோத்தமப்படி 33குண்டம் அமைத்து சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள்.

1976ல் இலங்கையில் பாடல் பெற்ற திருக்கேதீசுவரர் கும்பாபிஷேகத்தை சர்வசாதகமாக இருந்து நடத்தியிருக்கிறார்கள்.

இரண்டு குமாரர்கள், இரண்டு குமாரத்திகள் பெற்ற சிவாச்சாரியார் வேத சிவாகம பாடசாலை தலைமை ஆசிரியராகவே இருந்து 1989ம் ஆண்டு சிவனடி சேர்ந்திருக்கிறார்கள்.

உ

சிவமயம்

ஆகமச் செல்வம்

பொருளடக்கம்

தலைப்பு	பக்கம்
சிவாகமங்களைப் பற்றிய பொது அறிமுகம்	
1. ஆகமம்	1
2. சிவாகம ஸார ஹாரம்	31
3. சிவாகமத் தெளிவு	53
4. வாமதேவபத்ததி மற்றும் நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹ முன்னுரைகள்	61
கர்ஷணம் – ப்ரதிஷ்டை	
5. சிவாகமமும் சிவாலயமும்	68
நித்ய–நித்ய க்ரியைகள்	
6. நித்யபூஜையும் அதன் தத்துவமும்	94
7. நித்யபூஜையும் அதன் தத்துவமும்	100
8. கோபூஜையின் மஹிமை	114
9. சிவாகம சிவார்ச்சனை	118
10. அர்ச்சனைகள்	124
11. ஷோடச உபசார விளக்கம்	128
12. சண்டீசர்	141
ஆகந்துக–நித்ய க்ரியைகள்	
13. மஹாசிவராத்திரி	147
14. மஹா சிவராத்திரி நிர்ணயம்	151
15. துலாமாதம்	152

16. நவராத்திரி	158
17. மஹாலக்ஷ்மி துர்கை	164
18. நவசக்திகளின் வழிபாடு	167
நைமித்திக க்ரியைகள்	
19. பாலஸ்தாபனம்	179
20. மஹா கும்பாபிஷேகம்	181
21. மஹா கும்பாபிஷேகம்	197
22. மண்டலாபிஷேக பூர்த்தியும் மஹாபிஷேகமும்	205
காம்ய க்ரியை	
23. வருணஜபம்	211
ஞானபாத விளக்கம்	
24. உபநிஷத் கதை	215
25. வேத ஆகம உபநிடதங்கள்	228
பொதுக்கட்டுரைகள்	
26. மீன மந்தன்	239
27. ஸ்ரீமாரியம்மன் மஹிமை	243

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆகமச் செல்வம்

'தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலைத் தலைமை ஆசிரியர்'
'சிவாகம வித்வான்' 'சிவாகம ரத்னாகரம்' 'சிவாகமவித்வன்மணி'
அமரர் சிவபுரம் S. சுவாமிநாத சிவாசார்யார் அவர்கள்
எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு

ஆகமம்

கல்யாணம் குருதாம் க்ஷிப்ரம் கருணாவருணாலய:।
மாயூர-நகராதீசோ மம ந்ருத்த-விநாயக:॥

(இதன் பொருள்) மாயூரத்தில் வசிக்கும் கருணைக்கடலான நர்த்தன கணபதி எனக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

– {ஸ்ரீமத்} காரணாகமம்

ஆ–கமம் என்பது ஆன்மாக்கள் மோக்ஷமடைய மலநாசஞ் செய்விப்பது எனப்பொருள்.

ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, காந்தி, ஞானம், வைராக்யம் என்ற இந்த ஆறுக்கும் 'பக' என்று பெயர்.

இவ் ஆறு குணங்களால் நிறைந்தவரானதால் "பகவான்" என்று அழைக்கப்படுகிறவராயும், ஸர்வஜ்ஞத்வம், நித்ய திருப்தத்வம், அனாதிபோதத்வம், ஸ்வதந்திரத்வம், அலுப்த சக்திமத்வம், அனந்தசக்திமத்வம் என்ற அறுகுணங்களை உடையவர் ஆதலால் "ஷாட்குண்ய பரிபூரணர்" என்றும்

அழைக்கப்படுகிறவரான சிவபெருமானிடத்தில் நின்றும் தோன்றிய ஞானத்திற்கு "சிவஞானம்" எனப்பெயர்.

ஸ்ருஷ்டிகாலத்தில் இறைவன் ஆன்மாக்களுக்கு [1]புருஷார்த்தம் சித்திக்க வேண்டியதன் பொருட்டு ஐந்து பிரவாக ரூபமாகக் காணப்படும் ஞானத்தைச் செய்தார்= வெளிப்படுத்தினார்.

ஸத்யோஜாதம் முதலிய ஐந்து திருமுகங்களினின்றும் இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின என்று காரணாகமம் கூறுகிறது.

அதாவது ஸத்யோஜாதம் என்ற முகத்தினின்றும் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்ற ஐந்து ஆகமங்களும், வாமதேவத்தினின்றும் தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், ஸுப்ரபேதம் என்ற ஐந்து ஆகமங்களும், அகோரமுகத்தினின்றும் விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அநலம், வீரம் என்ற ஐந்து ஆகமங்களும், தத்புருஷமுகத்தினின்றும் ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஜ்ஞானம், பிம்பம் என்ற ஐந்து ஆகமங்களும், ஈசான முகத்தினின்றும் ப்ரோத்கீதம், லலிதம், ஸித்தம், ஸந்தானம், சார்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற எட்டு ஆகமங்களும் தோன்றின.

இதனுள் முதற் பத்து ஆகமங்கள் சிவபேதம். பின் பதினெட்டு ருத்ரபேதம் எனப்படும்.

இவ்வாகமங்களில் சிவபேதத்தைக் கேட்டவர்கள் ஒவ்வொன்றிற்கும் மும்மூன்று பேர்களாகவும், ருத்ரபேதத்தை

---

[1] புருஷர்களால் விரும்பப்படுவதால் புருஷார்த்தம் எனப்படும். இது தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என நான்காகும்.

கேட்டவர்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டிரண்டு பேர்களாகவும் விளங்குகிறார்கள்.

1.	காமிகத்திற்கு	ப்ரணவர்	த்ரிகலர்	ஹரர்
2.	யோகஜத்திற்கு	ஸுதாக்யர்	பஸ்மர்	விபு
3.	சிந்த்யத்திற்கு	ஸுதீப்தர்	கோபதி	அம்பிகா
4.	காரணத்திற்கு	காரணர்	சர்வருத்ரர்	ப்ரஜாபதி
5.	அஜிதத்திற்கு	ஸுசிவன்	சிவன்	அச்யுதன்
6.	தீப்தத்திற்கு	ஈசன்	ஈசானமூர்த்தி	ஹுதாசனன்
7.	ஸூக்ஷ்மத்திற்கு	ஸூக்ஷ்மர்	வைச்ரவணர்	ப்ரபஞ்சனர்
8.	ஸஹஸ்ரத்திற்கு	காலன்	பீமன்	தர்மன்
9.	அம்சுமானுக்கு	அம்பு	அக்ரர்	ரவி
10.	ஸுப்ரபேதத்திற்கு	தசேசர்	விக்னேசர்	சசி

சிவபேதங்களுக்குச் ஸம்பந்தம் ஆறுவிதமாம்.

அவையாவன:– சதாசிவருக்கும் பிரணவருக்குமுள்ள சம்பந்தம் பரம் எனவும், பிரணவருக்கும் திரிகலருக்குமுள்ள சம்பந்தம் மஹான் எனவும், திரிகலருக்கும் ஹரருக்குமுள்ள சம்பந்தம் அந்தராளம் எனவும், ஹரருக்கும் தேவருக்கும் உள்ள சம்பந்தம் திவ்யம் என்றும், தேவர்களுக்கும் இருடிகளுக்கும் உள்ள சம்பந்தம் திவ்வியாதிவ்யம் எனவும், இருடிகளுக்கும் மனிதர்களுக்குமுள்ள சம்பந்தம் அதிவ்யம் எனவும் சொல்லப்படும். இவ்வாறு சிவபேதம் பத்திற்கும் அறியவும்.

ஈச்வரதத்துவத்திலுள்ள அநாதிருத்ரர் முதலிய பதினெண்மர்களையும் அறிஞர்களாக்கி சதாசிவமூர்த்தியால் அவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட விஜயம் முதலிய பதினெட்டு ஆகமங்களும் ருத்ரபேதம் எனப்படும்.

ருத்ரபேதம் பதினெட்டையும் கேட்டவர், ஒருவரிடத்து ஒருவராக ஒவ்வொரு ஆகமத்திற்கு இரண்டிரண்டு பேராய் அநாதிருத்ரர் முதல் முப்பத்தறுவராவர்.

1.	விஜயத்திற்கு	அநாதிருத்ரர்	பரமேசர்
2.	நிச்வாஸத்திற்கு	தசார்ணர்	பார்வதி
3.	ஸ்வாயம்புவத்திற்கு	நிதனேசர்	பத்மபூ
4.	ஆக்னேயத்திற்கு	வியாமர்	ஹுதாசனர்
5.	வீரத்திற்கு	தேஜர்	ப்ரஜாபதி
6.	ரௌரவத்திற்கு	ப்ராஹ்மணேசர்	நந்திகேசர்
7.	மகுடத்திற்கு	சிவர்	மஹாதேவர்
8.	விமலத்திற்கு	சர்வாத்மா	வீரபத்ரர்
9.	சந்திரஜ்ஞானத்திற்கு	அனந்தர்	ப்ருஹஸ்பதி
10.	முகபிம்பத்திற்கு	ப்ரசாந்தர்	ததீசி
11.	புரோத்கீதத்திற்கு	சூலி	கவசர்
12.	லலிதத்திற்கு	ஆலயேசர்	லலிதர்
13.	ஸித்தத்திற்கு	பிந்து	சண்டேசர்
14.	ஸந்தானத்திற்கு	சிவநிஷ்டர்	அஸம்வாயர்
15.	சர்வோக்தத்திற்கு	ஸோமதேவர்	ந்ருஸிம்ஹர்
16.	பாரமேச்வரத்திற்கு	ஸ்ரீதேவி	உசனர்
17.	கிரணத்திற்கு	தேவவிபு	ஸம்வர்த்தகர்
18.	வாதுளத்திற்கு	சிவர்	மஹாகாளர்

ருத்ரபேதங்களுக்குச் ஸம்பந்தம் ஐந்துவிதமாகும்.

அவை:– சதாசிவருக்கும் அநாதிருத்ரருக்குமுள்ள சம்பந்தம் பரம் எனவும், அநாதிருத்ரருக்கும் பரமேச்வரருக்குமுள்ள சம்பந்தம் மஹான் எனவும், பரமேச்வரருக்கும் தேவருக்கும் உள்ள சம்பந்தம்

திவ்யம் எனவும், தேவர்களுக்கும் இருடிகளுக்கும் உள்ள சம்பந்தம் திவ்வியாதிவ்யம் எனவும், இருடிகளுக்கும் மனிதர்களுக்கும் உள்ள சம்பந்தம் அதிவ்யம் எனவும் சொல்லப்படும்.

இருபதும் எட்டுமே மூலம் உப பேதம்
இருநூறும் ஏழும் என எண்.
அறுபத்தறுவர் பிரணவராதி
அறிவுறக் கேட்டார் ஆகமம்.

– சைவசமயநெறி

உப ஆகமங்கள் {207} – சிவபேதம் {57}

1. காமிகம் :–	1 வக்தாரம்	2 பைரவோத்தரம்
	3 நாரஸிம்ஹம்	ஆக 3
2. யோகஜம் :–	1 வீணாசிகோத்தரம்	2 தாரம்
	3 சந்தம்	4 சந்ததி
	5 ஆத்மயோகம்	ஆக 5
3. சிந்த்யம் :–	1 அ{ஸு}சிந்த்யம்	2 ஸுபகம்
	3 வாமம்	4 பாபநாசம்
	5 பரோத்பவம்	6 அம்ருதம்
		ஆக 6
4. காரணம் :–	1 காரணம்	2 பாவனம்
	3 தௌர்கம்	4 மாஹேந்திரம்
	5 பீமம்{ஸம்ஹிதா}	6 மாரணம்
	7 த்வேஷ்டம்{வித்வேஷம்}	ஆக 7
5. அஜிதம் :–	1 ப்ரபூதம்	2 பரோத்பூதம்
	3 பார்வதீஸம்ஹிதை	4 பத்மஸம்ஹிதை
		ஆக 4

6. தீப்தம் :–	1 அமேயம்	2 சப்தம்
	3 ஆச்சாத்யம்	4 அசங்கியம்
	5 அமிதௌஜஸம்	6 ஆநந்தம்
	7 மாதவோத்பூதம்	8 அத்புதம்
	9 அக்ஷிதம்	ஆக 9
7. ஸௌக்ஷ்மம்:–	{1 ஸௌக்ஷ்மம்}	
8. ஸஹஸ்ரம்:–	1 அதீதம்	2 மங்களம்
	3 சுத்தம்	4 அப்ரமேயம்
	5 ஜாதிபாக்	6 ப்ரபுத்தம்
	7 விபுதம்	8 ஹஸ்தம்
	9 அலங்காரம்	10ஸுபோதம் ஆக 10
9. அம்சுமான்:–	1 வித்யாபுராணதந்திரம்	2 வாஸவம்
	3 நீலலோஹிதம்	4 ப்ரகாரணம்
	5 பூததந்த்ரம்	6 ஆத்மாலங்காரம்
	7 காச்யபம்	8 கௌதமம்
	9 ஐந்த்ரம்	10 ப்ராஹ்ம்மம்
	11 வாஸிஷ்டம்	12 ஈசானம்
		ஆக 12
10. ஸுப்ரபேதம்:–	உபபேதமில்லை	

இனி ருத்ரபேதம் {150}

11. விஜயம்:–	1 விஜயம்	2 உத்பவம்
	3 ஸௌம்யம்	4 அகோரம்
	5 ம்ருத்யுநாசனம்	6 குபேரம்
	7 மஹாகோரம்	8 விமலம்
		ஆக 8

12. நிச்வாஸம்:–	1 நிச்வாஸம்	2. உத்தரநிச்வாஸம்
	3 நிச்வாஸமுகோதயம்	4 நிச்வாஸநயனம்
	5 நிச்வாஸகாரிகை	6 கோரஸம்ஜ்ஞும்
	7 யமாக்யம்	8 குஹ்யம்
		ஆக 8
13. ஸ்வாயம்புவம்:–	1 ப்ரஜாபதிமதம்	2 பத்மம்
	3 ஸ்வாயம்புவம்	ஆக 3
14. அனலம்:–	{1 ஆக்னேயம் 2 வ்யோமதந்த்ரம்}	
15. வீரம்:–	1 ப்ரஸ்தாரம்	2 புல்லமல்லம்
	3 ப்ரபோதம்	4 போதம்
	5 போதகம்	6 அமோஹம்
	7 மோஹஸமயம்	8 ஹாகடம்
	9 சாகடாதிகம்	10 ஹலம்
	11 விலேகனம்	12 பத்ரம்
	13 வீரம்	ஆக 13
16. ரௌரவம்:–	1 காலக்னம்	2 கலாதீதம்
	3 ரௌரவம்	4 ரௌரவோத்தரம்
	5 மஹாகாளமதம்	6 ஐந்த்ரம்
		ஆக 6
17. மகுடம்:–	1 மகுடம்	2 மகுடோத்தரம்
		ஆக 2
18. விமலம்:–	1 அனந்தம்	2 போகம்
	3 ஆக்ராந்தம்	4 விருஷபிங்கம்
	5 வ்ருஷோத்தரம்	6 வருஷாத்புதம்
	7 ஸுதந்தம்	8 ரௌத்ரம்

	9 பத்ரவிதம்	10 அரேவதம்
	11 அதிக்ராந்தம்	12 அட்டஹாஸம்
	13 அலங்க்ருதம்	14 அர்ச்சிதம்
	15 தாரணம்	16 தந்திரம்
		ஆக 16
19.சந்திரஜ்ஞானம்:–	1 ஸ்திரம்	2 ஸ்தானம்
	3 மஹாந்தம்	4 வாருணம்
	5 நந்திகேசம்	6 ஏகபாதம்
	7 சங்கரம்	8 நீலருத்ரகம்
	9 சிவபத்ரம்	10 கல்பபேதம்
	11 ஸ்ரீமுகம்	12 சிவசாஸனம்
	13 சிவசேகரம்	14 தேவ்யாமதம்
		ஆக 14
20. முகபிம்பம்:–	1 சதுர்முகம்	2 மலயம்
	3 அயோகம்	4 ஸம்ஸ்தோபம்
	5 ப்ரதிபிம்பகம்	6 ஆத்மாலங்காரம்
	7 வாயவ்யம்	8 தௌடிகம்
	9 துடிநீரகம்	10 கலாத்யயம்
	11 துலாயோகம்	12 குட்டிமம்
	13 பட்ட சேகரம்	14 மஹாவித்தை
	15 மஹாஸௌரம்	ஆக 15
21. ப்ரோத்கீதம்:–	1 கவசம்	2 வாராஹம்
	3 பிங்களமதம்	4 பாசபத்தம்
	5 தண்டதரம்	6 அங்குசம்
	7 தனுர்தரம்	8 சிவஞானம்
	9 விஜ்ஞானம்	10 ஸ்ரீகாலஞானம்

	11 ஆயுர்வேதம்	12 தனுர்வேதம்
	13 ஸர்ப்பதம்ஷ்ட்ரீ–விபேதனம்	14 கீதம்
	15 பரதம்	16 ஆதோத்யம்
		ஆக 16
22. லலிதம்:–	1 லலிதம்	2 லலிதோத்தரம்
	3 கௌமாரம்	ஆக 3
23. ஸித்தம்:–	1 ஸாரோத்தரம்	2 ஔசனோத்தரம்
	3 சாலாபேதம்	4 சசிகண்டம்
		ஆக 4
24. ஸந்தானம்:–	1 லிங்காத்யக்ஷம்	2 ஸுராத்யக்ஷம்
	3 சங்கரம்	4 அமலேச்வரம்
	5 அஸங்க்யம்	6 அனிலம்
	7 த்வந்தவம்	ஆக 7
25. சர்வோக்தம்:–	1 சிவதர்மோத்தரம்	2 வாயுப்ரோக்தம்
	3 திவ்யப்ரோக்தம்	4 ஈசானம்
	5 சர்வோத்கீதம்	ஆக 5
26. பாரமேச்வரம்:–	1 மதங்கம்	2 யக்ஷிணீபத்மம்
	3 பாரமேச்வரம்	4 புஷ்கரம்
	5 சுப்ரயோகம்	6 ஹம்ஸம்
	7 ஸாமான்யம்	ஆக 7
27. கிரணம்:–	1 காருடம்	2 நைருதம்
	3 நீலம்	4 ரூக்ஷம்
	5 பானுகம்	6 தேனுகம்
	7 ப்ரபுத்தம்	8 புத்தம்
	9 காலம்	ஆக 9

28. வாதுளம்:- 1 வாதுளம் 2 உத்தாரவாதுளம்
3 காலஜ்ஞானம் 4 ப்ரரோஹிதம்
5 ஸர்வம் 6 தர்மாத்மகம்
7 ச்ரேஷ்டம் 8 நித்யம்
9 சுத்தம் 10 மஹாநனம்
11 விச்வம் 12 விச்வாத்மகம் ஆக 12

சிவஸ்ருஷ்டியின் ஆரம்பகாலத்தில் சிவசக்தியின் சேர்க்கையிநின்றும் இச்சா-சக்தியினால் புவனோத்பத்தியின் பொருட்டு யோகமாயையினால் ஸ்ருஷ்டிபீஜம் கலக்கப்பட்டது அதிலிருந்து நாதம் தோன்றிற்று. அதன்கீழ் சரத்காலத்து சந்திரன் போன்ற பிந்து தோன்றிற்று. அதன்கீழ் அம்பிகை என்ற சக்தி தோன்றிற்று. அதன்கீழ் வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரி என்ற மூன்று சக்திகளும், அந்த வாமாசக்தியின் அபரரூபமாக ஜயா, விஜயா, அஜிதா, அபராஜிதா, நிவிருத்தி, பிரதிஷ்டா, வித்யா, சாந்தி, இந்திகா, தீபிகா, ரோசிகா, மோசிகா, வியோமரூபா, அநந்தா, அநாதா, அநாச்ரிதா என்ற சக்திகள் தோன்றி, இவர்களாலே உலகம் யாவும் வியாபிக்கப்பட்டதாக விளங்கிற்று. இவர்களிடமிருந்து, ஐம்பது எழுத்துக்களும் உண்டாயிற்று என்று பௌஷ்கராகமம் கூறுகிறது.

ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பதெழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பத்தெழுத்தேயும் ஆவது அறிந்த பின்
ஐம்பதெழுத்தும் போய் அஞ் செழுத்தாமே.- திருமந்திரம்

ஸ்வரங்களுடைய சேர்க்கையினால் வர்ணங்கள் பதங்களாகவும், வாக்கியங்கள் ஆகவும், அர்த்தப்ரதீதி உடையவைகள் ஆகவும், வியவஹார சாமர்த்தியம் உடையவைகள் ஆகவும் ஆயின.

ஸ்வராக்ஷரத்தில் சிவனும் வ்யஞ்ஜனாக்ஷரத்தில் சக்தியும் இருக்கிறார்கள் என்று பௌஷ்கராகமம் கூறுகிறது.

மூன்று பதார்த்தங்களுடன் நான்கு பாதங்களுடன் கூடிய மஹாதந்திரத்தை ஜகத்பதியான பரமேச்வரன் செய்தார்.

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற்று உணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குருவருளால் சிவம் ஆகுமே

– திருமந்திரம்

ஆகமங்கள் ஞானம், கிரியை, யோகம், சரியை என நான்கு பாதங்களை உடையது. ச்ரௌதம், அச்ரௌதம் என இரண்டு பிரிவுகளை உடையது.

𑌮𑌕𑍁𑌟𑌾𑌗𑌮𑍇

𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍋 𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌦𑌨𑍍𑌯𑌤𑍍 𑌵𑍇𑌦𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌮𑍍।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌚𑌾𑌰𑌃 𑌵𑍈𑌦𑌿𑌕𑌾𑌚𑌾𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥

வேதசாரமாக உடையது சித்தாந்தம் எனப்படும். மற்றொன்று அச்ரௌதம் எனப்படும். சித்தாந்தத்தால் கூறப்படும் ஆசாரம் வைதிகாசாரம் எனப்படும் என்று மகுடாகமம் கூறுகிறது.

ஞானபாதம்

ஞானபாதத்தினால் பதி–பசு–பாசலக்ஷணம் அறியப்படுகிறது. கிரியாபாதத்தினால் கர்ஷணம் முதல் பிரதிஷ்டை வரையிலுள்ள கிரியைகளும், உத்ஸவ–பிராயச்சித்த–நித்திய–நைமித்திக–காம்ய பூஜைகளும், சமய–விசேஷ–நிர்வாண தீக்ஷைகளும், வர்ணாச்ரம தர்மங்களும் கூறப்படுகின்றன. யோகபாதத்தினால் ப்ராணாயாமம்

முதலிய லக்ஷணங்களும், ஆத்மசுத்தி, அந்தர்யாகம் முதலியவைகளும் அறியப்படுகின்றன. சர்யாபாதத்தினால் பூஜைக்குரிய உபகரணங்களும் முறைகளும் கூறப்படுகின்றன.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார்தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து

– திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்

பூஜிக்கிறவனான ஆன்மா தனது நிலையை அறிந்தும் பூஜிக்கப்படுகிறவனான இறைவனுடைய தன்மையை உணர்ந்தும் பூஜ்ய–பூஜகர்களுடைய இடையில் நிற்கும் மலங்களுடைய குணம் பலம் இவைகளையும், தத்துவங்களுடைய குணங்களையும் அறிந்தால் தான் இறைவனைச் சரியானபடி பூஜிக்க முடியும். ஆதலால் முதலாவதாக ஞானபாதத்தின் சுருக்கமான விளக்கம் கூறப்படுகிறது.

பதி–பசு–பாசம் என்ற பதார்த்தங்களும், அதன் லக்ஷணங்களும் முப்பத்தாறு தத்துவங்களுடைய லக்ஷணங்களும் தத்துவரூபம், தத்வதரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்ற தசகார்யங்களுடைய லக்ஷணங்களும் கூறப்படுகின்றன.

கிரியாபாதம்

மந்த்ரம், கிரியை, பாவனை என மூன்று வகைப்படும்.

மந்த்ரம்

பஞ்சாக்ஷரம், ஷடக்ஷரம், ஸம்ஹிதாமந்த்ரம், அஸ்திரமந்திரம் முதலிய மந்த்ரங்கள் குருமுகமாக உணரத்தக்கன. தேவதாஸ்தாபனம் யஜநம், ஸ்னானம், ஹோமம், தர்ப்பணம், ப்ராயச்சித்தம், தீக்ஷை

முதலிய எல்லா கிரியைகளும் மந்த்ரத்தினாலேயே செய்யவேண்டும். மந்த்ரமின்றி தனி கிரியை கிடையாது.

மந்த்ரம் விநா க்ரியா நாஸ்தி கர்ஷணாத்யநுக்ரமாத் ।

என்று காரணாகமம் கூறுகிறது.

கர்ஷணம் முதலிய எல்லாக் கிரியைகளும் மந்த்ரத்தினாலேயே செய்யவேண்டும்.

கர்ஷணம் = உழுதல் அதாவது ஆலயத்தை அமைப்பதற்கு முன் காலத்தையும் பூமியையும் பரீக்ஷிக்கவேண்டும். உழுது சல்யோத்தாரணம் செய்யவேண்டும்.

எலும்பு, கரி முதலிவைகளால் தோஷமுள்ளதான பூமியை வெட்டுதல், உழுதல் முதலியவைகளால் சுத்தம் செய்து சமமாகச் செய்யவேண்டும்: மணலுள்ள வரையிலோ ஜலமுள்ள வரையிலோ வெட்டிப்பார்த்து சல்யோத்தாரணம் செய்யவேண்டும்.

கீழ்திசையில் சூரியன் கோயிலையும், தென்கிழக்கில் ருத்ரமூர்த்தியின் கோயிலையும், தெற்கில் ஷண்முகர் கோயிலையும், தென்மேற்கில் ஐயனார் கோயிலையும், மேற்கில் விஷ்ணு கோயிலையும், வடமேற்கில் துர்க்கையின் ஆலயத்தையும், வடக்கில் சப்தமாத்ரு கோயிலையும், வடகிழக்கில் சிவாலயத்தையும் நிர்மாணம் செய்யவேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

அளவு

மானாங்குலம், மாத்ராங்குலம், தேஹலப்தாங்குலம் என்று அளவு மூவகைப்படும்.

கூரையில் உள்ள துளையின்வழியாக வருகின்ற சூரிய வெளிச்சத்தில் காணப்படும் த்ருச்யாத்ருச்யமான தூளியானது

பரமாணு எனப்படும். அது வளர்ந்து ரேணு, ரோம, கலீக்ஷுகா, யூகம், யவம் என்றாகும். அந்த யவம் என்ற தான்யத்தின் வயிற்றின் குருக்களவு எட்டுக்கொண்டது ஒரு அங்குலம். அந்த அங்குலத்தின் பன்னிரண்டு கொண்டது தாலம். அந்தத் தாலத்தின் இரண்டு கொண்டது (அதாவது இருபத்திநான்கு அங்குலம்) கிஷ்குஹஸ்தம். அந்த அங்குலத்தின் இருபத்தைந்து கொண்டது ப்ராஜாபத்யம். அந்த அங்குலத்தின் 26 கொண்டது தனுர்முஷ்டிகரம். அவ்வங்குலத்தின் 27 கொண்டது தனுர்கிரஹம். இவ்வாறு சிற்பத்திற்குரிய முழம் 1.கிஷ்கு, 2.ப்ராஜாபத்யம், 3.தனுர்முஷ்டி, 4.தனுர்கிரஹம் என்று நான்கு வகையாகக் காணப்படுகிறது.

சயனம், ஆஸனம் முதலியவைகள் கிஷ்கு என்ற அளவினாலும், ப்ராஸாதம், சபை, மண்டபம், வீடு இவைகளை ப்ராஜாபத்தியத்தினாலும், ராஜதானி, ராஜக்ருஹம், குளம், துர்காலயம் இவைகளை தனுர்முஷ்டி என்ற அளவினாலும், ஆறு வெட்டுவது, சாலைபோடுவது ஆகியவைகளை தனுர்முஷ்டி என்ற அளவினாலும் செய்யவேண்டும் என்று காரணாகமத்தால் அறியப்படுகிறது. இதுவரையில் மானாங்குலம் கூறப்பட்டது.

மாத்ராங்குலம் என்பது வலது கை நடுவிரலுடைய நடுரேகையின் அளவு ஒரு அங்குலம். இந்த அளவைக் கொண்டுதான் யாகசாலைக்குரிய உபகரணங்கள் செய்ய வேண்டும். இது மாத்ராங்குலம்.

தேஹலப்தாங்குலமோவெனில்: ஒரு பிம்பத்தின் உயரத்தை அந்தந்த விக்ரஹத்திற்குரிய தாலக்கணக்கில் பிரிப்பது தேஹலப்தாங்குலம் எனப்படும்.

அளவையானது மேலும் மானம், ப்ரமாணம், உன்மானம், நாஹமானம், உபமானம், லம்பமானம் என்று ஆறுவகைப்படும்.

விக்ரஹத்தின் உயர அளவுக்கு மானம் என்றும், சுற்றளவுக்கு ப்ரமாணம் என்றும், கன அளவுக்கு நாஹமானமென்றும், நெற்றி, நாஸாக்ரம் முதல் பாதம் வரை தொங்கவிட்டுப் பார்க்கும் அளவிற்கு லம்பமானம் என்றும், பிரதிஷ்டை செய்யப்படும் பீடம் பிம்பங்களைக் கணக்கிடும் அளவிற்கு உன்மானம் என்றும், அவயவங்களின் தனி அளவிற்கு உபமானம் என்றும் பெயர். அளவு குறைந்தால் வியாதியும், அதிகமானால் சத்ரு விருத்தியும், தரித்ரமும் உண்டாகும். ஆதலால் எல்லாம் அளவோடு செய்யவேண்டும்.

தேஹலப்த–மான அளவு மூன்று வகைப்படும். பெருவிரலையும் ஆள்காட்டி விரலையும் நீட்டிவைத்த அளவிற்கு ப்ராதேசம் என்றும், பெருவிரலையும் மோதிரவிரலையும் நீட்டிவைத்த அளவு விதஸ்தி என்றும், பெருவிரலையும் சுண்டு விரலையும் நீட்டிவைத்த அளவு கோகர்ணம் என்றும் பெயர். இவைகள் யாகத்தில் உபயோகப்படுகின்றன.

ப்ராஸாதம் என்பது நாகரம், திராவிடம், வேஸரம் என்று மூவகைப்படும். கண்டம் முதல் விருத்தமாக உள்ள விமானம் வேஸரம் என்றும், கழுத்து முதல் எண்கோணமான விமானம் திராவிடம் என்றும், பீடம் முதல் யாவும் சதுரமாக உள்ள விமானம் நாகரம் ஏன்றும் பெயர் பெறும். நாகரவிமானத்திற்குப் புருஷவிமானம் என்றும், திராவிடவிமானத்திற்கு ஸ்த்ரீவிமானம் என்றும், வேசரவிமானத்திற்கு நபும்ஸக விமானம் என்றும் பெயர்.

விமானங்களின் கீழ்புறத்தில் குமரனையும், தென்புறத்தில் தக்ஷிணாமூர்த்தியையும், மேற்கில் விஷ்ணுவையும், வடக்கில் பிரம்மாவையும் சுதையால் செய்யவேண்டும். மேல்தளத்தின் மூலைகளில் விருஷபமாவது பூதமாவது செய்யப்படவேண்டும்.

விமானம் ஸ்தூலலிங்கம் என்றும், சிவன் சூக்ஷ்மலிங்கம் என்றும், பலிபீடம் பத்ரலிங்கம் என்றும் கூறப்படுகிறது.

ஆலயம் தேஹமென்றும் லிங்கம் தேஹி என்றும் கூறப்பட்டுகிறது.

ஆலயம், மண்டபம், கோபுரம், ப்ராகாரம் முதலிய யாவும் லிங்கத்தின் அளவு கொண்டு செய்யப்படவேண்டும்.

விமானத்தின்மேல் வைக்கப்படும் ஸ்தூபியானது முறையே தங்கம், வெள்ளி, தாமரம் என்று இயல்புக்குத்தக்கவாறு அமைக்கவேண்டும்.

ஸ்வாயம்புவம் முதலான மூர்த்திகளுக்கு தங்கத்தினால் செய்யப்பட்ட ஸ்தூபி சிறந்தது. மற்றவைகளுக்கு விருப்பம்போல்.

கர்பநியாஸம்

உத்தராயணகாலத்தில் மாசி மாதம் தவிர மற்ற மாதங்களில், சுக்லபக்ஷத்தில், சுபவார சுபயோகத்தில், சுவர்ணம் முதலிய லோஹத்தினால் 25 அறை உள்ள பெட்டி செய்து, அதனுள் ரத்னங்கள், தான்யங்கள் முதலியவைகளை முறைப்படி நிறைத்து பூஜை செய்து, வாசற்படியின் தென்புறத்தில், விமானத்தின் வடக்கில், கர்பக்ருஹத்தின் கீழ்பாகத்தில் எங்கேயாவது ஒரு இடத்தில் ஸ்தாபனம் செய்யவேண்டும். இது ஆலயத்திற்கு ஜீவஸ்தானம் போன்றது.

சிலா–ஸங்கிரஹணம்

இது லிங்கம், பிம்பம் செய்வதற்கு வேண்டிய சிலையை எடுக்கும் முறை.

மணி ஓசைபோன்ற நாதமுடைய கல் – ஆண், தாளத்தின் ஒலிபோன்ற நாதமுடைய கல் பெண், நாதமற்றது அலி என்று அறியவேண்டும்.

ஆண் சிலையால் புருஷபிம்பத்தையும், பெண்சிலையால் ஸ்த்ரீபிம்பத்தையும், நபும்ஸகசிலையால் பீடங்களையும் அமைக்க வேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

ரேகை, பிந்து, களங்கம் என்ற தோஷமுள்ள சிலைகள் உதவாது.

சிற்பியானவன் உளியால் அடிக்கும்போது வட்டமான மறை காணப்பட்டால் அதனுள் கர்ப்பம் இருப்பதாக அறிந்து அதை விலக்க வேண்டும்.

மஞ்சளாக மறை இருந்தால் உள்ளே தேரை இருப்பதாகவும், பச்சையாக இருந்தால் நண்டு இருப்பதாகவும், பொன்வர்ணமாக இருந்தால் மூஷிகம் இருப்பதாகவும் உணர வேண்டும். பலவர்ணமுள்ளதாகக் காணப்பட்டால் தேள் இருப்பதாக உணரவேண்டும்.

அவ்வாறு வெளித்தோற்றத்தினால் அறியமுடியாவிடில் கோரைக்கிழங்கு, அரளி, கோஷ்டம், சடாமாஞ்சீ, த்ரிபலை என்ற மருந்துகளை அரைத்துப் பிள்ளைப்பாலில் கரைத்துச் சிலையில் பூசிவைத்து மறுதினம் பார்த்தால் அந்தச்சிலை சிலுசிலுத்ததாகக் காணப்பட்டால், அந்தக்கல்லில் விஷமிருப்பதாகப் பார்த்து அதைக் கையினாலும் தொடக்கூடாது.

இதுபோன்ற அநேக முறைகள் ஆகமங்களில் காணப்படுவதை அறிந்து சோதித்து, சுத்தமாயும், தோஷமற்றதாயும் உள்ள சிலையைக் கிரஹித்து லிங்கம், பிம்பம் முதலியவைகள் செய்யவேண்டும்.

ஸமகண்டம், வர்த்தமானம், சைவாதிக்யம், த்ரிராசிகம் என்று இலிங்கம் நான்கு வகைப்படும்.

ஒவ்வொரு லிங்கமும் அடிப்பாகம் சதுரமாயும், நடுப்பாகம் எட்டுப்பட்டையாயும், மேல்பாகம் வ்ருத்தமாயும் காணப்படும்.

அதனுள் நான்கு, ஐந்து, ஆறு என்ற பாகமுடையது வர்த்தமானலிங்கம்.

நான்கு, நான்கு ஐந்து என்ற அளவு உள்ளது சைவாதிக்யம்.

மூன்றும் சமமாகவுள்ளது சமகண்டம்.

உயரத்தை இருபத்தோரு பங்கு செய்து விருத்தம் ஆறு பங்கும் அஷ்டாச்ரம் ஏழுபங்கும், சதுரம் எட்டு பங்குமுள்ளது த்ரைராசிகம் எனப்படும்.

ஸம்ஹாரகாலத்தில் எல்லாப் பிராணிகளும் அதனுள் லயத்தை அடைவதால் லிங்கம் எனப் பெயர்பெற்றது.

அவ்விலிங்கம் சைலஜம், ரத்னஜம், லோஹஜம், தாருஜம், ம்ருண்மயம், க்ஷணிகம் என ஆறுவகைப்படும்.

சைலஜலிங்கமும் ஸ்வாயம்புவம், தேவிகம், தைவிகம், ஆர்ஷம், மானுஷம், ராக்ஷஸம், பாணம் என்று எழுவகைப்படும்.

ஸ்வாயம்புவம் முதலானவைகள்

ஸ்வாயம்புவம் சொரசொரப்புள்ளதாயும், மெலிந்ததாயும், அநேகம் நுனி உள்ளதாயும், பசுவின் காதுபோன்றதாயும், மாதுளம்பூ போன்றதாயும், அளவு இல்லாததாயும், ரேகையற்றதாயும் இவ்வாறு பலவகையாகக் காணப்படும்.

தேவி, தேவர், இருடி(ரிஷி), மனிதர், அரக்கன் இவர்களால் பூஜிக்கப்பட்டது தேவிகம் முதலிய இலிங்கங்கள்.

பாணம் என்ற தீர்த்தத்தினின்று உண்டானது பாண லிங்கம் ஆகும்.

ரத்னஜம்

மாணிக்கம் முதலிய ரத்னங்களால் செய்யப்படும் இலிங்கம் ரத்னலிங்கம் எனப்படும். மரகதலிங்கம் புஷ்டியைத்தரும். பத்மராக லிங்கம் தனத்தைத்தரும். வைடூர்யலிங்கம் ஆயுளைக் கொடுக்கும். ஸ்படிகலிங்கம் சந்தானத்தைத்தரும். புஷ்பராகலிங்கம் ஸ்தம்பனம் என்ற தொழிலைச் செய்யும். பவளலிங்கம் ஸகலவச்யம் செய்யும். வஜ்ரலிங்கம் ஆகர்ஷணம் என்ற தொழிலைச்செய்யும். மாணிக்க லிங்கம் ஸர்வசித்தியை அளிக்கும். இந்திரநீலலிங்கம் மோக்ஷத்தைத் தரும்.

லோஹஜலிங்கம்

சுவர்ணம், தாமரம், வெள்ளி, ஈயம், பித்தளை, இரும்பு, மூன்று லோஹம், நாகம், காரீயம் என்ற இவைகளால் செய்யப்பட்ட இலிங்கத்தைப் பூஜிப்பதால், முறையே போகமோக்ஷம், சந்தானம், சோபை, சுகம், ரோகநாசம், சத்ருநாசம், மரணம், நாசம், தீமை என்ற பலன் கிடைக்கும். தாருலிங்கத்தால் இஷ்டசித்தியும், மிருத்திகா லிங்கத்தால் புத்ரப்ராப்தியும் கிடைக்கும்.

க்ஷணிகலிங்கம்

மணல், அரிசி, அன்னம், ஆற்றுமண், கோமயம், வெண்ணெய், ருத்ராக்ஷம், விபூதி, சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, வெல்லம், மாவு இவைகளால் லிங்கம் செய்து பூஜையின் முடிவில் உத்வாஸனம் செய்யவேண்டும்.

சைகதலிங்கம் மோக்ஷத்தையும், தண்டுலலிங்கம் வாழ்க்கையையும், அன்னலிங்கம் அன்னத்தையும், ஆற்றுமண் லிங்கம் பூமியையும், கோமயலிங்கம் ரோகநாசத்தையும், வெண்ணெய் லிங்கம் மன உத்ஸாஹத்தையும், ருத்ராக்ஷலிங்கம் ஞானத்தையும், விபூதிலிங்கம் மோக்ஷத்தையும், சந்தனலிங்கம் சௌபாக்யத்தையும், கூர்சம் முக்தியையும், புஷ்பமாலை ஆயுளையும், வெல்லலிங்கம் இஷ்டசித்தியையும், மாவுலிங்கம் புஷ்டியையும் தரும். இந்த லிங்கங்களுக்கு அளவு கிடையாது.

லிங்கம்: நிஷ்களம், ஸகலநிஷ்களம், ஸகளம் என்று மூன்று வகைப்படும். நிஷ்களம் என்பது லிங்கம், ஸகள நிஷ்களமென்பது முகலிங்கம், ஸகளம் என்பது நடராஜர், ஸோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தங்கள்.

லிங்கத்தினின்றும் தோன்றிய வடிவங்கள் அறுபத்தி நான்கு. இவை அஷ்டாஷ்ட விக்ரஹங்கள் என்று ஆகமத்தால் கூறப்படுகின்றன. இவ்வடிவங்களை சுருக்கி இருபத்தைந்து மூர்த்தமாகக் காரணம் என்ற ஆகமம் கூறிற்று. அதாவது:

சந்திரசேகரர், உமாஸஹாயர், விருஷாரூடர், நடராஜர், கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, த்ரிபுராரி, ஜலந்தரர், கஜாரி, வீரபத்திரர், ஹர்யர்த்தமூர்த்தி, அர்த்தநாரி, கிராதமூர்த்தி, கங்காளர், சண்டேசாநுக்ரஹர், விஷாபஹரணர், சக்ரதாதா, விக்னப்ரசாதர், சோமாஸ்கந்தர், ஏகபாதமூர்த்தி, சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர் என்ற மூர்த்திகள்.

பூஜைக்கு முக்கியமானது மூர்த்திகளின் வடிவத் தியானம்:- அதாவது தக்ஷிணாமூர்த்தி என்றால் அவர் நான்கு கைகளுடன், சின்முத்திரை, உடுக்கை, அக்னி, புஸ்தகம் என்ற இந்த நான்கையும் கையில் வைத்து கொண்டு, வலது காலை பூதத்தின்மீது

வைத்துக்கொண்டு, மற்றொரு காலை வலது கால் தொடை மீது போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கும் தோற்றம். பின்புறம் ஆலமரமும், பக்கத்தில் நான்கு ரிஷிகளும் இருக்கும் காக்ஷி; இவ்வாறு தியானம் செய்து பூஜிக்கவேண்டும். இவ்வாறு பூஜிக்கப்படும் ஒவ்வொரு மூர்த்தியின் வடிவத்தையும் தியானம் செய்யவேண்டும்.

இந்த மூர்த்திகளை அமைப்பதற்குத் தாலம் என்ற அளவு கூறப்பட்டிருக்கிறது. அது பத்து முதல் ஒரு தாலம் வரையில் செய்யப்படவேண்டிய விக்ரஹங்கள் உண்டு. அதாவது முறையே 1.சிவபேரம், 2.தேவி, 3.அசுரர்கள், 4.மானிட விக்ரஹங்கள், 5.கூனர்கள், 6.விநாயகர், 7.பூதகணங்கள், 8.கின்னரர்கள், 9.கூஷ்மாண்டன், 10.கூர்மஹரி என்று பத்து முதல் ஒரு தாலம் வரையில் இவர்கள் செய்யப்பட வேண்டும்.

கர்பக்ருஹத்தில் பிம்பங்களை பிரதிஷ்டை செய்ய வேண்டிய ஸ்தானங்களும் ஆகமத்தில் கூறப்படுகின்றன.

அதாவது கர்பக்ருஹத்தின் பாதியை 10 பங்கு செய்து பத்தாவது பங்கான மத்தியில் சிவனையும், ஒன்பதில் பிரமனையும், எட்டில் விஷ்ணுவையும், ஏழில் முருகனையும், ஆறில் ஸரஸ்வதியையும், ஐந்தில் பக்தர்களையும், நான்கில் விநாயகரையும், மூன்றில் பைரவரையும், இரண்டில் சக்தியையும், ஒன்றில் பூதத்தையும் வைத்து ப்ரதிஷ்டை செய் வேண்டும்.

ஆலயம் ஒரு புருஷனைப் போன்றது. கர்பக்ருஹம்–தலை, அர்த்த மண்டபம் – முகம், ஸ்னபன மண்டபம் – மார்பு, மஹாமண்டபம் –தொப்புள், நிருத்த மண்டபம்–தொடை, ஆஸ்தான மண்டபம் – கணுக்கால், கோபுரம் – பாதம் என்பதாம்.

பிரதிஷ்டை

பிரதிஷ்டை என்பது ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என நான்கு வகைப்படும்.

ஆலயமே புதியதாய்க்கட்டி முதன்முதல் செய்யப்படும் பிரதிஷ்டை ஆவர்த்தம். ஆறு, சமுத்ரம் முதலியவைகளால் சலனமடைந்து மறுமுறை புதுப்பிக்கப்பட்டு செய்யப்படும் பிரதிஷ்டை அனாவர்த்தம். ஜீர்ணோத்தாரணம் செய்து செய்யப்படும் பிரதிஷ்டை புனராவர்த்தம். திருடர்களால் தூஷிக்கப்பட்டதற்குச் செய்யப்படும் சாந்தி ஸம்ப்ரோக்ஷணம் அந்தரிதம் எனப்படும்.

பிரதிஷ்டைக்குரிய கிரியைகள் 64 என்று சில ஆகமங்கள், 55 என சில ஆகமங்கள் ஒன்பது கிரியையையும் சேர்த்தும் சுருக்கியும் கூறுகின்றன. அவைகளின் சிலவற்றின் விவரணம் இங்கு தரப்படுகிறது.

அநுஜ்ஞை: செய்யப்படும் கும்பாபிஷேகத்தை ஆசாரியராக, எஜமானனாக இருந்து நடத்தத் தகுதி உள்ளவன் என்று சபையோர்களிடம் அனுமதிபெற்று பின் இறைவனிடமும் இறைவியிடமும் அனுமதிபெறல்.

விக்னேச்வரபூஜை: செய்யப்படும் காரியத்தை இடையூறின்றி முடிக்கவேண்டியதன் பொருட்டு விக்னகர்த்தாவான விநாயகரை வணங்கிப் பிரார்த்தித்து அனுமதிபெறல்.

வாஸ்துசாந்தி: இறவாத வரம் வாங்கியவரான வாஸ்துபுருஷன் என்ற அசுரனின் உபாதை இல்லாமலிருக்க, பிரமன் முதலியவர்களான அவ்வசுரனைக் காவல்புரியும் ஐம்பத்து மூன்று தேவர்களையும் பூஜை, பலி முதலியுவைகளால் திருப்தி செய்து இடையூற்றை நீக்குதல்.

ம்ருத்ஸங்க்ரஹணம்: அங்குரார்ப்பணம் என்ற கிரியை செய்வதற்கு வேண்டியதான மண்ணை, மண்ணிற்கு அதிபதியான பூமியையும், காவலர்களான இந்திரன் முதலிய திக்பாலர்களையும், தலைவரான பிரமனையும் பிரார்த்தித்துக் கொண்டு அவர்களின் அனுமதி பெற்று வெட்டி எடுத்து, வெட்டிய வெட்டு நீங்க ஏழுகடலை வரவழைத்து பூமிக்கு அபிஷேகம் செய்து வேண்டல்.

அங்குரார்ப்பணம்

செய்யப்படும் கிரியையின் சுபாசுபங்களை அறிவதற்குரிய கிரியை:– மந்திரபூர்வமாக பாலிகைகளில் தெளிக்கப்பட்ட வித்துக்கள் சரியாகவும், பசுமையாகவும் முளைத்தால் கிரியை சரியான முறையில் அமைந்தது என்று உணர்ந்துகொள்ள வேண்டும். அது மாறுதலாக இருந்தால் குறைபாடு இருப்பதாக உணர்ந்து அதற்குத்தக்க பிராயச்சித்தம் செய்யவேண்டும். அங்குரம் இல்லாத கிரியை பயனற்றது.

ரக்ஷாபந்தனம்

இது ஆசாரியருக்குச் செய்யப்படும் ரக்ஷை. இதனால் கிரியை பூர்த்தியாவதற்குள் தெய்வீகமாய் ஆசௌசாதிகள் நேர்ந்தால் அதனால் அக்கிரியைக்கு பாதகமேற்படாதவகையில் ஆசாரியனைக்காக்கும். அதாவது ரக்ஷாபந்தனவிஸர்ஜனம் செய்யும் வரையில் ஆசாரியருக்கு ஆசௌசம் முதலிய தோஷம் அணுகாது.

கும்பஸ்தாபனம்

இறைவனை ஆவாஹனம் செய்யும் பொருட்டு குடத்தை மந்திரபூர்வமாக அலங்கரித்து வித்யாதேஹமாக பாவித்தல்.

குடத்திற்குச் சாத்தப்பட்ட வஸ்திரம் தோலாகவும், மேல்பூசப்பட்ட மண் ரக்தமாகவும், செப்பொருள் மாம்சமாயும், ஜலம் மேதோ

தாதுவாயும், கூர்ச்சம் எலும்பாயும், சுற்றப்பட்ட நூல் நரம்பாகவும், குடத்தில் போடப்பட்ட ரத்னம், சுவர்ணம் சுக்லதாதுவாகவும், நியாசம் செய்யப்பட்ட மந்திரம் ஜீவனாகவும், போடப்பட்ட தானியம் ஆசனமாகவும் ஆகிறது.

கலாகர்ஷணம்

மூலஸ்தானத்தினின்றும் சுவாமியை அலங்காரம் செய்யப்பட்டு வித்யாதேஹமாக பாவிக்கப்பட்ட குடத்தில் குருபதேச முறைப்படி ஆகர்ஷணம் செய்து குறிப்பிட்டகாலம் வரையில் கடத்தில் இருக்கச்செய்தல்.

யாகசாலை

சுவாமியை குடத்தில் முறைப்படி ஆகர்ஷணம் செய்து அந்தக்குடத்தை சகலவித உபசாரத்துடன் ப்ரகாரத்தை வலமாக எடுத்துவந்து, முன்பே அமைக்கப்பட்ட யாகசாலையில் பிரதிஷ்டை செய்து, இரண்டுகாலம் முதல் சக்திக்குத் தக்கவாறு, பூஜை ஹோமம், முதலியவைகளைச் செய்துவரும் இடம்.

யாகசாலையின் முறை

ஆலயத்தினுடைய வடமேற்கு மூலை தவிர மற்ற திக்குகளில் ஏதாவதொரு இடத்தில் அமைக்கவேண்டும். யாகசாலை மூன்று பக்ஷமாக இருக்கிறது. அதாவது ஒன்பது குண்டவிதானம், ஐந்து குண்டவிதானம், ஏக (ஒரு) குண்டவிதானம் என்று. தேச–கால–கிரியை முதலியவைகளை அனுசரித்து 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 20, 32 என்ற முழங்களால் யாகசாலை அமைக்கலாம்.

யாகசாலையின் உள்கூட்டை 81 பதமாகச் செய்தால் மத்தியில் உள்ள ஒன்பது பதம் ப்ரஹ்மம் என்றும், சுற்றிலுமுள்ள

பதினாறுபதம் தைவிகபதம் என்றும், அடுத்த இருபத்திநான்குபதம் மானுஷபதம் என்றும், அடுத்த 32 பதம் பைசாசபதமென்றும் பெயர் பெறும்.

ப்ரஹ்மபதத்தில் சிவகும்பத்துடன் வித்யேச்வரர்களையும் வைக்கவேண்டும். தைவிகபதத்தில் அஷ்டமங்கலங்களையும், மானுஷபதத்தில் குண்டத்தையும், பைசாசபதத்தில் தோரணத்தையும் வைக்கவேண்டும். இது தசசூத்ர யாகசாலையின் விதி.

இதுபோல் மற்ற மனுசூத்ரயாகசாலை, கலாசூத்ர யாகசாலை முதலிய யாகசாலைகளில் கொஞ்சம் மாறுதல் உண்டு.

யாகசாலைக்கு நான்குபுறமும் நான்கு வாசற்படிவைத்து மேலே மூன்று த்ரிசூலம் வைக்க வேண்டும். அஷ்டமங்கலம், தசாயுதம், கொடி, பதாகம், தர்பமாலை முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும்.

கிழக்கு முதல் முறையே நாற்கோணகுண்டம், யோனி குண்டம், அர்த்தசந்திரம், முக்கோணம், விருத்தம், அறுகோணம், பத்மம், எண்கோணம் என்ற குண்டங்களை அமைக்க வேண்டும். எண்கோண குண்டத்திற்கும் நாற்கோண குண்டத்திற்கும் நடுவில் பிரதான குண்டம் போடவேண்டும். இது விருத்தமாகவாவது சதுரமாகவாவது இருக்கலாம்.

இக்குண்டங்களின் அக்னிகளாவன; ஆஹவனீயாக்னி, விருத்தாக்னி, தக்ஷிணாக்னி, யௌவனாக்னி, கார்ஹபத்யாக்னி, பாலாக்னி, கேவலாக்னி, சாமான்யாக்னி, சிவாக்னி என்பனவாம்.

இந்த குண்டங்களுக்கு சரீரமாக இறைவனின் எட்டு சரீரம் விளங்குகிறது. அதாவது கிழக்கு முதல் வடகிழக்கு வரையில் வரிசையாக பிருதிவி, அக்னி, யஜமானன், சூர்யன், ஜலம், வாயு, சந்திரன், ஆகாயம் என்ற எட்டும் விளங்குகின்றன.

சர்வன், பசுபதி, உக்ரன், ருத்ரன், பவன், மஹேச்வரன், மஹாதேவன், பீமன் என்ற எண்மரும் அந்த சரீரங்களுக்கு அதிபதியாக விளங்குகிறார்கள்.

எட்டு குண்டங்களில் எட்டு சரீரங்களைத் தனித்தனியே தியானித்துப் பூஜை ஹோமங்களால் ப்ரஸன்னமுள்ளதாகச் செய்து கடத்திலிருக்கும் இறைவனோடு சேர்த்துப் பின் கடத்திலிருக்கும் இறைவனை மூலபிம்பத்தில் சேர்த்தால், இறைவனைக் குறித்து பிரதான குண்டத்தில் செய்யப்பட்ட பூஜை ஹோமங்களும் சேர்ந்து இறைவனை மிகவும் ப்ரஸன்னமுள்ளவராகச் செய்கிறது.

அஷ்டபந்தனம்

இது பீடத்தையும் பிம்பத்தையும் சேர்க்கும் ஒரு தெய்விக மருந்து; சுக்கான், குங்கிலியம், கொம்பரக்கு, காவி, செம்பஞ்சு, லிங்கம், வெள்ளைமெழுகு, வெண்ணெய் இந்த 8 மருந்துக்களை அதற்குரிய அளவுகொண்டு சேர்த்து இடித்துச் சாத்தவேண்டும்.

பீடம் என்பது ஒரு சக்தி. இம்மருந்து பீடசக்தியையும் இறைவனின் திருவருள் சக்தியையும் தொடர்புடையதாய் ஒன்றுபடுத்தி தரிசிப்பவர்களுக்கு அனுக்ரஹசக்தியை அளிக்கவல்லதாக இருக்கிறது.

பிம்பசுத்தி

கலாகர்ஷணம் செய்தபின் பிம்பத்திற்கு ஏற்பட்ட சிற்பிதோஷ நிவர்த்தியின் பொருட்டு செய்யப்படும் ஸம்ஸ்காரம். ஐந்துவிதமான பட்டை, ஐந்துவிதமான தளிர், எட்டுவிதமான மண் இவைகளைக் கொண்டு ஸ்நபனம் வைத்து ஜபம்செய்து அபிஷேகம் செய்வது.

ஸ்பர்சாஹுதி

யாகசாலையில் செய்யப்பட்ட ஹோமங்களையும், தத்வங்களையும், தத்துவத்தின் அதிபர்களையும் நாடீசந்தானம்

(துங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி அல்லது தர்ப்பைக்கயிறு) என்ற முறைமையால் இறைவனிடத்தில் சேர்த்தல்.

கும்பாபிஷேகம்

யாகசாலையில் பூஜிக்கப்பட்ட கடத்தை எழுந்தருளச்செய்து, மூலாலயத்தில் பிம்பத்தின் முன்வைத்து, குருபதேச முறைமையால் திரும்ப கும்பத்தினின்றும் பிம்பத்தில் சேர்த்து பிரதிஷ்டித்து அக்குட நீரை அபிஷேகம் செய்தல்.

இதனால் எல்லாவகையாலும் நாடு செழிக்கும். கும்பாபிஷேகத்தைச் செய்பவர்களும் தரிசிப்பவர்களும் புருஷார்த்தங்களை அடைவார்கள்.

மஹாபிஷேகம்

இதை மஹாஹவிர் நிவேதனம் என்றும் சொல்லுவதுண்டு; கும்பாபிஷேகம் செய்தவுடன் இறைவனுக்கு பூர்ணமான அபிஷேக திரவியங்கொண்டு அபிஷேகம் செய்வித்து, அதேபோல் பூர்ணமாக நிவேதனம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதால், இதுகாறும் கும்பாபிஷேகத்தின் வேலையில் களைப்படைந்த பிரமன் முதலிய சகல பசு வர்க்கங்களும் திருப்தியடைகின்றன.

மண்டலாபிஷேகம்

இதற்கு த்ரைபக்ஷிகம் என்றுபெயர். மூன்று பக்ஷம் இறைவனை விசேஷமாகப் பூஜித்து முடிவில் ரக்ஷா விஸர்ஜனத்துடன் பூர்த்திசெய்யவேண்டும்.

பூஜை

பூஜையானது ஆத்மார்த்தபூஜை, பரார்த்தபூஜை என இருவகைப்படும். ஸமய–விசேஷ–நிர்வாணதீக்ஷை பெற்று குருவினால் கொடுக்கப்பட்ட லிங்கத்தைப் பூஜிப்பது ஆத்மார்த்த பூஜை.

கிராமத்திலோ நகரத்திலோ உள்ள ஆலயத்தில் இருக்கும் இலிங்கத்தை ஆதிசைவர்களைக் கொண்டு பூஜிப்பது பரார்த்த பூஜை.

ஆத்மார்த்தபூஜையின் விளக்கமும் முறையும் இவ்வாதீனத்தில் வெளியிடப்பட்டிருக்கும் நித்யபூஜாலக்ஷண ஸங்கிரஹம் என்ற நூலில் காணலாம்.

பரார்த்த நித்யபூஜை

பரார்த்தபூஜையானது நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று வகைப்படும். நித்யபூஜையானது எட்டுவகைப்படும். அது உத்தமத்தில் மூன்று. மத்தியமத்தில் மூன்று. அதமத்தில் இரண்டு என்று அஜிதாகமம் கூறுகிறது.

பகலில் நான்குகால பூஜை, இரவில் நான்குகால பூஜை உத்தமத்தில் உத்தமம். பகலில் நான்கு காலம் இரவில் மூன்று காலம் செய்யும் பூஜை உத்தமத்தில் மத்தியமம். பகலில் நான்கு காலத்துடன் இரவு இரண்டு காலம் ஆக ஆறுகாலபூஜை உத்தமத்தில் அதமம். இவ்வாறு ஒவ்வொறு காலம் குறைவாகி முடிவில் அதமத்தில் மத்தியமமாக ஆவது ஒருகால பூஜையாகும்.

அபிஷேகம் – ஸ்ருஷ்டிகிருத்யம், நைவேத்தியம் – ஸ்திதி கிருத்யம், பலி – ஸம்ஹார கிருத்யம், தீபம் – திரோபாவ கிருத்யம், விபூதி – அனுக்ரஹ கிருத்யம் என்று கூறப்படுகிறது.

எண்ணெய், மாப்பொடி, நெல்லிமுள்ளி, மஞ்சள்பொடி, பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், பால், தயிர், நெய், தேன், கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சம்பழம் முதலிய பழவகை, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், பத்ரோதகம், கும்போதகம் என்ற இவைகளை வரிசையாக அபிஷேகம் செய்யவேண்டும்.

அபிஷேகத்திற்கு முன்னும் பின்னும், நைவேத்தியத்திற்கு முன்பும் பின்பும், தூபத்தின் முதலிலும், பாத்யம் ஆசமனம் கொடுக்க வேண்டும்.

பூஜையின் ஆரம்பம், அபிஷேகத்தின் முடிவு, பூஜையின் முடிவு இந்த மூன்று காலங்களில் அர்க்யம் கொடுக்கவேண்டும்.

பாத்யத்தை – காலிலும், ஆசமனத்தை – முகத்திற்கு நேரிலும், அர்க்கியத்தை – சிரசிலும் கொடுக்கவேண்டும்.

விளாமிச்சை, சந்தனம், அருகு, வெண்கடுகு என்ற இந்த நான்கு திரவியங்களைப்போட்டு ஷடங்க மந்திரத்தைப் பூஜித்து அந்த ஜலத்தை பாத்யமாகக் கொடுக்கவேண்டும்.

ஏலக்காய், கிராம்பு, பச்சைக்கற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய், குங்குமப்பூ இந்த ஆறுதிரவியங்களைப்போட்டு ஸம்ஹிதா மந்திரத்தால் பூஜிக்கப்பட்ட ஜலத்தை ஆசமனஸ்தானத்தில் கொடுக்க வேண்டும்.

எள், யவைநெல், தர்பைநுனி, பால், ஜலம், அரிசி, புஷ்பம், வெண்கடுகு என்ற இந்த எட்டு திரவியங்களையும் போட்ட ஜலத்தில் மூலமந்திரத்துடன் கூடிய ஸம்ஹிதாமந்திரத்தை ஜபம் செய்து, பூஜித்து அர்க்யஸ்தானத்தில் உபயோகப்படுத்தவேண்டும்.

தூபம், தீபம், அலங்கார தீபம், நாக தீபம், விருஷப தீபம், புருஷாமிருகதீபம், கடதீபம், பஞ்சதட்டு (ஐந்து), நக்ஷத்ர தீபம், மேரு தீபம், கற்பூரதீபம், மஹாநீராஜநம் (பஞ்சஹாரத்தி) என்று ஷோடச உபசாரங்களாலும் இறைவனைப் பூஜிக்கவேண்டும்.

விபூதிரக்ஷை, கண்ணாடி, குடை, சாமரம், சுருட்டி, விசிறி என்ற இவைகளும் அந்த உபசாரங்களாகும்.

𑌪𑍂𑌜𑌯𑌾 𑌵𑌿𑌪𑍁𑌲𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌅𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 𑌸𑌂𑌪𑌦𑌃।
𑌜𑌪𑍇𑌨 𑌪𑌾𑌪𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇॥

பூஜையால் விஸ்தாரமான ஞானத்தையும், அக்னி காரியத்தால் ஸம்பத்தையும் = செல்வத்தையும், ஜபத்தினால் பாபசுத்தியையும், தியானத்தினால் மோக்ஷத்தையும் அடைகிறான் என்பது ஆகம சித்தாந்தம்.

ஊர்த்துவ தாண்டவம்

சிவாகம–ஸார–ஹாரம்

உலகத்திலுள்ள எல்லா மக்களும் (ஸுூவம் ெ ஹூயாகஃ ஐூ௸வம் ஊா ஹூகஃ) சுகம் உண்டாகவேண்டும், துக்கம் உண்டாகக் கூடாது என்று விரும்புகிறார்கள். ஆனால் அந்த சுகத்தையோ துக்கத்தையோ தனது விருப்பம்போல் அடையவோ விலக்கவோ முடிவதில்லை. ஆதலால் ஆன்மாக்கள் சுவதந்திரமற்றது. இறைவன்தான் சுவதந்திரமுள்ளவன் மற்றும் சர்வஜ்ஞத்வம் முதலிய ஆறுகுணங்களுள்ளவன். அதாவது எல்லாமறிந்தவன்; எப்பொழுதும் திருப்தியுடையவன்; அனாதியே அறிவுடையவன்; சுவதந்திரன்; எப்போதும் குறைவற்ற சக்தியுடையவன்; அனந்த சக்தியுடையவன்.

ஸஂஸாரெ விஹ்ராநாம் நிவிரநாம் ஹ்ராணிநாம் ஹ்ஹு௸ கூஹயா।
கூுஹுதெ ஊஹாயஹூஸஂஹ்ருதிஂ ஊதெஷாஂ ஊவ விஷ்ராந்தயெ॥
கூஊ-விஹாஊஙு ஹெதொ௸ ஹமூஊயயாஹுநாரஹீஹ ஹாரஜோ॥
ஸ்ருஷ்டிஂ விதாய தெஷாஂ கூஊ விஹாஊயதி ஜெஹஹ்ருதாஂ॥

– தத்துவப்ரகாசிகை.

ஸம்ஸாரத்தில் துன்புறும் எல்லாப் பிராணிகளுக்கும் விச்ராந்தியின் பொருட்டு இறைவன் மஹாசங்காரத்தைச் செய்கிறார். கர்மத்தைப் பரிபக்வம் செய்தல் காரணமாகப் பசுவின் மேற்கொண்ட தயையினால் இறைவன் மீண்டும் சிருஷ்டியைச் செய்து அந்த ஆன்மாக்களின் கர்மத்தைப் பக்குவம் செய்கிறான் என்று தத்துவ– ப்ரகாசிகை என்ற நூல் கூறுகிறது.

உயிருக்கு மலபரிபாகம் வரும்பொருட்டுத் தோற்றமும், உயிரின் இளைப்பை ஒழிக்கும் பொருட்டு அழிவும் உண்டாகிறது. முன்பு இளைப்பைச் செய்து நின்ற காரியங்கள் அழியுமாதலின் அழிந்தாலும் பழவினைத் தொடர்ச்சிக்கு உரியனவாய்த் தம் காரணங்களில் கன்மத்தோடு பயின்று கிடக்கின்றன. அயனும் மாலும் தனது புண்ணிய விசேஷத்தால் முதல்வனது அதிகாரசக்தியை

அவனது ஏவலால் பெற்றுள்ளவர்கள். அத்தொழிலுக்குச் சுதந்திர அல்லர். முத்தொழிலும் செய்தற்குரிய சுவதந்திரம் சிவபெருமானுக்கே.

ஆன்மாக்கள் நற்கருமாக்களைச் செய்து அதன் பயனை இம்மையிலும் மறுமையிலும் இன்பமடையச்செய்யவே இறைவன் தனது ஐந்து திருமுகங்களினின்றும் நான்கு வேதங்களுடன் ஆகமத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்.

பிரமசரியம், சத்கர்மம், தபஸ் இவைகளால் ஆத்ம ஞானத்தையடைய வேண்டும். ஆன்மாவிற்கு நண்பனாய் ஆன்மாவினால் செய்யப்படும் கர்மாக்களுக்கு சாக்ஷியாய் ஹ்ருதய கமலத்தில் வீற்றிருக்கிறார் சிவன். சரீரமாகிய ரதத்தில் ஏறிய ஜீவனாகிய தலைவன் மனதாகிய கடிவாளத்தால் இந்திரியங்களாகிய குதிரைகளையடக்கி புத்தியாகிய தேரோட்டியால் நல்லவழியில் செலுத்தி ஸம்ஸாரமாகிய இருளைக் கடந்து சிவசாயுஜ்யத்தை அடைகிறான்.

ஸ்ருஷ்டிகாலத்தில் பரமேச்வரன் புருஷார்த்தங்களின் பிரசித்தியின் பொருட்டு, தூய்மையும் ஐந்து ப்ரவாகத்தோடு கூடியதுமான ஞானத்தைச் செய்கின்றார் என சாத்திரங்களால் அறியப்படுகிறது.

𑌆𑌪𑍍𑌤𑍋𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌃 𑌶𑌿𑌵 𑌏𑌵𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌯𑌤𑌃।
𑌨 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌦𑍃𑌶𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌧𑌾𑌯𑌕𑌃 ॥

ஆப்தனுடைய வாக்கியம் சித்தாந்தம். சிவனே ஆப்தன். இவ்விருவருக்கும் ஏற்றதாய் = ஸமானமாய் சிரேயஸ்ஸைக் கொடுப்பதாகிய எப்பொருளுமில்லை என்ற வாக்கியத்தின்படி ஆப்தனாகிய சிவனால் கூறப்பட்ட சிவாகமங்கள் ஆப்தவாக்கியம்.

வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அனாதி அமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொது சைவம் அரும் சிறப்புநூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதுஇல் பொருள் கொண்டுஉரைக்கும்நூல் சைவம் பிற நூல்
திகழ் பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்.

– சிவஞான சித்தியார்.

வேதம் ஆகமம் இரண்டும் எல்லா நூல்களுக்கும் முதல் நூலாகி அனாதிமுத்தனாகிய இறைவனால் தரப்படும் நூலாம். ஏனைய நூலெல்லாம் இவ்வேதாகமங்கள் இரண்டினின்றும் விரிந்த நூல்களாதலின் இவ்வேதாகமங்களே நூலென்று உயர்த்துக் கூறப்படுவன.

முதல்வன் பெருங்கருணையினால் நீதிநெறியில் நிற்கும் உலகோரும், ஞானநெறியில் நிற்கும் உயர்ந்தோரும் ஆகிய இருவரும் உய்தற்பொருட்டு வேதத்தையும், ஞானநெறியிற் நிற்போர் உய்தற்பொருட்டு ஆகமத்தையும் அருளிச் செய்தனர்.

அன்றியும் வேதத்தில் கூறும் கருமகாண்டத்துள் சிவார்ச்சனை செய்க; என்றுகூறி அதனைச் செய்யும் விதம் அவ்விடத்துக் கூறாமையால், அதனைக் கூறுதற்காகவும் ஞான காண்டமாகிய உபநிடதம் பல கடவுட்கும் பரத்துவம் கூறுதலால், அப்பல கடவுளுள்ளும் சிவனொருவனுக்கே பரத்துவங் கூறுவதற்காகவும் ஆகமத்தையருளிச்செய்தனர். இதனால் வேதம்

சூத்திரம், ஆகமம் அச்சூத்திரத்தின் விருத்தியுரையாகிய பாடியம் போலாம்.

"வெஉ-ஶிவாமஃயொ: ந ஹெஉஂ வஶ்யாஃ:"

[1]"வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் பேதம் இல்லை என்று அப்பைய தீக்ஷிதர் கூறுகிறார். வேதம் உலகர்க்கும் ஞானாதிகாரிக்கும் உரித்தாதலின் பொதுவும், ஆகமம் ஞானாதிகாரிக்கே உரித்தாதலிற் சிறப்புமாம். அன்றியும் வேதம் பல கடவுளர்க்கும் பரத்துவம் கூறுதலால் பொது, ஆகமம் சிவபெருமானுக்கே பரத்துவம் கூறுதலால் சிறப்பு சிவாகமம் பொருட்டு வேறாய் வேதத்தின் பூர்வபக்ஷப் பொருளைச் சொல்லும் நூல்களெல்லாம் மேற்கூறியவாறு பூர்வபக்ஷ நூலெனப்படும். வேதத்தின் முடிவான பொருளைச் சொல்லும் சிவாகமம் சித்தாந்தம் எனப்படும்.

ஶிவஸஂஸ்காரிணாஂ செவ ஜ்ஞாநயஉூவதாஂ ஸதாஂ।
கஷ்டாவிஂஶதி ஹெஉெந ஷெ்ராகஂ ஶைவமிதி ஸ்மூதஂ॥

– ஸ்ரீமத் ரௌரவாகமம்.

சிவதீக்ஷை உடையவர்களாயும் ஞானம் தரும் இவைகளுடன் கூடியவர்களாயுமுள்ள உயர்ந்தவருக்கு இருபத்தெட்டு பேதமுடைய சிவாகமத்தைச் செய்தார்.

சிவாகமமானது காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், ஸுப்ரபேதம், விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அனலம், வீரம், ரௌரவம் மகுடம், விமலம், சந்திரஜ்ஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லலிதம்,

[1] ஸ்ரீ கண்டர்

ஸித்தம், ஸந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாம்.

இதனுள் காமிகம் முதல் சுப்ரபேதமீறாகவுள்ள பத்து ஆகமங்கள் சிவபேதம் என்றும், விஜயம் முதல் வாதுளமீறாகவுள்ள பதினெட்டு ஆகமங்கள் ருத்ரபேதம் என்றும் பெயர் பெறும். இவ்வாகமங்கள் மந்த்ரம் எனவும், தந்த்ரம் எனவும், சித்தாந்தம் எனவும் பெயர்பெறும். இவ்விருபத்தெட்டு சிவாகமங்களும் ஒவ்வொன்றுக்குக் கோடிகிரந்தமாக இருபத்தெட்டுகோடி கிரந்தங்களாம். இவை ஞானபாதம், கிரியாபாதம், யோகபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்கு பாதங்களை உடையனவாயிருக்கும். மேலும் ச்ரௌதம், அச்ரௌதம் என இரண்டு பிரிவினை உடையது.

𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍋 𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌵𑍇𑌦𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌚𑌾𑌰𑌃 𑌵𑍈𑌦𑌿𑌕𑌾𑌚𑌾𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

– ஸ்ரீமந் மகுடாகமம்

ச்ரௌதம் வேதசாரமாகவுடையது. அது சித்தாந்தம் எனப்படும். மற்றொன்று அச்ரௌதம் எனப்படும். சித்தாந்தத்தால் கூறப்படும் ஆசாரம் வைதிகாசாரம் எனப்படும். ச்ரௌதமான சிவாகமவிதியின் வழி ஒழுகுகிறவர்கள் சித்தாந்திகள்; மற்றவர்கள் தாந்திரிகர்கள். அதாவது பாசுபதம், காபாலம், காலாமுகம் முதலிய மதத்தில் ஒழுகுகிறவர்கள் ஆவார்.

𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌤𑍁 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌶𑍈𑌵𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌇𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍌𑌤𑌾𑌚𑌾𑌰𑌾𑌨𑍍 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌨 𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 ॥

– பௌஷ்கரவிருத்தி

வைதிகத்தை முன்னிட்டு சைவத்தைச் செய்யவேண்டும் என்றும் வர்ணாச்ரம ஆசாரங்களை மனதினாலும் தாண்டக்கூடாது என்றும் பௌஷ்கராகமபாஷ்யத்தில் காணப்படுகிறது.

ஞானபாதம்–; பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் லக்ஷணத்தையும் ஸ்வர்க்கம், நரகம், கைலாயம், அபரமுக்தி, பரமுக்தி இவைகளின் லக்ஷணங்களையும் கூறுகிறது.

கிரியாபாதம்:– க்ராமம், நகரம், பட்டினம், ராஜதானி இவைகளை அமைக்கும் முறைகளையும், மனைகள், அரண்கள், மாளிகை, சாலை, மண்டபம், கூடம், கோபுரம் இவைகளை அமைக்கும் முறைகளையும் மற்றும் பூமிலக்ஷணம், காலலக்ஷணம், வாஸ்துலக்ஷணம், லிங்கலக்ஷணம், ப்ரதிமாலக்ஷணம், யாகலக்ஷணம், நித்ய– நைமித்திக– காம்யபூஜா முறைகளையும், அனுஷ்டானம், பூஜை, ஜபம், ஹோமம் என்பவைகளின் முறைகளையும், ஸமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேக முறைகளையும் கூறுகிறது.

யோகபாதம்:– யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்ற அஷ்டாங்க யோகலக்ஷணத்தையும், அத்துவாக்களின் லக்ஷணங்களையும் கூறுகிறது.

சரியாபாதம்:– ப்ரபஞ்சலக்ஷணம், ஜீவபேதம், நல்லொழுக்கம், வர்ணாச்ரம ஆசாரம், கர்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்கள் இவைகளைச் சொல்லுகிறது. மேலும் இவ்வாகம நூலின்கண் ஜ்யோதிஷம், பரதம் முதலியவைகளின் லக்ஷணங்களும் ஔஷதிகளின் குணமும் கூறப்படுகிறது.

ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். இன்னும் 'ஆ' என்பது பாசம் எனவும் 'க ' என்பது பசு எனவும் 'ம' என்பது பதி எனவும் பொருள்படுதலால் ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்தத்தை உணர்த்தும் நூல் என்பதும் பொருள். மற்றும் ஆகமம் ஆன்மாக்கள் மோக்ஷமடைய மலநாசம் செய்விப்பது என்பதும் பொருள்.

இவ்வாகமங்களுக்கு வழிநூல் நாரசிம்ஹம் முதல் விச்வாத்மகம் ஈறாகவுள்ள உபாகமங்கள் இருநூற்றேழாம். ஆகமங்களுள் சில ஆகமங்கள் சிற்சில விஷயங்களை அதிகமாகவும் சிற்சில விஷயங்களைக் குறைத்தும் சிலவற்றைச் சொல்லாமலும் வேறு சிலவற்றைப் புதியதாகவும் உபதேசிக்கின்றன. "அனுக்தம் அன்யதோ க்ராஹ்யம்" என்ற விதிப்படி ஒரு ஆகமத்தில் கூறப்படாததை அவச்யமாயின் மற்றொரு ஆகமத்தினின்றும் எடுத்துக் கொள்ளவேண்டும். அதிகமாகச் சொல்லப்பட்டதை அபிப்ராய பேதத்தினால் அதிகம் கூறினதாகக் கொள்ளவேண்டும்.

ஞானபாதத்தில் காமிகம் மற்றும் ரௌரவம் ஆகிய ஆகமங்கள் பதார்த்தம் மூன்று எனக் கூறுகின்றன. பராக்யம் என்ற ஆகமம் பதார்த்தம் ஐந்து என்றும், ஸ்வாயம்புவாகமம் பதார்த்தம் ஏழு எனவும், பௌஷ்கராகமம் மதங்காகமம் இரண்டும் பதார்த்தம் ஆறு எனவும் கூறுகின்றன.

𑌪𑌤𑌿𑌃 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌿𑌨𑍀 𑌮𑌾𑌯𑌾 𑌪𑌶𑍁𑌃 𑌪𑌾𑌶𑌶𑍍𑌚 𑌕𑌾𑌰𑌕𑌃 ।
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌷𑌟𑍍 𑌶𑍈𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ॥

– ஸ்ரீமத் பௌஷ்கராகமம்.

பதி, குண்டலினீ, மாயை, பசு, பாசம், காரகன் என்று பதார்த்தங்கள் ஆறு என்று பௌஷ்கராகமம் கூறுகிறது.

ஸர்வஜ்ஞனான பரமசிவன் கேட்பவர்களுடைய பரிபக்குவத்திற்கேற்ப உபதேசம் செய்யப்பட்டதாக உமாபதி சிவாசாரியர் பௌஷ்கர பாஷ்யத்தில் கூறுகிறார்.

சிவபெருமான் பதி எனப்படுவார். மெய்யெழுத்தில் உயிரெழுத்துப் போல் எல்லா ஆன்மாவிடமும் நிறைந்து நிற்பவன். இவ்வளவு அவ்வளவு என்று அளவிட்டுக் கூறமுடியாதவன், பரிபூர்ணன், ரூபம், அரூபம், ரூபாரூபம் என்ற வடிவுடையவன், லய–போக–அதிகாரவான், மன–வாக்கிற்கு எட்டாதவன், எல்லாவற்றையும் அறிந்தவன், எல்லாவற்றையும் செய்பவன், ஐந்தொழிலைச் செய்பவன், அனாதியாகவே மலமற்றவன், ஒருவன் என்று பதியின் லக்ஷணம் கூறப்படுகிறது.

பசு என்பது ஆன்மாக்கள். இவை தேஹம் இந்திரியம் இவைகளைக் காட்டிலும் வேறாகவுள்ளது. அனாதியாக மலத்துடன் கூடியது. விஜ்ஞானகலர், ப்ரளயாகலர், ஸகலர் என்ற பெயருடன் முறையே ஒருமலம், இருமலம், மும்மலம் உடையது. நித்தியமாய் வியாபகமாய் உள்ளது. தான் செய்ததைத் தானே அனுபவிக்கும் தன்மையுடையது. எண்ணிறந்தது.

இப்பசுக்களுள் ஒருமலமுடைய விஜ்ஞானகலர், ப்ரசாந்த கலுஷர் எனவும் அப்ரசாந்தகலுஷர் எனவும் இரு பேதமுடையவர்கள். இறைவன் அவர்களுடைய பரிபக்குவமான மலத்திற்கேற்ப சுத்தாத்துவாவில் அதிகாரபதத்தில் வைக்கிறார். வேறுசிலரை சுத்தாத்துவ போகத்தில் சக்ரவர்த்திக்குரிய போகத்தை அனுபவிக்கச் செய்கிறார். இவர்கள் அநந்தர், ஸூக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி என்ற எண்மர் ஆவார். வேறு சிலர் ஸப்தகோடி மஹாமந்த்ரங்கள் என்ற

பெயரால் விளங்குகிறார்கள். இவர்களுள் யாவருக்காயினும் தனது அதிகாரத்தில் வைராக்கியம் உண்டானால் இறைவன் அவர்களுடைய மலபரிபாகத்திற்குத் தக்கவாறு அனுக்ரஹம் செய்து பரமுக்தியையளித்து ஈச்வரதத்துவத்திலிருப்பவர்களை சதாசிவ தத்துவத்திலும், சுத்தவித்யா தத்துவத்தில் இருப்பவர்களை ஈச்வரதத்துவத்திலும் வசிக்கச் செய்கிறார்.

இரண்டு மலமுடைய ப்ரளயாகலர் என்றவர்களும் பக்குவமலர், அபக்குவமலர் என்ற இருபேதமுடையவர்கள். பக்குவ மலருக்கு அனுக்ரஹம் செய்து புவனபதியாகச் செய்கிறார். அபக்வ மலருக்கு ப்ராக்ருதகன்மவசத்தினால் புர்யஷ்டகசரீரத்தை உடையவர்களாகச் செய்கிறார்.

மும்மலமுடைய சகலர்கள் சாமுசித்தர், வைநயிகர், ப்ராகிருதிகர் என மூன்று பேதமுடையவர். சாமுசித்தர் என்பவர் முன் ஜன்மத்தில் உண்டான கேட்டல், சிந்தித்தல், தியானித்தல் முதலியவைகளால் பெறப்படாத சிவசாயுஜ்யத்தை உடையவர்களாய் கொண்டு, சரீரமுண்டானவர்களாக இருப்பினும் பூர்வஜன்ம ஸம்ஸ்காரத்தினால் இடைவிடாத தியானத்தினால் சிவானுக்ரஹம் பெற்று சிவசாக்ஷாத்காரம் உடையவர்கள் ஆவர்.

வைநயிகர் என்பவர் ஆசாரியனிடத்தில் விநயம் உள்ளவனாய்க் கொண்டு தீக்ஷையைப்பெற்று மனம், வாக்கு, காயத்தினால் செய்யப்பட்ட சிவதர்மத்தினால் சுத்தனாய் உலகத்தையும் சிவஞானத்தையும் அறிந்து ஒழுகுபவன்.

ப்ராகிருதிகன் என்பவன் ஸ்வப்ன அறிவுபோல அறிந்தும் அறியாததுமான ஞானத்தை உடையவனாய் தேஹம், இந்திரியம், ஆன்மா இவைகளிடத்தில் அபிமானமுள்ளவன்.

பாசம் என்பது ஆணவம், திரோதாயக சக்தி, பிந்து, மாயை கன்மம் என்று ஐந்து பேதமுடையது.

ஆணவம் என்பது செம்பினிற் களிம்பு போல ஆன்மாவுடன் கூட உண்டாவது. ஆன்மாவின் அறிவு, செயல் முதலியவைகளை மறைக்கும் தன்மையுடையது. இந்த மலமானது மோஹம், மதம், ராகம், விஷாதம், தாபம், சோஷம், வைசித்ரியம் என்று ஏழு காரியபேதங்களை உடையது.

திரோதாயகசக்தியானது ஆணவமலம் உயிர்களை மறைக்கும்–பெத்தநிலையில் இப்படிச் செய்யினும் தானே பக்குவப் படுத்தி, பக்குவமானபின் தானே திருவருளாய் மாறிநின்று முத்தியைக் கொடுப்பதும் இச்சத்தியே. இதனை மலம் என்று சொல்வது உண்மையன்று உபசாரமாம்.

பிந்து என்னும் குடிலாசக்தியானது மலகன்மங்களோடு விரவாது சுத்தமாயிருத்தலால் சுத்தமாயை எனப்படும். இதிலிருந்து சொல்வடிவும் பொருள்வடிவுமாகிய இருவகைப் பிரபஞ்சம் தோன்றும். சுத்தமான சப்தத்திற்கும் சுத்தமான தத்துவங்களுக்கும் உபாதான காரணமாகவுள்ளது.

பரமசிவனது சத்தியின் வியாபாரத்தால் சுத்தமாயையிலே நாதம் தோன்றும். நாதத்தில் பிந்து தோன்றும். பிந்துவிற் சாதாக்கியம் தோன்றும். சாதாக்கியத்தில் மகேச்வரம் தோன்றும். மகேச்வரத்தில் சுத்தவித்தை தோன்றும். இத்தத்துவங்கள் ஐந்தினையும் அதிஷ்டித்து நிற்கும் சிவம் முறையே சிவம், சக்தி, சதாசிவன், மகேச்வரன், சுத்தவித்தை எனப்பெயர் பெற்று நிற்கும்.

அன்றி முன் சொன்ன பிந்துவினின்று சூக்குமை, பைசந்தி, மத்தியமை, வைகரி என்னும் வாக்குகள் நான்குந் தோன்றும்.

மாயை என்பது "ஜயதி ஜஹாதி விஸ்ருஜதி" உலகத்தைக் கொடுக்கிறது என்று காரணப் பெயரை உடையது. மேலும் தனு– கரண– புவன– போகங்கள் உண்டாகிடும் கலை முதல் பிருதிவியீறாகவுள்ள தத்துவங்களின் காரியங்களுக்கு உபாதான காரணமாகவுள்ளது. (அதாவது தனு – பஞ்ச பூதங்களின் காரியமான பௌதிக தேஹம். கரணம் – புறக்கரணம் அகக்கரணம் முதலியன. புவனம் – உயிர்கள் இன்பதுன்பங்கள் அனுபவித்தற்கிடமாகிய உலகம். போகம் – இன்ப–துன்பங்கள் அனுபவித்தற்கேதுவாகிய பொருள்கள்)

இது ஒன்றே ஆயினும் ஆன்மாவிடத்திலும், தேஹம் முதலியவைகளிடத்திலும், தான் என்ற ப்ரமத்திற்குக் காரணமாக இருப்பதால் மோஹிநீ தத்வமாகும்.

கன்மமானது மனோஜன்யம், வாக்ஜன்யம், சரீரஜன்யம் என மூன்று பேதமுடையது.

மானசிகமான கர்மாவானது இஷ்டதேவதையை தியானித்தல் – பரஸ்திரீயை விரும்புதல். வாசிககர்மாவானது மந்திரஜபம் செய்தல், பிறரை நிந்தித்தல். காயிகமான கர்மாவானது தேவபூஜை செய்தல், போகக்கூடாதவிடத்திற்குப் போகுதல்; மேலும் கன்மத்தின்பயன் சாதி, ஆயுள், போகம் என மூன்றுவிதமாய் வரும்.

இவை ஆன்மாவிற்கூடிவருதல் பழவினையினால். ஊழல்லாத வேறொன்றும் ஆன்மாவுக்கு அனுபவமாய் வரமாட்டாது. கன்மத்தின் பயன், செய்த முறைமையின்றிப் பக்குவமான முறையில் முன்செய்தன பின்னும், பின் செய்தன முன்னுமாக மாறி வரும். இயல்பாக வருகின்ற தெய்விகத்தாலும், ஆதிபௌதிகம், ஆத்யான்மிகங்களாகிய அசேதன சேதனங்கள் வாயிலாகவும்

வரும். இப்பிறவியில் ஆன்மா அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்குக் காரணம் முற்பிறவியிற் செய்த ஊழ்வினையாம்.

ஆகவே ஆணவம், திரோதாயி, பிந்து, மாயை, கன்மம் என்ற இவ்வைந்து மலநீக்கம் பெற்றால் திருவருளைப் பெறலாம். இப்பாசங்களுடைய சேர்க்கையை விட்டு சிவனுடன் கலந்து முக்தியை ஆன்மா அடைகிறான் என்பது ஞானபாதத்தின் சாரமாகும்.

கிரியாபாதம் – மந்த்ரம், கிரியை, பாவனை என்று மூன்று பிரிவையுடையது. மந்த்ரம் அன்றி கிரியை கிடையாது. மந்த்ரம் என்பது எல்லாவற்றையும் அறிவதாக இருந்து சரீரத்தைக் காப்பதால் மந்த்ரம் எனப் பெயர் பெற்றது. மந்திரங்களுள் ப்ராஸாத மந்த்ரம் முக்கியமாகும்.

ப்ராஸாதம் யோ ந ஜாநாதி ஸ கதம் பூஜயேச்சிவம்/

– ஸ்ரீமத் காமிகாகமம்.

ப்ராஸாத மந்திரத்தையறியாதவன் எவ்வாறு சிவனைப் பூஜிப்பான் என்று காமிகாகமம் கூறுகிறது. சிவனுக்குரிய முக்கிய மந்திரம் ப்ராஸாத மந்திரம். யானை பெரியதாக இருப்பினும் மாவுத்தனிடம் அடங்கி இருப்பது போல் மந்த்ரவானான ஆசாரியனிடத்தில் இறைவன் கட்டுப்பட்டு விளங்குகிறார்.

அத்தகைய ப்ராஸாத மந்த்ரம் சுத்தம், மூலம், தத்துவம், ஆதி, ஆத்மா என்று ஐந்து பேதமுடையது. குருவின் உபதேசத்தினால் அறியத்தக்கது. இதுபோலவே ஸம்ஹிதாமந்த்ரம், பஞ்சாக்ஷரமந்த்ரம், அஸ்திரமந்த்ரங்கள், சக்திமந்த்ரம், விநாயகமந்த்ரம் முதலிய மந்த்ரங்களின் லக்ஷணம், உத்தாரம், ப்ரயோகம், புரச்சரணை முதலியவை விஸ்தாரமாகக் கூறப்பட்டு விளங்குகிறது.

மக்கள் ஆன்மநலம் கருதி தினம் தினம் செய்ய வேண்டிய முறைகளும் கூறப்படுகிறது. அதாவது தினம் கதிரவன் உதயத்திற்கு ஐந்து நாழிகைமுன் துயிலெழுந்து இறைவனை தியானிக்க வேண்டும். பிறகு,

விஹித ஸதிய–ஹஸ்த–ஸ்நாந ஸந்யா வ்ரணாஶாஃ
க்ருத நிகரவ–ஊஜா வஞ்யஷிம் வியாய ।
வியிவநிஹ யஜதெ தீக்ஷிதா யெ நராஸ்தாம்
நிரதி ச ஶிவ தெஹொ பாஹ்யஹீநாம் விமுக்திஃ ॥

– பஞ்சாவரணஅகோரசிவாச்சாரியார்.

தீக்ஷைபெற்று ஜலஸ்னானம், பஸ்மஸ்னானம், ஸந்தியானுஷ்டானம், ஸூர்ய–உபாஸனம், பஞ்சசுத்தியுடன் சிவபூஜை முதலியவைகளைச் செய்யவேண்டும். இவ்வாறு செய்பவர்களுக்கு பந்தமற்ற முக்தியை இறைவன் அளிக்கிறான். தீக்ஷை என்பது சைவர்களுக்கு முக்கியம். தீக்ஷை பெற்றால்தான் சிவபூஜை செய்வதாலாகும் பயன் உண்டாகும். சிவபூஜை செய்யாதவர்கள் ஜன்மம் வீண்.

யிஶ் ஹஸ்த ரஹிதம் வாலம் யிஷ்லாஶ்ஃ சுஶிவாலயஃ ।
யிஶ் சுபீஶாஉபூநம் ஜநு யிஷ்விஹ்யாஃ சுஶிவாஶ்ரயாஃ ॥

– ஸகலாகம ஸார ஸங்க்ரஹம்.

நீறு இல்லாத நெற்றி பாழ், சிவாலயமில்லாத ஊர் பாழ், சிவபூஜை செய்யாத ஜன்மம் பாழ், சிவனைக் கூறாத கல்வி பாழ் என்று கூறப்படுகிறது. ஆதலால் சிவபூஜைக்கு சிவதீக்ஷை முக்கியமாகும்.

தீக்ஷை என்பது ஹௌத்ரீ அஹௌத்ரீ என இருவகைப்படும். ஹோமத்துடன் கூடியது ஹௌத்ரி தீக்ஷை.

ஹோமம் இல்லாமல் செய்யப்படுவது அஹௌத்ரீ தீக்ஷையாகும். இவ்விரண்டும் தனித்தனி மூன்று விதமாகும். சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிர்வாண தீக்ஷை என மூவகைப்படும்.

ஸமயதீக்ஷையானது மந்ததர பக்குவமுடையார்க்கு அதற்கு அனுகூலமாக மந்ததர சத்திநிபாதத்தை அனுசரித்துச் செய்யும் தீக்ஷை.

விசேஷதீக்ஷையாவது மந்தபக்குவமுடையார்க்கு அதற்கு அனுகூலமாக மந்த–சக்திநிபாதத்தை அனுசரித்துச் செய்யும் தீக்ஷை.

ஸமயதீக்ஷை பெற்றோர் மந்த்ரங்களுக்கு யோக்யர். விசேஷதீக்ஷை பெற்றோர் மந்திரம் சிவபூஜை யோகம் என்னும் மூன்றுக்கும் யோக்யர். சமயம், விசேஷம் இரண்டும் நிர்வாணதீக்ஷைக்கு அங்கமாயும் ஸ்வதந்திரமாயும் செய்யப்படும். சமயதீக்ஷை பெற்றவன் சமயீ என்றும், விசேஷதீக்ஷை பெற்றவன் புத்ரகன் என்றும் கூறப்படுவான்.

நிர்வாணதீக்ஷையாவது பாசபந்தம் அனைத்தையும் நீக்கிச் சிவபெருமானுடைய திருவடியை அடையும்படிச் செய்யும் தீக்ஷையாம். அதுவும் ஸத்யோநிர்வாணம் அஸத்யோநிர்வாணம் என இருவகைப்படும்.

சத்தியோநிர்வாணமாவது தீக்ஷை செய்த அப்பொழுதே முக்தியைத் தருவது. அஸத்யோநிர்வாணமாவது பிராரப்ததேஹம் ஒழிந்த பின்னர் முக்தியைத்தருவது. தீவிர பக்குவருக்கு அஸத்யோ நிர்வாண தீக்ஷையும், தீவிரதர பக்குவருக்குச் ஸத்யோ நிர்வாண தீக்ஷையும் செய்யப்படும்.

நிர்வாணதீக்ஷை மேலும் ஸாதாரதீக்ஷை, நிராதார தீக்ஷை என இருவகைப்படும்.

சகலவர்க்கத்து உயிர்களுக்கு மலபரிபாகம் மந்தம், மந்ததரம் முதலியனவாகப் பலவகைப்படுதலின் அவற்றிற்கேற்ப ஆசிரியன் அம்மலத்தைக் கெடும்படிச் செய்யும் சாதாரதீக்ஷையும் இருவகைப்படும்.

அவற்றுள் திருவருள் நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம், முன் கூறப்பட்ட ஹௌத்ரீ என ஏழு விதம். ஹௌத்ரி தீக்ஷைக்கு உரியதல்லாதவர்க்கு அந்த ஆறு தீக்ஷை மட்டும் செய்யவேண்டும். அந்த ஹௌளத்ரியும் ஞானவதி, கிரியாவதி என இருதிறப்படும். லக்ஷணமான குண்டம், மண்டலம், அக்னி, ஸ்ருக்ஸ்ருவம் முதலிய அனைத்தும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு ஆஹுதி முதலிய கிரியையை விதிப்படி அகத்தே செய்வது ஞானவதியாம். அவ்வனைத்தையும் புறத்தே அமைத்துக்கொண்டு அக்கிரியையைப் புறம்பே செய்வது கிரியாவதி எனப்படும்.

இவ்விருவகைப்பட்ட ஹௌத்திரி தீக்ஷையும் ஞானத்தில் நிர்பீஜம், ஞானத்தில் ஸபீஜம், கிரியையில் நிர்பீஜம், க்ரியையில் ஸபீஜம் என நால்வகைப்படும்.

மேற்கூறிய நிர்பீஜம் ஸபீஜம் என்னும் இரண்டனுள் நிர்பீஜதீக்ஷையாவது மலபரிபாகம் உடையவராயும், சமயாசாரம் அனுஷ்டிக்கும் ஆற்றலும், கர்மத்தை அனுஷ்டிக்கும் அறிவும் இல்லாதவராகிய பாலரும், அறிவில்லாதவரும், வயதில் முதிர்ந்தவரும், மாதரும், போகானுபவம் மிகுதியுடையவரும், நோயினை உடையவருமாகிய இவர் முதலாயினோர்க்குச் செய்யப்படுவதாம். ஸபீஜதீக்ஷையானது மலபரிபாகத்தோடு கூட கற்றறிந்து ஒழுக்கவழியில் வழுவாது நிற்கும் ஆற்றல் மிக்குடைய உத்தமத்தில் உத்தமர்க்குச் செய்யப்படுவதாம்.

இத்தீக்ஷையால் ஆசாரியர் அத்வசுத்தி செய்து, சீடனது மலத்தை நீக்கி ஞானத்தைக் கொடுத்துப் பிறவியை ஒழிப்பர்.

அத்வசுத்தியாவது ஆறு அத்வாக்களிலும் சஞ்சிதமாயிருந்த கன்மங்களையெல்லாம் நசிப்பித்தல். கன்மம் நசியவே மாயையும் நீங்கும். ஆணவமலத்தின் தடையுமொழியும்.

அத்வசுத்தி செய்வது எப்படி எனில் மந்த்ராங்கள், பதங்கள், வர்ணங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் என்னும் அறுவகை அத்வாக்களுள் மந்த்ரம் பதத்திலும், பதம் வர்ணத்திலும், வர்ணம் புவனத்திலும், புவனம் தத்வத்திலும், தத்வம் கலையிலும் அடங்க ஒடுக்கிக் கலையை திரோதான சக்தியிலும், திரோதான சக்தியை சிவத்திலும் ஒடுக்குவதாம்.

இந்த ஆறு அத்வாக்களுள் மந்த்ராங்கள், பதங்கள், வர்ணங்கள் மூன்றும் சொற்பிரபஞ்சம் எனப்படும். புவனங்கள், தத்வங்கள், கலைகள் மூன்றும் பொருட் பிரபஞ்சம் எனப்படும். இவற்றுள் புவனங்கள் தத்துவங்களைப் பற்றி நிற்கும். தத்துவங்கள் கலைகளைப் பற்றி நிற்கும். மந்த்ராங்கள், பதங்கள், வர்ணங்கள் என்னும் மூன்றும் புவனங்களில் தோன்றிய சரீரங்களைப்பற்றி நிற்கும்.

அன்றி மந்த்ரம், பதம், வர்ணம் மூன்றும் சுத்தமாயா காரியம். ஆதலால் சுத்தாத்வா எனப்படும்.

தத்வம் சுத்தமாயை, அசுத்தமாயை, ப்ரக்ருதிமாயைகளின் காரியமாதலால் சுத்தாத்வா, மிச்ராத்வா, அசுத்தாத்வா எனப்படும்.

இவ்வாறு அத்வாக்களை அறிந்து முறைப்படி தீக்ஷை பெற்றால் முக்தியை அடைய ஹேதுவாகும் என்று க்ரியாபாதம் கூறுகிறது.

மற்றும் ஆன்மாக்களுக்குத் தனு–கரண–புவன–போகங்களை அளிக்க சிவலிங்கம் முதலிய அருட்திருமேனி கொண்டு விளங்கும் இடம் சிவாலயம்.

அந்த சிவாலயத்தின்கண் விளங்கும் சிவலிங்கம் ஸ்தாவரம், ஜங்கமம் என இருவகைப்படும்.

இவ்விருலிங்கமும் சைலஜம், ரத்நஜம், லோஹஜம், தாருஜம், ம்ருண்மயம், க்ஷணிகம் என ஆறுவிதம்.

அதில் சைலஜலிங்கமெனில் ஸ்வாயம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷம், ராக்ஷஸம், பாணலிங்கம் என ஏழுவிதம்.

ரத்னஜலிங்கம் ஒன்பதுவகை. லோஹஜலிங்கம் எட்டுவகை. தாருலிங்கம் பன்னிரண்டுவகை. ம்ருண்மயலிங்கம் வர்ணபேதத்தினால் மூவகை. க்ஷணிகம் பன்னிரண்டு விதம் எனக்கூறுகிறது.

𑌸𑍈𑌕𑌤𑌂 𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑌂 𑌚𑌾𑌨𑍍𑌨𑌂 𑌨𑌦𑍀𑌜𑌮𑍍 𑌗𑍋𑌮𑌯𑌂 𑌤𑌥𑌾 ।
𑌨𑌵𑌨𑍀𑌤𑌞𑍍𑌚 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌭𑌸𑍍𑌮–𑌚𑌨𑍍𑌦𑌨–𑌕𑍂𑌰𑍍𑌚𑌕𑌮𑍍॥
𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌾𑌲𑌾 𑌗𑍁𑌡𑌞𑍍𑌚𑍈𑌵 𑌕𑍍𑌷𑌣𑌿𑌕𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

– ஸ்ரீமத் காரணாகமம்

மணல், அரிசி, அன்னம், ஆற்றுமண், கோமயம், வெண்ணெய், ருத்ராக்ஷம், விபூதி, சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, வெல்லம் என்று க்ஷணிகலிங்கம் பன்னிரண்டாம்.

இத்தகைய லிங்கங்களில் நிஷ்கள–வடிவுடையவராக விளங்கும் இறைவன் தியானம் பூஜை முதலியன செய்ய

வேண்டியதன் பொருட்டு சகளமூர்த்தியாகவும், சகளநிஷ்கள மூர்த்தியாகவும் காட்சியளிக்கிறான்.

சிவன் நிஷ்களன்; முகலிங்கமூர்த்தி சகளநிஷ்களமூர்த்தி; சந்திரசேகரர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகள் சகள மூர்த்திகளாம். அதாவது சந்திரசேகரர், உமாமஹேசர், விருஷபாரூடர், நடராஜர், கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமதஹனர், யமசங்காரி, திரிபுரசங்காரி, ஜலந்தரவதர், கஜாரி, வீரபத்ரர், ஹர்யர்த்தர், அர்த்தநாரீசர், கிராதர், கங்காளமூர்த்தி, சண்டேசானுக்ரஹர், விஷாபஹரணர், சக்ரப்ரதானர், விக்னப்ரசாதர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர் என்ற இருபத்தைந்து மூர்த்திகளாவார்கள்.

இத்தகைய லிங்கங்களுக்கு அளவு பயன் யாவும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. பொதுவாக வீடுகளில் பன்னிரண்டு அங்குலத்திற்கு மேற்பட்ட இலிங்கத்தை வைத்துப் பூஜிக்கக்கூடாது.

பூஜை என்பது ஆத்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும்.

தனது ஆன்மநலனைக் குறித்துத் தன்னாலேயே செய்யப்படும் பூஜை ஆத்மார்த்த பூஜை.

ஆலயத்தில் ஆதிசைவர்களைக் கொண்டு உலக க்ஷேமத்தின் பொருட்டு செய்யப்படும் பூஜை பரார்த்தபூஜை.

இவ்விரு பூஜைகளும் நித்தியம், நைமித்திகம், காம்யம் என மூன்றுவிதம்.

தினம் தினம் செய்யப்படும் உஷ:கால பூஜை முதலிய பூஜைகள் நித்தியபூஜை எனப்படும்.

ஜீர்ணோத்தாரணம், அஷ்டபந்தனம், கும்பாபிஷேகம், உத்ஸவம், ப்ராயச்சித்தம், க்ரஹண பூஜை முதலியன நைமித்திக பூஜை எனப்படும்.

தனது இஷ்டசித்தியின் பொருட்டு செய்யப்படும் ஜன்ம நக்ஷத்திர காலபூஜை முதலியன காம்யமாகும். இவைகளின் முறைகள் யாவும் விஸ்தாரமாக ஆகமங்களில் நன்கு கூறப்படுகின்றன.

மனிதனுக்கு ஆலய தரிசனம் மிகவும் முக்கியம். இதைத் திருநாவுக்கரசர்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருக்காலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ என்னிற்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ்
செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

சிவபஞ்சாக்ஷரம், சிவநாம கீர்த்தனம், சிவாலய தரிசனம், சிவபூஜை முதலியவை மக்களுக்கு இன்றியமையாதன. ஆதலால் இவைகளை முறையோடு செய்யவேண்டும்.

சிவதரிசனம் செய்ய ஆலயத்திற்குச் செல்பவர்கள் கவனிக்க வேண்டிய தோஷங்களும் கூறப்படுகின்றன.

அதாவது, தண்டாகாரமாக ஒரு தடவை நமஸ்காரம் செய்தல் தோஷம். இது போல் ஒரு பிரதக்ஷிணம் செய்தல், எச்சில் உமிழ்தல்,

சூதகத்துடன் ஆலயத்திற்குச் செல்லுதல், ஆலயத்துள் இருக்கும் மூர்த்திகளுக்குத் தனித்தனியாக நமஸ்கரித்தல், ஆலயத்தில் கால் அலம்புதல், ஆலயத்துள் கட்டிலில் உட்காருதல், படுத்துக் கொள்ளுதல், உணவு அருந்துதல், பொய் பேசுதல், சிரித்தல், விதண்டை பேசுதல், அழுதல், ஒருவருக்கொருவர் தழுவுதல், அடித்தல், வாழ்த்தல், இச்சையுடன் பெண்களுடன் பேசுதல், கம்பளியைப் போற்றிக் கொள்ளுதல், பிறரை நிந்தித்தல், நந்திக்கும் சங்கரருக்கும் நடுவில்போதல், தலையை ஆற்றுதல், இறைவனுக்கு நிவேதனம் செய்யாமல் சாப்பிடுதல், சோமசூத்திரத்தைத் தாண்டுதல், குரு நிந்தை செய்தல், தாம்பூலம் போடுதல், அப்யங்கம் செய்து கொள்ளுதல், மலஜலம் கழித்தல் என்ற காரியங்களை அறவே ஒழிக்கவேண்டும். திரை போட்டிருக்கும் போது சுவாமி தரிசனம் செய்யக்கூடாது.

> சுஹிஷெகெ ச நெெவெஜ்ஜ ஷொாவுசாரெ தமெதவ ச ।
> வுூக்ஷிணநமஸ்லாரம் ஜவும் யூாநம் ச வஜூயெசு ॥

அபிஷேககாலத்திலும், நைவேத்தியகாலத்திலும், அப்படியே உபசாரகாலத்திலும் பிரதக்ஷிணம், நமஸ்காரம், ஜபம், தியானம் இவைகளைச் செய்யக்கூடாது. சரீரத்தைப் போற்றிக்கொண்டு நமஸ்காரம் செய்தால் ஏழு ஜன்மாவிற்குப் பொருளற்றவனாக ஆகிறான்.

புஷ்பத்தை எதிரில் போட்டு ஸாஷ்டாங்கமாகவோ பஞ்சாங்கமாகவோ நமஸ்காரம் செய்யவேண்டும். பூர்ண கர்ப்பிணியானவள் எண்ணெய் நிறைந்த குடத்தை எடுத்துக் கொண்டு எப்படி நடப்பாளோ அவ்வாறு மெதுவாக மௌனமாக பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

ஶூஜயா விஸூரம் ராஜ்ய ஐஶ்வர்யம் ஹோமேந ஸம்பத: ।
ஜபேந பாபஸம்ஶுத்திம் ஜ்ஞாநம் த்யாநேந சாப்நுதே ॥
கிந்து தேஹாவஸாநந்து ய: பூஜயதி பக்தித: ।
ஸஶிவ: ஸது யஜ்வா ஜீவந்முக்த ஸ உச்யதே ॥

– ஸ்ரீமந் ம்ருகேந்திராகமம்

பூஜையால் விஸ்தாரராஜ்யத்தையும், ஹோமத்தினால் ஐச்வரியத்தையும், ஜபத்தினால் பாபசுத்தியையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான். சரீரமுள்ளவரையில் யாதொருவன் பக்தியுடன் சிவபூசை செய்கிறானோ அவனே சிவன். அவனே யாகசீலன். அவனே ஜீவன் முக்தனாகிறான் என்று ம்ருகேந்திரம் என்ற ஆகமம் கூறுகிறது. இதுபோன்ற விஸ்தாரமாகப் பல விஷயங்கள் கிரியாபாதத்தினால் அறியப்படுகிறது.

யோகபாதம்: அஹிம்சை, சத்யம், திருடாமை, ப்ரஹ்மசரியம், தயை, நேர்மை, பொறுமை, தைரியம், மித ஆகாரம், ஆசாரம் என்ற யமத்தின் லக்ஷணம்; தவம், சந்தோஷம், ஆஸ்திகத் தன்மை, தானம், தேவபூஜை, சித்தாந்தம் கேட்டல், லஜ்ஜை, புத்தி, ஜபம், ஹோமம் என்ற நியமங்களின் லக்ஷணம் மற்றும் பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி இவைகளின் லக்ஷணம் முதலியவைகளைக் கூறுகிறது.

சரியாபாதம் ப்ரபஞ்சலக்ஷணம் கூறுமிடத்தில் ஜலத்தில் உண்டாகும் பிராணிகள் ஒன்பது லக்ஷம். ஸ்தாவரங்கள் இருபது லக்ஷம். புழுக்கள் பதினோரு லக்ஷம், பறவைகள் முப்பது லக்ஷம், பசுக்கள் பத்து லக்ஷம், மனுஷ்யர் நான்கு லக்ஷம் ஆக எண்பத்தி நான்கு லக்ஷம் ஜீவராசிகள் என்று கூறி அவைகளின் லக்ஷணங்களையும் கூறுகிறது.

வேதம் சிவாகமம் இரண்டும் கடல் போன்றது. இறைவன் தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற நான்கு முகத்தினின்றும் ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்ற நான்குவேதங்களையும் கூறி, ஈசானமுகத்தினால் காமிகம் முதலிய ஆகமங்களைக் கூறினார்.

வேதம் மூன்று வர்ணத்தாருக்கும், சிவாகமம் நான்கு வர்ணத்தவருக்கும் உரியது என்றும் கூறப்படுகிறது.

ஜொகாஸ்ஸஃஸ்தாஸ்ஸுவிநொ ஹவஜு ॥



சிவாகமத் தெளிவு

விநாயகர் துதி

வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மை விளக்கம் உரைசெய்யத் – திண்மதம்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற்று ஐங்கரனைப்
பந்தம் அறப் புந்தியுள் வைப்பாம்.

1. ஆகமச் சிறப்பு

உலகத்திலுள்ள மக்கள் யாவராலும், 'துக்கநீக்கம் சுகப் பிராப்தி' என்ற இரண்டும் விரும்பப்படுகின்றன. இவ்விரண்டையும் ஒரு இடத்திலிருந்தே பெறவேண்டுமாயின், சிவ உபாசனையால்–தான் பெறமுடியும்.

"இம்மை யே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மை யே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே."

– சுந்தரர்

சிவ உபாசனையே இவ்வுலகத்தில் சுகானுபவத்திற்கு வேண்டிய அன்னம், உடை அளிப்பதுடன் இடரை நீக்கி, முடிவில் சிவலோகத்தையும் அடைவிக்கும். ஆதலால் போகம் மோக்ஷம் இரண்டையும் பெற சிவ உபாசனையே மிகவும் சிறந்தது.

𑌯𑍇 𑌵𑌾𑌞𑍍𑌛𑌯𑌾 𑌶𑍁𑌭 𑌭𑍁𑌵𑌨𑍋𑌤𑍍𑌥 𑌭𑍋𑌗-𑌕𑌾𑌮𑌾𑌃
𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌧𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍𑌯𑌜𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑌾𑌯𑌕𑍇𑌷𑍁𑌃
𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌦𑌦𑌾𑌸𑌿 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑍍 ॥

இதனால் சுத்த புவன போகங்களில் விருப்பம் உடையவர்களாய், சிவாராதனம் செய்பவர்களுக்குச் சிவன் முதலில் இம்மையில் உள்ள புவனபோகங்களை அளித்துப் பிறகு மறுமையிலும் முக்தி அளிக்கிறார் என்பது அறியப்படுகிறது.

"குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாம் கடவூரின் மயானத்தார்
பழைய தம் அடியார் செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமான் அடிகளே"

– அப்பர்

சிவபெருமான் தம்முடைய அடியார் செய்த பாவமும் பிழையும் போக்குவார் என்று அப்பர் பெருமானும் கூறியுள்ளார். அடியார்க்கு எளியனான சிவபெருமானைப் பூஜிப்பவர்கள், இம்மை மறுமைப் பயன்களை அடைகின்றார்கள். அத்தகைய சிவார்ச்சனையைப் புரிய அவ்விறைவனே ஆகமத்தை விளம்பினார்.

"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந்து அருளித்
துள்ளுவார்புனல் வேணியார் அருள் செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெளிய
உள்ள வாறு கேட்டருளினாள் உலகை ஆளுடையாள்"

–பெரியபுராணம்.

வெள்ளியங்கிரியில் வீற்றிருப்பவரும் கங்கையைத் தரித்தவருமான சிவபெருமானின் திருவாக்கினின்றும் வெளிவந்த சிவாகமத்தை உமாதேவி கேட்டருளினாள்.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத் தருள
அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து "

–பெரியபுராணம்.

எண்ணிறந்த ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளிய இறைவனுக்கு விருப்பமுள்ளது பூஜை. ஆதலால் அந்தப் பூஜையைச்

செய்து அவருடைய அருளைப் பெறவேண்டும் என்று தேவியே விரும்பினாள். ஆகவே, சிவபூஜையால் சிவானுக்ரஹம் பெற வேண்டும். அந்த சிவபூஜை சிவாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்தச் சிவாகமங்கள் இறைவனாலேயே திருவாய் மலர்ந்து அருளப்பட்டன.

"கிரியையென மருவும் அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும்"

– சிவப்பிரகாசம்.

என்றபடி சிவாகம முறைப்படி செய்யப்படும் கிரியைகள் யாவும் தத்துவஞானத்தின் அடிப்படையில் அமைந்திருத்தலால், சிவாகமக் கிரியைகள் சிறப்புடையன.

சிவபெருமானை வழிபடும் முறைகள், 'கர்மயாகம், தவயாகம், ஜபயாகம், தியானயாகம், ஞானயாகம்' என ஐவகைப்படும். அவற்றுள் கர்மயாகம் சிவபூஜையைச் சிவசிந்தனை முதல் அக்னி காரியம் ஈறாகச் செய்யுஞ் செயல்களாம். தவயாகமாவது சாந்திராயண விரதம் முதலியவற்றால் காயக்லேசம் செய்தல். ஜபயாகமாவது மந்திரங்களை, வாசகம், ரஹஸ்யம், மானஸம் என்னும் முறையில் ஜபித்தல். தியானயாகமாவது, இருதயம் முதலிய ஸ்தானங்களில் சதாசிவன் முதலிய திருமேனிகளைத் தியானிப்பது.

இவ்வழிபாடுகளெல்லாம் கிரியை பொருந்தினவாயும், ஞானமுண்டாவதற்குக் காரணமாயும் இருக்கும்.

'தத்துவம், மூர்த்தி, பிரபாவம்' என்ற மூன்றுவகையாலும் இறைவனை அறிந்து வழிபட்டு உய்யத் தத்துவஞானம் சிறந்தது. அந்தத் தத்துவஞானத்தினால் அறியப்படுவது,

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

– திருமந்திரம்.

என்ற வாக்கின்படி சிவன் மிக்காரும் ஒப்பாரும் இல்லாதவன் என்றும், "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" [திருவாசகம்] என்ற வாக்கின்படி ஆகமவடிவமாக இறைவன் இருக்கின்றான் என்றும் புலனாவதால், ஆகமமுறையினால் செய்யப்படும் பூஜை சிறந்தது. வேதத்தில் கர்ம காண்டத்தில், 'சிவார்ச்சனை செய்க' என்று கூறி, அதனைச் செய்யும் முறையை அங்குக் கூறாமையாலும், வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிஷதங்கள், பல கடவுட்கும் பரத்துவம் கூறதலாலும், சிவன் ஒருவன்தான் பரமன் என்றும், அவனுடைய பூஜையினால்தான் யாவற்றையும் அடையமுடியும் என்றும் வரையறுத்து, அவனைப் பூஜிக்கும் மார்க்கங்களையும் விரிவாகக் கூறுவதால் சிவாகமம் சிறந்தது.

ஶிவ ஏகோ த்யேயஶ்ஶிவங்கரஃ ஸர்வமந்யத்பரித்யஜ்ய

ஸமாப்தா அதர்வஶிகா ।

– அதர்வசீர்ஷம்

'எல்லாவற்றையும் விட்டு சிவன் ஒருவனே தியானிக்கத் தக்கவன்' என்று அதர்வசிகை உபநிஷத் அறிவிக்கிறது.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர் மற் றைத் தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்குமேல் வினையும் செய்யும்
ஆதலால் இவை இலாதான் அறிந்தருள் செய்வன் அன்றே."

– சிவஞானசித்தியார்

'எவ்விடத்து யாதொரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டீராயினும் அவ்விடத்து அத்தெய்வத்தினிடமாகநின்று அவ்வழிபாட்டை அறிந்து உயிர்கட்குப் பலனைக் கூட்டுபவன்

சிவபெருமானே' என்பதால், விச்வாதிகனான சிவபிரான், எல்லோருக்கும் மேலானவன். ஆகவே அவனே முழுமுதற்கடவுள் என்றும், அவனுடைய பூஜையே மேன்மையான பலனளிக்க வல்லது என்றும் கூறுவதால் சிவாகமம் சாலச் சிறந்தது.

"வேதமொடாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உன்னுக
நாதன் உரை இவை நாடில் இரண்டந்தம்
பேதமதென்பர் பெரியோர்க்கு அபேதமே."

— திருமந்திரம்

வேதமும் ஆகமமும் இறைவனால் செய்யப்பட்ட முதல் நூல்கள். அவை பொது, சிறப்பு என நிற்கும். வேதாந்தம், ஆகமாந்தம் (சித்தாந்தம்) இவை இரண்டும் வேறுபோல் தோன்றினும், ஆராய்ந்து பார்க்கும் பெரியோர்களுக்கு அபேதமாகிவே விளங்கும்.

வெஉஸாஶஇஉம தஜ்ரம தஸ்ஸாவெெஉஇகுஶாசஙெகல் ।
வெஉாஜாயஒூஶயம ஜ்ஞாநம ஸிஉாஜம உாமம ஶுஹ ॥

'வேதத்தின் சாரமாய், வேதாந்தப் பொருளின் ஸ்வரூபமாய், ஞானமயமாயிருக்கும் காமிகம் முதலிய இந்தத் தந்திரம் சித்தாந்தம் எனப்படும். இதனில் சொன்னபடி வைதிக தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும்' என்று மகுடாகமம் கூறுகிறது. ஆகவே வேதாந்தம் சித்தாந்தம் என்று இரண்டு அந்தமுடையதான வேதமும் ஆகமமும் ஒன்றே. ஆயினும் வேதம் த்ரைவர்ணிக விஷயம் என்றும், ஆகமம் ஸர்வவர்ணவிஷயம் என்றும், வேதம் அபக்வாதிகாரி விஷயம் என்றும் சிவாகமம் பக்வாதிகாரி விஷயம் என்றும் கூறப்படுகிறது.

'நாமோ, வேத சிவாகமங்களுக்குப் பேதம் காண்கிலம்; வேதத்தின் கண்ணும் சிவாகமம் என்னும் பெயர் வழங்குவது

பொருத்தம்; அது சிவனைக் கர்த்தாவாக உடைமையால்' என்று ஸ்ரீ கண்டர் தமது பாஷ்யத்தில் கூறியிருப்பதையும் காண்க. மற்றும்,

"ஆரணநூல் பொது சைவம் அருஞ் சிறப்புநூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது"

என்று சிவஞானசித்தியாராலும் வேதம் பொது நூலும், சிவாகமம் சிறப்பு நூலுமாம்; வேதம் உலகருக்கும், சிவாகமம் சத்தி-நிபாதருக்குமாக அருளப்பட்டன என்று சொல்லப்பட்டு உள்ளது.

ஆகவே வேதத்தில் கூறாதொழிந்த பொருளையும், உபநிஷத்து உண்மைப் பொருளையும் இனிது விளக்குதலின், சிவாகமம் 'சித்தாந்தம்' என்னும் பெயரை உடையதாய், சிறப்புடையதாகின்றது.

வேதச் – சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதில் சரியை கிரியை யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்

– சித்தியார்

'வேதசிரஸாகிற உபநிஷதங்களின் பொருளை மிகவும் ஆராய்ந்து தெளிவுற்றுச் சோபானமுறையில் = படிமுறையில் மேலேறிச்சென்றால், சிவாகமநெறியாகிய சைவசித்தாந்தத்தைத் தலைப்படுவர். இதில் சரியை, கிரியை, யோகம் செலுத்தியபின் ஞானத்தைப் பெற்றுச் சிவபெருமானது திருவடிகளை அடைதலாகும் முத்திப்பேற்றைப் பெறுவர்' என்பது அருணந்தி சிவாசாரியரின் அருள்வாக்கு.

இத்தகைய பேரின்பம் சிலருக்குத்தான் கிட்டும் என்று குமரகுருபர சுவாமிகளும் பண்டார மும்மணிக்கோவையில் கூறுகிறார்.

" வேத மென்னும் பாதபம் வளர்த்தனை,
பாதப மதனிற் படுபயன் பலவே – அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே, இலையொரீ இத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே, தளிரொரீ இ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே,
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே "

வேதம் என்று ஒரு மரம்; அதனின்றும் அடையப்படும் பயன்கள் பல. அந்தப் பாதபத்தின் இலையைக் கொண்டே மகிழ்ந்தவர்கள் பலர்; தளிரைக்கொண்டு மகிழ்ந்தவர்கள் பலர். அரும்பு, மலர், பிஞ்சு, காய்களைக்கொண்டு மகிழ்ந்தவர்கள் பலர்; ஆனால் அதன் உச்சியிற் பழுத்த வேதாந்தமென்னும் குறையாத இன்பமுடைய அருமையான கனியின் சாரமாகிய சிவாகம சித்தாந்தத்தைப் பெற்றவர்கள் மிகச் சிலரே. இதுபோல்,

"வேதம் பசு, அதன்பால் மெய் ஆகமம், நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய், – போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்"

என்ற வெண்பா அறிவிக்கிறது.

வேதம் ஒரு பசு; அதன் பால் போன்றவை சிவாகமங்கள்; அந்தச் சிவாகமங்களின் உட்கருத்தை வெண்ணெய் போற் கடைந்தெடுத்தவை தேவாரம் முதலிய திருமுறைகள்;

அவ்வெண்ணெயின் சிவமணத்தை நன்கு உணர்த்துவன சிவஞானபோதம் முதலிய சித்தாந்த சாத்திரங்கள். எனவே சிவாகமப் பொருளைத்தான் தெளிவாகத் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சாத்திரங்களும் எடுத்துக் கூறுகின்றன என்று விளங்குவதாலும், தேவியின் பொருட்டு இறைவனால் கூறப்பட்ட முதல் நூல் ஆகையாலும், சிவாகமம் சிறந்தது.



ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி

தருமையாதீன வேத சிவாகம பாடசாலையின்
வெள்ளிவிழா மலராக வெளியிடப்பட்ட

வாமதேவ பத்ததி

நூலுக்கு எழுதிய முகவுரை

பரம–கருணாநிதியாயும், ஸர்வஜ்ஞத்வம் முதலிய குண விசிஷ்டராயும், ஸச்சிதாநந்தஸ்வரூபியாயுமுள்ள பரமசிவன் ஆன்மாக்களின்மேல் வைத்த பெருங்கருணையினால் நான்குவித புருஷார்த்தங்களையும் ஆன்மாக்கள் அடையும் பொருட்டு காமிகம் முதல் வாதுளம் ஈறாகவுள்ள இருபத்தெட்டு சிவாகமங்களையும் அருளினார். அவை மந்த்ரம், தந்த்ரம் ஸித்தாந்தம் என்பன. அவ்வாகமங்களுக்கு நரசிம்மம் முதல் விச்வான்மம் ஈறாகவுள்ள இருநூற்றேழு உபாகமங்கள் உள்ளன.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருஷார்த்தங்களை அடைய விரும்பும் ஆன்மாக்களுக்கு சிவவழிபாடு இன்றியமையாததாகும். அச்சிவவழிபாடு ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும். குருமுகமாக சிவதீக்ஷை பெற்று அவரவர் வர்ணாச்சிரமானுகுணமாய் க்ஷணிகம் முதலிய இலிங்கங்களில் செய்யப்படும் பூசை ஆன்மார்த்தமாகும். ஆலயங்களில் ஆதிசைவரைக்கொண்டு பூசிக்கச் செய்வது பரார்த்த பூசையாகும்.

பரார்த்த பூசைக்காகச் சிவாலயங்களில் சுயம்பு முதலிய இலிங்கங்களை ஸ்தாபித்தல் பிரதிஷ்டை எனப்படும். பிரதிஷ்டை செய்யவேண்டிய விதிகள் சில ஆகமங்களில் விரிவாகவும், சிலவற்றில் சுருக்கமாகவும் பற்பல இடங்களில் கூறப் பட்டிருக்கின்றன. பிரதிஷ்டைக்குரிய கிரியைகள் பல இடங்களிலிருந்தும் திரட்டப்பெற்று அதற்குரிய முறையில் பத்ததிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

பத்ததிகள் பதினெட்டு. அவற்றின் ஆசிரியர் உக்ரஜ்யோதி, ஸத்யோஜ்யோதி, ராமகண்டர், வித்யாகண்டர், நாராயணகண்டர், விபூதிகண்டர், ஸ்ரீகண்டர், நீலகண்டர், ஸோமசம்பு, ஈசானசம்பு, ஹ்ருதயசிவன், ப்ரஹ்மசம்பு, வைராக்யசிவன், ஞானசம்பு, த்ரிலோசனசிவன், வருணசிவன், ஈச்வரசிவன், அகோரசிவன் என சைவபூஷணம் கூறும்.

மற்றும் துர்வாஸர், பிங்களர், உக்ரஜ்யோதி, ஸுபோதர், ஸ்ரீகண்டர், விஷ்ணுகண்டர், வித்யாகண்டர், ராமகண்டர், ஞான சிவன், ஞானசங்கரர், ஸோமசம்பு, ப்ரஹ்மசம்பு, த்ரிலோசன சிவன், அகோரசிவன், ப்ராஸாதசிவன், ராமநாதசிவன், ஈசானசிவன், வருணசிவன் என்று வேறுவகையாகவும் பத்ததி ஆசிரியர்கள் கூறப்படுகின்றனர்.

இன்னும் ஸர்வாத்மசிவாசாரியர், சர்வேசபண்டித சிவாசாரியர், வியாபகசிவாசாரியர், வியோமசிவாசாரியர், உத்துங்க சிவாசாரியர், வாமதேவசிவாசாரியர் முதலியவர்களும் பத்ததி ஆசாரியர்களாகக் கூறப்படுகின்றனர்.

வாமதேவசிவாசாரியாரால் இயற்றப்பட்ட வாமதேவ பத்ததியில் பிரதிஷ்டைகளின் பேதம், அதற்குரிய கிரியைகள், அக்கிரியைகள் செய்யவேண்டிய முறைகள், அஷ்டபந்தனத்தின் பக்வ–அபக்வ பேதங்கள், ஸ்வர்ணாதிபந்தனங்கள் முதலியன விரிவாகவும் தெளிவாகவும் உள்ளன. மேலும் பஞ்சபந்தனம், த்ரிபந்தனம் இவற்றையும் இவற்றின் பேதங்களையும் உணர்த்துகிறார்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய வாமதேவபத்ததி தருமையாதீனம் 25–வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ–ல–ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அவர்களின் ஆஜ்ஞைப்படி தருமையாதீனம் வேத சிவாகம பாடசாலை வெள்ளிவிழா ஞாபகார்த்த வெளியீடாக வருகிறது. இந்த நூல் வித்யார்த்திகளுக்கு மிகவும் பயன்படக்கூடியது.

இதை வெளியிடத் திருவுளம்பாலித்த ஸ்ரீ–ல–ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் மாணவர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்பதிப்பிக்க உறுதுணையாக இருந்து உதவிய வேதாந்த சிரோமணி ப்ரஹ்மஸ்ரீ K. ராஜகோபால சாஸ்த்ரிகளுக்கு எனது நன்றி உரியது.

இப்படிக்கு

தருமபுரம் — சிவாகம வித்துவான்

08-03-68 — S. சுவாமிநாத சிவாசாரியர்

தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை

உ
சிவமயம்

ஸ்ரீ–ல–ஸ்ரீ ஆனந்த பரவச தேசிகரின்
கர ஆண்டு குருபூஜை மலராக வெளியிடப்பட்ட
நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹம்
நூலுக்கு எழுதிய முகவுரை

ஸ்ரீமத் அகண்டாகார நித்திய வியாபக ஸச்சிதானந்த ஸ்வரூப சுத்த ஷாட்குண்ய பரிபூரண பரமபதியாகிய பரமசிவன் ஆன்மாக்களின் பொருட்டுப் பெருங்கருணையால் பிரதம சிருஷ்டி காலத்தில் அருளிச்செய்த முதனூல்கள் வேதம் சிவாகமம் என்னும் இரண்டு.

அவற்றுள் வேதம் நாநார்த்தபோதகமாய் உலகர்களுக் கெல்லாம் உபயோகியாகிய பொதுநூலென்றும், சிவாகமம் சிவ தத்வார்த்தைக போதகமாய்ச் சத்திநிபாதம் வந்த உத்தமர்களுக்கு உபயோகியாகிய சிறப்புநூலென்றும் வழங்கப்படும்.

அது காமிகம் முதல் வாதுளமீறாக இருபத்தெட்டாம். அதனுள் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், ஸுப்ரபேதம் என்ற பத்து ஆகமங்கள் சிவபேதம் எனவும், விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அநலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம், ப்ரோத்கீதம், லலிதம், ஸித்தம், ஸந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற பதினெட்டும் ருத்திரபேதம் எனவும் கூறப்படும். இவைகளின் உபாகமங்கள் இருநூற்றேழாம்.

ஆகமங்கள் தனித்தனியே ஞானபாதம், கிரியாபாதம், யோகபாதம், சரியாபாதம் என நான்கு பாதங்களை உடையனவாய் அனேககோடி கிரந்தங்களை உடையனவாய் மிக விஸ்தாரமாக உள்ளன.

அதனுள் கிரியாபாதத்தில் கர்ஷணம், பிரதிஷ்டை உற்சவம், பிராயச்சித்தம் முதலிய கிரியைகள் கூறப்படுகின்றன. மற்றும் முத்திரை, மண்டலம், ஆன்மார்த்த–பரார்த்தபூஜை முறை ஆகியவைகளும் கூறப்படுகின்றன.

ஆன்மாக்களுக்கு இடர்களைந்து இம்மை மறுமைப் பயன்களைத் தருவது சிவபூஜையாகும். அது ஆன்மார்த்தபூஜை, பரார்த்தபூஜை என இருவகைப்படும்.

ஆலயங்களில் ஸ்வாயம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷகம், ராக்ஷஸம், பாணம் என ஏழுவகைத் தோற்றத்தோடு காட்சியளிக்கும் சிவபெருமானை முறைப்படி, மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்திலுதித்த ஆதிசைவர் களைக் கொண்டு பூஜை செய்வித்தல் பரார்த்த பூஜை எனப்படும்.

ஆன்மார்த்த பூஜையோவெனில் அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கவாறு சமயம் விசேஷம் முதலிய சிவதீக்ஷை பெற்று, குருவால் அளிக்கப்பட்ட ஆன்மார்த்த இலிங்கத்தை வழுவாது பூஜித்தலாகும்.

அது சைலஜம், ரத்னஜம், லோஹஜம், தாருஜம், ம்ருண்மயம், க்ஷணிகம் என அறுவகைப்படும்.

உஊயபூஜெ ஸவூகஊூணி ஜாயதெ ஜூாநாதூநி I

ஸர்வகர்மாக்களைப் பூர்த்தி செய்வதாலும், ஞானத்தை அளிப்பதாலும் பூஜையெனப் பெயர் பெற்றது எனக் காரணாகமம் கூறுகிறது.

சிவலிங்கத்தைப் பூஜிப்பதால் எல்லா தேவர்களையும் பூஜித்ததாக ஆகும். அக்னிஹோத்திரம் முதலிய சகல கர்மாக்களையும் செய்ததாக ஆகும். ஸன்யாஸம் முதலிய சகல ஆச்ரமங்களை அடைந்த பலனும் அடையப்படும். அரி அயன் முதலிய தேவர்களும் சிவபூஜையினால் பெரும்பேற்றை அடைந்தார்கள்.

மோஹத்தினாலோ சோம்பலினாலோ சிவபூஜை செய்யாமல் உணவு உண்டால் பயங்கரமான நரகத்தை அடைவான் என்று கூறப்பட்டிருப்பதாலும், மிருகம், பறவை முதலியவைகளும் சிவபூஜை செய்து நற்கதி அடைந்திருப்பதாலும் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் முடிந்த அளவு சிவபூஜை செய்யவேண்டும்.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ !
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ !

என்பது ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரியார் அருளிச்செய்த சிவஞானசித்தியார் திருவிருத்தம்.

பூஜை நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகைப்படும். முதற்கூறிய நித்ய பூஜையும் நித்ய–நித்ய பூஜை, ஆகந்துக நித்யபூஜை என இரண்டு வகைப்படும்.

தினம் செய்யப்படும் பூஜை நித்ய–நித்யம் என்றும், அஷ்டமி, பிரதோஷம், அமாவாஸ்யா, விஷு, சங்கிரமண பூஜைகள் ஆகந்துக நித்யம் என்றும் அம்சுமானாகமம் கூறுகிறது.

இத்துணைச் சிறப்புவாய்ந்த சிவபூஜைக்கு முக்கியமான காலம், திரவியம், நியமனம் முதலியுவைகளைச் சுருக்கமாகக் கூறப்பட்டிருப்பதால் இந்நூலிற்கு 'நித்யபூஜா லக்ஷண ஸங்க்ரஹம்' என நாமகரணம் சூட்டப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் முற்கால பண்டிதர்களுக்குக் கீர்வாண அக்ஷரமும், தற்கால பண்டிதர்களுக்குத் தேவநாகரியுமே தெரிந்திருப்பதால் இருவருக்கும் பயன்படுமாறு இந்நூல் இருவகை எழுத்துக்களிலும் அச்சிடப்பெறுகிறது. தமிழிலும் வேண்டிய இடங்களில் மொழிபெயர்ப்பு தரப்பெற்றுள்ளது.

வேத–சிவாகம–தேவார–திருவாசக நூல்களை வெளியிட்டுத் தமிழுலகில் வைதிகசைவமும், தெய்வத்தமிழும் நிலைபெறத் தொண்டாற்றிவரும் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25–வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ–ல–ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இந்த நூலின் இன்றியமையாத் தன்மையைத் திருவுளம் கொண்டு, வெளியிட திருவுளம் பற்றினார்கள். அவ்வண்ணம் சிவஞானானுபூதிக் கருவூலமாகிய ஸ்ரீ–ல–ஸ்ரீ ஆனந்தபரவசமூர்த்திகளின் கர ஆண்டு குருபூஜை விழா அணிமலராக இந்நூல் வெளிவருகின்றது. அன்பர்கள் பெற்றுப் படித்துப் பழகிப் பயன்பெறுவார்களாக.

இங்ஙனம்,

தருமபுரம் — S. சுவாமிநாத சிவாசாரியர்

15–12–51 — தலைமை ஆசிரியர்,

தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலை.

சிவாகமமும் சிவாலயமும்

"ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினார் .

ஸ்ருஷ்டிகாலெ மஹேஶாநः புருஷார்த்த ப்ரஸித்தயெ ।
விமலம் விஶ்வம் ஜ்ஞாநம் பஞ்சஸ்ரோதோऽநிவக்ஷிதம் ॥

ஸ்ருஷ்டி காலத்தில் மஹேசானன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களின் பிரசித்தியின் பொருட்டு, தூய்மையும் ஐந்து பிரவாகத்தோடு கூடியதுமாகிய ஞானத்தைச் செய்கின்றார் என்று ம்ருகேந்த்ராகமம் கூறுகிறது .

இவ்வாறு மதங்கம் என்ற ஆகமமும் சிவன்பானின்று ஞானம் உளதாகின்றது. சிவனது முககமலத்திற்றோன்றுவதாகிய அது ஒன்றாயினும் அனேகத்துவத்தை அடைகின்றது என்று கூறுகிறது.

ஶிவாத் ஜ்ஞாநம் ப்ரவர்த்ததெ ।
தச்சைகமப்யநேகத்வம் ஶிவவக்த்ராப்ஜஸம்பவம் ॥

இறைவனுடைய திருமுகங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற ஐந்து முகங்களினின்றும் இருபத்து எட்டு ஆகமங்கள் உண்டாயின.

ஸத்யோஜாதம் என்ற மேற்கு முகத்தினின்றும் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்ற ஐந்து ஆகமங்களும், வாமதேவம் என்ற வடதிசை முகத்தினின்றும் தீப்தம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், ஸுப்ரபேதம் என்ற ஐந்து ஆகமங்களும், அகோரம் என்ற தென்திசை முகத்தினின்றும் விஜயம், நிச்வாஸம் ஸ்வாயம்புவம், அநிலம், வீரம் என்ற ஐந்து ஆகமங்களும், தத்புருஷம் என்ற கீழ்த்திசை முகத்தினின்றும் ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஜ்ஞானம், பிம்பம் என்ற ஐந்து ஆகமங்களும்,

ஈசானம் என்ற ஊர்த்துவதிசை முகத்தினின்றும் ப்ரோத்கீதம், லலிதம், ஸித்தம், ஸந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற எட்டு ஆகமங்களும் உண்டாயின.

இவ்வாறு தோன்றிய காமிகம் முதல் வாதுளமீறான இருபத்து எட்டு ஆகமங்களும் சிறப்பு நூல்கள் எனப்படும்.

"வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உன்னுக"

வேதம் ஆகமம் இரண்டும் இறைவனுடைய நூல். வேதம் பொது நூல் ஆகமம் சிறப்பு நூல் என்று திருமூலர் திருமந்திரத்தில் கூறியுள்ளார். அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியாரில்

வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அனாதி அமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொது சைவம் அரும் சிறப்புநூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீள்(ண்)மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதுஇல் பொருள் கொண்டுஉரைக்கும்நூல் சைவம்பிற நூல்
திகழ் பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்.

வேத ஆகமங்கள் இரண்டும் எல்லா நூல்களுக்கும் முதல்நூலாகி அனாதிமுத்தனாகிய இறைவனால் தரப்படும் நூலாம். ஏனைய நூல்களெல்லாம் இவ் வேதாகமங்களிரண்டினின்றும் விரிந்த நூல்களாகும். பரமகருணாநிதியான இறைவன் நீதிநெறியில் நிற்கும் உலகோரும், ஞானநெறியில் நிற்கும் உயர்ந்தோரும் ஆகிய இருவரும் உய்தற்பொருட்டு வேதத்தையும், ஞானநெறியில் நிற்போர் உய்தற்பொருட்டுச் சிவாகமத்தையும் அருளிச் செய்தனன்.

வேதம் உலகற்கும் ஞானாதிகாரிக்கும் உரித்தாதலின் பொதுவும், ஆகமம் ஞானாதிகாரிக்கே உரித்தாதலின் சிறப்புமாம்.

சிவாகமப் பொருட்டு வேறாய், வேதத்தின் பூர்வபக்ஷப் பொருள் பொருட்டுச் சொல்லும் நூல்களெல்லாம் பூர்வபக்ஷமெனச் சொல்லப்படும். வேதத்தின் முடிவான பொருளைச் சொல்லும் சிவாகமம் சித்தாந்தமெனப்படும் எனக் கூறுதலாலும் அறியப்படுகிறது.

ஆப்தோக்திரத்ர ஸித்தாந்த: ஶிவ ஆப்திமாந் யத: ।
ந தாப்யாம் ஸத்ருஶம் கிஞ்சித் ஶ்ரேயஸோऽஸ்தி விதாயக: ॥

ஆப்தனுடைய வாக்கியம் ஸித்தாந்தம். எதனால், ஆப்திமான் சிவன். இவ்விருவருக்கும் ஒத்ததாய்ச் சிரேயஸ்ஸைக் கொடுப்பதாகிய எப்பொருளுமில்லை என்று மூலாகமம் கூறுகிறது.

அந்தச் சைவாகமமும் வைதிகம் அவைதிகம் என இருதிறப்படும். சுருதிசாரமாயுள்ள வைதிக ஆகமமானது பத்தும் பதினெட்டுமாய்க் காமிகம் முதலிய பெயர்களோடு முடிந்த சித்தாந்தம் எனப் பெயர்பெறும். அவைதிக ஆகமமானது நூறு கோடி விரிவினை உடையதாகும். சுருதிஸாரமாகிய சுதந்திர சைவ ஆகமமானது சித்தாந்தம் எனப் பெயர் கொண்ட காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களேயாம் .

ஸித்தாந்தோ வேதஸாரத்வாத் அந்யோ வேதபஹிஷ்க்ருத: ।
ஸித்தாந்த விஹிதாசார: வைதிகாசார உச்யதே ॥

வேதசாரமாதலால் சித்தாந்தம். அது அல்லாதது வேதத்தினின்றும் புறம்பு. சித்தாந்தத்தில் விதிக்கப்பட்ட ஆசாரம் வைதிக ஆசாரம் என்று சொல்லப்படும்.

யஸ்மிந்தேஶே ஸ்திதோ தேஹீ ப்ராப்தோ தீக்ஷாம் ஶிவாதிகாம் ।
தஸ்மிந்நேவ ஸ்திதோ நித்யம் ஶிவயஜ்ஞ ஆசரயேத் ॥

ஆன்மாவானது எந்த வர்ணத்திலிருக்கிறதோ அதற்கேற்ப முறைப்படி சிவதீக்ஷை பெற்று அதன் விதிவழுவாது இருந்து கொண்டு சிவதர்மத்தைப் பரிபாலனம் செய்யவேண்டும் என்று மூலமாய்க் கூறுகிறது.

இத்தகைய சிவாகமமானது சரியை கிரியை யோகம் ஞானம் என ஒவ்வொன்றும் நான்குபாதங்களை உடையதாக விளங்குகிறது.

இல்லறம், துறவறம், வருணம், ஆச்ரமம், கர்பாதானம் முதலிய பதினாறு சடங்குகள் அந்தியேஷ்டி முதலியவைகள் சரியாபாதத்தினால் கூறப்படுகின்றன.

கிராமம், நகரம், இராஜதானி, அரண்மனை, மண்டபங்கள், சாலைகள், கூடகோபுரம் இவைகளின் லக்ஷணங்களும் இவைகளை அமைக்கும் முறையும், பூமிலக்ஷணம், காலலக்ஷணம், சிலாலக்ஷணம், இஷ்டிகாலக்ஷணம், வாஸ்து லக்ஷணம் முதலியவைகளும், ஆலயம், நந்தவனம், தடாகம், சிவலிங்கம், விக்ரஹம், யாகம் இவைகளின் விதியும், ஆன்மார்த்த பரார்த்த நித்ய–நைமித்திக–காம்ய பூஜைகளின் விதிகளும், தீக்ஷை, அனுஷ்டானம், ஆசாரம் இவைகளின் விதிகளும் கிரியாபாதத்தினால் கூறப்படுகின்றன.

யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, த்யானம், ஸமாதி என்ற அஷ்டாங்க யோகலக்ஷணமும் ஷட்சக்ர ஷடாதார விதியும், ஷடத்துவ விவரம் முதலியனவும் யோகபாதத்தால் கூறப்படுகின்றன.

பதி பசு பாசஞானம், முப்பத்தாறு தத்துவங்களின் விளக்கம், தசகாரியம் முதலியன ஞானபாதத்தால் கூறப்படுகின்றன.

இவ்விருபத்தெட்டு ஆகமங்களும், ஆலயங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்வாயம்புவம் முதலிய ஏழுவகை இலிங்க பேதத்தினால் பாகுபாடு உள்ளதாக விளங்குகின்றன.

ஸ்வாயம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆருஷம், ராக்ஷஸம், பாணலிங்கம் என இலிங்க பேதம் ஏழாம். தானாகவே உண்டான இலிங்கம் ஸ்வாயம்புவம். தேவியினால் பூஜிக்கப்பட்ட இலிங்கம் தேவிகலிங்கம். தேவர்களால் பூஜிக்கப்பட்ட இலிங்கம் தைவிகலிங்கம். மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங்கம் மானுஷலிங்கம். மஹரிஷிகளால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட லிங்கம் ஆருஷலிங்கம். அரக்கர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இலிங்கம் ராக்ஷஸலிங்கம். பாணம் என்ற தீர்த்தத்தினின்றும் லிங்கவடிவமாக விளங்கும் சிலைக்குப் பாணலிங்கம் என்று பெயர்.

பாணலிங்கத்திற்கு மற்றொரு விதியும் உண்டு. அதாவது பாணன் என்ற அசுரனால் பூஜிக்கப்பட்டதால் பாணலிங்கம் என்று பெயர் எனக் காரணாகமம் கூறுகிறது.

ஙாணெநு உூஜிதகூாக்ஷ ஙாணஙிஜ்ஜஇஹொஹுதெ ।

– காரணாகமம்

இவ்வாறு ஏழுவிதமான பேதங்களை உடைய சிவலிங்கங்களைத் திருமேனியாகக்கொண்டு இறைவன் வீற்றிருக்குமிடம் ஆலயம்.

ஷூரு உூாஸாஉஜிஜ்ஜு தூ உாரு ஸவூகு உூஜுதெ ।

– காரணாகமம்

இந்த ஸ்வாயம்புவம் முதலிய ஏழு லிங்கங்களும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து பூஜிக்கத் தகுந்தது. இதற்கு ஸ்திர

லிங்கம் எனப் பெயர். சரலிங்கம் எனக் கூறப்படும் ரத்நஜம், லோஹஜம் முதலான இலிங்கங்கள் ஆத்மார்த்தம் பரார்த்தம் என்ற இரண்டு இடங்களிலும் பூஜை செய்யப்படத் தகுந்தது.

ஸர்வேஷாம் ரக்ஷணார்த்தாய க்ராமாதிஷு விசேஷத: ।
ஸ்தாபிதம் விதினா லிங்கம் ஸுரதேவர்ஷிமானவை: ॥
தத்பாஹ்யம் ஸாதகம் ஸர்வேஷாமாத்மன: சுபம் ॥

கிராமம், நகரம் முதலான இடங்களில் எல்லோருடைய காப்பின்=நன்மையின் பொருட்டு, சுரர், நரர், முனிவர் முதலானவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங்கமும், தானாகத் தோன்றிய இலிங்கமும் பரார்த்தலிங்கம் எனப்படும். (இங்கு செய்யப்படும் பூஜை) எல்லோருக்கும் ஆத்மநலனை அளிக்கவல்லதாகும் என்று பூர்வகாரணாகமம் நித்யார்ச்சனா விதிப்படலத்தால் அறியப்படுகிறது. சிவஞான சித்தியாரில்,

திருக்கோயில் உள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் என நினையும் அவர்க்கும்
உளன் எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும்,
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரி போல்
மந்திரத்தில் வந்து உதித்தும் மிகும்சுரபிக் குட் எங்கும்
உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல் வெளிப்பட்டு அருளுவ அன்பர்க்கே.

– பா 325. சுபக்கம்

அதாவது சிவாலயத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க முதலிய திருமேனிகளையே சிவம் வேறு இவ்வுருவம் வேறு என்னும் பேதமின்றிச் சிவம் எனக்கண்டு வழிபடுபவருக்குச்

சிவபிரான் அத்திருமேனிகளில் வெளிப்படாது நின்று அருள் செய்வன்.

ஈசானம் முதலிய மந்திரங்களால் அருவப் பொருளாகிய சிவ பெருமான் சிவலிங்க முதலிய திருவுருக்கொண்டு விளங்குகிறான் என நினைத்து மந்திரக்கிரியையால் வழிபடுபவருக்கு விறகைக் கடைந்த இடத்தில் தோன்றும் அக்னி போல வருந்தி முயலுதலால், சிவ பெருமான் அத்திருமேனிகளில் வெளிப்பட்டுத் தோன்றியருள் செய்வன்.

உள்ளமெங்கும் இல்லமாக வாழும் சிவபெருமான் இத்திருமேனியிலும் வீற்றிருந்து பூஜை கொண்டருளுவனெனக் கருதி, "ஈசானஸ்ஸர்வவித்யானாம் சசிநீ" என்று சக்தி சம்பந்தமான மந்திரங்களால் சிவலிங்க முதலிய திருமேனிகளை வழிபடுபவருக்குக் கரந்தவிடத்துத் தோன்றும் பால்போல இலகுவில் வெளிப்பட்டுத் தோன்றி அருள்செய்வன். வெளிபட்டுத் தோன்றினும் அப்போதப்போது தோன்றுவதேயன்றி எப்போதும் தோன்றுவது இல்லை.

இவ்வாறு ஏகதேசமாய் வழிபடாமல் நீங்காத அன்பினாலே சிவலிங்க முதலிய திருமேனிகளைச் சிவமே எனக்கண்டு வழிபடுபவருக்குக் கருணையின் மிகுதியால் சிவபிரான் அவ்வன்பே தானாய் எப்போதும் அத்திருமேனிகளில் வெளிப்பட்டு நின்று அருள் செய்வன் என்று சிவஞான சித்தியாரால் அறியப் படுகிறது.

இதனால் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்குவிதமான உபாஸனா முறைகளும் கூறப்பட்டன.

ஆகமங்கள் ஒவ்வொன்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு பாதங்களை உடையன.

அவைகளுள்ளே புறத்தொழிலினாலே உருவத்திரு-மேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை. புறத்தொழில் அகத் தொழில் என்ற இரண்டினாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியை. அகத்தொழிலினாலேயே அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகம். புறம் அகம் என்ற இருதொழிலும் இல்லாமல் அறிவுத் தொழில் மாத்திரத்தினாலே அருவம் அருவுருவம் உருவம் என்ற மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார ஸச்சிதாந்த ஜோதி வடிவாய் நிறைந்து நின்ற சிவத்தினிடத்தில் செய்யும் வழிபாடு ஞானம். இந்த நான்கும் அரும்பு, மலர், காய், கனி போன்றது என்று தாயுமான சுவாமிகளும் கூறியுள்ளார்.

"விரும்பும் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே"

மோக்ஷமாகிய பேரின்ப ரஸத்தை அனுபவிப்பதற்கு இந்நான்கும் சோபானமாக = படியாக விளங்குகிறது. அரும்பில்லாமல் மலரும், மலரில்லாமல் காயும், காயில்லாமல் கனியும், கனி இல்லாமல் சுவையும் உண்டாகாதது போல், இந்த நான்கும் ஒன்றுக்கொன்று காரணமாக விளங்கி ஆன்மாவிற்கு முத்திரஸத்தை அளிக்கிறது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த நான்கு பாதங்களை உடைய காமிகம் முதல் வாதுளமீறாக உள்ள இருபத்தெட்டு மூலாகமங்களும் ஸ்வாயம்புவம் முதலிய இலிங்கங்களைப் பூஜிப்பதற்குத் தனித் தனிச் சிறப்புடையன.

காரணாகமம், வாதுளாகமம், ஸூக்ஷ்மாகமம், ஸுப்ரபேதாகமம் என்ற இந்த நான்கு ஆகமங்களும் சுயம்பு லிங்கத்திற்கு உரியனவாகும்.

காமிகாகமம், விஜயாகமம், ஸ்வாயம்புவாகமம், அனலாகமம் என்ற இந்த நான்கு ஆகமங்களும் தேவிகலிங்க பூஜைக்கு உரியவாகும்.

சிந்த்யாகமம், ஸஹஸ்ராகமம், தீப்தாகமம், அஜிதாகமம் என்ற இந்த நான்கு ஆகமங்களும் திவ்யலிங்க பூஜைக்கு உரியவாகும்.

யோகஜாகமம், மகுடாகமம், நிச்வாஸாகமம், ரௌரவாகமம் இந்த நான்கும் ஆருஷலிங்க பூஜைக்கு உரியனவாகும்.

வீராகமம், விமலாகமம், சந்திரஞானம், பிம்பம் என்ற இந்த நான்கும் மானுட லிங்க பூஜைக்கு உரியனவாகும்.

ப்ரோத்கீதாகமம், லலிதாகமம், ஸித்தாகமம், ஸந்தானாகமம் இந்த நான்கும் ராக்ஷஸலிங்க பூஜைக்கு உரியனவாகும்.

பாரமேச்வரம், சர்வோக்தம், அம்சுமான், கிரணம் இந்த நான்கு ஆகமங்களும் பாணலிங்க பூஜைக்கு உரியனவாகும் என்று ஸுப்ரபேதம் என்ற ஆகமம் கூறுகிறது.

ஸ்வாயம்புவலிங்கமானது ரேகை முதலானது இல்லாததாய் கரடுமுரடான திருமேனி உடையதாய் விளங்கும். இது சிதம்பரம் திருமூலஸ்தானலிங்கம், குடந்தைக்கீழ்க்கோட்டம் காசி விசுவநாதசுவாமி போன்ற மூர்த்திகள் ஸ்வாயம்புவம்.

இதுபோல் காஞ்சீபுரத்தில் காமாக்ஷியம்மையால் பூஜிக்கப் பட்ட ஏகாம்ரநாத மஹாலிங்கமும், மாயூரத்தில் மயில் வடிவத்தில்

அபயாம்பிகையால் பூஜிக்கப்பட்ட மாயூரநாத லிங்கம் போன்றனவும் தேவிகலிங்கம்.

சீர்காழியில் பிரம்ம தேவனால் பூஜிக்கப்பட்ட பிரம்மபுரீசுவர மஹாலிங்கம், திருமாற்பேற்றில் விஷ்ணு பூஜித்த மால்வணங்கீசுவர மஹாலிங்கம், திருக்கண்ணார் கோயிலில் இந்திரனால் பூஜிக்கப்பட்ட கண்ணாயிரேசுவர மஹாலிங்கம் போன்றன தைவிகலிங்கங்களாம்.

திருக்குற்றாலத்தில் அகஸ்திய முனிவரால் ஸ்தாபித்துப் பூஜிக்கப்பட்ட குறும்பலாவீச்வரமகாலிங்கம், திருக்கடவூரில் மார்க்கண்ட முனிவரால் பூஜிக்கப்பட்ட மிருத்யுஞ்ஜயலிங்கம் போன்றன ஆருஷலிங்கம்.

இடும்பாவனத்தில் இடும்பனால் ஸ்தாபித்துப் பூஜிக்கப்பட்ட சற்குண நாதேசுவரமஹாலிங்கம் போன்றன ராக்ஷஸலிங்கம்.

திருஓண காந்தன்றளியில் ஓணன் காந்தன் என்ற இரண்டு அசுரர்களால் பூஜிக்கப்பட்ட ஓணகாந்தேச்வர மஹாலிங்கம், திரிசிரா மலையில் திரிசிரன் என்ற அசுரனால் பூஜிக்கப்பட்ட தாயுமான லிங்கம் போன்றன ஆசுரலிங்கம். ராக்ஷஸலிங்கம் ஆசுரலிங்கம் என்ற இரண்டும் ஒரு வகை.

இராமேசுவரத்தில் மானுடவேடம் தாங்கிய இராமனால் ஸ்தாபித்துப் பூஜிக்கப்பட்ட இராமலிங்கம் போன்றன மகத்தான மானுடலிங்கம்.

பாணலிங்கம் என்பது காணவலிங்கம் என்றும் சில அபியுக்தர்களால் கூறப்படுகிறது. நந்தி, ப்ருங்கி, விநாயகர், கந்தர் முதலியவர்கள் கணேச்வரர்கள் ஆவார்கள். இவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கத்திற்கு காணவம் என்று பெயர். அது

திருச்செங்காட்டங்குடியில் விநாயகர் ஸ்தாபித்து பூஜித்த கணபதீச்வர மஹாலிங்கம், திருச்சேய்ஞலூரில் சுப்பிரமணிய சுவாமி ஸ்தாபித்து பூஜித்த சக்திகிரீசுவரமஹாலிங்கம் போன்றன காணவலிங்கமாகும்.

இவ்வாறு ஸ்வாயம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம் ஆருஷம், ராக்ஷஸம், பாணலிங்கம் என்ற ஏழுவிதமான இலிங்கங்கள் ஆலயங்களில் விளங்குவன.

அதனுள் ஸ்வாயம்புவ இலிங்கமோவெனில், .

𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿 𑌰𑍁𑌦𑍍𑌰𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌰𑍍𑌯𑍂𑌰𑍍𑌧𑍍𑌵 𑌭𑍁𑌵𑌨𑌂 𑌵𑌿𑌭𑍋𑌃 ।
𑌅𑌨𑍇𑌕𑌕𑍋𑌟𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥

— சுப்ரபேதாகமம்

...."𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌶𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌕𑌮𑍍𑌪𑌨𑌵𑌶𑌾𑌤𑍍
𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑍁। 𑌕𑍋𑌪𑍋𑌤𑍍𑌥𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌃 𑌕𑌿𑌲"

— சைவபூஷணம்

நிவிர்த்திகலையிலிருக்கும் நூற்றெட்டு புவனங்களுக்கும் அதிபதியாய் விளங்குபவர் காலாக்னிருத்ரன் என்று பெயருள்ள ருத்ரதேவன்.

ஒரு ஸமயம் அனந்தன் என்ற நாகராஜனுடைய ஆயிரம் சிரசுகளும் அசைய, அதில் கோபம் கொண்ட காலாக்னி ருத்ரனுடைய கோபாக்னியினின்றும் மூன்று தீப்பொறிகள் உண்டாயின.

அந்தத் தீப்பொறிகள் மூன்றும் நிர்மூலம், சமூலம், உபயாத்மகம் என்ற பெயரால் மூன்று லிங்கங்களாகத் தோன்றின. அவற்றுள் நிர்மூலம் என்ற லிங்கம் ஜலத்தினுள்ளிருப்பது. சமூல லிங்கம் பூமியில் மலையை ஆதாரமாகக்கொண்டு விளங்குவது

ஏனைய லிங்கம், மண் முதலியவைகளை ஆதாரமாகக்கொண்டது. இவ்வாறு ஸ்வாயம்புவ லிங்கத்தின் தோற்றம் கூறப்படுகிறது.

ஸ்வயம்பூத லிங்கஸ்ய ஸ்தாபிதஸ்ய உமேஷிபூஷி: ।
ஜெவெ வடா ஸ்தாபிதஸ்யாபி ரூபமானம் ந வித்யதெ ॥

– கிரணாகமம்

ஸ்வாயம்புவலிங்கம், ஆர்ஷலிங்கம், திவ்யலிங்கம் இவைகளுக்கு வடிவம் அளவு கிடையாது. மற்ற லிங்கங்களுக்கு ரூபம், லக்ஷணம், பலாபலம் யாவும் கூறப்பட்டிருக்கின்றன.

பாணாசுரன் என்ற அசுரனானவன் பல சாஸ்திரங்களையும் பெரியோர்கள் வாயிலாகக் கேட்டுவரும்பொழுது ஒருதினம் சிவலிங்கத்தின் மஹிமையைக் கேட்டான். கேட்டது முதல் வேறொன்றையும் கேளாமல் சிவபூஜை செய்யவேண்டும் என்னும் அன்பு மிகுதியால் சிவபெருமானை நோக்கி அநேககாலம் தவம் செய்தான். அத்தவத்திற்கு சிவபெருமான் இறங்கி அவனுக்கு வெளிப்பட்டுத் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். அப்பொழுது அந்த பாணாசுரன் ஆயிரம் சிரசும், இரண்டாயிரம் கைகளும் இருப்பதனாலும், சிவபூஜை செய்யவேண்டும் என்ற விருப்பமிருப்பதினாலும், பதினான்கு லோகங்களையும் ஆள வேண்டும் என்ற ஆசையினாலும், பதினான்குகோடி சிவலிங்கம் வேண்டும் என்று கேட்டான். அப்பொழுது சிவபெருமான் இமயமலைக்குச் சமீபமுள்ள கங்கைக்கரையிலிருந்து தம்முடைய பிரமத–கணங்களைக் கொண்டு சிவலிங்கங்களை எடுத்துவரச் செய்து பாணாசுரனுக்குக் கொடுத்து சிவபூஜை செய்யும்படி கட்டளையிட்டு மறைந்தார்.

பின்னர் பாணாசுரன் அவ்வாறே சிவபூஜை செய்து அந்த அரசபோகங்களை எல்லாம் அனேககோடி காலம் அனுபவித்தான்.

அதன் பின்னர் சிவபெருமானின் திருவுள்ளப்படி அந்தப் பதினான்கு கோடி சிவலிங்கங்களையும் ஸ்ரீசைலத்திலும், கங்காநதியின் மத்தியிலும், நீலகண்ட நேபாளம் முதலிய முக்கியத் தலங்களிலும் கன்யாகுமரியிலும் வைத்தான்.

அவற்றுள் ரேகையாகிய கீரலும், பிந்துவாகிய வட்டமும், களங்கமாகிய கருப்பும், மிகுந்த கனமும், பல வர்ணங்களாகிய சித்திரங்களும், உச்சிக் குழியும், பருக்கைக்கல்லும், பக்கத்தழும்பும் வெடிப்பு(ம்) என்ற இக்குற்றங்களில்லாமல் லிங்கத்திற்கமைந்த ஆவுடையாளுடன் நீர்க்குமிழி போல் கருப்பாகவும், பார்வைக்குப் பிரியமாகவும் உள்ளதாய் விளங்கும் பாணலிங்கம் உத்தமோத்தம லிங்கமாகும்.

𑌬𑌾𑌣𑍋 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌃 [illegible] 𑌸 𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌦𑌾𑌯𑌕𑌃 ।
[illegible] 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌚 ॥

𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑍋𑌟𑍀𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌷𑍍𑌵𑍇𑌤𑍇𑌷𑍁 𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 ॥

[illegible] 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇 𑌗𑌙𑍍𑌗𑌾𑌗𑌰𑍍𑌭𑍇 ।
[illegible] 𑌚 𑌨𑍇𑌪𑌾𑌲𑍇 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇 𑌚 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 ॥

– உத்தரகாமிகாகமம்

சங்கார காலத்தில் ப்ராணிகள் இதனுள் லயத்தை அடைவதால் இது இலிங்கம் எனக் கூறப்படுகிறது. பிறகு சிருஷ்டி காலத்திலும் இதனிடமிருந்து சிருஷ்டிக்கப்படுகிறது. ஆகவே, சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபாவம், அனுக்ரஹம் என்ற ஐந்தொழிலும் இதனால் நடத்தப்படுகிறது என்று மூலாகமங்களால் அறியப்படுகிறது.

பொதுவாக இலிங்கங்கள் தத்துவம், மூர்த்தி, பிரபாவம் என்னும் மூன்றுவகையாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் தத்துவம் நிஷ்களமாக இருப்பது, மூர்த்தி ஸகளமாக இருப்பது, பிரபாவம் இவ்விரண்டின் சேர்க்கையாகும்.

இதையே மூலாகமங்கள் அவ்யக்தலிங்கம், வ்யக்தா வ்யக்தலிங்கம், வ்யக்தலிங்கம் என்றும், சிவன், சதாசிவன் மஹேசன் என்றும், நிஷ்களம், ஸகளநிஷ்களம், ஸகளம் என்றும் கூறுகின்றன.

சிவன் நிஷ்களன். சதாசிவன் ஸகளநிஷ்களன். மஹேசன் ஸகளன் எனப்படுவார்கள். சிவன் ஒருவன். சதாசிவன் ஐந்து விதப்படுவர். மஹேசன் இருபத்தைந்து விதப்படுவர்.

மெய்யெழுத்தில் உயிரெழுத்துப் போல எல்லா ஆன்மாவினிடமும் நிறைந்து நிற்பவன் சிதாநந்த வடிவன். இன்ன தன்மையன், இவ்வாறு உள்ளவன் என்று கூறமுடியாதவன். ஆதி நடு அந்தமற்றவன், வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவன். லய–போக–அதிகாரம் உடையவன். ஸர்வஜ்ஞன், அனாதிமலரஹிதன், ஒருவன், எல்லாம் செய்பவன் என்றதுபோன்ற எண்ணிறந்த குணங்களையுடையவன் சிவன்.

யோகிகள் ஞானிகள் முதலானவர்களுக்குத் தியானம், பூஜை முதலியன செய்வதற்கு நிஷ்களத்தினின்றும் ஸகளம் தோன்றிற்று. அதுவே சதாசிவம்.

இது சிவ–ஸாதாக்யம், அமூர்த்த–ஸாதாக்யம், மூர்த்தி–ஸாதாக்யம், கர்த்ரு–ஸாதாக்யம், கர்ம–ஸாதாக்யம் என்ற ஐந்து பேதமுடையதாக விளங்குகிறது.

நிஷ்களரூபியான சிவனுடைய ஆயிரத்தின் ஒரு பங்கில் நின்றும் பராசக்தியானவள் தோன்றினாள். அந்தப் பராசக்தியில் ஆயிரத்தின் ஒரு பங்கினின்றும் இச்சாசக்தி தோன்றினாள். இவ்வாறு முறையாக ஒன்றன்பின் ஒன்றாக ஞானசக்தியும் கிரியா சக்தியும் ஆயிரமாயிரம் அம்சத்தின் ஒன்றினின்றும் தோன்றினார்கள். இவ்வாறு தோன்றிய ஐந்து சத்திகளிடத்தி லிருந்தும், சிவஸாதாக்யம் முதல் கர்மஸாதாக்யம் வரையிலுள்ள ஐந்து ஸாதாக்யங்களும் உண்டாயின.

இவ்வைந்து ஸாதாக்யங்களுக்கும் சதாசிவன், ஈசன், ப்ரஹ்மன், ஈச்வரன், ஈசானன் என்ற ஐவரும் முர்த்திகள் ஆவார்கள். இவர்கள் வ்யக்த–அவ்யக்த லிங்கங்கள். ஆவுடையாளும் லிங்கமுமாக விளங்குவதாகும் என்று வாதுளம் என்ற ஆகமத்தால் அறியப்படுகிறது.

ஸகளமென்று கூறப்படும் மஹேச்வர மூர்த்தியினின்றும் சந்திரசேகரர் முதல் லிங்கோத்பவர் முடிய இருபத்தைந்து விக்ரஹங்கள் ஆகும்.

இவ்வாறு மஹிமை பொருந்திய சிவலிங்கம் விளங்குமிடம் கர்பக்ருஹம்.

ஆலயத்திற்குக் கர்பக்ருஹம் தலை போன்றது.

"𑌗𑌰𑍍𑌭𑌗𑍃𑌹𑌂 𑌶𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂"

இத்தகைய கர்ப–க்ருஹத்தில் நிஷ்களரூபமான லிங்கத்திலிருக்கும் இறைவனைப் போலவே அவ்விறைவனைச் சுற்றிலும் அரூபியாக, கர்ப–க்ருஹத்தின் தென்மேற்கு மூலையின் கீழ்புறம் பிரமதேவனும், தென்மேற்கில் கணபதி, ஸரஸ்வதி, மஹாலஷ்மி இவர்களும், வடக்கில் விநாயகரும், கோமுகத்தில்

வாமை முதலிய ஒன்பது சக்திகளும், வடகிழக்கில் ஸதாசிவன், அனந்தன், ஸ்ரீகண்டன், அம்பிகை, ஸுப்ரமணியன், விஷ்ணு, விதாதா = ப்ரஹ்மா என்ற ஏழு ஆசாரிய புங்கவர்களும் வீற்றிருக்கின்றார்கள். இவர்களுக்குக் கர்பாவரண தேவதைகள் என்று பெயர்.

ஆலயமாகிய புருஷனுக்கு முகஸ்தானமாகவுள்ளது அர்த்த மண்டபம், சத்தி தத்துவத்தின் வியாபகமுடையது.

சிவாலயத்தின் கர்பக்ருஹத்தில் ஸ்தாபனம் செய்யப்படும் இலிங்கமானது ஸமகண்டம், வர்த்தமானம், சைவாதிக்யம் த்ரிராசிகம் என்று நான்கு பேதமுடையது.

ஒவ்வொரு லிங்கமும் ப்ரஹ்மபாகம், விஷ்ணுபாகம் ருத்ரபாகம் என்னும் பிரிவை உடையது. அதனுள் ப்ரஹ்மபாகம் சதுரவடிவமாகவும், விஷ்ணுபாகம் எண்கோண வடிவமாகவும், ருத்ரபாகம் வ்ருத்தம் அல்லது பதினாறுகோணம் அல்லது முப்பத்திரண்டு கோணம் அல்லது அறுபத்து நான்கு கோணமாக இருக்கும்.

அடியில் உள்ள ப்ரஹ்ம-பாகமானது நபும்ஸக வடிவமுள்ளதாகவும், நடுவிலுள்ள விஷ்ணு-பாகம் ஸ்திரீ வடிவமுள்ளதாகவும், மேலுள்ள ருத்ர-பாகமானது புருஷ வடிவம் உள்ளதாகவும் பாவிக்கப்படுகிறது.

அவன் அவள் அதுவெனும் உலகத்தின் கண் விளங்கும் மூன்றுவிதத் தோற்றத்திற்கும் காரணமாகவுள்ளது.

முற்கூறப்பட்ட வர்த்தமானம் என்ற இலிங்கமானது, சதுரவடிவமான அடிப்பாகம் நான்கு அம்சமுடையதாகவும், எண் கோண வடிவமான நடுப்பாகம் ஐந்து அம்சமுள்ளதாகவும், விருத்தம்

முதலிய வடிவமுடைய மேல்பாகம் ஆறு அம்சமுடையதாகவும் விளங்கும்.

சைவாதிக்யம் என்ற இலிங்கமானது அடிப்பாகம் நடுப் பாகம் இரண்டும் நான்கு நான்கு அம்சமுடையதாகவும், மேலே ஐந்துபாகம் உடையதாகவும் விளங்கும்.

ஸமகண்டம் என்ற இலிங்கம் கீழ்பாகம், நடுப்பாகம், மேல் பாகம் மூன்றும் ஸமமான பங்கை உடையதாக விளங்கும்.

த்ரைராசிகம் என்ற இலிங்கமோவெனில் இலிங்கத்தின் ஆத்யந்தமான உயரத்தை இருபத்தோரு பங்கு செய்து, அதில் மேல் பாகம் ஆறு பங்கும், நடுப்பாகம் ஆறு பங்கும், அடிப்பாகம் எட்டுபங்கும் உடையதாக விளங்கும் என்று காரணாகமம் லிங்க லக்ஷண விதிப்படலம் கூறுகிறது.

ஜ்ஞாநஶக்த்யாத்மகே லிங்கே க்ரியாஶக்தே: ஸ்வரூபிணீ ।
பீடஸ்ய விதிநா யோக: ப்ரதிஷ்டா ஸா ச வர்ணிதா ॥

– வருணபத்ததி

இலிங்கம் ஞானசக்திவடிவமுடையது. பீடம் கிரியாசக்தி வடிவமுடையது. இவ்விரண்டும் சிவன் அதிஷ்டிக்கும் தேகம் இவ்விரண்டையும் சிவாகம முறைப்படி சேர்ப்பது ஸ்தாபனம் எனப்படும். அத்தகைய ஸ்தாபனமானது பிரதிஷ்டை, ஸ்தாபனம், ஸ்திதஸ்தாபனம், உத்தாபனம், ஆஸ்தாபனம் என்று ஐந்து பேதமுடையது.

ஆதாரசிலையை முதலில் முறைப்படி ஸ்தாபித்து, அதன் மேல் அவ்யக்தம் முதலிய இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தல் பிரதிஷ்டை எனப்படும்.

வேறுபடாமல் அபின்னமான பீடங்களை உடைய ஸ்படிக லிங்கம் முதலிய இலிங்கங்களை ஸ்தாபனம் செய்தல் ஸ்திதஸ்தாபனம் என பெயர் பெறும்.

தாது அல்லது ரத்னம் அல்லது லோஹமயமான பாண லிங்கத்தை ஐந்துபாகம் செய்து, மூன்றுபாகம் தள்ளி இரு பாகத்திலாவது அல்லது மூன்றுபாகஞ் செய்து இரண்டுபாகம் தள்ளி ஒருபாகத்திலாவது இலிங்கத்தின் பலாபலத்திற்குத் தக்கவாறு பிண்டிகையின் (ஆவுடை) நடுவில் ஸ்தாபனம் செய்தல் ஸ்தாபனம் எனப்படும்.

ஏதாவதொரு இலிங்கத்தைப் பிண்டிகையுடன் சேர்த்து கர்பக்ருஹமத்தியில் மந்திரஸம்ஸ்காரத்துடன் ஸ்தாபனம் செய்தல் ஆஸ்தாபனம் எனப்படும்.

ஜீர்ணமான இலிங்கத்தை மறுபடியும் உத்தாரணம் செய்தல் உத்தாபனம் எனப்படும்.

கர்பக்ருஹத்தின் நடுவில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். மற்றய மூர்த்திகளைக் கர்பக்ருஹ மத்தியில் பிரதிஷ்டை செய்ய விதிகிடையாது.

கர்பாயாமம் உபயா க்ருத்வா கர்பகேஹே து ஶங்கர: ।
நவாம்ஶம் ப்ரஹ்மண: ஸ்தானம் அஷ்டாம்ஶே விஷ்ணுருதாஹ்ருதே ॥

ஸப்தாம்ஶம் ஷண்முகம் ப்ரோக்தம் ஷஷ்டாம்ஶம் து ஸரஸ்வதீ ।
பஞ்சாம்ஶம் ஶிவபக்தானாம் சதுர்த்தம் து விநாயக: ॥

த்ருதீயம் பைரவம் ப்ரோக்தம் த்விதீயம் ஶக்திருதாஹ்ருதே ।
ஏகம் ஹ்ருதபத்மம் கர்பாக்ரே ஸூத்ரகே ஸ்தானலக்ஷண: ॥

– ஸித்தாந்த சேகரம்

கர்ப–க்ருஹத்தின் சமபாதியை பத்துப்பாகம் செய்து கர்ப-க்ருஹத்தின் மத்தியில் சங்கரனை ஸ்தாபனம் செய்யவேண்டும். அந்த கர்ப–க்ருஹத்தின் மத்திய பாகத்தினின்றும் சுவர் வரையிலுள்ள பதங்களில் கர்ப மத்தியின் அருகிலுள்ள ஒன்பதாவது அம்சத்தில் பிரமனையும், அதன் பின்னுள்ள எட்டாவது அம்சத்தில் விஷ்ணுவையும், இம்முறையாக ஏழாவது அம்சத்தில் ஷண்முகனையும், ஆறாவது அம்சத்தில் ஸரஸ்வதியையும், ஐந்தாவது அம்சத்தில் சிவபக்தர்களையும், நான்காவது அம்சத்தில் விநாயகரையும், மூன்றாவது அம்சத்தில் பைரவரையும், இரண்டாவது அம்சத்தில் சக்திகளையும், முதல் அம்சத்தில் பூதகணங்களையும், ஸ்தாபிக்க வேண்டும்.

𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌨 𑌯𑍋𑌜𑌯𑍇𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌨𑌾 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌨 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

'இலிங்கத்தை நடுவில் ஸ்தாபனம் செய்யாதே, நடுநீக்கியும் ஸ்தாபனம் செய்யாதே" என்று காரணாகமம், காமிகாகமம், சோம சம்புபத்ததி முதலிய ஆகமங்கள் கூறுகின்றன.

𑌗𑌰𑍍𑌭𑌗𑍃𑌹𑌂 𑌵𑌿𑌭𑌜𑍍𑌯𑌾𑌥 𑌕𑍋𑌣𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌶𑍇𑌨 𑌚 ।
𑌨 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌸𑍍𑌯 𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 ॥
𑌵𑍇𑌧𑌾 𑌦𑍋𑌷𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍀𑌶𑌾𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

– சித்தாந்தசேகரம்

கர்பக்ருஹத்தின் மத்தியை நிச்சயம் செய்து கொண்டு, வேதை என்ற தோஷத்தின் நீக்கத்தின் பொருட்டு ஒரு நூலளவு ஈசான பாகத்தை ஆச்ரயித்ததாக ஸ்தாபனம் செய்ய வேண்டும்.

இலிங்கத்தைத் தாங்கி நிற்கும் சிலைக்கு ஆதாரசிலை என்றும் கூர்மசிலை என்றும் பெயர்.

அந்த ஆதாரசிலையின் நடுவில் ஒன்பது குழி தோண்டி அதனுள் இலிங்கத்திற்கு ப்ரபாசக்தி, ஆரோக்யசக்தி, தேஹத்வசக்தி, வீர்யசக்தி, தீப்திசக்தி முதலியவைகளின் உத்தீபனத்தின் பொருட்டு அடியிற்கண்ட திரவியங்களை நிரப்பவேண்டும்.

𑌵𑌜𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌚 𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑌿 𑌤𑌥𑍌𑌷𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑍌𑌷𑌧𑍀𑌃 ।
𑌲𑍋𑌹𑌾𑌨𑍍 𑌧𑌾𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌹𑌰𑌿𑌤𑌾𑌲𑌾𑌦𑌿𑌕𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

𑌯𑌾𑌨𑍍𑌵𑍍𑌰𑍀𑌹𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑌸𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑍀𑌪𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌭𑌾𑌰𑍋𑌗𑍍𑌯-𑌦𑍇𑌹𑌤𑍍𑌵-𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌨𑍍 ॥

வைரம், மாணிக்கம், வைடூர்யம், நீலம், பச்சை, முத்து கோமேதகம், புஷ்யராகம், பவளம் என்ற ப்ரபாசக்தியளிக்கும் நவரத்னங்களையும்,

விளாமிச்சை, விஷ்ணுக்ராந்தி, செஞ்சந்தனம், கருங்காலி, சந்தனம், சாரிபை, கோஷ்டம், சங்கபுஷ்பம் ஆகிய ஆரோக்ய சக்தியை அளிக்கும் ஓஷதிகளையும்,

தங்கம், வெள்ளி, தாமரம், ஈயம், பித்தளை, நாகம், ஸீஸம் என்ற தேஹ சக்தியையளிக்கும் லோகங்களையும்,

ஹரிதாளம், மனோசிலை, கைரிகம் = காரீயம், ஸ்வர்ணமாக்ஷிகம், ரஸம், லிங்கம், காந்தம், அப்ரகம் என்ற வீர்யசக்தியளிக்கும் தாதுப் பொருள்களையும்,

நெல், கோதுமை, எள்ளு, உளுந்து, பயறு, யவை, நீவாரம், ச்யாமை என்ற தீப்திசக்தியைக் கொடுக்கின்றதான தான்யங்களையும் போட்டு அததற்குரிய அதிதேவர்களையும் பூஜிக்க வேண்டும்.

மற்றும், தாம்ரத்தினால் செய்த விருஷபம், தோமரம், சாமரம், யானை, ஸ்ரீவத்ஸம், பூர்ணகும்பம், பேரி, கண்ணாடி, தாமரைப்பூ இவைகளையும், ஸ்வர்ணத்தினால் செய்த மேருவையும் அந்தக் குழியில் வைத்து

வரகஜூ வாயஸெநாய ஜிஷ்ணா ஜுஷுஷுநாஸயவா ॥

– ஸோமசம்பு

பஞ்சகவ்யத்தினால் சுத்திசெய்த கெட்டியான பால் பாயஸத்தினாலாவது அல்லது குங்குலியத்தினாலாவது பள்ளத்தை மெழுகி அதன்மேல் இலிங்கத்தின் அடிப்பாகத்தை ஸ்தாபனம் செய்து, உயர்ந்த மணல்களால் ஆதாரசிலைக்கும் இலிங்கத்தின் பிரஹ்மபாகத்திற்கும் உள்ள இடைவெளியை நிரப்பவேண்டும்.

சுய வீடெ ச ஸஂஷ்லாவூ ஜிஜஂ தாஙஸூ ஸஂஜுவழ ।

பிறகு ப்ருஹ்மபாக-விஷ்ணுபாகஸ்வரூபமாய் விளங்கும் பிண்டிகையை ஸ்தாபனம் செய்யவேண்டும்.

இலிங்கம் கிழக்கு முகமாகவாவது அல்லது மேற்கு முகமாகவாவது இருந்தால் கோமுகத்தை வடக்கு முகமாக வைக்கவேண்டும். இலிங்கம் தெற்குமுகமாகவாவது வடக்கு முகமாகவாவது இருந்தால் கோமுகத்தைக் கிழக்கு முகமாக வைக்க வேண்டும் என்று சித்தாந்தசேகரம் என்ற ஆகமநூல் கூறுகிறது.

பீடம் என்பது லிங்கத்தின் அடிபாகத்திலிருக்கும் ஆவுடையார். கர்பக்ருஹத்தை மூன்றுபங்கு செய்து, மூன்றில் ஒருபங்கு பீடத்தின் விஸ்தாரமிருக்க வேண்டும்.

ஜிஜ஗ாநெநஹஉூஂ ஸூாகஃ ஜிஜ஗ாநெந வீடிகா ।

– காரணாகமம்

லிங்கத்தின் அளவினால் ஆலயம் யாவும் செய்யவேண்டும். பீடமானது எண்கோண வடிவமாகவாவது அல்லது நாற்கோண வடிவமாகவாவது விருத்தவடிவமாகவாவது விளங்கும்.

ஜ்ஞநாஹ-ஸஃ-வீம்-விஸ்தாரம் விஸ்தாரஸ்ய ஸமா-வெஃதுாஜ்கடீ ।
விஸ்தாயபூஸஃமொஜுவாஜகம் மொஜுவாஜஸஃகூநாஹகடீ ॥

இலிங்கத்தின் சுற்றளவிற்குச் சமமாக பீடத்தின் விஸ்தாரம் இருக்கவேண்டும். விஸ்தார அளவை ஐந்துபாகம் செய்து நான்கு பாகம் பீடத்தின் உயரமிருக்கவேண்டும். அந்த விஸ்தார அளவிற்கு சமமாக கோமுகத்தினளவு இருக்கவேண்டும். கோமுகத்தின் அளவு பீடத்தினுடைய கழுத்தின் அளவு இருக்கவேண்டும் என்று தந்த்ர ஸாரம் என்ற நூல் கூறுகிறது. பீடம் இறைவனுடைய யோகசக்தி ஆகும்.

யொமம் ஹொமம் ச வீரம் ச திவியம் ஸக்திரூஷ்யதெ ।
ஜ்ஞாகாரவிஸெஷெண ஸிவதகூம் வ்ருகீதிபூதடீ ॥
தஃயஃ ஸக்திதகூம் ச யொமவயபூாயவாசகஃ ॥

– காரணாகமம்

சிவபெருமானுக்கு யோக சக்தி, போக சக்தி, வீரசக்தி என்று மூன்று சக்திகள் கூறப்படுகிறது. அதனுள் பீடம் யோகசக்தியாகும்.

யொமம் வீம்ஸஃாயுக்தம் ஹொமம் வாஃஸஃநிதடீ ।
வீரம் ஸ்வதஜ்ரஃதாுக்தம் ஸக்திஷ்யஃஹொவூதெ ॥

ஃவஜ்ஞஸஃவெ து வாஃஹாமெரயபூஃணவெ ।
ஸூஸநம் ஸ்தாநகம் வெ்ராக்தம் திவியம் ஹொமஸக்திகா ॥

– உத்தரகாரணாகமம்

யோகசக்தியானது பீடத்துடன் சேர்ந்து நிற்கும். போகசக்தியோவெனில் மூலலிங்கத்தின் சமீபத்தில் அர்த்த மண்டபத்தின் இடது பாகத்தில் இருக்கும். வீரசக்தி சுதந்திர சக்தி எனப்படும்.

நாஃம் ஜ்ஞஃதிஜ்ஞேயம் பிந்துஃ வீம்ஃதிஸ்தடீ ।

– வாதுளாகமம்

நாதம் லிங்கமாகவும் பிந்து (பீட)சத்தியாகவும் விளங்குகிறது.

ஜ்ஞாநஶக்த்யாத்மகே லிங்கே க்ரியாஶக்தேஸ்து பீடக: ।
பீடஸ்ய விநியோக: ப்ரதிஷ்டா ஸா ச கத்யதே ॥

– வருணபத்ததி

ஞானசக்திமயமான லிங்கத்தில் கிரியாசக்திமயமான பீடத்தைச் சேர்ப்பது பிரதிஷ்டை எனப்பெயர். லிங்கம் பீடம் இரண்டையும் இடையராமல் சேர்த்து பந்தனம் செய்யும் த்ரவ்யத்திற்கு அஷ்டபந்தன (மருந்து) த்ரவ்யம் எனப் பெயர்.

சுக்கான், குங்கிலியம், கொம்பரக்கு, காவி, வெள்ளை மெழுகு, செம்பஞ்சு, வெண்ணை, ஜாதிலிங்கம் இவைகள் எட்டு திரவியங்கள் அஷ்டபந்தன மருந்தில் சேர்க்கும் திரவியங்களாகும். இவைகள் முறையாக அனந்தன், வாசுகி, தக்ஷகன் கார்கோடகன், பத்மன், மஹாபத்மம், சங்கபாலன், குளிகன் என்ற எட்டு நாகங்களும் அந்த திரவியங்களுக்குரிய தேவதைகள்.

ஶிலாமம் ஶர்கராசூர்ணம் த்விலாமம் குந்துருஷ்கக: ।
லாமேகம் த்ராக்ஷயாயுக்தம் காஷாயம் ச ஶிலாமக: ॥
உச்சிஷ்டம் ஶிவாக்ஷம் ச ததா காஷாயசூர்ணக: ।
நவநீதம் ஶிவாக்ஷம் ச ஹிங்குலம் பாதமேவ ச ॥

இந்த எட்டுத் திரவியங்களை அளவோடு சேர்க்கவேண்டும். அதாவது சுக்கான் மூன்று பங்கு, குங்குலியம் இரண்டுபங்கு, கொம்பரக்கு செம்பஞ்சு முக்கால் பங்கு, வெண்ணெய் முக்கால் பங்கு, உலர்ந்த {ஜாதி}லிங்கம் கால் பங்கு, என்ற இம்முறைப்படி சேர்த்து இடித்து பந்தனம் செய்யவேண்டும்.

இம்மருந்தின் முறை பக்குவம் என்றும் அபக்குவம் என்றும் இரண்டு.

இவ்வெட்டு திரவியங்களையும் இடித்து வஸ்திரகாயம் செய்து அளவுப்படி சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி பக்குவமாய் எடுத்துச் சாத்துவதற்குப் பக்குவம் என்று பெயர்.

உரலில் போட்டு லேகியமாகும் வரையில் அவைகளைச் சேர்த்து இடித்து சாத்துதல் அபக்குவம்.

சுவக்லு ஜெவிகும் ஷெுாகஜும் வக்லும் ஜெவ தூ ஊாநுஷி ।

அபக்குவம் என்ற மருந்து தைவிகம், பக்குவம் மானுஷம் என்று ஸஹஸ்ராகமம் கூறுகிறது. மற்றும் செம்பஞ்சு, கொம்பரக்கு, குங்கிலியம், வெள்ளை மெழுகு, பூங்காவி, வெண்ணை, சுக்கான், லிங்கம் இவைகள் முறையே ப்ரஹ்மன், விஷ்ணு, ருத்ரன், மஹேச்வரன், சதாசிவன், பிந்து, நாதம், ஸகளாகளம் என்ற தைவீக வடிவமுடையது என்று ஷட்ஸஹஸ்ரிகை கூறுகிறது.

அஷ்டபந்தனம் போன்று பஞ்சபந்தனம், த்ரிபந்தனம் என்ற பேதமும் காணப்படுகிறது. அஷ்டபந்தனமில்லாவிடில் பூஜை, நைவேத்யம், பலி, நித்யோத்ஸவம், நமஸ்காரம், பிரதக்ஷிணம், நர்த்தனம், வாத்யகோஷம், நித்யம், நைமித்திகம் யாவும் பயனற்றது.

சுஷ்டு வங்கந ஹீநெ தூ ராஜா ராஷ்டுஞ நஸ்யதி ।
தஸ்மாக் ஸவயுவுயதேுந காரயெஉஷ்டு வங்கநடி ॥

அஷ்டபந்தனம் இல்லாவிடில் அரசனும் ராஜ்யமும் நாசமடையும் ஆதலால், மிகுந்த முயற்சியால் அஷ்டபந்தனம் செய்ய வேண்டும். இவ்வாறு அஷ்டபந்தனம் செய்து ஸ்தாபனம் செய்யப்பட்ட லிங்கத்தில் தத்வாதீதனாக விளங்கும் சிவபெருமான் தத்துவ வடிவமாக விளங்குகிறார்.

நிஷ்களரூபமாக இலிங்கத்தில் தோன்றும் இறைவன், தியானம் பூஜை செய்வதின் பொருட்டு சகளமாக ஆகிறார். ஆயினும் கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பம் போலும், வானத்தில் தோன்றும் இந்திரதனுசு போலும், உறைந்த நெய்போலும் விளங்குகிறார்.

மாமிஸம் ரத்தம் முதலிய யாவும் இவருடைய சரீரத்தில் கிடையாது; கற்பனையினால் அவ்வாறு அமைத்து பூஜையில் தியானம் செய்யப்படுகிறது.

ஸதாஶிவ: ஷடத்வாத்மா தஸ்ய ப்ராண: ஶிவ: ஸ்ம்ருத: ।

ஸதாசிவன் ஆறு அத்வாக்களின் வடிவமுடையவன். அதாவது சாந்தியதீதகலை தலையாகவும், சாந்திகலை முகமாகவும், வித்யாகலை மார்பகமாகவும், பிரதிஷ்டாகலை முழங்கால் பிரதேசமாகவும், நிவ்ருத்திகலை பாதமாகவும் விளங்குகிறது. இதற்கு கலாத்வா என்று பெயர்.

அநாச்ரிதை முதலிய இருநூற்றி இருபத்தினான்கு புவனமும் இறைவனுடைய உரோமக் கூட்டங்களாக விளங்குகிறது. இது புவனாத்வா.

அகாரம் முதல் க்ஷகாரமீராகவுள்ள ஐம்பத்தோர் அக்ஷரங்களும் தோலாக விளங்குகிறது. இது வர்ணாத்வா.

ஈசானம் முதலிய ஸம்ஹிதாமந்திரங்கள் பதினொன்றும் ரக்தமாக விளங்குகிறது இது மந்திரத்வா.

ஓம் வ்யோமவ்யாபினே என்றது முதல் எண்பத்தோரு பதங்களும் மாம்ஸ தாதுவாக விளங்குகிறது. இது பதாத்வா.

ப்ருத்வீ முதல் சிவதத்துவமீறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களும், எலும்பு, மஜ்ஜை, சுக்லம் முதலிய தாதுப் பொருள்களாக விளங்குகிறது. இது தத்வாத்வா.

இவ்வாறு கலா–புவன–வர்ண–பத–மந்த்ர–தத்வங்களான ஆறு அத்வாக்களின் வடிவமுள்ளவராகத் தியானித்து, லிங்கம் என்ற பாவனையை நீக்கி, ஐந்து திருமுகங்கள் பத்துகைகளுடன் கூடிய சதாசிவமூர்த்தியைத் தியானித்துப் பூசிக்கவேண்டும்.

ஸ்படிகம் போன்ற வர்ணமுடைய ஈசானம் என்ற பெயர் உள்ளது மேல்முகம்.

பொன் வர்ணமுடைய தத்புருஷம் என்ற பெயருள்ளது கிழக்கு முகம்.

கருத்தவர்ணமுடைய அகோரம் என்ற முகம் தெற்கிலுள்ளது.

சிவப்பான வர்ணமுடைய வாமதேவம் என்று பெயருள்ளது வடக்கு முகம்.

வெண்மையான வர்ணமுடைய ஸத்யோஜாதம் என்று பெயருள்ளது மேற்கு முகம்.

ஸத்யோஜாதம் முதல் ஈசானம் வரையில் விளங்கும் ஐந்து திருமுகங்களும் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபாவம், அனுக்ரஹம் என்ற ஐந்தொழிலைச் செய்யும் காரியமுடையது.

நித்திய பூஜையும் அதன் தத்துவமும்

பிறவிகளுக்குள் சிறந்த மானுட ஜன்மத்தை முற்பிறப்பிற் செய்த புண்ணியமேலீட்டால் எடுத்த அன்பர்கள் செய்யும் சிவபூஜையானது ஆன்மார்த்தபூஜை, பரார்த்த பூஜை என இருவகைப்படும்.

ஆசாரியர் தீக்ஷை செய்து அருள்சுரந்து சீடனைப் பார்த்து 'நீ இறக்கும் வரையும் கைவிடாது இவரை நாடோறும் பூசி' என்று அனுமதி செய்து அளிக்கும்போது, 'அடியேன் இச்சரீரமுள்ள வரையுஞ் சிவார்ச்சனை செய்தன்றி ஒன்றும் உண்ணேன்' என்று சம்மதி செய்வித்துக் கொண்டு ஆசாரியரால் கொடுக்கப்பட்ட இஷ்டலிங்கத்தை வாங்கிப் பூசிப்பது ஆன்மார்த்த பூஜையாகும். எல்லா ஆன்மாக்களுக்கும் அனுக்ரஹஞ் செய்யுங்காரணமாகக் கோயில்களிற் பிரதிஷ்டை செய்து பூசிப்பது பரார்த்தலிங்க பூஜையாகும்.

இவ்வாறு ஆன்மார்த்த–பரார்த்த பூஜையின் வாயிலாகச் சிவபெருமானை உபாசிக்கும் கிரமங்களை அறிவுறுத்துவன முதனூல்களாகிய இருபத்தெட்டுச் சிவாகமங்கள்.

இத்தகைய சிவாகமங்களால் சிவாலயங்களில் விதிக்கப்படும் பூசைகள் நித்தியம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகையின.

தினந்தோறும் செய்யப்படும் பூஜை நித்தியம். உற்சவம், பிரதிஷ்டை முதலியன நைமித்திகம். பேறுபேற்றினை அவாவிச் செய்யப்படும் கிரியை காம்யமாகும்.

எல்லாக் காரியங்களையும் நிறைவுபடுத்துவதாலும் ஆன்ம ஞானத்தை உண்டு பண்ணுவதாலும் பூஜை எனப் பெயர் பெற்றது. உத்தமோத்தமமாகக் கூறப்படும் எட்டுக்கால பூஜை முதல், அதமத்தில் மத்யமமான ஒருகால பூஜை வரையில் பரார்த்த ஆலயங்களில் செய்யும்முறை ஆகமங்களால் கூறப்பட்டு விளங்குகின்றன.

விடியற்பூஜை முதல் அர்த்தயாமம் முதலிய பூஜா காலங்களில் தொடக்கம் முடிவு இவைகளில் சில மாறுதல்கள் காணப்படினும் அபிஷேகம் முதலிய உபசாரங்களில் விசேஷ மாறுதல் இல்லை.

பொதுவாக உபசாரங்கள் யாவும் ப்ருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களில் அடங்கும் எனச் சித்தாந்த சாராவளியால் அறியப்படுகிறது.

அவை சந்தனம், கிழங்கு, பழம், வேர், புஷ்பம், அன்னம் இவைகளாற் செய்யப்பெறுவன பார்த்திவ உபசாரம். தீர்த்தம், பால், வேஷ்டி, பட்டு, தயிர் இவைகளாற் செய்யப்பெறுவன அப்பு = ஜல உபசாரம். நவரத்தினம், தீபம், பூஷணம் முதலானவற்றால் செய்யப்பெறுவன ஆக்னேய உபசாரம். தூபம், சாமரம் இவை வாயவ்ய உபசாரம். மணி, கானம் முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம். எனவே இறைவனுக்குச் செய்யப்படும் எல்லா உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமாம்.

'செய்ய மேனியன் தேனொடு பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மையலாய் மறவா மனத்தார்க் கெலாம்
கையி லாமல கக்கனி யொக்குமே'

– திருநாவுக்கரசர்.

சிவந்த திருமேனியனாய்த் தேனும், பாலும், தயிரும், நெய்யும் கொண்டு திருமுழுக்காட்டி நீலக்குடி அரன்மேல் காதல் கொண்டு மறவாத மனத்தினர்க்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அப்பெருமான் புலப்பட்டு அருள்புரிவான்.

உபாசனாயம் தொயெந க்ஷீரெணாயுஷ்யவஸூநி।

அதாவது நீரினால் பத்து அபராதங்களைப் போக்குகிறார். பாலினால் ஆயுளை விருத்தி செய்கிறார் என்று சிவாகமம் கூறுகிறது. இவ்வாறு எல்லா அபிஷேகத்திரவியங்களுக்கும் பயன் காணப்படுகிறது.

அகில், கற்பூரம், புனுகு முதலிய வாசனைத் திரவியங்கள் கலந்து அருட்சக்திமயமான சந்தனத்தைச் சாத்துகின்றவர்கள் பிரபஞ்ச வைராக்கியமுடையவர்களாய்ச் சிவலோகத்தைச் சேர்வார்கள்.

ஒருபோதும் இறைவனுடைய சிரசில் மலர் இல்லாமலிருத்தல் கூடாது. வெண்ணிறப் புஷ்பங்கள் சாத்துவிக குணமுடையன. அவைகள் வெள்ளெருக்கு, வெள்ளலரி, பிச்சி, கொக்கிறகு, மந்தாரை, புன்னை, நந்தியாவர்த்தம், மல்லிகை, முல்லை முதலியவைகளாம். இப்புஷ்பங்களால் சாயரக்ஷை அர்த்தயாமம் என்னும் காலங்களில் அர்ச்சித்தவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். செந்நிறப்புஷ்பங்கள் இராசத குணமுடையன. அவை செந்தாமரை, செங்கழுநீர், செவ்வலரி, செங்கடம்பு முதலியனவாம். இப்புஷ்பங்களால் இராசத காலமாகிய மத்யானத்தில் அர்ச்சித்தவர்கள் போகத்தை அடைவார்கள்.

அக்ஷதை சத்துருஜயத்தையும், அறுகு சகோதரருக்குச் செய்த குற்றத்தையும், எட்பூ ப்ரஹ்மஹத்தி தோஷத்தையும், கொன்றைப்பூ மாதாவுக்குச் செய்த குற்றத்தையும், வெள்ளெருக்கம்பூ அன்னிய ஸ்தீரிகளைச் சேர்ந்த தோஷத்தையும், நீலோத்பலம் வாக்கு தோஷத்தையும், குங்குமப்பூ நவக்ரஹ பீடையையும், வில்வம் பொய்சொன்ன பாவத்தையும், கோங்கம்பூ கள்ளுண்ட பாவத்தையும், கத்திரி குட்டரோகத்தையும், துளசி வறுமையையும், தும்பைப்பூ கோஹத்தி தோஷத்தையும், பலாசம்பூ பொன்திருடிய

தோஷத்தையும், நெய்தலும் நெல்லியும் பலவகை ரோகத்தையும் சாந்திசெய்யும் என்று சைவபூஷணம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

நொச்சியே வன்னி கொன்றைமதி கூவிளம்
உச்சியே புனைதல் வேடம் விடையூர்தியான்
கச்சியே கம்பம் மேவிய கறைக்கண்டனை
நச்சியே தொழுமி னும்மேல் வினைநையுமே !

– திருஞானசம்பந்தர்

மிருதுவான இலைகளையுடையதும் வெண்மை நிறமுடையதுமாகிய பட்டுவஸ்திரத்தை அன்புடன் சாத்தியவர்கள் சிவலோகத்தையடைந்து ஒவ்வோரிழைக்கும் ஆயிரம் கற்பகாலம் வாழ்வார்கள். இது திரோதனசத்தி நீங்குதலென்னும் பாவனையாம்.

நறுமலர்களைக் கையில் எடுத்துக்கொண்டு இறைவனின் சிரசில் மும்முறை சாத்துதல் புஷ்பாஞ்ஜலியாகும்.

இது ஆன்மா, ஆன்மபோதம் நீங்கிச் சிவபோதம் பதியுஞ் சமயத்தில் மனம் வாக்குக் காயத்தால் வந்த பாபமும், ஆகாமியம் சஞ்சிதம் பிராரப்தம் என்னும் வினைகளும் நீங்குதல் என்னும் பாவனையாகும்.

சிவபோகத்தை அடைந்த ஆன்மா, மீண்டும் பிரபஞ்சத்தை நோக்காவண்ணம் சிவபோகத்திலே திளைத்து நிற்கும் பாவனையே மணியடித்துத் தூபம் தீபம் ஆசமனம் அர்க்கியங்களைக் கொடுத்து மனோரதமுத்திரையுங் காட்டுதலாகும்.

தூபபாத்திரத்தின் முகத்தில் அக்னியும், தண்டத்தில் ஈச்வரனும், பாதத்தில் ப்ரஜாபதியும் அதிபர்களாக இருக்கிறார்கள். க்ரியாசக்தி ரூபமாகிய தூபத்தைச் சிவசன்னிதானத்தில் இடுவதனால் ஆன்மாவை மறைத்திருக்கும் ஆணவமல சத்தியாகிய அறியாமை நீங்கும் என்பது ஆகமங்களிற் கண்ட உண்மை.

சித்சத்தியின் வாசமாய் ஞானவிளக்கமாயிருப்பது தீபம். சிவசந்நிதானத்திலே தீபமேற்றி வருபவர்களுக்குச் சிவபெருமான் அபம்ருத்யு நிவாரணத்தையும், பாபநீக்கத்தையும், ஞான அறிவையும், இஷ்ட சித்திகளையும் கொடுத்தருளுவர்.

அன்னநிவேதனத்தினால் தான்யவிருத்தியும், சுபிக்ஷமும் உண்டாகும்.

கற்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி அக்னி பற்றிய விடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஓர் பற்றுமில்லாமல் முற்றுங் கெட்டு ஆகாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்குதல் போல், ஆன்மா வெண்மைநிறமான சாத்விககுணத்தைப் பொருந்தி ஞானாக்னி பற்றியவிடத்தே பசுத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை விளங்கப்பெற்று ஸ்தூல–ஸூக்ஷ்ம–சரீரங்கள் நீங்கப்பெற்று எல்லாப் பற்றும் கழன்று சிவபெருமானோடு கலந்து அத்துவிதமாய்ப் பேரானந்தப் பெருவாழ்வு அடைதல் வேண்டும் என்னும் குறிப்பை உணர்த்துவதற்காகக் கற்பூர ஆராதனை செய்யப்படுகிறது.

சிவாகமம் கடல் போன்றது. இறைவன் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவர். இறைவனாலேயே திருவாய் மலர்ந்து அருளப்பட்ட சிவாகமங்களிலிருந்து சிவபூஜையின் தத்துவம் என்பது பற்றி தினையளவு எழுதி இதை ஸ்ரீ அகிலாண்டேச்வரியின் திருவடியில் சமர்ப்பிக்கிறேன். பஞ்சபூதக்ஷேத்திரத்திற்குள்

முக்கியமான அப்புக்ஷேத்திரமான திருவானைக்காவல் மஹாக்ஷேத்திரத்தைத் திருப்பணிச்செய்து கும்பாபிஷேகம் செய்வது எத்தனையோ ஜன்மாவில் செய்த தவப்பயன் ஆகும். எனவே ஸ்ரீஅகிலாண்டேச்வரி ஸமேத ஜம்புகேச்வரர் தேவஸ்தானம் திருப்பணிக்கமிட்டித் தலைவர் T. M. நாராயணசாமிப்பிள்ளை, M.A.B.L, அவர்களும், மேற்படி கமிட்டிக் குழுவினர்களும் நோயற்ற வாழ்வுடன் நீடூழிக் காலம் வாழவேணுமாய் எல்லாம் வல்ல இறைவனையும் இறைவியையும் வேண்டுகிறேன்.



ஸ்ரீ சந்த்ரசேகரமூர்த்தி

நித்திய பூஜையும் அதன் தத்துவமும்

நூன்முகம்: சர்வஜ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்த சக்தி, அநந்தசக்தி, சுதந்திரத்வம் என்னும் ஆறு குணமுடையவராய், அஷ்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான் எங்கும் வியாபகமாக இருப்பினும், சிவலிங்கம் முதலிய திருமேனியும், குருவும், சங்கமமும் இடமாகிக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர்.

சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல் விளங்கி நிற்பர்: மற்றவிடங்களில் பாலில் நெய் போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் யாவரும் பரமபதியான சிவ பெருமானை குரு, லிங்க, சங்கமம் ஆகிய இடங்களில் விதிப்படி சிரத்தையோடு வழிபட வேண்டும்.

இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாலும் செயற்பாலதேயாகும். மலம்நீங்கிய சிவஞானிகளும், பூர்வமலவாசனை தாக்காமையின் பொருட்டும் மேன்மேலும் சிவானந்தம் வளருதற் பொருட்டும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளை வழிபடுவர்.

ஆன்மாக்களை முக்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மைஞானம் பெற்று முக்தி அடைவர்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் இவை முறையாற் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

– தாயுமான சுவாமிகள்

விபூதி இல்லாத நெற்றி வீண்; சிவாலய மில்லாத ஊர் பாழ்; ஈச்வரபூஜை செய்யாத ஜன்மா பாழ்; சிவனைக் கூறாத வித்தை பாழ் என்று "ஸ்மிருதிசங்கிரஹம்' என்னும் நூல் கூறுகிறது.

பிறவிகளுள் சிறந்த மானுட ஜன்மத்தை முற்பிறப்பில் செய்த புண்ணியமேலீட்டினால் அடைந்த யாவரும் பசுபதியாகவும், உலகிற்குக் கர்த்தாவாயுமுள்ள சிவபெருமானைப் பூஜிக்க வேண்டும். அந்த சிவபூஜையானது ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என இருவகைப்படும்.

ஆசாரியரால் தீக்ஷை செய்விக்கப்பட்டு, அந்த தீக்ஷாகுருவால் கொடுக்கப்பட்ட மண்டலம், க்ஷணிகம், ஸ்படிகம் முதலான லிங்கங்களில் ஆன்மநலன் கருதிச் செய்யப்படுவது ஆன்மார்த்தமாகும்.

பரார்த்தபூஜை என்பது தனக்கும் பிறர்க்கும் அருள்பாலிக்கும் பொருட்டுச் சிவாலயங்களில் விளங்கும் ஸ்வாயம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷம், ஆசுரம், பாணம் என்ற ஏழுவித லிங்கங்களுள் ஒரு லிங்கத்தில் ஆதிசைவர்கள் எனப்படும் சிவாசாரியாரைக் கொண்டு செய்விக்கப்படும் பூஜையாகும்.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை என வுரைத் தருள
அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து."

– பெரிய புராணம்

இருபத்தெட்டு ஆகமங்களையும், இருநூற்றி ஏழு உபாகமங்களையும் தோற்றுவித்த பரமகருணாநிதியாகிய

இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூஜை என்பதை உணர்ந்த உமாதேவியார்

"இங்கு நாத! நீ மொழிந்த ஆகமத்தியல்பினால்
உனை அர்ச்சனை புரியப்
பொங்குகின்றது என்னாசை என்று இறைஞ்சிப்
போகமார்த்த பூண்முலையாள் போற்றி"

என்றபடி, ஆலயவழிபாட்டின் பெருமையையும் ஆகமங்களால் அருச்சிப்பதால் இறைவனுக்கு ஏற்படும் அளவு கடந்த அன்பையும், அவ்வன்பினால் ஆன்மாக்களுக்குக் கிடைக்கும் அறம்–பொருள் இன்பத்துடன், பேரின்பத்தையும் உலக மக்களுக்கு உணர்த்தவே திருவுளங்கொண்ட உமாதேவியார் காஞ்சிபுரம், திருவானைக் காவல், மாயூரம், மயிலாப்பூர் முதலிய இடங்களில் சிவபெருமானைப் பூஜித்தாள் என்று அறியப்படுகிறது.

எல்லாக் காரியங்களையும் நிறைவு செய்வதாலும், ஆன்மாவிற்கு ஞானத்தை அளிப்பதாலும் சிவபூஜை எனப் பெயர் பெற்றது.

அத்தகைய சிவபூஜை செய்பவன் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னி காரியத்தினால் சம்பத்தையும், ஜபத்தினால் பாபநிக்ரஹத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான்.

மதம் கொண்ட யானைகளும், காற்றைப்போல் வேகமாக ஓடும் குதிரைகளும், தேவவனிதைகளுக்கு ஒப்பான பெண்மணிகளும் எவருடைய இல்லத்தில் இருக்கின்றனவோ, அது முறையுடன் செய்யப்படும் சிவபூஜையின் பலன் என்ற வாக்கியங்களைக் கொண்டு, முறையுடன் செய்யப்படும்

சிவார்ச்சனை ஆன்மார்த்தபூஜையாயினும் பரார்த்தபூஜையாயினும் அது வேண்டிய பயனை அளிக்கக் கூடியதாகும்.

சிவதீக்ஷைபெற்ற அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் யாவரும் ஆன்மார்த்தபூஜை செய்யலாம்; பரார்த்த பூஜை செய்யக்கூடாது.

சிவதீக்ஷை பெற்றவர்களாயினும் சாதாரண அந்தணர் முதலானோர் மோஹத்தினால் பரார்த்த பூஜையைச் செய்வார்களேயானால், அரசனுக்கும் ராஷ்ட்ரத்திற்கும் நாசம் உண்டாகும். தனது ஜீவனத்திற்குச் சாமான்ய ப்ராஹ்மணர்கள் பரார்த்தமாகச் சிவனை அர்சிப்பார்களேயானால் ஆறுமாதத்தில் வீழ்ச்சி அடைவார்கள். ஆதலால் அத்தகைய சாமானிய அந்தணர்களைக் கொண்டு பரார்த்தபூஜை செய்வதை நீக்க வேண்டும்.

சிவப்பிராமணர் எனப்படும் ஆதிசைவர்களாலே ஆன்மார்த்தம், பரார்த்தம் இரண்டும் செய்யத்தகுந்தது. சிவபெருமானின் ஆணையின் வசமுள்ளவர்களான ஆதிசைவர்களுக்குப் "பரார்த்த பூஜை" விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஆத்மார்த்தபூஜையும் செய்யவேண்டும். சிவபெருமானின் ஆணைக்குட்பட்ட இவர்களுக்குப் "பரார்த்த பூஜை" தோஷமற்றது.

(தீக்ஷை பெற்று ஆன்மார்த்த பூஜையைத் தனியாகச் செய்யாத ஆதிசைவர்கள் தமது தீக்ஷையில் இஷ்டலிங்கமாகப் பெற்ற மூர்த்தியை பரார்த்தாலய சிவபூஜையுடன் பூஜை செய்யலாம்; இவ்வாறு செய்வது சம்பிரதாயம்)

சிவாலயங்களில் பரார்த்த பூஜை செய்யும் சிவாசாரியார்கள், பதினாறு வயதிற்கு மேல் எழுபது வயது வரையில் பூஜை செய்யலாம் என்று காமிகாகமம் கூறுகிறது.

இத்தகைய ஆசார்யரைக் கொண்டு பரார்த்தபூஜையை முறைப்படி செய்தால், அதிவிருஷ்டி, அனாவிருஷ்டி முதலான ஈதி-பாதைகள் இல்லாமலும், நீர்வளம், நிலவளம் முதலான செழுமையுடனும் உலகம் விளங்கும்.

ஆலயங்களில் செய்யப்படும் பூஜையானது உத்தமோத்தமம், உத்தமமத்யமம், உத்தமாதமம், மத்தியமோத்தமம், மத்தியம மத்தியமம், மத்தியமாதமம், அதமோத்தமம், அதமமத்தியமம் என்று எட்டுக்கால பூஜை அஜிதாகமத்தில் கூறப்படுகிறது. அவைகளுள் உத்தமத்தில் கடைசியான ஆறுகால பூஜையானது இங்கு விளக்கப்படுகிறது.

சூரியன் உதயமாவதற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகைக்கு ஆரம்பித்து நடத்தப்படும் பூஜை உஷ: காலம் எனப்படும். காரணாகம வாக்கியப்படி உஷ: கால பூஜை முடிவதற்கும் சூரியன் உதயமாவதற்கும் சரியாக இருக்க வேண்டும்.

ஆசாரியன் உஷ:காலத்தில், அதாவது இரவு 36 1/2 நாழிகை அளவில் எழுந்து அவசியமான நித்தியக் கடன்களை முடித்துக் கொண்டு, பல்துலக்கி, ஸ்நானம் செய்து (பஸ்மதாரணம்) விபூதி அணிந்து கொண்டு, பத்து ஆவர்த்தி பஞ்சாக்ஷரம் ஜபித்து, தூய்மையான வெண்மைவஸ்திரம் உடுத்திக்கொண்டு, ருத்ராக்ஷம் முதலிய பஞ்சாங்கபூஷிதராய், கையில் புஷ்பம் வைத்துக் கொண்டு, மூன்றே முக்கால் நாழிகைக்கு ஆலயத்துள் நுழைந்து, சுவாமியின் சன்னதியில் புஷ்பத்தை எதிரில் போட்டு

ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப் பிரார்த்தித்துப் பள்ளியறைக்குச் சென்று பாவனையினால் இறைவனுக்கு தந்ததாவனம், ஸ்நானம் முதலியவைகளைச் செய்வித்து அஷ்டபுஷ்பம் அணிவித்துச் சிவபெருமானை பாதுகையில் ஆரோகணித்து பிரதக்ஷிணமாக வந்து மூலகர்பகிருஹத்தில் வைத்து மூலலிங்கத்துடன் சேர்க்க வேண்டும்.

உதயத்திற்கு முன் ஒரு முகூர்த்தத்தில் {அதாவது இரண்டு நாழிகைக்குள்} உஷ:கால பூஜை செய்யவேண்டும் பின்னர் தேவியின் ஆலயம் சென்று பூஜை செய்யவேண்டும். நடராஜர், ஸோமாஸ்கந்தர் முதலிய மஹேச்வரபேதங்களுக்கும் மற்றைய பரிவாரமூர்த்திகளுக்கும் பூஜை செய்யக்கூடாது.

ஆசாரியனுக்கு ஆத்மசுத்தி முதலான பஞ்சசுத்தி, பலி போடுதல் முதலியன கிடையாது. இதனை காரணாகமம் உஷ:கால பூஜா விதியில் காண்க.

உஷ:கால பூஜைமுடிந்தவுடன் ஆசாரியன் யதோக்தமாக இரண்டு வித கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்த பின்னர், காலசந்திபூஜையை தொடங்க வேண்டும். காலசந்தி பூஜை தொடங்கும் முன்பு "தீர்த்த ஸங்கிரஹணம்" – அதாவது ஆறு, குளம் முதலிய இடங்களில் இருந்து திருமஞ்சனம் கொண்டு வரவேண்டும்.

தீர்த்த ஸங்க்ரஹணம்:

சிவபெருமான் அர்த்தயாமபூஜையின் முடிவில் சிபிகைமீது எழுந்தருள கீதம் நர்த்தனம் முதலிய வாத்யகோஷங்களுடன் சயனாலயத்திற்குச் சென்றதும், பரமசிவனுடைய ஜடையிலுள்ள கங்கை அங்கு பள்ளி அறையிலுள்ள மனோன்மனி அம்பிகையைப் பார்த்து வெகுவேகமாக அங்கிருந்து நீங்குவாள். மீண்டும் கங்கா

தேவியை பரமசிவனுடைய ஜடாமகுடத்தில் சேர்க்கும் பொருட்டு வேதியர் சுத்தமாக இருந்து, பலவித வாத்திய கோஷங்களுடனும் சகல உபசாரங்களுடனும், சுவர்ணம் முதலிய ஏதாகினும் ஒரு குடத்தில் நதியிலிருந்து நீரை நிரப்பி, மாவிலை தேங்காய் முதலியவற்றால் அலங்கரித்து, பரிசாரகரின் தலைமீது வைத்து குடை, வெண் சாமரங்களுடன் ஆலயத்தை வலம் வந்து பலிபீடத்தின் மீது அல்லது நந்தியின் மீது அல்லது சிவலிங்கத்தின் மீது விஸர்ஜனம் செய்ய வேண்டும். இதற்கு "கங்காஹரணம்" (தீர்த்த ஸங்க்ரஹணம்) என்று பெயர். இதன் பிறகு, காலஸந்தி தொடங்க வேண்டும்.

சூரிய உதயம் தொடங்கி ஏழரை நாழிகைக் காலம் காலஸந்தி பூஜா காலமாகும்.

அதில் முதலில் சூரியனை பூஜித்த பின்பு கணபதியைப் பூஜிக்கவேண்டும். அதன் பிறகு மஹேச்வர பேதங்களுக்கும், மூலலிங்கத்திற்கும், பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம் செய்யவேண்டும். நைவேத்யம் செய்யும் பொழுது முதலில் கணபதிக்கும் பிறகு மூலமூர்த்தியான சுவாமிக்கும், நடராஜர், ஸோமஸ்கந்தர் முதலான பரிவாரமூர்த்திகளுக்கும் நிவேதனம் செய்து, அதன் பிறகு அம்பாளுக்கு நைவேத்யம் முதலிய உபசாரம் செய்து, பலி போட்டு, மடப்பள்ளியிலிருக்கும் குண்டத்தில் நித்யாக்னிகாரியம் செய்து, நித்யோத்ஸவம் செய்து, சண்டேச பூஜையை முடிவாகச் செய்யவேண்டும் என்ற முறையானது காலஸந்தி பூஜைக்குரியதாகும்.

காலஸந்தி பூஜை முடிந்தவுடன் மூன்றரை நாழிகைக் காலம் ஓய்வு நேரமாகும்; அதாவது ஏழரை நாழிகைக்கு மேல்

பதினொன்றேகால் நாழிகை வரையில் பொதுமக்கள் தரிசனம் அர்ச்சனை முதலியன செய்யும் காலம்.

அந்தப் பதினொன்றேகால் நாழிகைக்குப் பிறகு உச்சிக்கால பூஜை செய்யவேண்டும்.

அதற்கு ஸ்நபனம் பஞ்சகவ்யம் வைத்துப் பூஜித்து, வாஸ்துநாதனைப் பூஜித்துக் கொண்டு, த்வாரபூஜை செய்து லிங்கசுத்தியுடன் சுவாமிக்கு முறையாக அபிஷேகம் செய்து போகாங்கம் வரையில் பூஜித்துத் தேவிக்கும் அபிஷேகமும் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அலங்காரமும் செய்து சண்டேச்வரருக்குப் பூஜை செய்ய வேண்டும்.

காலையிலும், உச்சிக்காலத்திலும், சாயங்காலத்திலும் பலி போடவேண்டும் என்ற காரணாகம விதிப்படி உச்சிக்காலத்தில் பலி போட்டுப் பூஜையை முடிக்கவேண்டும்; ஸ்நபனாங்கமாக ஹோமம் செய்யவேண்டும்; பரிவாரங்களுக்கு பூஜை நைவேத்யம் கிடையாது.

<u>அபிஷேக திரவியங்களின் வரிசையும் அளவும் பலனும்</u>

எண்	திரவியம்	அளவு	பலன்
1.	வாசனைத்தைலம்	ஒருபடி	சுகமளிக்கும்
2.	மாப்பொடி	ஒருபலம்	கடனைத்தீர்க்கும்
3.	நெல்லிமுள்ளி	ஒருபலம்	அரசன் வசம்
4.	மஞ்சள்பொடி	ஒருபலம்	ரோகத்தைப் போக்கும்
5.	ஜலதிரவியம்	இரண்டுபலம்	இஷ்டத்தை அளிக்கும்
6.	பஞ்சகவ்யம்	ஒரு மரக்கால்	பாபத்தைப் போக்கும்
7.	பஞ்சாமிர்தம்	ஒரு மரக்கால்	புஷ்டியளிக்கும்
8.	பசுவின் நெய்	அரைப்படி	மோக்ஷமளிக்கும்

9.	பசுவின் பால்	ஆறு படி	ஆயுளைக் கொடுக்கும்
10.	பசுவின் தயிர்	12 படி	பிரஜாவ்ருத்தி உண்டாகும்
11.	தேன்	ஒரு ஆழாக்கு	சுகமளிக்கும்
12.	கரும்பின்சாறு	ஒரு படி	ஆரோக்யம் அளிக்கும்
13.	சர்க்கரை	மூன்று பலம்	எதிரிகளை அழிக்கும்
14.	பழவர்கம்:- வாழைப்பழம், மாம்பழம், மாதுளை, பலா	 25 15 10 1	 பயிரை வளர்க்கும் வச்யம் கோபத்தைப் போக்கும் புஷ்டியளிக்கும்
15.	எலுமிச்சம்பழம்	10	நேர்மை
16.	இளநீர்	25	போகமளிக்கும்
17.	அன்னாபிஷேகம்	ஒரு மரக்கால்	சாம்ராஜ்யமளிக்கும்
18.	சந்தனம்	ஒரு மரக்கால்	லக்ஷ்மியைக் கொடுக்கும்
19.	கும்பம்	10	மோக்ஷப்ரதம்
20.	பத்ராம்பு	ஒரு மரக்கால்	உலகவசம்
21.	தாராம்பு	ஒரு மரக்கால்	இன்பமளிக்கும்
22.	ச்ருங்கோதகம்	ஒரு மரக்கால்	தைரியத்தை அளிக்கும்
23.	ரத்னோதகம்	ஒரு மரக்கால்	லக்ஷ்மீப்ரதம்
24.	குசோதகம்	ஒரு மரக்கால்	தூய்மையளிக்கும்
25.	அர்க்யோதகம்	ஒரு மரக்கால்	ஞானமளிக்கும்
	சங்கோதகம்	ஒரு மரக்கால்	புண்யப்ரதம்
	தீப எண்ணை	1 படி	

ஜலம் காலையில் – 5 பாரம், உச்சியில் – 10 பாரம், மாலையில் – 3 பாரம்; மற்றக் காலங்களில் விருப்பம் போல் (பயன்-இஷ்டசித்தியளிக்கும்).

இவ்வாறு ஒருபடி எண்ணெய் அபிஷேகம் செய்தால் மேற்கூறிய இந்த திரவ்யங்கள் முறையானதாகும். எண்ணெய் அதிகமானால் சாமான்களை அதிகப்படுத்தவேண்டும். எண்ணெய் குறைந்தால் அதன்படி சாமான்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இதை நித்திய–பூஜா–லக்ஷண ஸங்கிரஹத்தில் காணலாம்.

அபிஷேகம் முடிந்தவுடன் சுத்தான்ன நிவேதனம் செய்து விட்டு திருஒத்தாடைபோட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் ஆசாரியனைக் கொளுத்துவார் என்பது ஆகமவிதி. வஸ்திரம், சந்தனம், புஷ்பம் அணிவித்து , நைவேத்தியம் தீபாராதனை செய்ய வேண்டும்.

சாயங்காலம் :

சூர்ய அஸ்தமனத்திற்கு முன்பு மூன்றே முக்கால் நாழிகை தொடங்கிச் செய்யப்படும் பூஜை பிரதோஷ பூஜையாகும். இது நித்ய பிரதோஷம் எனப்படும்.

நித்யநைமித்திக பிரதோஷம் என்பது கிருஷ்ணபக்ஷ த்ரயோதசியன்று மாலையில் செய்யப்படும் பூஜையாகும். நித்யத்தில் நைமித்திகம் என்று தீப்தாகமம் கூறுகிறது.

நித்யபிரதோஷபூஜை :

இதில் முதலில் நடராஜப் பெருமானுக்கு நிவேதனம் செய்து, பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம் தீபாராதனை செய்து, பிறகு சோமாஸ்கந்தருக்கு நிவேதனம் செய்து, அம்பாளுக்கு நிவேதனம் செய்து முடிப்பதாகும்.

நைமித்திக பிரதோஷம் :

மாலையில் முதலில் நந்திதேவருக்கு நிவேதனம் செய்ய வேண்டும். நித்ய பிரதோஷத்திற்கு "நந்திநிவேதனம்" கிடையாது.

சூரிய அஸ்தமனம் தொடங்கி 7 1/2 நாழிகையில் செய்யப்படும் பூஜை "மஹாசந்தி" எனப்படும். (சாயரக்ஷை பூஜையாகும்) இதன் ஆரம்பத்தில் ஆசாரியன் தேஹசுத்தி முதலிய பஞ்சசுத்திகளைச் செய்து கொண்டு ஸ்நபநபூஜையுடன் த்வாரபூஜை செய்து, மூலமூர்த்திக்கு அபிஷேகம் அலங்காரம் நைவேத்யத்துடன் ஷோடச உபசாரம் செய்ய வேண்டும்.

ஷோடசோபசாரம் என்பது : 1. ஆவாஹனம் 2. ஸ்தாபனம் 3. பாத்யம் 4. ஆசமனம் 5. அர்க்யம் 6. அபிஷேகம் 7. வஸ்த்ரம், சந்தனம் 8. புஷ்பாலங்காரம், 9. தூப – தீபம், 10. நிவேத்யம் 11. பலி 12. ஹோமம் 13. நித்யோத்ஸவம் 14. கேயம்வாத்யம் 15. நிருத்தம் 16. உத்வாஸநம் என்ற பதினாறு உபசாரம் ஆகும்.

அஜிதாகமத்தில் கீழ்வரும் பதினாறு தீபங்களும் 'தீப ஷோடசோபசாரம்' என்று பெயர்பெறும்.

வரிசை	பொருள்	பயன்
1.	தூபம்	உற்சாஹத்தைத் தரும்.
2.	ஏகதீபம் (உருக்களி)	விழிப்பைத் தரும்.
3.	அலங்கார தீபம் (புஷ்ப தீபம்)	சாம்ராஜ்யத்தைத் தரும்.
4.	நாக தீபம்	லோகாதிபத்யம் தரும்.
5.	வ்ருஷப தீபம்	அரசையளிக்கும்.
6.	புருஷாம்ருக தீபம்	–
7.	சூல தீபம்	வயிற்றுவலி நீக்கம்.
8.	ஆமை தீபம்	ஜுரகண்டத்தைத் தடுக்கும்.
9.	கஜதீபம்	ஐச்வர்யத்தைக் கொடுக்கும்.
10.	சிம்ம தீபம்	ஆயுளைக் கொடுக்கும்
11.	வ்யாக்ர தீபம் (புலி)	விலங்குகளிடத்தில் பயத்தைப் போக்கும்.
12.	கொடி தீபம்	சோபையைத் தரும்.
13.	மயூர தீபம் (மயில்)	புத்திரப்பேறளிக்கும்.

14.	பஞ்சதட்டுடன் பூர்ணகும்பம்	சாம்ராஜ்யமளிக்கும்.
15.	நக்ஷத்திர தீபம்	பாதுகாப்பு, ஆதிபத்யமளிக்கும். (காவல் துறை அதிகாரி)
16.	மேரு தீபம்	எல்லா நாட்டிலும் செல்வாக்கு அளிக்கும்.

நீராஜனம், விபூதி சாத்துதலும் ரக்ஷையுமாகும். அவை பதினாறு உபசாரத்தில் அடங்கியவை.

மேற்கூறியவாறு பதினாறு உபசாரங்களையும் செய்து பழம், தாம்பூலம் நிவேதனம் செய்து கற்பூரஹாரத்தி செய்து சுளுகோதக ஸமர்ப்பணம் செய்து ப்ரார்த்திக்கவேண்டும்.

சுளுகோதகம் என்பது ஆசாரியன் மூலமந்திரத்தை இயன்ற அளவு ஜபம் செய்து அம்மந்திரத்தை கையில் புஷ்பத்துடன் சேர்த்து கவசமந்திரத்தினால் அவகுண்டம் செய்து தீர்த்தத்தைக் கீழே விட்டு சுவாமியின் வரதஹஸ்தத்தில் சேர்த்தல் ஆகும்.

இவ்வாறு ஜபஸமர்ப்பணம் செய்யாத பூஜை பயனற்றதாகும்; சுவாமிக்கும் ஆசாரியனுக்கும் தொடர்பு அற்று, பூஜை பலன் கிட்டாது. ஆதலால் சுளுகோதக ஸமர்ப்பணம் முக்கியமாகும்

இவ்வாறு சாயங்கால பூஜை செய்யவேண்டும்.

சாயரக்ஷையில் மஹேச்வரன் முதலிய மூர்த்திகளுக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும், பிறகு தேவிக்கும், சண்டீசன், பைரவன் முதலானவர்களுக்கும் பூஜை உபசாரம் செய்து பலிஹோமம் நித்யோத்ஸவம் செய்யவேண்டும். இது சாயரக்ஷையின் முறையாகும்.

அர்த்தயாம பூஜை:

சாயரக்ஷா காலபூஜை முடிந்தவுடன் தொடங்கி மூன்றே முக்கால் நாழிகை அளவில் அர்த்தயாம பூஜை செய்யவேண்டும். அதாவது ஏழரை நாழிகைக்கு மேல் பதினொன்றரை நாழிகைக்குள் செய்ய வேண்டிய பூஜை அர்த்த–யாமபூஜை எனப் படும்.

சுவாமிக்கு அபிஷேகத்தின் பொருட்டு ஸ்நபனபூஜை செய்து, பஞ்சாம்ருதம், பஞ்சகவ்யம் செய்து கொண்டு, சுவாமிக்கு சலாசனம் பூஜை செய்து, அபிஷேகம், நிவேதனம், தூபம், தீபம் கொடுத்து, கௌரிக்கும் நிவேதனம் செய்து சயனாலயபூஜையுடன் க்ஷேத்ரபால பூஜை செய்து முடிக்கவேண்டும்.

அர்த்தயாமத்தில் அபிஷேகம் செய்யலாம். செய்யாமலும் இருக்கலாம். அபிஷேகம் செய்வதானால் சுவாமிக்கு மாத்திரம் செய்யலாம். அவ்வாறு செய்யும் அபிஷேகத்திற்கு நல்லெண்ணெய் கூடாது; ரசவர்க்கம் சேர்ந்த பஞ்சாம்ருதம், தேன், சர்க்கரை, பசுவின்பால், இளநீர், சந்தனம் ஆகியவை விசேஷ திரவியங்களாகும்; மற்றவை வேண்டியதில்லை. தைலாபிஷேகம் செய்யவிரும்பினால், சந்தனாதி தைலம் முதலிய வாசனை தைலத்தால் அபிஷேகம் செய்யலாம்.

பூஜையில் ஐந்தொழில் :

அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்தியம் காத்தல் தொழில், பலிபோடுதல் சங்காரத் தொழில், தீபம் திரோபாவத் தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

மேற்கூறியவாறு ஆறுகாலபூஜையின் முறைகளைச் சில ஆகமங்களின் சாரங்கொண்டு எமது புத்திக்கு எட்டியவாறு

கூறியுள்ளோம். "ஆகமவிபின" என்றார் ஒரு அபிக்ஞர். "ஆகமம்" என்பது நுழையமுடியாத காடு. அது 28 எண்ணை உடையதாயினும், 207 உபாகமங்களை உடையது. இறைவனின் திருவாக்கு. கேட்பவர் தகுதிக்கு ஏற்றவாறு சிலவற்றைக் கூட்டியும், குறைத்தும் மாற்றியும் கூறியிருக்கிறார் பரமகருணாநிதியான பரமசிவன். இதைக் கண்ணுரும் அன்பர்கள் குற்றம் நீக்கிக் குணம் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இக்கட்டுரையைத் திருக்கேதீச்வரம் ஸ்ரீகௌரீ அம்பாள் சமேத ஸ்ரீ கேதீச்வரசுவாமி திருவடிகளில் மலராக கும்பாபிஷேக மலருக்கு அளிக்கிறோம். திருக்கேதீச்சரம் ஆலய தர்ம கர்த்தாக்களும் திருப்பணிக் குழுவினர்களும் நோயற்ற வாழ்வுடன் சகல போக–போக்யங்களைப் பெற்று நூறாண்டு வாழவேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மழை வழங்குக மன்னன் ஓங்குக
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

சிவம்

கோ-பூஜையின் மஹிமை

ஸுராஸுரைஉமயுஜாநாத் க்ஷீரொஉாஉணுவொதஜாக்।
வஞ்மாவஜ்லஜுதுனா: ஸவூரொகஸு ஜாதா:॥
நதா ஜதா ச ஸுரஜீ ஸுஶீலா ஸுஉநாஸ்யா।
மாவ: ஶிவஉபாக் வஞ க்ஷிதிம் வுாவ்தாஸ்ஜிவெஜ்யா॥

முன்னொரு சமயம் பாற்கடலைக் கடையும்போது உத்தமமான அந்தப் பாற்கடலிலிருந்து எல்லாவுலகத்திற்கும் தாயாக நந்தை, பத்ரை, சுரபி, சுசீலா, சுமனா என்று ஐந்து பசுக்கள் உண்டாகி இறைவனான சிவபெருமானுடைய விருப்பத்திற்கு இணங்கக் கயிலையங்கிரியினின்றும் பூமியை அடைந்தன.

ஸவூரொகொவகாராய உம் ஜெவாநாம் தவூணாய ச।
மொஜாதா: ஹிதா ஜூஜள ஸ்நாநாயஉம் ச ஶிவஸு ச॥
மொஉயம் ரொசநா ஜூகும் க்ஷீரம் உயி வுதம் மவாஜ।
ஷஉஜாநி வவிசாணி ஸவூஸிஜிகராணி ச॥

எல்லாவுலகிற்கும் நன்மையின் பொருட்டும், தேவர்களுக்கு ஹவிஸ் முதலான வடிவமாக அர்பணம் செய்யும் பொருட்டும் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யவேண்டியதின் பொருட்டும் தாய் போன்ற பசுக்கள் பூமியின் கண் இருக்கின்றன. இதை "ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணி" என்று அருணந்திதேவர் கூறுகிறார்.

இவைகளின் பால், தயிர், நெய், கோஜலம், கோமயம் கோரோசனை இவ்வாறும் தூய்மையுள்ளன. தூய்மைப் படுத்தும் வல்லமையுள்ளன. சகலசித்திகளையும் அளிக்கவல்ல வல்லமை உடையன.

மொஹியூஜா: வுவதூஜெ மொஷெ ஜெவா: வுதிஷ்ஜிதா:।
மொஹிவெஉாஜ்லஜுதீணா: ஸஷஉஜ-வஉ-கூஜா:॥

பசுக்களால் யாகங்கள் நடைபெறுகின்றன. பசுக்களிடத்தில் தேவர்கள் இருக்கின்றார்கள். பசுக்களிடத்தினின்றும் ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்கள் வெளிவந்தன. பசுக்களின் அங்கங்களில் பிரமன் முதலிய தேவர்களும் வீற்றிருக்கின்றார்கள்.

அதாவது கொம்புகளின் அடிபாகத்தில் பிரமவிஷ்ணுக்களும், சிரசின் நடுவில் பூதகணங்களுடன் மஹாதேவனும், கொம்பின் நுனியில் சர்வ–தீர்த்தங்களும் ஸ்தாவர–ஜங்கமங்களான பொருள்களும், நெற்றியில் விநாயகனும், நாசிகையின் நடு எலும்பில் ஷண்முகனும், மூச்சுக்காற்றின் குஹையில் நாகங்களும், காதுகளில் அச்வினி தேவர்களும், கண்களில் சூரிய–சந்திரர்களும், பற்களில் மருத்துக்களும், நாக்கில் வருணனும், ஹூம்காரத்தில் ஸரஸ்வதியும், கன்னங்களில் யமன் யக்ஷன் இருவரும், மேல்–கீழ் உதடுகளில் காலை–மாலை இரு சந்தியாகாலங்களும், கழுத்தில் வாயுதேவனுடன் இந்திரனும், குளம்புகளின் நடுவில் கந்தர்வர்களும், குளம்புகளின் நுனியில் பன்னகர்களும், குளம்புகளுடைய பின்புறங்களில் அப்ஸரஸ்த்ரீகளும், தசநாடிகளில் ருத்ரர்களும், எல்லா சந்திகளிலும் தசவாயுக்களும், பின்புறமுள்ள தட்டுக்களில் பித்ருக்களும், மார்பில் உமையும், அபானத்தில் இலக்குமியும், கோமயத்தில் ஆதித்யர்களும், கோமூத்ரத்தில் கங்கையும், உரோமங்களின் நுனியில் இருடிகளும், வயிற்றில் மலை காடுகளுடன் பிருதிவியும், முலைக்காம்புகளில் நான்கு சமுத்ரங்களும் இருக்கின்றன.

கோமயாதுபஜாத: ஸ்ரீமாந் பில்வவ்ருக்ஷ: ஶிவப்ரிய:।
தஸ்யாஸ்தே பத்மஹஸ்தா ஸ்ரீ: ஸ்ரீவ்ருக்ஷஸ்தேந கீயதே॥

கோமயத்தினின்றும் சோபையுள்ள சிவனுக்குப் பிரியமுள்ள வில்வ விருக்ஷம் உண்டாயிற்று. அதில் தாமரைமலருடன் கூடிய

இலக்குமி வசிக்கிறாள். அதனால் அந்த வில்வமரத்திற்கு ஸ்ரீவிருக்ஷம் என்று பெயர் உண்டாயிற்று.

உலகத்தின்கண் மங்கலப் பொருள் எட்டினுள் பசுவும் ஒரு திரவ்யமாகும். அதாவது;

𑌲𑍋𑌕𑍇𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌙𑍍𑌗𑌲𑌾𑌨𑍍𑌯𑌷𑍍𑌟𑍌 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌗𑍌-𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌆𑌪𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌤𑌥𑌾𑌷𑍍𑌟𑌮𑌃॥

அரசன், அக்னி, ஆதித்யன், ஹிரண்யம், புனல், நெய், பசு, அந்தணன் என்ற இவ்வெட்டும் மங்கலங்கள் எனப் பெயர்பெறும். இவை உலக நன்மைக்கு உபயோகப்படும் பொருள்கள்.

தினந்தோறும் காலையில் எழுந்து மௌனமாகப் பசுக் கொட்டிலில் சென்று கோகுலத்தை நமஸ்கரித்து, பழம் தாம்பூலம் அளித்து கோஸாவித்ரீ ஜபம் செய்யவேண்டும். ஆன்மார்த்த சிவபூஜையின் முடிவில் கபிலாபூஜையைப் பசுக்களின் சமீபம் சென்று செய்யவேண்டும்.

𑌆𑌵𑌾𑌹𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑍁𑌰𑌭𑍀𑌂 𑌲𑍋𑌕𑌮𑌾𑌤𑌰𑌮𑍍।
𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑍇 𑌦𑍇𑌵𑍈𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍈𑌃 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑍈𑌸𑍍𑌤𑌥𑌾॥
𑌅𑌮𑍃𑌤𑌂 𑌸𑍍𑌰𑌵𑌸𑍇 𑌦𑍇𑌵𑌿 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌿।
𑌧𑌾𑌰𑌯𑌸𑍍𑌵 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌿 𑌦𑍁𑌃𑌸𑌹𑌾𑌤𑍍 𑌦𑍁𑌃𑌖𑌸𑌾𑌗𑌰𑌾𑌤𑍍॥

மூன்று உலகத்தில் உள்ள தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்களால் பூஜிக்கப்படுபவளாய், உலகமாதாவாய் இருக்கிற தேவியான சுரபியை (காமதேனுவை) நான் ஆவாஹனம் செய்கிறேன்.

ஹே தேவி, எல்லாத் தருமங்களையும் செய்பவளே! அம்ருதத்தைச் சுரப்பவளே!, சகிக்க முடியாததான துக்க

சாகரத்தினின்றும் கரையேற்று என்று கூறி ஆவாஹனம் செய்ய வேண்டும்.

சூமாவொ சுழூநு என்ற வேதமந்திரம் சொல்லி ஆவாஹனம் முதலியது செய்து, முன்கூறியவாறு அங்கபூஜை செய்து, அன்னம், பழம், அருகு முதலிய கபளம் கொடுக்கவேண்டும். அவ்வாறு கபளம் கொடுக்கும்போது,

> சுஜூதஃயமொா தூளெ! ஸுஈஙஹெ! ஜொகயாஸிணி!।
> ஐஃம் ஶூாஸம் ஶூஹாண சுூ ஐஉம் ெஃ வூதஃ உதூஃ॥

அமிருதத்தின் பொருட்டுப் பாற்கடலைக் கடையும்போது உண்டானவளே, உலகத்தைக் காப்பாற்றுபவளே, ஹே சுரபி, நீ இந்த கபளத்தை ஏற்றுக்கொள். இது என்னுடைய உத்தமமான விரதம் என்று கூறி இவ்வாறு செய்தால் பயங்கரமான பயத்தினின்றும் காப்பாற்றப்படுகிறான்.

பசுவைத் தொடுவதால் பாபங்களினின்றும் விடுதலை பெறுகிறான். வசிஷ்டர், விச்வாமித்திரர் ஜஹ்நு மஹரிஷிகளால் வந்திக்கப்படும் கபிலையானவள் (பசு) எனது முன்பும் பின்பும் இருந்துக் கொண்டு என்னுடைய செய்யத்தகாத (செய்த) பாபங்களினின்றும் விடுதலை பெறச்செய்வாயாக.

> மாவொ ெஃ சுமூதஃ ஸஙு மாவொ ெஃ ஸஙு வூஷுதஃ।
> மாவொ ெஃ ஹூஉயெ நிதூம் மவாம் ஃயெூ வஸாஃூஹஃ॥

இந்த மந்திரத்தை மூன்று வேளைகளிலும் சொன்னால் சகலபாபங்களிலிருந்தும் விடுபெற்று முடிவில் முக்தி பெறுகிறான்.

– ஸகலாகம ஸார ஸங்க்ரஹம்

சிவாகம சிவார்ச்சனை

யவஊ-வஊஷஶிநொஶ் ஶண்யெ ஸஞிவிஷ்டம்
ஹுஜஹ-வஶய-ஹாஶம் ஹஸூஶிஜ்ஶாஜஶீஶழ।
ஹரிண-வாஶஶுவாணிம் உாஶு உந்ராயபு-ஶளஷிம்
ஹூஉய-கஶஶ-ஶயெ ஸஜுதம் ஷிஜயாஶி ॥

— சிவத்தியானம்

"நரைமலிதரு மளறொடுமுகை நகுமலர் புகை மிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடுமடியவர்
குறைவில பதமனை தரவருள் குணமுடை யிறையுறை வனபதி
சிரைபுனலமர் சிவபுரமது நினைபவர் செயமகள்தலைவரே"

மணம் நிறைந்த சந்தனக்குழம்பும், அரும்புகளாய் விளங்குகின்ற பூக்களும், மணம் மிக்க தூபமும், நன்கு எரிகின்ற தீபமும், நிறைவாயுள்ள நீரும் இவைகளைத் துணைகளாகக் கையிற் கொண்டு அருச்சித்தும், தூபதீபங்கள் காட்டியும், தன்னை என்னாளும் தவறாது மனத்தினால் நினைத்தும், வாக்கினால் மந்திரங்கள் சொல்லி வாழ்த்தியும் வணங்குகின்ற அடியார்கள் தங்கள் அறிவுநிலைக்குத் தக்க அளவில் குறையாத சிவசாமீப்ய முக்தியை அடையும்படி அருள்செய்கின்றச் சிவபெருமான் என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு.

யெ உாயஶ ஶுஸ-ஹுவநொஜ்வ-ஹொஶ-காஶாஃ
கூாழ கூஉபூயதி விவிஶெஃ யஜநவூகாஶெஃ।
தெஹூ வூஶாய வாஶெஶ்வஸாயகெஹூஃ
ஹொஶாநு உஶாஷி தஉநதஶஶெவ ஶொக்ஷழ॥

எந்த ஆன்மாக்கள் சுத்தபுவனங்களில் வஸிக்கும் விருப்பத்துடன் உன்னை அனேகவிதமான பூஜா முறைகளால் அர்ச்சிக்கிறார்களோ, அவர்களின் பொருட்டு முதலில் போகத்தைக் கொடுத்துப் பின் மோக்ஷத்தையுமளிக்கிறாய் என்று அகோர

சிவாசாரியார் பஞ்சாவரண ஸ்தோத்திரத்தில் கூறியிருக்கிறார். "இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோக மாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே" என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் கூறியுள்ளார்.

செல்வம் செழிக்கவும், இன்பமாக வாழவும் இறைவனுடைய அருள்வேண்டும். இறைவனுடைய அருள்பெற பக்திசெய்தலே சிறந்த சாதனம். பக்தி செய்யப் பல வழிகள் உண்டு.

ஶ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்।
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதனம்॥

இறைவனுடைய புண்யசரித்திரங்களைக் கேட்டல்: சமயாசாரியர்கள் அருளிச்செய்த தேவாரம், திருவாசகம் போன்ற தோத்திரங்களைச் சொல்லித் துதித்தல்; இடைவிடாது தியானித்தல்; இறைவன் திருவடிகளைச் சேவித்தல்; இறைவனுக்குரிய புஷ்பங்கள் பத்திரங்கள் இவைகளால் அர்ச்சனைச் செய்தல்; வணங்குதல்; இறைவனுக்குத் தோழனாதல், தன்னையே அர்ப்பணம் செய்தல் என்று ஒன்பது வகையாக பக்தி காணப்படுகிறது. அதனுள் அர்ச்சனை என்பதும் ஒன்றல்லவா ?

"அர்ச பூஜாயாம்" என்றபடி அர்ச்சனை என்பதற்குப் பூஜை என்பது பொருள். இறைவனுக்குப் பூஜாமுறைகளைக் கூறும் மூலாகமம் நித்யார்ச்சனாவிதி படலம், பச்சிமத்வாரார்சனாவிதி படலம் என்று படலங்களுக்குப் பெயர் கொடுத்துப் பூஜை முறைகளைக் கூறுகிறது. எனவே, பூஜை என்பதும் அர்ச்சனை என்பதும் ஒன்றே.

அநந்தாஸனம், சிம்மாஸனம், யோகாஸனம், பத்மாஸனம், விமலாஸனம் என ஐந்து ஆஸனங்களின்மேல் வீற்றிருக்கும்

இறைவனைப் பூஜிக்கும் முன் செய்யப்படும் ஆஸனபூஜைக்கு, "சக்தியாதி சக்திபர்யந்தார்ச்சனை" என்று பெயர். அதாவது, ஆதார-சக்திமுதல் குடிலா-சக்தி வரையிலுள்ள ஆஸன தேவதைகளையும் அதனுள் அடங்கிய முப்பத்தாறு தத்துவங்களையும் தியானித்துச் செய்யப்படும் அர்ச்சனை.

அதன்பிறகு தத்வாதீதனான இறைவனை மந்திரவடிவம் உள்ளவனாகத் தியானித்து கலை, தத்வம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்ற ஆறு அத்வாக்களால் செய்யப்படும் அர்ச்சனைக்குப் பெயர் ஷடத்துவார்ச்சனை.

இறைவனை ஆவாஹனம் செய்து பாத்யம் அர்க்யம் ஆசமனம் கொடுத்து, சந்தனம் முதலிய உபசாரத்திற்குப் பிறகு செய்யப்படும் அர்ச்சனை புஷ்பாஞ்ஜலித்ரயார்ச்சனை. அதாவது ஆத்ம-வித்யா-சிவ தத்துவங்களை நினைத்து இம்மூன்று தத்துவங்களுக்கும் பரமகர்த்தாவாக இறைவனை நினைத்து மூன்று முறை புஷ்பங்களால் அர்சித்தல்.

அவ்வாறே, "அஷ்ட புஷ்பிகயாப்யர்ச்ய" எட்டு புஷ்பங்களைக் கொண்டு எட்டு அர்ச்சனை செய்வது அஷ்ட புஷ்பார்ச்சனை.

வெள்ளெருக்கு, சண்பகம், சுரபுன்னை, நந்தியாவர்த்தம், பாதிரி, கண்டங்கத்தரி, அலரி, தும்பை என்ற இவைகள் அஷ்டபுஷ்பங்களாம்.

நமஸ்காரத்தை முடிவிலுடைய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்ற ஐந்து பிரம மந்திரங்களாலாவது, பவன், சர்வன், பசுபதி, உக்ரன், ருத்திரன், ஈசானன், மஹாதேவன், பீமன் என்ற எட்டு மூர்த்தி அதிபதிகளையாவது சொல்லி அஷ்டபுஷ்பங்களைச் சாத்தி

அர்ச்சித்தல். இவைகள் ஆத்மார்த்த–பரார்த்த பூஜைகளுக்கு இன்றியமையாதன என்று மூலாகமங்கள் கூறுகின்றன.

நம: என்ற சொல் தன்னைக்காட்டிலும் மேலானவன் என்று உணர்த்தும் பொருளுடையது. மிக்காரும் ஒப்பாருமில்லாதவனாயும் சேர்ந்தறியாக் கையனாயுமிருக்கின்ற இறைவனுக்கு இவ்வாறு சிவாகமங்களில் காணப்படுவது போல வேதங்களிலும், புராணங்களிலும், அர்ச்சனை முறைகள் காணப்படுகின்றன. அவைகள் அஷ்டோத்தரசத–நாமம், த்ரிசதி, ஸஹஸ்ர–நாமம், சதஸஹஸ்ரநாமம் = லக்ஷம் என்று எண்ணிக்கை வகையால் பல பிரிவுகள் உண்டு.

அவற்றுள் அஷ்டோத்தர–சதம் என்பது அந்தந்த தேவதைகளுக்கு விருப்பமான உரிய பத்திர–புஷ்பங்களைக் கொண்டு நூற்றெட்டுப் பெயர்களைச் சொல்லி அர்ச்சிப்பது.

பார்வதிதேவியார் வில்வ–தளங்களால் இந்த அர்ச்சனையைச் சிவபெருமானுக்குச் செய்து பாதிசரீரத்தைப் பெற்றாள் என்று மஹா ஸ்காந்தம் சொல்லுகிறது.

கணபதி, சுப்பிரமணியர், தேவி, துர்க்கை, லக்ஷ்மி, விஷ்ணு, ஸூர்யன் முதலான எல்லா மூர்த்திகளுக்கும் இந்த அர்ச்சனையைச் செய்தால் எல்லாவிதமான பலன்களையும் அடையலாம் என்று 'சச்சுபுடம்' என்ற நூல் அறிவிக்கிறது.

முந்நூறு பெயர்களைச் சொல்லி அர்ச்சிக்கப்படும் மந்திரத்திற்கு திரிசதி என்று பெயர். யஜுர்வேதத்தின்கண் விளங்கும் ருத்ரப்பிரச்னத்தில் "நமோ ஹிரண்ய பாஹவே" எனத்தொடங்கி நம ஆமீவத்கேப்ய:, என்று முடிவாகவுள்ள முந்நூறு

அர்ச்சனை ருத்ரத்ரிசதி அர்ச்சனை. இதைச் செய்தால் ஈச்வரனுக்கு ருத்ராபிஷேகம் செய்த பலன் உண்டாகும்.

தேவிக்கும் த்ரிசதி அர்ச்சனை உண்டு. இது, தேவியால் ஹயக்ரீவருக்கும், ஹயக்ரீவரால் அகஸ்தியருக்கும் உபதேசிக்கப் பெற்றது. பஞ்சதசாக்ஷரீ மஹாமந்திரத்தை முதலெழுத்தாகக் கொண்டது. இதற்குப் பெயர் லலிதா த்ரிசதி அர்ச்சனை. இதைத் தேவிக்கு முறையோடு செய்தால், தனம், கல்வி, தளர்வறியாமனம், தெய்வவடிவம் முதலிய நல்லனவெல்லாம் கிடைக்கும்.

முருகனுக்கும் த்ரிசதி இன்றியமையாததாக விளங்குகிறது. அதில் சரவணபவ என்ற அக்ஷரங்கள், ஒவ்வொரு அர்ச்சனை தோறும், குமாரதந்திர ஆகமத்தில் காணப்படும் மந்த்ராவதார முறைப்படி மாறிமாறி அமைந்து காணப்படுவதால் மிகச் சிறந்த அர்ச்சனையாகக் கருதப்படுகிறது. இதற்குப்பெயர் ஷடக்ஷரத்ரிசதி அர்ச்சனை. இதை முறையோடு செய்பவர் அல்லது செய்விப்பவர் சத்ருபாதையினின்றும் நீங்கப்பெற்று ஷட்கர்மசித்திகளைப் பெறுவார்கள் என்று சுருதி கூறுகிறது.

இதுபோல் ஆயிரம் அர்ச்சனை கொண்டது ஸஹஸ்ர நாமார்ச்சனை. இந்த ஸஹஸ்ர நாமார்ச்சனையை நூறு தடவை செய்தால் சதஸஹஸ்ரநாமார்ச்சனை = லக்ஷார்ச்சனை. இவைகள் தனித்தனி விசேஷ பலன்களைத் தரக்கூடியன.

அஷ்டோத்தரசதநாம அர்ச்சனைக்கு தேங்காய், பழம், தாம்பூலம், நிவேதனம் செய்து கர்ப்பூரஹாரத்தி செய்து பிரசாதம் வழங்கவேண்டும்.

த்ரிசதி முதலான அர்ச்சனைக்கு வடை, பாயஸம் மற்றும் சித்ரான்ன–வர்க்கங்களும் நிவேதனம் செய்வது சாலச்சிறந்தது.

விசேஷமாகச் செய்வதற்கு விசேஷபலன் உண்டு என்பது முதியோர் வாக்கு.

பாயஸம் பாக்யவ்ருத்தி: ஸ்யாத் மாஷாபூபம் தனப்ரதம்।
நாரிகேலம் ஜயம் ப்ரோக்தம் பலைரபீஷ்டஸித்திதம்॥
தாம்பூலம் ஶ்ரீகரம் ப்ரோக்தம் கர்பூரஜ்யோதிரத்புதம்।
ஜ்யோதிரூபஸ்ய தர்ஶனாத் புத்ர-பௌத்ராபிவர்தனம்॥

பாயஸத்தினால் பாக்கிய விருத்தியும், வடையினால் தன வ்ருத்தியும், தேங்காயினால் ஜயமும், பழத்தினால் இஷ்ட சித்தியும், தாம்பூலத்தினால் சோபையும், கற்பூர ஆரத்தி தரிசனத்தினால் தேஜோவான்களான புத்ர–பௌத்ராபிவ்ருத்தியும் உண்டாகும்.

ஆலயங்களில் இறைவனை வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களை அடைய வேண்டியதற்கு இன்றியமையாத காரணம் மூன்று.

அர்சகஸ்ய ப்ரபாவேந அர்சநஸ்யாதிஶாயநாத்।
ஆபிரூப்யாச்ச பிம்பாநாம் ஶிலா பவதி ஶங்கர:॥

அர்ச்சகருடைய மஹிமையாலும், அர்ச்சனையின் மேன்மையாலும், அழகாக அமைந்த பிம்பங்களின் தோற்றத்தினாலும் சிலை மங்களத்தைச் செய்வதாக ஆகிறது. எனவே ஆலயங்களில் சிறந்த அறிவாளிகளான முன்னோர்கள் செய்துவந்த முறை வழுவாது இறைவனுக்கு அஷ்டோத்தரசத நாமம் முதலியவைகளைச் செய்தால் தத்தமது மனோபீஷ்ட சித்தியைப் பெறுவதற்கு யாதும் ஐயுறவில்லை.

அர்ச்சனைகள்

1) பஞ்ச முகார்ச்சனை :

சிவபெருமானின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்கிற ஐந்து திருமுகங்களையும் தனித்தனியே அவ்வத்திசைகளில் தியானித்து செய்யும் அர்ச்சனை பஞ்சமுகார்ச்ச்னை என பெயர் பெறும்.

முறை :

வில்வம், விளா, நொச்சி, கிளுவை, மாவிலிங்கை என்ற பஞ்சவில்வத்தினால் ஒரே சமயத்தில் ஐந்து ஆசாரியர்கள் கர்பக்ருஹத்தில் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, ஈசானம் என்ற திசைகளில் நின்றுகொண்டு, ஐந்து அறிஞர்களால் படிக்கப்படும் சிவஸஹஸ்ரநாமத்தை மனனம் செய்து கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.

அவ்வாறு அர்ச்சனை முடிந்தவுடன், தேங்காய்ச் சாதம், சர்க்கரைப்பொங்கல், எள்ளன்னம், தயிரன்னம், வெண்பொங்கல் என்ற அன்னங்களை, ஈசானம் முதலிய திக்குகளில் வைத்து நிவேதனம் செய்து, பாயசம், வடை, தேங்காய் பழம், தாம்பூலம் இவைகளையும் நிவேதித்து, கற்பூரஹாரத்திசெய்து பிரசாதம் வழங்குதல் வேண்டும்.

பயன்:

இது ஸத்யோஜாதம் முதலிய திருமுகங்களைக் காரணமாகக் கொண்டு பிரமன் முதலியவர்கள் செய்யும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபாவம், அனுக்ரஹம் என்ற ஐந்து தொழிலுக்கும் உஜ்ஜீவன சக்தி அளித்து, சாந்தியதீதாதி கலைகளில் இருக்கும் 224 புவனங்களில் வசிக்கும் தனித்தனி 84 லக்ஷம் ஜீவராசிகளுக்கும் தனு–கரண–புவன–போகத்தை அளித்து, அவைகள் மோக்ஷத்தையும் அடைய ஏதுவாக இருப்பதாம். இது,

𑌯𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌸𑌕𑌲𑌹𑌵𑌨𑍋𑌦𑍍𑌭𑌵𑌹𑍋𑌮-𑌕𑌾𑌰𑌾𑌃
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌯𑌜𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃।
𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌦𑌾𑌯 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌸𑌾𑌯𑌕𑍇𑌭𑍍𑌯𑍋
𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌤𑍁 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑍍॥

என்ற அகோரசிவாசாரியார் வாக்கியத்தால் அறியப்படுகிறது.

2) ஷண்முகார்ச்சனை:

இறைவனின் பாதாளமுகமான ஆறாவது திருமுகத்துடன் ஆறுமுகமாக விளங்கும் முருகப்பெருமானுக்கு மேற்கூறியவாறு, ஆறுபேர்களைக்கொண்டு சமகாலத்தில் செய்யப்படும் ஆறு ஸஹஸ்ரநாம அர்ச்சனை ஷண்முகார்ச்சனை எனப் பெயர் பெறும். ஆறாவதாகப் பாலன்னத்துடன் தேனும், தினை மாவும் நிவேதனம் செய்யவேண்டும். இவ்வாறு அர்ச்சனை செய்கிறவர்கள் புத்ர–ஸந்தானம், விஜயம், ரக்ஷை, ஆயுஸ், காந்தி, கீர்த்தி என்ற ஆறினையும் அடைவார்கள் என சாரதாதிலகம் கூறுகிறது.

𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑌯𑌂 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌰𑌕𑍍𑌷𑌾𑌮𑌾𑌯𑍁𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌯𑌶𑌃।
𑌪𑍍𑌰𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌿𑌤𑌃॥

3) நவசக்தி அர்ச்சனை :

தேவியின் பீடசக்திகளான வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரமதநீ, ஸர்வபூததமநீ என்ற எட்டுசக்திகளுடன் கூடிய மனோன்மனியினால் ஸமகாலத்தில் செய்யபெறுகின்ற ஒன்பது ஸஹஸ்ரநாமார்ச்சனைக்கு நவசக்தி அர்ச்சனை எனப்பெயர்.

பன்னீரைத் தெளித்து வாசனையுள்ள எட்டு வகையான தனித்தனி புஷ்பங்கள், சுத்தமாகத் தயார் செய்யப்பட்ட மஞ்சள் குங்குமம் ஆகிய இவைகளைக்கொண்டு பரிசுத்தரான ஒன்பது

ஆசாரியர்கள் தேவி கர்பக்ருஹத்தில் தேவியைச் சுற்றி நின்று கொண்டு தேவியின் நாமானுஸ்மரணத்துடன் அர்ச்சிக்க வேண்டும்.

ஒன்பது அறிஞர்களை லலிதாஸஹஸ்ரநாமத்தை ஒரே சுருதியில் தேவி தியானபுரஸ்ஸரமாகப் படிக்கச்செய்யவேண்டும்.

முடிவில் பக்குவமாயும் ருசியாயுமுள்ள ஒன்பதுவகை நிவேதனத்துடன் பாயசம், வடை, தேங்காய், மலைப்பழம் முதலிய ருசியான பழங்களையும் நிவேதிக்கவேண்டும்.

ஏலக்காய், லவங்கம், குங்குமப்பூ, பச்சக்கற்பூரம், ஜாதிக்காய் சேர்த்துக்கட்டின காளாஞ்சி முதலியவைகளையும் நிவேதனம் செய்து, கற்பூர ஹாரத்தி செய்து பிரசாதம் வழங்கவேண்டும்.

வாயஸம் ஊாஹுவ்ருகிஃ ஸூாகல் ஊஷாவ௵வடம் யநவுஉ௴ ।
நாரிகெலம ஜயம் வெுாகூம் வலம் சாஹீஷ ஸிகிஉ௴ ॥

தா ஜுூலம் ஸ்ரீகரம் வெுாகூம் கவபூூர ஜ்யோதிஉஸஷுநடீ ।
ஜ்யோதிஉூயஸ்லூ௵வஸூ வுகு-வளகுவிவயபூநடீ ॥

"பாயசத்தினால் பாக்கியவிருத்தியும், வடையினால் தனவிருத்தியும், தேங்காயினால் ஜயமும், பழத்தினால் இஷ்டசித்தியும், தாம்பூலத்தினால் சோபையும், கற்பூர ஆரத்தி தரிசனத்தினால் தேஜோவான்களான புத்திர பௌத்திராபிவிருத்தியும் உண்டாகும்."

பயன்: ஹயக்ரீவர்,

யஸ்லூ நாஉஸஹஸெுண ஸுகுவாஎ ஸஉசபூயெகல் ।
ஸவபூாஜ்ஞாஊநவாவெுஹ ஸவபூஸளஊாஹுஸம்யுதஃ ।
வுகுவளகுாஉ ஸம்யுக்தொ ஹுக்கூா ஹொமாநுயெஷூிதாநு ।
கூதெ ஸ்ரீலலிதாதெவூாஃ ஸாயுஜூஉதிஉஷுஹடீ ॥

"எவர் (இவ்வாறு) சுக்கிரவாரத்தில் ஸஹஸ்ரநாமத்தினால், மஹாதேவியை அர்ச்சிக்கின்றாரோ அவர் எல்லா விருப்பத்தையும் அடைகின்றார். ஸகல சௌபாக்யத்தையும் அடைகின்றார். புத்ர-பௌத்ராதிகளுடன் விரும்பிய போகங்களை அனுபவித்து முடிவில் ஸாயுஜ்யத்தையும் அடைகிறார்".

ஸ்ரீ பிக்ஷாடனமூர்த்தி

ஷோடச உபசார விளக்கம்

மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ!
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனை அர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ!

– சிவஞான சித்தியார்.

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடனஞ்செய் வரதர் பொற்றாள் தொழ

– பெரிய புராணம்.

ஆன்மாக்களுக்கு ஆணவமாகிய மூலமல காரணத்தால் கன்மானுசாரமாக உண்டாகும் பிறப்பு அண்டஜம், ச்வேதஜம், உத்பிஜ்ஜம், ஜராயுஜம் என நால்வகைப்படும். இவைகளின் விரிவு எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதமாம்.

இவற்றிலுள்ள யோனிகளுள் மற்றைய யோனிகள் எல்லாவற்றையும் போகத்தினாலும், பிராயச்சித்தம் முதலிய வற்றினாலும் நீக்கி மனிதப்பிறப்பிலே வருதல் மிகுந்த அருமையாம்.

இவ்வருமையாகிய மனிதப்பிறப்பை அருளியவரான பசுபதியாகிய பரமசிவனை நினைத்து வழிபடவேண்டும். வழிபாட்டு முறையானது ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப் படும். இவ்வாறு பூஜைகளைச் செய்யும் முறைகள் சிவபெருமானாலேயே கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு கூறப்பட்ட நூல் சிவாகமம் எனப்படும். சிவாகமத்தை தேவீ கேட்க சிவன் கூறினார் என்பது புராணம்.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள

அண்ணலார்தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து.

–பெரியபுராணம்.

எல்லாக் காரியங்களையும் நிறைவு செய்வதாலும் ஆன்மாவிற்கு ஞானத்தை அளிப்பதாலும் சிவபூஜை எனப்பெயர் பெற்றது. அத்தகைய சிவபூஜை செய்பவன் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னிகார்யத்தினால் சம்பத்தையும், ஜபத்தினால் பாபநீக்கத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான்.

மத்தயானைகளும், காற்றைப்போல் வேகமாக ஒடும் குதிரைகளும், தேவ–வனிதைகளுக்கு ஒப்பான பெண்மணிகளும் எவருடைய இல்லத்தில் இருக்கின்றனவோ, அது முறையுடன் செய்யப்படும் சிவபூஜையின் பயன் என்பது முடிவுரை.

சிவபெருமான் எங்கும் வ்யாபகமாக இருப்பினும் சிவலிங்கம் முதலிய திருமேனியும், குருவும், சங்கமமும் இடமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக்கொண்டு நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுக்கொண்டருளுவர்.

சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல் விளங்கி நிற்பர். மற்றைய இடங்களிலெல்லாம் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் அனைவரும் ஆன்மநலன் கருதி ஆலயத்தினுள் விளங்கும் அரனை வழிபடல் வேண்டும்.

ஆலயத்தினுள் நடைபெறும் பூஜைகள் நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகைப்படும். பரார்த்தமாக ஆலயத்தினுள் செய்யப்படும் பூஜைகளை அதற்கு உரியவர்களான அர்ச்சகர்களைக்கொண்டு பூஜை செய்வித்து வழிபடவேண்டும்.

பூஜையின் முறையானது ஸாங்கம், உபாங்கம், ப்ரத்யங்கம் என மூவகைப்படும்.

ஸாங்கம் என்பது அபிஷேகம், பாத்யம், ஆசமனீயம், அர்க்யம், வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம் என எட்டு வகைப்படும்.

உபாங்கமென்பது தூபம், தீபம், விபூதி அணிவித்தல், குடை, கண்ணாடி, சாமரம், விசிறி, வ்யஜநம், நர்த்தனம், கீதவாத்யம் என பத்து வகைப்படும்.

ப்ரத்யங்கமென்பது நைவேத்யம், பலிபோடுதல், ஹோமம் செய்தல், நித்யோத்ஸவம், சுளுகோதகதானம், ஸ்வஸ்திவாசனம் என ஆறு வகைப்படும். இந்த இருபத்திநான்கும் இறைவனுக்குச் செய்யும் சாங்கோபாங்க-ப்ரத்யங்கமென்ற பூஜை முறையாகும்.

அபிஷேகம், வஸ்திரம், சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நிவேதனம், தாம்பூலம், முகவாஸம், வாத்யம், கீதம், ந்ருத்தம், ஹோமம், பலி, நித்யோத்ஸவம், ஸ்வஸ்திபாடம் என்று பதினாறு ஆகும்.

இதனுள் முதலாவதான அபிஷேக திரவியங்கள் இருபத்தைந்து என்றும் அதைச் சுருக்கி பதினாறு என்றும், அதைச் சுருக்கி பனிரெண்டு என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. இருபத்தைந்து திரவியத்தின் வரிசையோ எனில்:-

1. சந்தனாதி தைலம் = வாசனை பொருந்திய எள் எண்ணை 2. மாப்பொடி 3. நெல்லிமுள்ளிப்பொடி 4. மஞ்சள்பொடி 5. ஜலதிரவியம் 6. பஞ்சகவ்யம் 7. பஞ்சாம்ருதம் 8. பசுவின் நெய் 9. பசுவின் பால் 10. பசுவின் தயிர் 11. தேன் 12. கரும்பின்சாறு 13. சர்க்கரை 14. பழவகைகள் 15. பழங்களின்சாறு 16. இளநீர்

17. அன்னம் 18. சந்தனம் 19. ஸ்னபனகும்பம் 20. பத்ரோதகம் (வில்வ பத்திரத்தின் ஜலம்) 21. தாராபிஷேகம் (ஸஹஸ்ர தாரை) 22. ச்ருங்கோதகம் (கவய ச்ருங்கத்தினால் அபிஷேகம்) 23. ரத்னோதகம் 24. குசோதகம் (தர்ப்பைஜலம்) 25. விசேஷார்க்ய தீர்த்தாபிஷேகம் என்பன.

பதினாறு திரவிய அபிஷேகத்தின் முறையோவெனில், 1. எள்ளெண்ணை 2. மாப்பொடி 3. நெல்லிமுள்ளிப் பொடி 4. மஞ்சள்பொடி 5. பஞ்சகவ்யம் 6. பஞ்சாம்ருதம் 7. பால் 8. தயிர் 9. நெய் 10. தேன் 11. கரும்பின்சாறு 12. உரித்தவாழைப்பழம் 13. எலுமிச்சை முதலிய பழங்களின் சாறு 14. இளநீர் 15. சந்தனம் 16. ஸ்னபன் கும்பம் என்பன.

பனிரெண்டு திரவிய அபிஷேகத்தின் முறையோவெனில், 1.வாசனை பொருந்திய எள்ளெண்ணெய் 2.பஞ்சகவ்யம். 3.பஞ்சாம்ருதம் 4. நெய் 5. பால் 6. தயிர் 7. தேன் 8. கரும்பின்சாறு 9. பழரசம் 10. இளநீர் 11. சந்தனம் 12. ஸ்னபன கும்பம் என்பன.

இவைகளின் அளவுமுறைகள் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது ஒரு ப்ரஸ்தம் (2½ சேர்) எண்ணெய் அபிஷேகத்திற்கு எடுத்துக் கொண்டால் அதே அளவு மாப்பொடி இருக்கவேண்டும். 3 பலம் நெல்லிமுள்ளி, 1 பலம் மஞ்சள்பொடி, 2 பலம் ஜலதிரவியம், 1 மரக்கால் பஞ்சகவ்யம், 1 மரக்கால் பஞ்சாம்ருதம், 1 1/4 சேர் நெய், 1 ½ மரக்கால் பால், 3 மரக்கால் தயிர், 1 ஆழாக்கு தேன், 3 படி கரும்பின் சாறு, 3 பலம் சர்க்கரை, 1 பலாப்பழம், 25 எலுமிச்சம்பழம், 20 வாழைப்பழம், 15 மாம்பழம், 10 மாதுளை, 10 கொளஞ்சி, 12 நாரத்தம் பழம், 10 இளநீர், 1 மரக்கால் அன்னம், குங்குமப்பூ, பச்சைகற்பூரம், கோரோசனை, கஸ்தூரி, பன்னீர் இவைகள் கலந்த சந்தனம் 4 பலம், பன்னீர் 1/8 படி, பத்ரோதகம் முதலியன

1 மரக்கால் இவ்வாறு எள்ளெண்ணையின் அளவுகொண்டு திரவியங்களின் அளவைக்கொள்ளவேண்டும்.

எண்ணையின் அளவு கூடினால் திரவியங்களின் அளவையும் கூட்டவேண்டும்.

அபிஷேகத்தின் பயன்கள்

தைலாபிஷேகம் சுகத்தைக் கொடுக்கும். மாப்பொடி கடனைப் போக்கும். நெல்லிமுள்ளி வியாதியைப்போக்கும். மஞ்சள்பொடி வசீகரம் உண்டாக்கும். ஜலத்ரவ்யம் சௌபாக்யம் உண்டாக்கும். பஞ்சகவ்யம் தூய்மையை உண்டாக்கும். பஞ்சாம்ருதம் ஜயத்தை கொடுக்கும். நெய் மோக்ஷத்தை அளிக்கும். பால் ஆயுளை வளர்க்கும். தயிர் மக்கட்பேற்றை அளிக்கும். தேன் சுகமளிக்கும். கரும்பின்சாறு பிணி நீக்கமளிக்கும். சர்க்கரை சத்ருவை அழிக்கும். வாழைப்பழம் பயிரை வளர்க்கும். மாம்பழம் சந்தானத்தை அளிக்கும். மாதுளை கோபத்தை போக்கும். கொளஞ்சி சோகத்தைப் போக்கும். நாரத்தை நேர்மையளிக்கும். எலுமிச்சை எமபயத்தை நீக்கும். அன்னம் சாம்ராஜ்யத்தை அளிக்கும். இளநீர் போகத்தை அளிக்கும். சந்தனம் லக்ஷ்மியை அளிக்கும். பத்ரோதகம் முதலியன பயத்தைப்போக்கும். இவ்வாறு அபிஷேகத்தின் பலன்கள் கூறப்பட்டுள்ளன.

இறைவன் தீர்த்தாபிஷேகத்தினால் (ஜலம்) பத்து குற்றங்களையும், பாலினால் நூறுகுற்றங்களையும், தயிரினால் ஆயிரம் குற்றங்களையும், தேனினால் பதினாயிரம் குற்றங்களையும், நெய்யினால் லக்ஷம் குற்றங்களையும், இளநீரினால் கோடி குற்றங்களையும், சந்தனத்தினால் எண்ணிறந்த குற்றங்களையும் போக்குகிறார்.

வஸ்திரம் :–

பட்டுவஸ்திரங்களாலும், அநேக வர்ணமுள்ள அழகுள்ள வஸ்திரங்களாலும், பஞ்சுநூல் வஸ்திரங்களாலும் அலங்கரிக்க வேண்டும்.

பழமையானது, கிழிந்தது, எலி கடித்தது இத்தகைய வஸ்திரம் கூடாது.

முற்பகலில் வெண்மை வஸ்திரமும், நடுப்பகலில் சிகப்பு வஸ்திரமும், மாலையில் மஞ்சள் வஸ்திரமும், அர்த்த ஜாமத்தில் கருப்பு வஸ்திரமும் சாத்தவேண்டும்.

அல்லது எல்லாக் காலங்களிலும் வெண்மையாயும், தோஷமற்றதுமான வஸ்திரம் சாத்தலாம். வஸ்த்ரங்களில் காணப்படும் நூல் இழையினுடைய அளவுகாலம் மேற்பதவியை அடைகிறான் என்பது ஆகமவிதி.

வாசனைப் பொருள்களோடு கூடிய சந்தனத்தை சாத்த வேண்டும்.

புஷ்பம் :–

வெண்தாமரை, அலரி, பொரசு, துளசி, நெய்தல், வில்வம், சங்கபுஷ்பம், கோவிதாரம், ஓரிதழ்தாமரை இவைகள் மாத்யான்னிக காலபூஜைக்கு உரியதாகும்.

தாமரைப்பூ, பொரசம்பூ, துளசி, நவமல்லிகை, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, சண்பகம், புன்னாகம், கொன்றை இவைகள் காலசந்தி பூஜைக்கு உரியதாகும்.

செந்தாமரை, அல்லி, மல்லிகை, ஜாதி, முல்லை, மருக் கொழுந்து, வெட்டிவேர், கஜகர்ணிகை, துளசி, வில்வம் இவைகள்

மாலை பூஜைக்கு உரியன ஆகும். மற்றைய காலங்களில் விருப்பம் போல் செய்யலாம்.

கூடாத புஷ்பங்கள் ;–

வாசனை இல்லாதவை, உரோமம், புழு இவைகளால் தீண்டப்பட்டவை, அதிகமான வாசனை உடையவை, வாடியவை, தகாதவர்களால் தீண்டப்பட்டவை, நுகரப்பட்டவை, தன்னால் மலரச் செய்யப்பட்டவை, அசுத்தமான பாத்திரத்தில் கொண்டுவரப் பட்டவை, பூமியில் விழுந்தவை இத்தகைய புஷ்பங்கள் கூடாது.

சண்பகமொக்குத் தவிர மற்ற புஷ்பங்களின் மொக்குகள் பூஜிக்கத் தகாதவை.

அக்ஷதை, வெள்ளெருக்கு, ஊமத்தை இவைகள் விஷ்ணுவுக்குக் கூடாது.

செம்பருத்தி, தாழம்பூ, குடஜம் இவைகள் சிவனுக்குக் கூடாது.

அருகு, வெள்ளெருக்கு, மந்தாரை இவைகள் தேவிக்குக் கூடாது.

வில்வம், தகரம் இவைகள் சூரியனுக்கு கூடாது.

துளசி விநாயகருக்குக் கூடாது.

தூபம் :–

சகலதோஷங்களையும் நீக்கி பரமானந்ததைக் கொடுப்பதால் தூப என்ற இரண்டெழுத்தான பெயர் உண்டாயிற்று.

சந்தனம் 7 பங்கு, சாம்பிராணி 6 பங்கு, குங்கிலியம் 5 பங்கு, குங்குமப்பூ 4 பங்கு, கோரைக்கிழங்கு 3 பங்கு, அகரு 2 பங்கு, பச்சைகற்பூரம் 1 பங்கு இம்முறைப்படி திரவியங்களைச்

சேர்த்து கொஞ்சம் நெய்யுடன் கூட்டிபோடும் தூபத்திற்கு 'சீதாரிதூபம்' என்று பெயர். இதைக் காரணாகமம் கூறுகிறது. இது சகல தேவர்களையும் வசீகரணம் செய்யும்.

தீபம் :-

தீபங்கள் பதினாறு வகைப்படும். அவையாவன:-

ப்ரதமம் தூபதீபஞ்ச த்விதீயம் தீபமுச்யதே।
மஹாதீபம் த்ருதீயஞ்ச சதுர்த்தம் நாகதீபகம்॥

பஞ்சமம் வ்ருஷதீபஞ்ச ம்ருகதீபஞ்ச ஷஷ்டகம்।
ஸப்தமம் சூலதீபஞ்ச அஷ்டமம் கமடம் பவேத்॥

நவமம் கஜதீபஞ்ச தசமம் வ்யாக்ரதீபகம்।
ஸிம்ஹமேகாதசம் ப்ரோக்தம் த்வஜம் த்வாதசமுச்யதே॥

த்ரயோதசம் மயூரம் ஸ்யாத் [illegible]।
பஞ்சசக்த்யாதி ஸம்யுக்தம் பூர்ணகும்பம் சதுர்தசம்॥

ருக்ஷம் பஞ்சதசம் ப்ரோக்தம் ஷோடசம் மேருருச்யதே।
நீராஜனம் ததா ஹஸ்த உபசாரஸ்ததோ பவேத்॥

1. தூபம் 2. தீபம் 3. மஹாதீபம் (அலங்காரதீபம்) 4. நாகதீபம் 5. விருஷபதீபம் 6. புருஷாம்ருகதீபம் 7. சூலதீபம் 8. கமடதீபம் (ஆமை) 9. கஜதீபம் 10. வ்யாக்ர தீபம் (புலி) 11. ஸிம்ஹதீபம் 12. த்வஜ தீபம் (கொடி) 13. மயூரதீபம் (மயில்) 14. சக்திஸ்வரூபமான ஐந்து தட்டுகளுடன் கூடிய பூர்ணகும்ப தீபம் 15. நக்ஷத்ர தீபம் 16. மேரு தீபம். இவ்வாறு தீபங்கள் பதினாறு ஆகும்.

மஹாதீபத்தின் அளவைக் கொண்டு மற்றைய தீபங்களைச் செய்யவேண்டும். மஹாதீபமானது சுவாமியினுடைய பாணத்தில் மூன்றில் இரண்டு பங்கோ, மூன்றில் ஒரு பங்கோ இருக்கலாம். அந்த மஹாதீபத்தை மூன்றுபங்கு செய்து, ஒரு பங்கு அளவு நாக

தீபம் முதல் மேரு தீபம் வரையில் உள்ள தீபங்களின் உயர அளவு இருக்கவேண்டும். பூர்ணகும்பம் மாத்திரம் ஒரு மரக்கால் தான்யம் பிடிக்கும்படியாக இருக்கவேண்டும்.

மற்றும் கண்ணாடி, குடை, சாமரம், சுருட்டி, வ்யஜநம் முதலியவைகளும் நாகதீப அளவு இருக்க வேண்டும்.

நாகதீபம் முதலிய தீபங்களில் அந்தந்த தேவதைகளை பூஜிக்க வேண்டும்.

தூபத்தினால் மிகுந்த உற்சாகமுண்டாகும். தீபத்தினால் (ஒரு கிளை = முகம்) விழிப்பு உண்டாகும். மஹாதீபத்தினால் சாம்ராஜ்யம் கிடைக்கும். நாகதீபத்தினால் உயர்ந்த பதவி கிடைக்கும். விருஷப தீபமானது ராஜ்யத்தையளிக்கும். புருஷாம்ருக தீபமானது பிணி நீக்கமளிக்கும். சூலதீபத்தினால் குன்ம ரோகம் போகும். கமட தீபத்தினால் ஜலத்தினால் உண்டாகும் பயம் நீங்கும். கஜதீபத்தினால் ஐச்வர்யம் உண்டாகும். வ்யாக்ரதீபத்தினால் துஷ்ட ப்ராணிகளால் உண்டாகும் பயம் நீங்கும். ஸிம்ஹதீபத்தினால் ஆயுள் நீடிக்கும். த்வஜதீபத்தினால் செல்வம் செழிக்கும். மயூர தீபத்தினால் மக்கட்பேறு உண்டாகும் மற்றும் அரக்கர்களினால் உண்டாகும் பயம் நீங்கும். பூர்ணகும்ப தீபத்தினால் சாந்தி உண்டாகும். ஐந்துசக்திகளின் ஸ்வரூபமான ஐந்து தட்டுக்களாலே எல்லா ஜனங்களுக்கும் அஷ்டமங்கல ப்ராப்தி ஏற்படும். நக்ஷத்ர தீபத்தினால் உலகைக்காக்கும் ஆதிபத்யம் உண்டாகும். மேரு தீபத்தினால் உயர்ந்த தனாதிபதி ஆவான்.

இதைத் தவிர, விபூதி ரக்ஷையினால் த்ருஷ்டி தோஷம் போகும். நீராஜனத்தினால் சர்வபாபமும் போகும். மற்றும் கண்ணாடி சந்தோஷம் அளிக்கும். குடை அரசபோகத்தை கொடுக்கும். சாமரம் அணிமாதி அஷ்டசித்திகளைக் கொடுக்கும்.

வ்யஜனம் சுகமளிக்கும். விசிறி சர்வஜ்வரங்களைப் போக்கும் என்பது ஆகமவிதி.

நிவேதனம் :–

திரைபோட்டு நிவேதனம் செய்யவேண்டும். திரை போட்டிருக்கும் காலத்தில் யாரும் தரிசனம் செய்யக்கூடாது.

சாலியின் (சம்பா நெல்) அரிசி உத்தமம். வ்ரீஹி, யவம் இவைகளின் அரிசி மத்யமம். மற்றவை அதமம்.

நிவேதனத்திற்கு இரண்டு மரக்கால் அரிசி உத்தமம். 6 படி அரிசி மத்யமம். 4 படி அரிசி அதமம் ஆகும்.

மயிர், புழு, மணல், உமி, கல் இவைகள் உள்ளதாயும், குழைந்ததாயும், அரைஅரிசி உள்ளதாயும், துர்நாற்றம் உடையதாயும், நிறமற்றதாயுமுள்ள அன்னத்தை நிவேதனம் செய்யக்கூடாது.

உமியினால் தரித்ரமும், மணலினாலும் கல்லினாலும் வியாதியும், மயிராலும், புழுக்களாலும் மரணமும் உண்டாகும்.

நிவேதனத்தை எட்டுப்பாகம் செய்து சிவனுக்கு 2 பாகமும், சக்திக்கு 1 பாகமும், விநாயகருக்கு 1 பாகமும், ஸ்கந்தனுக்கு 1 பாகமும், பலி அக்னிகார்யம் இவற்றிற்கு 1 பாகமும், ஆசார்யனுக்கு 1 பாகமும், மீதி 1 பாகத்தை பரிசாரகன் முதலியவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

பஞ்சமுகான்னம் :– ஈசானமுகத்திற்கு சுத்தான்னமும், தத்புருஷமுகத்திற்கு தயிரன்னமும், அகோரமுகத்திற்கு எள்ளன்னமும், வாமதேவமுகத்திற்கு சர்கரான்னமும், சத்யோஜாத முகத்திற்கு பாலன்னமும் விசேஷமாகும்.

ஞாயிற்றுக்கிழமையில் பாயசான்னமும், திங்களில் வெண்பொங்கலும், செவ்வாயில் எள்ளன்னமும், புதனில் சர்க்கரைப் பொங்கலும், வியாழனில் தயிரன்னமும், வெள்ளியில் சுத்தான்னமும், சனியில் உளுந்து அன்னமும் விசேஷமாகும். அன்ன நிவேதனத்தினால் போகபாக்யங்களுண்டாகும்.

தாம்பூலம் :–

தோஷமற்ற பாக்குடன் வெற்றிலை, சங்க சூர்ணம், கற்பூரம் இவைகளுடன் ஜாதிக்காய், பத்திரி, லவங்கம் முதலிய வாசனைப் பொருட்களைச் சேர்த்து நிவேதனம் செய்யவேண்டும். வெற்றிலையின் நுனியில் லக்ஷ்மியும், நடுவில் ஸரஸ்வதியும், பின்புறத்தில் மூதேவியும் இருப்பதால் பின் புறத்தை நீக்கிவிட்டு நிவேதனம் செய்யவேண்டும்.

முகவாஸம் :–

ஏலக்காய், சந்தனம், பச்சைக்கற்பூரம் இவைகளுடன், பாதிரி, நெய்தல் புஷ்பங்களுடன் கூடிய குளிர்ந்த ஜலத்தை அர்ப்பணம் செய்யவேண்டும்.

பண், ராகம், தாளம், வாத்யம் நிருத்தம் முதலியன:

காலையில் காந்தாரப் பண்ணும், உச்சிக்காலத்தில் ஸ்ரீகாமரப்பண்ணும், மாலையில் பஞ்சமப்பண்ணும், அர்த்த ஜாமத்தில் கௌசிகமும் சிறப்பாகும் என்று ஆகமத்தினால் அறியப்படுகிறது.

அவ்வாறே காலையில் வராளிராகமும், உச்சிகாலத்தில் பைரவியும், மாலையில் வேளாவல்லியும், அர்த்தயாமத்தில் ஆகிரியும் சிறந்ததாகும். உஷக்காலத்திலும், உபசந்தி காலத்திலும் அந்தந்த காலங்களுக்குரிய பண்ணும் ராகமும் விசேஷமாகும்.

காலசந்தியில் நவதாளமும், உச்சிக்காலத்தில் கொட்டரீ தாளமும், மாலையில் சமதாளமும், அர்த்தயாமத்தில் தக்கேசி தாளமும் விசேஷமாகும்.

(தக்கேசி என்பது பண்ணில்தான் பிரசித்தம். இங்கு தாளத்திலும் – தக்கேசி என்று காணப்படுகிறது. இதன் விவரம் பரிசீலனைக்கு உரியது)

வாத்யத்தில் காலசந்தி முதலிய காலங்களில் சச்சுடம், பஞ்சமம், சாசுபுடம், கும்பவாத்தியம் முதலியன. மற்ற காலங்களில் சிம்மவாத்யமும் பஞ்சவாத்யமும் விசேஷமாகும்.

நிருத்தத்தில் காலையில் புஜங்கத்ராஸமும், உச்சிக் காலத்தில் லலிதநிருத்தமும், சாயங்காலத்தில் கமலாவர்த்தகமும், அர்த்தயாமத்தில் ஸ்வஸ்திகமும் விசேஷமாகும். மற்ற காலங்களில் ஸந்த்யாந்ருத்தம் விசேஷமாகும்.

ஹோமம் :

தினம் செய்யப்படும் நித்யாக்னிகார்யத்தினால் சம்பத்து உண்டாகும்.

ஆலயத்தில் செய்யப்படும் பூஜையினுள் அபிஷேகமானது படைத்தல் தொழிலாகும். நைவேத்யமானது காத்தல் தொழிலாகும். பலிபோடுதல் அழித்தல் தொழிலாகும். தீபம் மறைத்தல் தொழிலாகும். ஹோமம் செய்வது அருளல் என்னும் தொழிலாகும்.

முடிவில் ஆசார்யன் இறைவனுடைய மூலமந்திரத்தை ஜபம் செய்து சுளுகோதகம் என்ற முறையில் இறைவனிடம் ஸமர்ப்பணம் செய்யவேண்டும்.

பிறகு ஆசார்யன் "ஸர்வே ஜனா: சுகினோ பவந்து" என்று இறைவனிடம் வேண்டி எல்லோருக்கும் விபூதி முதலிய ப்ரசாதம் அளிக்க வேண்டும். ஆசார்யனுடைய மனதின் ஸந்தோஷமே சிவனின் ஸந்தோஷத்திற்குக் காரணம் என்பது ஆகம வாக்கியம்.

எவன் ஒருவன் பூஜையின் முடிவில் ப்ரதக்ஷிணம் செய்ய வில்லையோ, அவனுக்கு அந்தப் பூஜை நிஷ்பலமாகும். எவன் பக்தியுடன் ப்ரதக்ஷிணம் செய்கிறானோ அவன் உண்மையாகப் பூஜை செய்தவனாகிறான்.

பூஜையினால் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னி கார்யத்தினால் ஐச்வர்யத்தையும், ஜபத்தினால் பாபத்தினின்று சுத்தியையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான்.

யாதொருவன் தேகம் முடியும்வரை சிவபூஜை, சிவதரிசனம் செய்கிறானோ அவன் ஜீவன் முக்தனாக ஆகிறான்.

ஷோடச உபசார விளக்கம் என்னும் இக்கட்டுரை காமிகம், காரணம், சஹஸ்ரம் என்ற ஆகமங்களிலும், வாமதேவபத்ததி, அகோர சிவாசார்ய பத்ததி, வசன ரத்னாவளி என்ற பத்ததிகளிலும் காணப்படும் விதிகளையனுசரித்துத் தமிழில் எழுதப்பட்டது.

சண்டேசர்

சிவபக்தரான சண்டேசர் நான்கு பேதமுடையர். யுக பேதத்தினால் வேறுபட்ட பெயரை உடையவராக விளங்குகிறார்.

𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍇𑌦𑌃 𑌤𑌦𑍍𑌭𑍇𑌦𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌚𑌣𑍍𑌡𑌃 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌚𑌣𑍍𑌡𑌕𑌃 ॥
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌵𑍀𑌰𑌚𑌣𑍍𑌡𑌶𑍍𑌚 𑌧𑍍𑌵𑌨𑌿𑌚𑌣𑍍𑌡𑌃 𑌕𑌲𑍌 𑌯𑍁𑌗𑍇 ।

- 𑌵𑌚𑌨𑌰𑌤𑍍𑌨𑌾𑌵𑌳𑌿𑌃

அவை, க்ருத யுகத்தில் ருத்ரசண்டண் என்றும், த்ரேதா யுகத்தில் ப்ரசண்டன் என்றும், த்வாபரயுகத்தில் வீரசண்டன் என்றும், கலியுகத்தில் த்வனிசண்டன் என்றும் பெயர்.

சிவபெருமானுடைய நடுக்கண்ணினின்றும் தோன்றியவர் ருத்ரசண்டன்.

வலது கண்ணினின்றும் உண்டானவர் ப்ரசண்டர்.

இடக்கண்ணினின்றும் உண்டானவர் வீரசண்டர்

அந்தணரின் புதல்வராகத் தோன்றியவர் த்வனி சண்டராவார்.

ருத்ரசண்டனுக்கு நான்கு திருமுகங்களும், நான்கு கைகளும் உண்டு. சூலம், அக்ஷமாலை, பரசு, கமண்டலு என்ற இவ் ஆயுதங்களை உடையவர் ருத்ரசண்டர். இவர் அனந்தாதிகளுக்கு அடுத்தநிலையில் கணேசர் என்ற கூட்டத்தில் வீற்றிருப்பவர். இறைவனுக்குச் செய்யப்படும் பஞ்சாவரண பூஜையில் மூன்றாவது ஆவரணதேவதையாக விளங்குபவர்.

ப்ரசண்டன், வீரசண்டன் என்ற இவ்விருவர்களும் ஒருமுகத்துடன் நான்கு கைகள் உடையவர்கள். சூலம், அக்ஷமாலை, டங்கம், கண்டி ஆயுதங்களை உடையவர் ப்ரசண்டர். சூலம், டங்கம், அஞ்சலியுடன் கூடியவர் வீரசண்டர்.

கலியுகமூர்த்தியான த்வனி சண்டரோவெனில் மழுவுடன் கூடிய கை ஒன்று; துடைமேல் வைத்துக்கொண்ட கை மற்றொன்று. ஆக இரண்டு கைகளை உடையவர்.

இதுபோலவே சூரியன் முதலானவர்களுக்கும் சண்டேசர் உண்டு.

தெஜஶ்சண்ேடா ரவெ ஶ்சைவ கும்ப்சண்ேடா விநாயகெ ।
மித்ரசண்ேடா ஶுஹெ சைவ யமனீ சண்டீ தயா ॥
த்வநிசண்ேடஶ்ஶிவெ சைவ மூலாகமெஷு கீர்திதா: ॥

அதாவது சூரியனுக்கு தேஜ*ஶ்*சண்டன் எனவும், விநாயகருக்கு கும்பசண்டன் எனவும், சுப்ரமண்யருக்கு மித்ரசண்டன் எனவும், தேவிக்கு யமனீ சண்டி எனவும், சிவனுக்கு த்வனிசண்டன் எனவும் மூலாகமங்களில் கூறப்படுகிறது.

பொதுவாக சண்டேச்வரஸ்தாபனமானது ஸ்வதந்திர சண்டர், பரதந்திரசண்டர் என இரண்டு விதமாகக் கூறப்படுகிறது.

கிராமத்தின் ஆரம்பத்தில் அல்லது மத்தியில் அல்லது எண்திசைகளில் ஸ்தாபனம் செய்யப்படும் சண்டேசர் ஸ்வதந்திர சண்டேசர்.

ஆலயத்தின் கர்பக்ருஹத்தில் ஈசானபாகத்தில் அல்லது வடக்கில் அல்லது வடக்கு ஈசானம் இரண்டின் மத்தியில் அந்தர் மண்டபத்தில் அல்லது அந்தர்ஹாரத்தில் ப்ரதிஷ்டை செய்யப்படும் சண்டீசர் பரதந்திரர் என்று காமிகாகமம் கூறுகிறது. (அந்தர் மண்டலம் என்பது கர்பக்ருஹத்தைச் சுற்றியுள்ள ப்ராகாரம், அந்தர்ஹாரம் என்பது ஆலயத்தின் முதற் ப்ராகாரம்)

சண்டிகேசர் விக்ரஹம் மத்யமதசதாலத்தினாலாவது, அல்லது அதமதசதாலத்தினாலாவது செய்யலாம் என்றும் காமிகாகமம் கூறுகிறது, அதாவது,

ஞூவைஶூஷீஷாஉிஹி꞉ காயடூ꞉ வூவஹூவஷூக்ஷணாஙிக꞉ ।
ஊயெூந உஶதாயெந உஶதாஷாயலெந வா ॥

- காஉிகாமஃ꞉

சண்டீசருக்குக் காலசந்தி, உச்சிகாலம், சாயரக்ஷை காலங்களில் பூஜை செய்யவேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

ஆனால் எல்லாப் பூஜைகளிலும் முடிவிலே தான், சண்டேசனுக்கு உபசாரம் பூஜை முதலியன செய்யவேண்டும்.

சணெ்ஶாயெதி ஸஜ்ஜூ யஜீவாய நிவெஉிதடி ।
நைவெஉுூம் வெவ வூஜாஜெ சணெ்ஶஸூாசூகொதூஃ꞉ ॥

மகூா தஉாஷயம் ஶுுஊதொய-மங-ஸூமாஉிஹி꞉ ।
ஸூஉிஜு ஶிவநிஉூாஜூஉவி வஙூாஹிவெஉயெக் ॥

- காஉிகாமஃ꞉

சிவனுக்கு நிவேதனம் செய்த நைவேத்யத்தை அர்ச்சகன் சண்டேச்வரனுடைய ஆலயத்திற்குச் சென்று சுத்தஜலத்தினால் அபிஷேகம் செய்து, சந்தனம் புஷ்பம் சாத்தி சிவநிர்மால்யத்தை நிவேதனம் செய்யவேண்டும் என்று காமிகாகமத்தினால் அறியப்படுகிறது. இவ்வாறு காரணாகமமும்

ஜெவஸூ து நைவெஉூம் உஷாம் வெவ வூஉாவயெக் ।

சிவனுக்குச் செய்த நைவேத்தியத்தையும், சிவனுக்குச் சாத்திய மாலையையும் சண்டேசனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்று கூறுகிறது. சேக்கிழார் பெருமானும்

அண்டர்பிரானும் தொண்டர் தமக்கு அதிபனாக்கி அனைத்துநாம்
உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதம் தந்தோம் என்று அங்கவர் பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக் கொன்றைமாலை வாங்கிச் சூட்டினார்.

– பெரியபுராணம்

என்று திருவாய்மலர்ந்தருளி உள்ளார். ஆகவே ஒவ்வொரு காலபூஜையின் முடிவில் சண்டீசருக்குச் சிவநிர்மால்ய புஷ்பங்களைச் சாத்தி சிவநிவேதனத்தை நிவேதனம் செய்து தீபாராதனை செய்யவேண்டும் என விளங்குகிறது.

நைமித்திகமான கும்பாபிஷேகத்திலும் முடிவில் சண்ட - யாகம் செய்ய வேண்டும்.

கு்ஹாஜ்ஞ விஶெஷெண ஸ்நாவயெத்பரமெஶ்வரம் ।

எனத்தொடங்கி

அந்தெசண்டம் ஸம்பூஜ்ய நிர்மால்யம் து நிவேதயேத் ।

- காரணாகம

அதாவது யாககும்பஜலத்தினால் பரமேச்வரனுக்கு அபிஷேகம் செய்து, முடிவில் சண்டேச்வரனைப் பூஜித்து நிர்மால்யத்தை நிவேதனம் செய்யவேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

மஹோத்ஸவங்களிலும், சூர்ணோத்ஸவம், தீர்த்தம், யாககும்பாபிஷேகம், அவரோஹணம், லோகபாலவிஸர்ஜனம், சக்தியுத்ஸவம் முதலியன செய்து, முடிவில் சண்டிகேச உத்ஸவமும் ஆசார்ய உத்ஸவமும் செய்து முடிக்கவேண்டும் என்று சிவாகமங்களால் அறியப்படுகிறது.

மஹோத்ஸவத்தில் மண்டபத்தில் தீபாராதனை செய்யும் காலத்திலும் ஸோமாஸ்கந்தமூர்த்திக்கு தீபாராதனை செய்த பிறகு சண்டீசனுக்குத் தீபாராதனை செய்யவேண்டும்.

சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் முதலிய சிவவடிவங்கள் சதாசிவதத்துவத்தினின்றும் தோன்றியவைகள். சண்டீசர் ஈச்வர தத்துவத்திலுள்ள மூர்த்தி. ஆதலால் தத்துவக்கிரமத்தாலும் சண்டீசருக்கு உபசாரம் சிவனுக்குச் செய்தபிறகு செய்வது சிவாகம சம்மதமாகும்.

சிவாலய தரிசனம் செய்பவர்களும் தரிசன முடிவில் சண்டீசரைத் தரிசித்து சிவதரிசன பலனைத்தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டு செல்லவேண்டும் என்பது சாத்திரங்களில் கூறப்பட்ட முறை.

ஆத்மார்த்த பூஜையிலும் முடிவில் சண்டீசரை அர்ச்சித்து சிவநிர்மால்யம் சாத்தி வழிபட வேண்டுமென்று பூஜாவிதி கூறுகிறது.

நீலகண்டபதாம்போஜ! பரிஸ்பூரிதமானஸ! ।
ஶிவபூஜாபலம் தேஹி சண்டிகேஶ! நமோऽஸ்து தே ॥

– சிவபூஜா விதி

கறைக்கண்டனுடைய பாதகமலங்களில் சுற்றுகிற மனதை உடையவரான சண்டீசரே! உன் பொருட்டு வணக்கம். எனக்கு சிவபூஜையின் பலத்தைக் கொடு என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.

சண்டீசரைத் தரிசனம் செய்யாவிடில் சிவதரிசனபலன் கிடையாது. சண்டீசபூஜை செய்யாவிடில் சிவபூஜாபலன் கிடையாது என்றும், மற்றும் க்ஷாமம் உண்டாகும் என்றும் அதற்குப்

ப்ராயச்சித்தஹோமம் செய்யவேண்டும் என்றும் காரணாகமம் ப்ராயச்சித்த விதி படலத்தில் கூறுகிறது.

ஆதலால் சண்டீச ஆராதனை மிக முக்கியம். ஆனால் அதை பூஜையின் முடிவில், தரிசனத்தின் கடைசியில், தீபாராதனையின் முடிவில் செய்யவேண்டும் என்பது சிவாகம ஸித்தாந்தம்.

ஸ்ரீ காலஸம்ஹாரமூர்த்தி

மஹா சிவராத்திரி

மாசி மாதத்தில் தேய்பிறைச் சதுர்தசி தினம் மஹா சிவராத்திரி எனப்படும். அன்று சூரிய உதயத்தில் நித்ய கர்மங்களை முடித்து சிவநினைவுடன் பகல் முழுவதும் பட்டினி இருந்து இரவு நான்கு யாமத்திலும் உறக்கமில்லாமல் சிவபூஜை செய்தல்வேண்டும்.

சிவபூஜை இல்லாதவர்கள் கோயிலுக்குச் சென்று சிவபெருமானுக்கு அபிஷேகம் முதலான செய்வித்து தரிசித்து மறுதினம் காலை சிவவழிபாடு செய்து பாரணம் செய்யவேண்டும்.

ஶிவம் ச ஸ௱ஜயிகூாய யொ ஜாமதிபூ சதுூசூஶீ।
ஊதுூ: ஸயொயாாஸம் ந ஷிவெஷ்ச கூஊாசந॥

சதுர்தசியில் சிவனைப்பூஜித்து இரவு முழுவதும் கண் விழித்திருப்பவர் மறுமுறை தாயின் ஸ்தன்யபானம் ஒருபொழுதும் செய்யமாட்டார்கள். அதாவது பிறவிப்பிணி கிடையாது என்பது பொருள்.

எனவே நாளது கீலக ஆண்டு மாசித்திங்கள் 4ம் தேதி (15.02.69) சனிக்கிழமை, சதுர்தசி திதி 45–5 திருவோண நக்ஷத்திரம் 52–34க்கு மேல் அவிட்ட நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் மஹா சிவாராத்திரி விரதானுஷ்டானம் பூஜை முதலிய சிவாராதனம் செய்யவேண்டும்.

குமாரதந்திரம்:

ராகுள யாஊசயாஉவபூாகீ வடிஙெகூா ஊஹாநிஶா।
தஸ்ாம் சதுூசூஶீ யஸ்ூாக் தஷூாகுிஶ்லிவராகுிகா॥

இரவு இரண்டு யாமத்திற்குமேல் ஒருநாழிகை மஹாநிசி காலம். அந்தக் காலத்தில் சதுர்தசி இருப்பின் அவ்விரவு சிவராத்ரியாகும். இவ்வாண்டு சனிக்கிழமை இரவு 15 நாழிகை

ஐந்து விநாடி சதுர்தசி இருக்கிறது. அப்பொழுது இலிங்கோத்பவ காலம் வந்துவிடுகிறது.

காமிகம்:

ஓஹாநிஶாயா᳚ பாதஃ குயொஉஶியூதம் தூ செகு।
சுஶா உதசூஉூஶீ பூஜா ந தொஷஜிதி கீதிநூதப॥

(முதல் நாள்) மஹாநிசிக்குப் பிறகு திரயோதசி இருப்பின் (மறுதினம்) அமாவாசையோடு கூடிய சதுர்தசியில் சிவராத்ரி பூஜை செய்தல் தோஷமில்லை.

இவ்வாண்டு முதல்நாள் வெள்ளிக்கிழமை திரயோதசி 50.0 இருப்பதால், மஹாநிசிகாலமான 15–நாழிகைக்குமேல் சதுர்த்தசி இருப்பதான மறுதினமான சனிக்கிழமை இரவு நாழிகை 15–5க்கு மேல் வரும் அமாசம்பந்தமான தோஷம் கிடையாது.

ஸ்வாயம்புவம்:

சுஶாவாஸூா யுதாவாவி குயொஉஶியுதாவி வா ।
உதசூஉூஶூயிகா ராசிஃ ஶிவராத்ரிரிதி ஸ்மூதா ॥

மஹாசிவராத்திரிக்கு உரியதான சதுர்தசிதிதியானது அமாவாசையோடு கூடியதாக இருப்பினும் அல்லது த்ரயோதசியுடன் கூடியிருப்பினும் சதுர்தசி அதிக நாழிகை இருக்கும் தினத்தில் சிவராத்ரிபூஜை செய்யவேண்டும்.

இவ்வாண்டு சனிக்கிழமை தினத்தில் சதுர்தசிதிதி 45-5 நாழிகை இருக்கிறது. முதல்நாள் 10 நாழிகைதான் சதுர்தசி இருக்கிறது. ஆதலால் சனிக்கிழமையில் சிவராத்ரிபூஜை செய்ய வேண்டும்.

நாரதீய ஸம்ஹிதை:

சுயூராகுயுதா யகு ஶாவகூஷ்ண உதசூஉூஶீ ।
ஶிவராத்ரிவூதம் தகு வாஶவூமெயஹாலும் ஓஹெசு ॥

நடு இரவுடன் கூடிய மாசிமாதத்திய கிருஷ்ணபக்ஷ சதுர்தசியில் சிவராத்ரி விரதம் அனுஷ்டித்தால் அச்வமேதயாகம் செய்த பலனை அடைவான்.

இவ்வாண்டு சனிக்கிழமை நடுநிசியில் சதுர்தசி இருப்பதால் உயர்ந்த பயனைக்கொடுக்கும் வல்லமையுள்ளது.

சிவராத்ரி நிர்ணயம்:

பூர்வேத்யுர்வா பரேத்யுர்வா மஹாநிஶி சதுர்தஶீ ।
வ்யாப்தா ச த்ருஶ்யதே யஸ்யாம் தஸ்யாம் குர்யாத்வ்ரதம் நர: ॥

முதல்தினமாயினும் மறுதினமாயினும் என்று மஹாநிசியில் சதுர்தசி வியாபித்து இருக்கிறதோ அந்த சதுர்தசியில் சிவார்சனையைச் செய்யவேண்டும்.

இம் முறைப்படியும் சனிக்கிழமை மஹாநிசி காலத்தில் சதுர்தசி இருப்பதைக் காணவும்.

விமலம்:

ஸூர்யாஸ்தமயே காலே து வித்யேதா சதுர்தஶீ ।
தத்ராத்ரி: ஶிவராத்ரி: ஸ்யாத் ஸா பவேதுத்தமோத்தமா ॥

சூரியன் அஸ்தமிக்கும் காலத்தில் சதுர்தசியானது இருக்குமாகில் அந்த சிவராத்திரி உத்தமம்.

இதன்படி சனிக்கிழமை சூரிய அஸ்தமன காலத்தில் சதுர்தசி இருப்பதால் உத்தமமாகும்.

இவ்வாக்கியங்களைக் கொண்டு சிவராத்ரிபூஜைக்கு முக்கியம் லிங்கோத்பவகாலத்தில் வியாபித்ததான சதுர்தசி திதியாகும்.

இலிங்கோத்பவகாலமோவெனில்:

மாசிமாதத்தில் தோன்றும் மதிக்கலை குறைந்து தேயும்
ஆசி பன்னான்காம் பக்கத்து அரை இருள் யாமந்தன்னில்
தேசினால் விளங்குஞ் சோதிச் செஞ்சுடர் ஆகிநின்ற
காசிலா நுதல் கண்பெம்மான் தன்னுருக்காட்டி நின்றான்.

– முதுமொழி.

உத்தரகாரணம்:

ஹரி-ஶ்ரவிஷ்டா-வாரீஶ ருக்ஷ ஸம்யோக தத்³தி³நே ।
ததா³து ஶிவபூஜாயா꞉ குஹா தோ³ஷோ ந வித்³யதே ॥

திருவோணம், அவிட்டம், சதயம் என்ற நக்ஷத்திரங்களின் சேர்க்கை இருக்குமாயின் அமாதோஷம் கிடையாது.

இவ்வாக்கியத்தின்படி சனிக்கிழமை திருவோண நக்ஷத்திரம் 52–34ம் அதன்பிறகு அவிட்டமும் இருப்பதால் அமா சம்பந்தமான தோஷம் கிடையாது.

நிஶீதா²த் வர்ததே யத்ர கலாகாஷ்ட²ம் குஹூர்ப⁴வேத் ।
ந பூஜயதி தத்³தே³ஶம் தந்த்ரமார்கா³நுஸாரிண꞉ ॥

தந்த்ரமார்கத்தை அவலம்பிக்கிறவர்களான ஸோமம், பாசுபதம் முதலிய மதத்தினர்கள் சிறிதளவு அமாசம்பந்தம்கூட கூடாது என்று விலக்குவார்கள்.

சித்தாந்தத்தின் படி நாளது கீலக வருஷம் மாசி மாதம் 4ம் தேதி (15–02–69) சனிக்கிழமை மஹாசிவராத்திரியாகும்.

மஹாசிவராத்ரி நிர்ணயம்

தியிசயெ து ஸஂவஹராவெ்ஞ ஶாஸாஉள வஹயஶெ௨ஹநி ।
ஶாஸாகெ து குயொாஉஶ்யாஂ உதுஉஶ்யா யுதஜு வா।
வஉவெ் து கயிதஂ ஜெஷ்௨ ஈஜஂ ஃயூஶுஹுதெ ॥

– உத்தரகாரணம்

(இதன் பொருள்) மாதத்தின் முதல் தேதியிலும், கடைசித் தேதியிலுமாக இரண்டு சிவராத்ரி, திரயோதசி சதுர்தசி சம்பந்தத்துடன் வந்தால், முதலில் உள்ள சதுர்தசி சிவராத்ரிதான் உத்தமம். பின் உள்ளது மத்யமம்.

இவ்வாண்டு மாசி மாதம் 1ம் தேதி (12-2-53) குருவாரம், திரயோதசி திதி 12-57 நாழிகைக்குமேல் சதுர்தசி திதி வந்து, 2ம் தேதி, சுக்ரவாரம், காலை நாழிகை 7-47 வரையில் இருப்பதாலும், சிரவண நக்ஷத்திரம் கூடியிருப்பதாலும் உத்தமம்.

மாசி 30 (13-03-53) சுக்ரவாரம், திரயோதசி திதி 38-24 நாழிகைக்கு மேல் சதுர்தசியும், உதயாதி 53-5க்கு மீனரவி யாதலால் 4-வது ஜாமத்திற்குப் பங்குனி மாதப் பிறப்பு ஏற்பட்டு விடுவதால் மத்தியமம்.

ஆதலால் இவ்வாண்டு மஹாசிவராத்ரி பூஜை ஆலயங்களிலும் ஆன்மார்த்த பூஜைகளிலும் மாசி 1 (12-2-53) குருவாரம் செய்வது உத்தமம்.

துலாமாதம்

கேட்டல், துதித்தல், நினைத்தல், திருவடி வணங்குதல், அர்ச்சித்தல், வந்தித்தல், தொண்டுசெய்தல், தோழமைபூண்டல், ஆத்மஸமர்ப்பணம் செய்தல் என்ற இந்த ஒன்பதுவிதமான பக்தியுள் நடுநாயகமாக விளங்கும் அர்ச்சித்தல் என்பது, ஆகமத்தில் பூஜா என்று கூறப்படுகிறது.

பூர்யந்தே ஸகலகர்மாணி ஜாயதே ஜ்ஞாநமாத்மநி ।
பூரணாஜ்ஜாயதே யஸ்மாத் பூஜா ஸம்யகிஹோச்யதே ॥

– காரணாகமம்

ஸகலகர்மாக்களும் எதனால் பூரணமாகச் செய்யப்படுகிறதோ, ஆன்மாவினிடத்தில் எதனால் ஞானம் உண்டாகிறதோ அது பூஜை என்று கூறப்படுகிறது.

இந்த பூஜையானது நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகைப்படும். நித்யபூஜையானது நித்யநித்யம், ஆகந்துக நித்யம் என இருவகைப்படும். தினந்தோறும் செய்யப்படும் பூஜை நித்யநித்யம் என்றும், பிரதோஷபூஜை, விஷூபூஜை, ஸங்கிரமண பூஜை முதலிய விசேஷபுண்யகாலங்களில் செய்யப்படும் பூஜை ஆகந்துக நித்யம் எனப்படும்.

நைமித்திகபூஜையும் நைமித்திகம், ஆகந்துகம் என இருவகைப்படும்.

கர்ஷணம் பிரதிஷ்டை முதலியவைகள் நைமித்திக பூஜையாகும். மாதந்தோறும் செய்யப்படும் மாஸ பூஜையானது ஆகந்துக (நைமித்திக) பூஜை எனப்படும்.

காம்யபூஜையும் பாஹ்யம், ஆப்யந்த்ரம் என இருவகைப்படும். ஆலயம் சென்று தனது இஷ்டசித்தியின் பொருட்டு

ஆசாரியன் முகமாக அபிஷேகம், அர்ச்சனை முதலியவைகள் செய்வது பாஹ்யபூஜை எனப்படும்.

தனது இஷ்ட லிங்கத்தினிடம் தானே நேர்முகமாக தனது அபீஷ்ட பிராப்தியின் பொருட்டு பூஜித்தல் ஆப்யந்த்ரபூஜை எனப்படும்.

இதனுள் மாதபூஜை என்பது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியுடன் கூடிய அந்தந்த மாதத்திற்குரிய நக்ஷத்திரங்களில் செய்யப்படும் விசேஷபூஜை.

அதனுள் ஐப்பசி மாதத்தில் இறைவனுக்கு சிறப்பாகச் செய்யப்படும் பூஜை அன்னாபிஷேகம்.

இது இறைவனின் நிலம், நீர், கனல், காற்று, வளி, இனன், மதி, இயமானன் என்ற எட்டு சரீரத்தினுள் முதலாவதான ப்ருத்வியின் சம்பந்தமான பூஜையாகும்;

𑌗𑌨𑍍𑌧𑍋 𑌮𑍂𑌲 𑌫𑌲𑌾𑌦𑌿 𑌕𑌨𑍍𑌦 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌂 ।

– சித்தாந்த சாராவளி

சந்தனம், வேர், பழம், கிழங்கு, புஷ்பம், அன்னம் முதலியவைகள் பார்த்திவம் எனப்படும்.

𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍, 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑌃, 𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨 𑌵𑍇𑌦, 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂, 𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌏𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃।

– உபநிடதம்

ப்ருத்வியில் எவர் இருக்கிறாரோ, ப்ருத்வியின் உள்ளேயும் இருக்கிறாரோ, எவரை ப்ருத்வியானது அறியவில்லையோ, எவருக்குப் ப்ருத்வியானது சரீரமோ, எவர் பூமியின் உள்ளிருந்து

கடத்துகிறாறோ, அவரே எல்லோருடைய உள்ளத்தில் இருக்கும் இறைவன்.

> கூஜூம் வுராணாத்மகூம் ஶ்ரேஷும் ஸவூஜஊ வுதிஷிதடீ ।
> தஸ்மாஉஊாஜிஷெகஊ ஜஜ வீதிகூாம் ஶாஹடீ ॥
> கூஜாவேம் விஶெஷெண ஜஜ ஶவெஜிதி ஸ்லாதடீ ।
>
> – பூர்வகாரணாகமம்

அன்னம் ப்ராணரூபமானது. எல்லா ஜந்துக்களிடத்திலும் இருக்கக்கூடியது. அன்னவடிவமே எனது வடிவம். அன்னபூஜை எனக்கு அன்புடையது என்று இறைவன் கூறுவதாக பூர்வ காரணாகமத்தால் அறியப்படுகிறது.

துலாமாதத்தில் அச்வினீ நக்ஷத்திரம் கூடிய பௌர்ணமி திதியில் இந்த அன்னபூஜையானது செய்யப்படவேண்டும். திதியும், நக்ஷத்திரமும் சேர்ந்திருப்பது மிகச் சிறந்தது.

ஒரே மாதத்தில் இரண்டு பௌர்ணமியோடு இரண்டு அச்வினீ நக்ஷத்திரம் வந்தால் பிந்தி உள்ளதிலேயே பூஜிக்க வேண்டும்.

இரண்டு தினத்திலும் அச்வினீ நக்ஷத்திரமும் பௌர்ணமி திதியும் வியாபித்திருந்தால் பகலில் என்று அதிகமாக திதி நக்ஷத்திரங்கள் காணப்படுகிறதோ அந்த தினத்தில் அன்னபூஜை செய்யவேண்டும்.

ஒருவேளை பௌர்ணமி திதி குறைவாக இருந்தாலும் நக்ஷத்திரம் அதிகநேரம் இருக்கும் நாளில் அன்னபூஜை செய்யவேண்டும்.

> வஷூயாஊயாஊம் வா கூஸ்ஷீ ஜகூஷஜெவ வா ।
>
> – காரணாகமம்

பௌர்ணமி இருந்தாலும் இல்லாவிட்டாலும் அச்வினீ நக்ஷத்திரமே அன்னபூஜைக்கு முக்யமாகக் கொள்ளப்படுகிறது.

சுவர்ணவாரி நெல், பெருஞ்சம்பா நெல், சிறுமணி நெல் முதலிய நல்ல மணமுடைய நெல்லில் இருந்து குத்தி எடுக்கப்பட்ட நக்ஷத்திரம் போன்ற அரிசியினால் ஸ்தாலீபாகம் என்ற ஸம்ஸ்கார முறைப்படி தயார்செய்யப்பட்ட அன்னத்தை ஆதாரசிலை முதற் கொண்டு லிங்கத்தின் சிரஸ்வரையிலும் அல்லது விஷ்ணுபீடம் முதற்கொண்டு லிங்கத்தின் சிரஸ் வரையிலும் அன்னத்தை நிரப்பவேண்டும்.

அபூபம், நெய், வாழைப்பழம், பால், தயிர், இவைகளுடன் அன்னலிங்கத்தை நன்றாக அலங்கரிக்கவேண்டும். மற்றும் பாவற்காய், முள்ளுக்கத்தரி, பலா முதலியவைகளாலும் அலங்கரிக்க வேண்டும்.

கோஷ்டம் என்ற திரவியம் சேர்த்து பாத்யமும், ஜீரகத்தை சேர்த்து ஆசமனீயமும், கருங்கடுகு சேர்த்து அர்க்யமும் கொடுக்கவேண்டும் என்று அம்சுமான் ஆகமம் கூறுகிறது.

ஜூஉ-ஒஉகூ தூ-ஞாஜாவஸி

– சிந்தியாகமம்

காளைக்கொம்பு மண், புண்யக்ஷேத்ர மண், ஸமுத்ரமண், யானைத் தந்தத்தின் மண், மலை மண், ஆற்று மண், புற்றுமண், நண்டுவளை மண் என்ற இந்த எட்டுவகை மண்களைச் சேர்த்து குடத்தில் போட்டு ஜலம் நிரப்பி பூஜிக்கப்பட்ட ஜலத்திற்கு மிருதூதகம் எனப்பெயர். இந்த ஜலத்தினால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

வைடூர்யம் என்ற ரத்னத்தினால் செய்யப்பட்ட மணி மாலைகளாலும் பொன்னூமத்தம்பூ, வெள்ளெருக்கம்பூ, நெய்தல்பூ, சந்திரகாந்தப்பூ, மகிழம்பூ, வெண்மருதாணிப்பூ இவைகளால் கட்டப்பட்ட புஷ்பமாலைகளாலும் அலங்கரிக்கவேண்டும்.

குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கோரோசனை, புனுகு, கஸ்தூரி இவைகளை பன்னீர் சேர்ந்த சந்தனத்துடன் சேர்த்து சாத்தவேண்டும்.

சந்தனம், அகில், கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் சேர்த்த தூபதிரவியங்களால் தூபம் போடவேண்டும்.

முன்னூறு (300) தீபம் போடவேண்டும் என்று காரணாகமமும், எண்ணூறு (800) அல்லது முன்னூறு, (300) அல்லது இருபது (20) தீபம் போடவேண்டும் என்று அம்சுமான் ஆகமமும் கூறுகிறது.

சம்பா அன்னம் நிவேதனம் செய்வதுடன் கருப்பஞ்சாற்றை பானீயமாக வைக்கவேண்டும். குங்குமப்பூ சேர்த்த தாம்பூலம் நிவேதனம் செய்யவேண்டும்.

கௌசிகம் என்ற பண்ணமைந்த தேவாரங்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.

புஷ்பராகம் என்ற தாளராகத்துடன் கூடிய கீதமும், ஏகதாளம் என்ற தாளமும், பத்மாங்கம் என்றதான நர்த்தனமும் செய்யப்பட வேண்டும். உடுக்கு என்ற வாத்யம் விசேஷமாக வாசிக்கப்பட வேண்டும் என்று ஸூக்ஷ்மாகமம் கூறுகிறது.

மாதபூஜைக்குரிய திரவியங்கள் பன்னிரண்டுள் (12) ஸ்நாநம், போஜனம், லேபனம், தரிசனம் என்று நான்கு வகைப்படும். அதனுள் போஜனத் திரவியங்கள் ஆறுவகை. (6)

அதாவது கிருதகம்பளம், அபூபம், சர்க்கரை, மருக்கொழுந்து அன்னம், பழம் என்பன. இதை இறைவனோடு சேர்த்து வைத்திருந்து மறு பூஜாகாலத்தில் விஸர்ஜனம் செய்யவேண்டும்.

𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌤𑌥𑌾 ।

என்ற மூலாகமவாக்யத்தினால் போஜன திரவியங்கள் வளர்ச்சியைக் கொடுக்கும். அதாவது இறைவனுக்கு அன்னாபிஷேகம் செய்தால் நெல் முதலிய தான்யங்களும், கிழங்கு வகைகளும், சந்தனமரம் முதலிய வாசனை மரங்களும், பலா, மா, மாதுளை முதலிய சகல பழவகை மரங்களும் அளவற்று வளர்ச்சியடையும். இதனால் உலகம் செழிக்கும்.



நவராத்திரி

சுரும்புமுரல் கடிமலர்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றிக் கவுணியர்க்கு
பால் சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயர்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகை போற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.

– திருவிளையாடற் புராணம்

இஃது புரட்டாசி வளர்பிறை பிரதமை முதல் நவமி வரையில் ஒன்பது நாளும் அனுஷ்டிக்கப்படும் விரதம். இதற்கு சாரதா நவராத்திரி என்று பெயர்.

முறை

நவராத்திரிக்கு வேண்டிய பூஜை உபகரணங்களை அமாவாசையன்றே சேகரித்துக்கொண்டு அன்று ஏககால போஜனம் செய்து பிரதமையில் சுபகரமாய் அலங்காரம் செய்யப்பட்ட வேதிகை அமைத்து தேவியின் பூஜாவிதி தெரிந்த அந்தணர்களில் ஒன்பதின்மர், ஐவர், மூவர், அல்லது ஒருவரையாவது ஒன்பது தினங்களுக்கும் வரணம் செய்து பூஜாமண்டபத்தை அடையச் செய்யவேண்டும்.

மந்த்ரபூர்வகமாய் வெண்பட்டு விரித்த சிம்மாசனத்தில் சதுர்புஜம், அஷ்டபுஜம், அஷ்டாதசபுஜம் கூடிய ஏதாவது ஒரு துர்காதேவியை எழுந்தருளச் செய்து வஸ்த்ர ஆபரணங்களால் அலங்கரிக்கவேண்டும்.

கும்பபூஜைக்காக கலசஸ்தாபனம் செய்து மங்கள வாத்தியத்துடன் கணபதி, ஆசார்யன், தேவி முதலியவர்களை

பிரார்த்தனை செய்துகொண்டு கும்பத்திற்கும் பிம்பத்திற்கும் நவாவரண பூஜை செய்து, சுகந்தமான அர்க்யம் கொடுத்து, இளநீர், மாதுளை, வாழை, பலா, மா முதலிய கனிகளை மிகுதியாக வைத்து அன்ன நிவேதனமும் செய்யவேண்டும்.

நவராத்திரி பூஜையை பலவித திரவியங்களாலும் நிருத்த, கீத, வாத்தியங்களோடும், பக்தி சிரத்தையோடும் செய்யவேண்டும்.

ஒன்பதுநாளும் விரதமிருப்போர் உபவாஸம் இருந்து பூஜைக்குப்பிறகு புசித்து, சயனாதிகளை விலக்கி நிலமிசை படுத்தல் வேண்டும்.

பிரதமை ஹஸ்தநக்ஷத்திரம் கூடுமாயின் அது விசேஷ தினமாகும். அத்தினத்தின் பூஜையால் அம்பிகை விசேஷமாய் ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கிறாள்.

கலசபூஜை ஹோமம் வரையில் செய்யத்தகுந்தனவற்றை முடித்துப் பின்னர் கன்னிகைகளை பூஜிக்க வேண்டும். அக்கன்னிகைகள் இரண்டு முதல் பத்துவயதிற்கு உட்பட்டவர்களாய், நோயற்றவர்களாய், லக்ஷணமுள்ளவர்களாய் தேர்ந்தெடுத்து முறையே குமாரி, த்ரிமூர்த்தி, கல்யாணி, ரோஹிணீ, காளிகா, சண்டிகா, சாம்பவீ, துர்க்கா, சுபத்ரா என்ற பெயர்களால் பூஜிக்கவேண்டும்.

பத்துவயதிற்கு மேற்பட்ட கன்னிகள் பூஜைக்குத் தகுதி அற்றவர்கள். முதல்நாள் ஒரு கன்னிகையையும், இரண்டாம்நாள் இருகன்னிகைகளையும் இம்மாதிரி நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு கன்னிகையாக உயர்த்திப் பூஜிக்கவேண்டும். நாளொன்றுக்கு, ஒவ்வொரு கன்னிகையையும் பூஜிக்கலாம். இப்பூஜை தனத்திற் கேற்ப விசேஷமாக செய்யத்தக்கதன்றி லோபமாகச் செய்யக்கூடாது.

கன்னிகா பூஜையின் பலன்

1.	குமாரியைப் பூஜிப்பதால்	தரித்ரநாசம், சத்ருக்ஷயம், ஆயுள்விருத்தி
2.	த்ரிமூர்த்தியைப் பூஜிப்பதால்	தர்ம–அர்த்த–காமம், தன தான்ய விருத்தி, புத்ராபிவ்ருத்தி
3.	கல்யாணியைப் பூஜிப்பதால்	வித்தை, ஜயம், ராஜ்யசுகம்
4.	ரோஹிணியைப் பூஜிப்பதால்	ரோகநாசம்
5.	காளியைப் பூஜிப்பதால்	சத்ருநாசம்
6.	சண்டிகையைப் பூஜிப்பதால்	ஐச்வர்யம்
7.	சாம்பவியைப் பூஜிப்பதால்	யுத்தஜயம், துக்கநிவர்த்தி, ராஜசம்பத்து
8.	துர்க்கையைப் பூஜிப்பதால்	சத்ருநாசம், செய்யமுடியாத காரியங்களைச் செய்யும் ஆற்றல், பரலோக சுகம்
9.	சுபத்திராவைப் பூஜிப்பதால்	மனோரதசித்தி

என்ற இவைகள் கைகூடும்

நவராத்திரி விரதத்தை எண்ணிறந்த தேவர்கள் அனுஷ்டித்து இஷ்டசித்திகளை அடைந்துள்ளார்கள். சுரதன் என்ற அரசனும் சமாதி என்ற வைச்யனும் தேவியை உபாசித்து இஷ்ட சித்தியைப் பெற்றனர்.

நவராத்திரியில் தேவியை அலங்கரிக்கும் முறை

முதல் மூன்று நாட்களில் ருத்ரதுர்கையும், நடுமூன்று நாட்களில் லக்ஷ்மிதுர்கையும், கடைசி மூன்று நாட்களில் ஸரஸ்வதி துர்கையும் பூஜிக்கப்படுகிறார்கள்.

முதல் நாள்: மது, கைடபன் என்ற இரண்டு அசுரர்களை ஸம்ஹாரம் செய்த மஹாவிஷ்ணுவிற்கு உத்போதகசத்தியாக இருந்த

காரணத்தால் முதல் திருநாளுக்கு நவதுர்கையினுள் குமாரி என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் அபயம், வரதம், புத்தகம், அக்ஷமாலையுடன் கூடிய பாலையின் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

இரண்டாம் நாள்: மஹிஷாசுர ஸைன்யங்களை வதம் செய்யும் தோற்றம். அன்று திரிமூர்த்தி என்ற துர்கை பூஜிக்கப்படுவதால் கரும்புவில், புஷ்பபாணம், பாசாங்குசம் இவைகளுடன் கூடிய ராஜராஜேச்வரியின் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

மூன்றாம் நாள்: மஹிஷாஸுரவதம் என்ற தோற்றம். அன்று கல்யாணி என்ற துர்கை பூஜிக்கப்படுவதால் சூலத்தை கையிலேந்தி மஹிஷத்தின் தலைமீது வீற்றிருக்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

நான்காம் நாள்: இடையூறு நீங்கிய இந்திரன் முதலானவர்களுடைய துதியின் தோற்றம். அன்று ரோஹிணி என்ற துர்கை பூஜிக்கப்படுவதால் சிம்மாசனத்தில் அமர்ந்து, தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் அநுக்கிரஹம் செய்யும் ஜயதுர்கையின் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

ஐந்தாம் நாள்: சுக்ரீவன் என்ற தூதனுடன் சம்வாதத் தோற்றம். அன்று காளி என்ற துர்கை பூஜிக்கப்படுவதால் சும்பன் என்ற அசுரனுடைய தூதன் தூது சொல்வதைக் கேட்டுக்கொண்டு சுகாசனத்தில் வீற்றிருக்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

ஆறாம் நாள்: தூம்ரலோசனவதம் என்ற தோற்றம். அன்று சண்டிகை என்ற துர்க்கை பூஜிக்கப்படுவதால் ஸர்ப்ப ராஜாஸனத்தில் அமர்ந்து அக்ஷமாலை, கபாலம், தாமரைப்பூ, பொற்கலசம் இவைகளுடன் கூடிய திருக்கரங்களோடு

பிறையணிந்தவளாய் விளங்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

ஏழாம் நாள்: சண்டமுண்டன் என்ற இரண்டு அசுரர்களுடைய வதத்தோற்றம். அன்று சாம்பவி என்ற துர்கை பூஜிக்கப்படுவதால் பொற்பீடத்தில் அமர்ந்துகொண்டு ஒருகாலை கீழிருக்கும் தாமரையில் ஊன்றி வீணைவாசிக்கும் வடிவம் அலங்கரிக்கப் படுவது சிறந்தது.

எட்டாம் நாள்: ரக்தபீஜவதத் தோற்றம். அன்று துர்கை என்ற துர்கை பூஜிக்கப்படுவதால் அணிமா முதல் அஷ்டசக்திகள் புடைசூழ பாசாங்குசம், அபயம், கரும்புவில்லுடன் கருணை நிறைந்த தோற்றத்துடன் வீற்றிருக்கும் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

ஒன்பதாம் நாள்: சும்ப–நிசும்ப வதத்தோற்றம். அன்று சுபத்ரை என்ற துர்கை பூஜிக்கப்படுவதால் வில், பாணம், அங்குசம், சூலம் இவைகளை தரித்த கையோடு சிவசக்திவடிவமாய் காமேச்வரியின் வடிவம் அலங்கரிக்கப்படுவது சிறந்தது.

நவராத்திரியின் தத்துவம்.

யா ஸா ஶக்திர்ஜகத்தாது: கதிதா ஸமவாயிநீ।
இச்சா த்வம் தஸ்ய ஸா தேவீ ஸிஸ்ருக்ஷோ: ப்ரதிபத்யதே॥

ஏகாபி ஸத்யநேகத்வம் யதா கச்சதி தச்ச்ருணு।
ஏவமேததிதி ஜ்ஞேயம் நாந்யதேதி ஸுநிஶ்சிதம்॥

ஜ்ஞாபயந்தீ ஜகத்யத்ர ஜ்ஞாநஶக்தி நிகத்யதே।
ஏவம் பூதமிதம் வஸ்து பவத்விதி யதா புந:॥

ஜாதா ததைவ தத்தத்வத் குர்வத்யத்ர க்ரியோச்யதே।

– மாலினீ விஜயம்

மஹாஸம்ஹாரகாலத்தின் முடிவில் இறைவன் உலகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டும் என இச்சிக்கிறான். அப்போது இச்சை என்ற சக்தி தோன்றுகிறது. பின் அதை எவ்வாறு ஸ்ருஷ்டிப்பது என்பதை அறிகிறான். அப்போது ஞானசக்தி தோன்றுகிறது. பின் கிரியாசக்தியினால் உலகைப் படைக்கிறான். இக்கருத்தே இந்த நவராத்திரி உற்சவத்தால் விளக்கப்படுகிறது.

தேவர்கட்கு இரவுகாலம் தக்ஷிணாயணம். இரவு என்பது உறக்கத்திற்குரிய காலம். இது ஸம்ஹாரகாலம் போன்றது. இவ்விரவின் மத்தியகாலமாகிய இந்த நவராத்திரியில் இச்சா சக்தியின் தோற்றமாகிய துர்கையின் ஆட்சி காலம் முதல் மூன்று நாட்கள். இதில் இறைவன் உலகத்தை உஜ்ஜீவிக்க விரும்புகிறான்.

நடுவிலுள்ள மூன்று நாட்கள் ஞான-சக்தியின் தோற்றமான லக்ஷ்மி-துர்கையின் ஆட்சி காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு-கரண-புவன-போகங்களைக் கொடுக்கும் முறையை அறிகிறான்.

இறுதி மூன்றுநாள் கிரியாசக்தியின் தோற்றமான ஸரஸ்வதி துர்கையின் ஆட்சிக்காலம். இதில் இறைவன்முன் அறிந்தவாறு அருள்வழங்குகிறான் என்பது சிவாகம சித்தாந்தத்தின் உள்ளுறை.

மஹாலக்ஷ்மி துர்கை

"ஹகாவி ஶக்தி꞉ வாமெஶ்வரஸ்ய
ஹிஞா சதுயூா விமியொமகாலெ ।
ஹொமெ ஹவாநீ கூவநெ து விஷ்ணு꞉
கொவெ ச காளீ ஸமரெ ச ஊமூா ॥ "

என்ற வசனத்தினால் "பரமேச்வரனுடைய சக்தியான ஒருவளே நான்கு சக்தியாகத் தோன்றினாள். இறைவனிடத்தில் போகசக்தியாகவும், உலகைக் காப்பதற்காக விஷ்ணு சக்தியாகவும், கோபத்தில் காளியாகவும், யுத்தத்தில் துர்கையாகவும் தோன்றினாள்" எனக் கூறப்படுகிறது.

"துர்கமன்" என்ற அசுரனைக் கொன்றதனால் துர்க்கை எனப் பெயர். நவவஷூாஹவெ꞉ ஊமூா என்பதனால் ஒன்பது வயதுடையவள் துர்கை எனவும் கொள்ளலாம்.

இந்த துர்காதேவியின் சிறப்பு ஆகமங்களில் ஒன்பதுவித வடிவத்துடன் ஒன்பது விதமான பெயரால் கூறப்படுகிறது. சண்டீ, மஹிஷமர்த்தனி என்பது துர்கையின் பர்யாயப் பெயர்களாகும்.

மார்கண்டேய புராணத்தில் கூறப்படுகின்ற ஸ்ரீதேவீ மாஹாத்ம்யத்தில் இச்சண்டியைப்பற்றிப் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்ம ஸ்வரூபிணியாகக் கூறப்படுகிறது. அதாவது மஹாருத்ர துர்கை, மஹாலக்ஷ்மி துர்கை, மஹாஸரஸ்வதி துர்கை என்பதாம். இதற்கு உரிய மந்திரத்திற்கு நவாக்ஷரீ எனப்பெயர்.

இம் மந்த்ரத்திற்கு உரியவர்களான முன்கூறிய மூன்று சக்திகளுக்குள் முதல் சக்தியான மஹாருத்ர துர்கைக்குப் பத்துக் கைகளும், இரண்டாவது சக்தியான மஹாலக்ஷ்மி துர்கைக்கு பதினெட்டுக் கைகளும், மூன்றாவது சக்தியான மஹாஸரஸ்வதி துர்கைக்கு எட்டுக்கைகளும் உள்ளன.

இதனுள் பதினெட்டுக் கைகளையுடைய மஹாலக்ஷ்மி துர்கையை உபாசிப்பவர்களுக்கு அஷ்டலக்ஷ்மிகடாக்ஷமும், அணிமாதி சித்திகளும் உண்டாகும்; ஸர்வலோகங்களுக்கும் பதியாக ஆகின்றார் என்று தேவீமஹாத்மியத்தால் அறியப்படுகிறது.

இவ்வஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மி துர்கையின் கையில் உள்ள ஆயுதங்கள் முறையே (வலதுகை கீழ்பாகத்திலிருந்து வரிசையாக இடதுகை கீழ்பாகம் வரையில்) அக்ஷமாலை, கமலம், பாணம், கத்தி, வஜ்ராயுதம், கதை, சக்ரம், த்ரிசூலம், பரசு, சங்கம், மணி, பாசம், சக்தி, தண்டம், கேடயம், வில், பானபாத்ரம், கமண்டலம் என்ற இப்பதினெட்டும் இருக்கின்றன.

ஸ்ரீதேவீ மாஹாத்ம்யம் வைக்ருதி ரஹஸ்யம் என்ற பகுதியில் காண்பது வருமாறு:

"𑌆𑌯𑍁𑌧𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌧𑌃 𑌕𑌰𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾 𑌚 𑌕𑌮𑌲𑌂 𑌬𑌾𑌣𑍋𑌽𑌸𑌿𑌃 𑌕𑍁𑌲𑌿𑌶𑌂 𑌗𑌦𑌾 ॥

𑌚𑌕𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌂 𑌪𑌰𑌶𑍁𑌃 𑌶𑌙𑍍𑌖𑍋 𑌘𑌣𑍍𑌟𑌾 𑌚 𑌪𑌾𑌶𑌕𑌃 ।
𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑌣𑍍𑌡𑌶𑍍𑌚𑌰𑍍𑌮𑌚𑌾𑌪𑌃 𑌪𑌾𑌨𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌃 ॥

𑌅𑌲𑌙𑍍𑌕𑍃𑌤 𑌭𑍁𑌜𑌾𑌮𑍇𑌭𑌿𑌰𑌾𑌯𑍁𑌧𑍈𑌃 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌾𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌮𑌯𑍀𑌮𑍀𑌶𑌾𑌂 𑌮𑌹𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌮𑌿𑌮𑌾𑌂 𑌨𑍃𑌪 ॥

𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।"

"அக்ஷமாலை முதலிய ஆயுதங்களால் அலங்கரிக்கப்பட்ட பதினெட்டுக் கைகளையுடைய மஹாலக்ஷ்மி துர்கையைப் பூஜிப்பவர்கள் எல்லா உலகத்திற்கும் பிரபுவாக ஆகிறார்கள்" என்பது இதற்குப்பொருள்.

இச்சக்தியின் தியானச்லோகமாக நவாக்ஷரீ மந்த்ர விதானத்தில் அடியிற்கண்டவாறு காணப்படுகிறது.

𑌅𑌕𑍍𑌷𑌸𑍍𑌰𑌕𑍍𑌪𑌰𑌶𑍂 𑌗𑌦𑍇𑌷𑍁𑌕𑍁𑌲𑌿𑌶𑌂 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌧𑌨𑍁𑌃 𑌕𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌂
𑌦𑌣𑍍𑌡𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌸𑌿𑌂 𑌚 𑌚𑌰𑍍𑌮𑌜𑌲𑌜𑌂 𑌘𑌣𑍍𑌟𑌾𑌂 𑌸𑍁𑌰𑌾𑌭𑌾𑌜𑌨𑌮𑍍।
𑌶𑍂𑌲𑌂 𑌪𑌾𑌶𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑍇 𑌚 𑌦𑌧𑌤𑍀𑌂 𑌹𑌸𑍍𑌤𑍈𑌃𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌪𑍍𑌰𑌭𑌾𑌂
𑌸𑍇𑌵𑍇 𑌸𑍈𑌰𑌿𑌭𑌮𑌰𑍍𑌦𑌿𑌨𑍀𑌮𑌿𑌹 𑌮𑌹𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌂 𑌸𑌰𑍋𑌜𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑍍॥

ஸுரதன் என்ற அரசன் சத்ருவின் வசத்தையடைந்து தனது ராஜ்யத்தைத் திரும்பிப்பெற, தேவியை உபாசித்து, திரும்ப ராஜ்யத்தைப் பெற்றான்.

ஸமாதி என்ற வைச்யன் மனைவி மக்களால் நிராகரிக்கப் பட்டு, பின் அம்பிகையின் உபாசனையினால் திரும்பவும் சௌஜன்யத்தையும் சுகத்தையும் பெற்றான்.

சாத்விகமார்கமாக உபாசிக்கவேண்டிய இந்த துர்கையை யாவரும் உபாசித்து விரும்பிய பலனைப் பெறலாம் என்பது ஸ்ரீதேவீ பாகவதம் முதலிய நூல்களால் அறியப்படுகிறது.

ஸ்ரீ அர்த்தநாரீஶ்வரர்

நவசக்திகளின் வழிபாடு

உலகில் தோன்றியுள்ள பலவித பிறப்புகளுள் மனிதனாக பிறப்பது மிகச் சிறந்தது. மற்ற பிறவிகள் நன்மை தீமை என்பவைகளைத் தெரிந்துகொள்ளாமல் வாழ்கின்றன. பசி வந்த போது உண்ணுகின்றன. களைப்பு வந்தபோது தூங்குகின்றன. இம்மை மறுமைக்கு வேண்டியதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அவற்றிற்கு அதற்கேற்ற பகுத்தறிவில்லை. மற்ற பிறவிகளுக்கு இல்லாத இத்தகைய பகுத்தறிவு இம்மனிதனுக்கு இருக்கிறது. இதனால் இவனுக்கு ஒரு பெருமை.

உலகத்தில் கிடைக்க அரிதாக உள்ளது மூன்று. அவை மனிதப்பிறவி, மோக்ஷ இச்சை, மஹான்களுடன் சேர்ந்து வாழுதல் என்பது ஒரு முதியோரின் வாக்கு.

சுகம் உண்டாகட்டும். துக்கம் உண்டாகக் கூடாது என்றுதான் எல்லோராலும் விரும்பப்படுகிறது. ஒரு மனிதனுடைய முயற்சியும் இருவகையில் எழுப்புகிறது. ஒன்று இன்பத்தைப் பெற; மற்றொன்று துன்பத்தை நீக்க; இன்பத்தைப் பெறுவது மாத்திரம் போதாது. அது இன்பமாக ஆகாது. துன்பத்தை நீக்குவதும் இன்பம்தான். இந்த இரண்டும் ஒருசேர சேர்ந்த இன்பந்தான் இன்பமாகும்.

இத்தகைய துன்பநீக்கத்தையும் இன்பப் பேற்றையும் பெற மனிதன் தனது பகுத்தறிவைக் கொண்டு முயற்சி செய்கிறான். இன்பம் பெறுகிறான். பெருமுயற்சி செய்தும் சில இன்பங்கள் பெற முடியாமற் போகிறது. சில சிறு முயற்சியால் அடையப்படுகிறது. இது மனிதனின் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி. இந்த சத்திதான் ஊழ்வினையின் சத்தி.

வினையின் வன்மையை வெல்லவேண்டும். அவ்வாறு வென்றால் தடையற்ற இன்பம் கிடைக்கும். இத்தகைய தடை இல்லாத இன்பத்தை பெற இறைவனின் அருள் வேண்டும்.

அன்பினால் இன்பத்தைப் பெறலாம். இன்பமும் அன்பும் காரணகாரியத் தொடர்புடையது. இறைவனே இன்ப அன்பு வடிவன்.

உலகிற்கு முழு–முதற் கடவுளாய் விளங்குபவர் அம்மையப்பரான சிவபெருமான். அவனை விட்டுப் பிரியாது அவனுடனாய் நிற்கும் அருள் அம்மை என கூறப்படுகிறது.

அந்த சக்தியின் சேர்க்கையினால் சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழிலை செய்கிறார். அந்த சத்தியின் சேர்க்கையில்லையேல் சிவன் ஒன்றும் செய்ய முடியாதவனாகிறான்.

> உாவகஸ்ெயாஷ்வஃ ஜெுயம் ஊஷ்ஸாஸ்ெயுவ ஊயிதிஃ।
> உநூஸு உநிுகெவெயம் ஶிவஸு ஸஹஜா ஶிவா॥
>
> – சிவாகமம்.

அக்னிக்குச் சூடு போலவும், தினகரனுக்குக் காந்தி போலவும், சந்திரனுக்கு சந்திரிகை போலவும் சிவபெருமானுக்கு இணை பிரியாமல் கூடத் தோன்றியவள் பராசக்தி.

இந்த பராசக்தியானவள் பொது வகையால் ஒன்றாய், வியாபார பேதத்தால் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்ற பேதமுடையவளாய் காணப்படுகிறாள். ஒன்று முதல் ஒன்பதினுள் உலகமே அடங்கியுள்ளது எனக் கூறலாம்.

ஒன்பது என்ற எண் மிக்க உயர்வுள்ளது. எல்லோராலும் வணங்கக்கூடியது. ஸர்வசித்திகளையும் அளிக்க வல்லமையுள்ள தெய்வத்தன்மை வாய்ந்தது.

உலகத்தில் மக்களால் செய்யப்படும் நல்ல தீய காரியங்களுக்கு சாட்சிகளாக உள்ளவர்கள் ஒன்பதின்மர். அவர்கள்

ஸூயடிஷெ்லாஜொ யஜ: கூாஜொ ஊஹாஹூதாநி வஞ ச।
ஶதெ ஶுஹாஶுஹஸெூஹ கூஊணொ நவ ஸாக்ஷிண:॥

சூரியன், சந்திரன், இயமன், காலன், ப்ருதிவி, ஜலம், அக்னி, காற்று, ஆகாயம் என்ற இவர்கள் ஆவார்கள்.

மற்றும் உலகத்தில் வாழும் மக்களின் காலசக்ரங்களை சுழற்றும் நாயகர்களும் ஒன்பதின்மர். அவர்கள் இனன், இந்து, பூசுதன், சோமசுதன், தேவகுரு, தைத்யகுரு, சூரியசுதன், ராகு, கேது என்ற ஒன்பது பேர்கள்.

உலகத்தில் ரஸங்களும் ஒன்பது என்று கணக்கிடப் பட்டிருப்பதைக் காணலாம். அவை சிருங்காரம், வீரம், கருணை, அற்புதம், ஹாஸ்யம், பயானகம், பீபத்ஸம், ரௌத்ரம், சாந்தம் என்பன.

ரத்தினங்களும் – வைரம், வைடூர்யம், கோமேதகம், புஷ்யராகம், இந்திரநீலம், மரகதம்,. மாணிக்கம், ஸ்படிகம், பவழம் என்ற ஒன்பதாகவே காணப்படுகின்றன.

த்வக், குருதி, மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்லம், ப்ராணன், ஜீவன் என்ற தாதுக்களும் ஒன்பது. இவைகளில் ஐந்து தாதுக்கள் சத்தி மூலங்கள். நான்கு தாதுக்கள் சிவ மூலங்கள். ஆகவே தாதுக்களும் ஒன்பதாகும்.

𑌤𑍍𑌵𑌗𑌸𑍃𑌙𑍍-𑌮𑌾𑌂𑌸𑌮𑍇𑌦𑍋𑌽𑌸𑍍𑌥𑌿𑌧𑌾𑌤𑌵𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌃।
𑌮𑌜𑍍𑌜𑌾-𑌶𑍁𑌕𑍍𑌰-𑌪𑍍𑌰𑌾𑌣-𑌜𑍀𑌵𑌧𑌾𑌤𑌵𑌃 𑌶𑌿𑌵𑌸𑌂𑌭𑌵𑌾𑌃॥
𑌨𑌵𑌧𑌾𑌤𑍁𑌰𑌯𑌂 𑌦𑍇𑌹𑌃 𑌨𑌵𑌯𑍋𑌨𑌿𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃॥

— காமிகாகமம்

நமது ஆக்கையும் ஒன்பது துவாரங்களை உடையது என்று யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவ்வுலகில் பாரதம் முதலிய கண்டங்களும் ஒன்பதுதான். அதாவது இந்து கண்டம், மேரு கண்டம், தாம்ர கண்டம், கபஸ்தி கண்டம், சதகண்டம், சௌம்ய கண்டம், கந்தர்வ கண்டம், பரத கண்டம் என்பவை.

குமாரனுடைய உத்பத்தி காலத்தில் தேவியின் சிலம்பு மணிகளின்றும் சிதறிய மணிகள் ஒன்பது. அவற்றினின்றும் உத்பவித்த கன்னியர்களும் ஒன்பதின்மர். அம்மணியினின்றும் தோன்றிய வீரர்களும் ஒன்பது பேர்கள்.

மாசறு மன்னவர் தம்பெயர் வீர
  வாகு வெனுந்திரு வள்ளல் வளைக்கைக்
கேசவனும்பரா புகழ்ந்திடு வீர
  கேசரி வீரமகேந்திரனென் போன்
வீசு புகழ்ப்பேறு வீரமகேசன்
  வீர புரந்தரன் வீர வரக்க
னாசறு வீரதிவாகரன் வீர
  ராந்தகன் வீரமடைந்திடு தீரன்.

— ஸ்ரீசம்பந்தசரணாலய சுவாமிகள்

வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரகேசன், வீரபுரந்தரன், வீரவரக்கன், வீரதிவாகரன், வீராந்தகன், வீரதீரன் என்ற ஒன்பது

வீரர்கள். இவர்கள் முருகப் பெருமானின் அருள்பெறும் வீரர்கள். இறைவனின் திருநோக்கினால் மணிமங்கையர்களிடம் தோன்றியவர்கள்.

சிவபெருமானும் உயிர்கள் உய்வதற்காக, சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேச்வரன், ருத்திரன், திருமால், பிரமன் என்ற ஒன்பது பேதமாகி விளங்குகிறான்.

சிவமொடு சத்தி திகழ் நாதம் விந்து
நவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறா
நவமவை யாகி நடிப்பவன் தானே

– திருமந்திரம்

இறைவன் ஒருவனே நவந்தருபேதமாகி நடிப்பான் என்பது கருத்து.

சிற்சத்தியோடு பிரிப்பின்றி நிற்கும் சிவன் ஆன்மாக்களின் மலநோயைத் தீர்த்தற் பொருட்டு சுத்தமாயையில் தொழில் செய்யத் திருவுளங் கொண்ட அவதரம் சிவம். இது உயிர்களின் துன்பத்தை நீக்க உன்னிய சந்தர்ப்பமாதலின் பரநாதம் எனவும் படும்.

அங்ஙனம் திருவுளங்கொள்ளும் பொழுது எங்ஙனம் தொழில் செய்யவேண்டும் என்று எண்ணுகிற அவதரம் சத்தி. சத்தியாவது அடங்கி நிற்கும் ஆற்றல். சிவத்திடம் இந்நிலையில் ஒரு குறிப்பு நிகழும். அதனைப் பரவிந்து என்பர்.

அதன்பின் திருவுள்ளம் பற்றியவாறு செய்தற்கு முதற் காரணமாய்த் தன்னுள் அடங்கியிருந்த சுத்தமாயையோடு கூடிய அவதரம் நாதம்.

சுத்தமாயையோடுகூடிச் செய்யவேண்டியவற்றைச் செய்ய எண்ணிய நிலை விந்து. இந்த நாதவிந்துக்கள் சுத்தமாயையிற் கூடிய நிலையாயினமையின் அபர நாதம் அபரவிந்து எனவும் படும். இவற்றைச் சிவம், சத்தி எனக் கூறுதலும் உண்டு. இலயசிவம், இலயசத்தி எனப்படுவனவும் இவைகளே ஆம்.

பின்பு இன்னின்னவாறு செய்யவேண்டும் என்று திருவுளம் பற்றிய நிலை சதாசிவம்; எண்ணும் முதன்மை சிவத்தையும், எண்ணுதற்குரிய ஆற்றல் சத்தியையும் குறித்தலின் சதாசிவம் எனப்படும்.

எண்ணியவாறு செய்யும்போது அவரவர் கன்மபலத்தை அவரவர் அனுபவிக்கச் செய்யும் முறையில் பரிபாகப்படாத கன்மபலங்களையும், பரிபாகப்பட்டு அனுபவத்திற்கு வரும் கன்மபலங்களில் உள்ள குணதோஷங்களையும் மறைக்கும் நிலை மஹேச்வரம். உயிர்கள் அனுபவிக்க வேண்டிய கன்மங்களைக் கூட்டியும், அனுபவிக்க வேண்டாத ஐச்வர்யங்களை மறைத்தும் வைத்தலின் மஹேச்வரம் எனப்பட்டது.

அங்ஙனம் உயிர்கள் கன்மபலங்களை நுகருங்கால் இளைப்பு ஒழிதற்பொருட்டும், வேறு உலகங்களில் தோன்றி இன்ப துன்பங்களை எய்துதற் பொருட்டும், இவ்வுலகத்திலேயே வேறு உடலின் வாயிலாக அவைகளை நுகர்தற்பொருட்டும் சங்காரம் செய்யும் நிலை ருத்திரன். நுகர்ச்சிக்காக உடலோடு உயிரை நிலைக்கச் செய்கின்ற நிலை விஷ்ணு. நுகர்ச்சிக்குரிய உடல் கருவி, உலகம், பொருள் முதலியவற்றை தோற்றுவிக்கும் நிலை பிரமன்.

இவ்வொன்பதில் சிவம், சத்தி, நாதம், விந்து நான்கும் இறைவனது அருவத்திருமேனியாம். சதாசிவம் அருவுருவத் திருமேனியாம். பின் நான்கும் உருவம் என்க.

சிவபேதம் ஒன்பதுக்குமுரிய சத்தி பேதமும் ஒன்பது வகைப்படும்.

சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி
ஒத்துறு மகேசையாகி யுமை திருவாணி யாகி
வைத்திருஞ்சி வாதிக்கிங்கன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
எத்திற நின்றானீசன் அத்திறமவளு நிற்பள்.

– சிவஞானசித்தியார்

சத்தற்கு ஞானசத்தியாய், விந்து க்ஷோபத்தைப் பண்ணி விந்து சத்தியாய், சிவன் நாத அதிஷ்டாதாவானபொழுது விந்து அதிஷ்டாத்ரியான சத்தியாய், சதாசிவருக்கு மனோன்மனி சத்தியாய், மஹேசருக்கு மஹேச்வரி என்னும் சத்தியாய், ருத்ர தேவருக்கு உமை என்னும் சத்தியாய், விஷ்ணுவிற்கு லக்ஷ்மி என்னும் சத்தியாய், ப்ரஹ்மாவிற்கு ஸரஸ்வதி என்னும் சத்தியாய் விளங்கும் சத்திபேதமெல்லாம் பராசக்தி ஒன்றாலாவதாம்.

ஏகைவாநேகதாம் யாதி ஶிவஶக்திரூபாயத:।

சிவசத்தி ஒருத்தியே அனேக சத்தியாகத் தோன்றுகிறாள் என்று மூல சுருதியால் அறியப்படுகிறது. சிவாலயத்தில் யோகசத்தி, போகசத்தி, வீரசத்தி என மூன்று சத்திகள் பூஜிக்கப்படுகின்றன.

யோகம் போகஞ்ச வீரஞ்ச ஶக்தித்ரயமுதாஹ்ருதம்।
யோகம் பீடஸ்தாயுக்தம் போகம் வாஹ்யஸம்ஸ்திதம்॥
வீரம் ஸ்தண்டிலஸம்யுக்தம் ஶக்திரேவம் த்ரிதா பவேத்। – காரணாகமம்

இலிங்கம் சிவன், பீடம் சத்தி. இந்த சத்திக்கு யோகசத்தி என்று பெயர். போகசத்தி என்பது அர்த்த மண்டபத்தில்

இடப்பாகத்தில் வீற்றிருக்கும் சத்தி. வீரசத்தி என்பது சுவதந்திரமாக வெளியில் தனிக் கோயிற் கொண்டு விளங்கும் சத்தி.

இந்த வீரசத்தியே ஒவ்வொரு சிவாலயங்களிலும் தனித் தனியாகச் சிறப்புப் பெயரால் துதிக்கப்படுகிறாள். அதாவது அபிராமி, அகிலாண்டேச்வரி, உண்ணாமுலை, கற்பகாம்பிகை, காமாக்ஷி, கோமதி, தையல்நாயகி, நீலாயதாக்ஷி, மீனாக்ஷி, விசாலாக்ஷி என்பன போன்ற பல திருநாமங்கொண்டு புகழப்படுகிறாள்.

பஞ்சசத்தி :– இச்சை, ஞானீ, கிரியை, ஈச்வரீ, மனோன்மனி என்ற இவ்வைந்து சத்திகள் கார்ஹபத்தியம், ஆஹவனீயம், தக்ஷிணம், கேவலம், சிவம் என்ற ஐந்து அக்னியிலும் பூஜிக்கப்படும் ப்ருத்வீமூர்த்தி முதலிய ஐந்துமூர்த்திகளின் சத்திகளாகும். பஞ்சகுண்டபக்ஷ சிவயாகத்தில் இவர்கள் பூஜிக்கப்படுவார்கள்.

ஸப்தசத்தி:– ப்ராஹ்மி, மாஹேச்வரி, கௌமாரி, வைஷ்ணவீ, வாராஹி, இந்த்ராணி, சாமுண்டி என்ற ஏழு சத்திகள். இவர்கள் ஸப்தமாதர்கள் என்று வழிபடப்படுபவர்கள்.

இந்த சத்திகளின் துணைகொண்டு தான் ஸ்ரீ துர்காதேவி ரத்தபீஜன் முதலிய அரக்கர்களை சங்காரம் செய்தாள். ப்ராஹ்மி என்ற சத்தி ப்ரஹ்ம சாமுண்டி என்ற பெயர்கொண்டு பிரசித்தமாக விளங்கும் சத்தி. இவ்வாறே மாஹேச்வரி முதலிய சத்திகளும், மஹேச்வரன் முதலிய மூர்த்திகளின் ஒளியின் நின்றும் தோன்றிய வீரசத்திகள் ஆம்.

வச்யத்திற்கு ஸ்வயம்வரை, வதைக்கு வாராஹி என்பது முதியோரின் முதுமொழி. வாராஹியை உபாசிப்பவர்களுக்கு சத்ருக்களின் உபாதைகள் கிடையாது. ஸ்வயம்வர பார்வதி என்ற

தேவியை உபாசிப்பவர்கள் உலகத்தோரால் போற்றப்படுபவர்கள் ஆவார்கள்.

நவசத்தி:– வாமை, ஜ்யேஷ்டை, ரௌத்ரீ, காளீ, கல விகரணீ, பலவிகரணீ, பலப்ரமதனீ, சர்வபூததமனீ, மனோன்மனி என்ற பெயர் உடைய சத்திகள் நவசத்திகள் எனப்படுவர்

பராசத்தி என்ற ஆதிசத்தியே வாமாதி சத்திரூபையாய் பஞ்சக்ருத்யஞ் செய்கிறாள். இதனுடைய விளக்கம் சித்தாந்த சாராவளியில் இவ்வாறு காணப்படுகிறது.

வாமை : ப்ருத்விதத்துவரூபை; ஸ்ருஷ்டியின் ப்ரவ்ருத்திக்குக் காரணம், ப்ருத்வீமூர்த்திக்கு ஈச்வரன் பவர். அவர்தான் வாமதேவர். அவருடைய சக்தி வாமாசத்தி.

ஜ்யேஷ்டை : ஜலமயீ, ஜலமூர்தீசர் பவர், அவர் ஜ்யேஷ்டர் எனப்படுவர். அவருடைய சத்தி ஜ்யேஷ்டாசத்தி.

ரௌத்ரீ: அக்னிமயீ, அதற்கு ஈசன் பசுபதி. அவர் ருத்திரன் அதன் சத்தி ரௌத்திரீ.

காளீ: ப்ராணன் காலரூபமானதால் காளீ வாயுமூர்த்தி. அதற்கீசன் ஈசானன். அவரே காலர் எனப்படுவர். அதன் சத்தி காளீ.

கலவிகரணீ: கலா என்பது அவயவம். விகரணீ சூன்யம். அவயவ சூன்யம் கலவிகரணீ. ஆகாசம் அவயவ சூன்யமாதலால் கலவிகரிணீ ஆகாசமூர்த்தி. அதற்கு ஈசன் பீமர். அவரே கலவி கரணர். அவரது சத்தி கலவிகரணீ.

பலத்தை விசேஷமாகச் செய்வது பலவிகரணீ. சந்திரன் ஓஷதீசனானதால் பலவிகரணீ சந்திரமூர்த்தி. ஈசுவரன் மஹாதேவன். அவர் பலவிகரணர். அவரது சத்தி பலவிகரணீ.

பலத்தை அழிப்பது பலப்ரமதனீ. சூரியன் உக்ர கிரணனாதலால் பலப்ரமதனீ சூரியமூர்த்தி. அதற்கீசன் உக்ரன். அவர் பலப்ரமதனர். அவருடைய சத்தி பலப்ரமதனீ.

ஆன்மாவின் புண்ணிய பாபங்களை அடக்குவது ஸர்வபூத தமனீ ஆன்மமூர்த்தி. அதற்கீசர் யஜமானன். அவரது சத்தி பலப்ரமதனீ.

மனோன்மனி: சிவமூர்த்தி. அது பக்குவர்களான பசுக்களை மலத்தைவிட்டு நீக்கிச் சிவத்தன்மையோடு சேர்க்கின்றமையால் மனோன்மனி எனப்படும். அதற்குள்ளிருப்பவர் பரமசிவன். உலக ஸ்ருஷ்டி முதலியவைகளுக்குக் காரண சத்திகளான இந்த வாமை முதலிய ஒன்பது சத்திகளும் பராசத்தியைச் சுற்றிலும் வித்யேச்வர சத்தி என்ற பெயருடன் விளங்குகிறார்கள்.

நவதுர்கா: ஒருவகையால் :– சைலபுத்ரீ, ப்ரஹ்மசாரிணீ, சந்திரகண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயினீ, காளராத்ரீ, மஹாகௌரீ, சித்திதா என்றும், மற்றொருவகையால் :– அக்னி துர்கை, மஹாதுர்கை, ஜலதுர்கை, ப்ரஹ்மதுர்கை, விஷ்ணு துர்கை, ருத்ரதுர்கை, வனதுர்கை, ஸ்தூலதுர்கை, சூலிநிதுர்கை எனவும் ஒன்பது பேதமுடையவர்களாகக் காக்ஷியளிக்கிறார்கள்.

'கலௌ சண்டீ விநாயகௌ' கலியுகத்தில் எல்லோராலும் சுலபமாக உபாசித்து அவரவர் வேண்டிய விருப்பத்தை வேண்டிய உடன் அளிக்கும் தெய்வங்கள் துர்கையும், விநாயகரும் என்று முனிவரின் முதுமொழி.

"உதுாவபூமபூாய உணூிகாழ" அதாவது நோயற்ற வாழ்வுடன் வாழவேண்டி, சூரியனை உபாசிக்க வேண்டும். தருமம் மோக்ஷம் இவ்விரண்டையும் பெற மாதவனை வழிபட வேண்டும்'. தருமம், அர்த்தம், மோக்ஷம் இம்மூன்றின் பொருட்டு சிவனை வழிபட வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற இன்னான்கையும் பெற சண்டிகையை வழிபடவேண்டும்.

– பத்ம புராணம்.

அன்னை வழிபாட்டின் பயன்

தண்ணளிக் கென்று முன்னே பலகோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்மதி வானவரானவர் தம்
விண்ணளிக்குஞ் செல்வ மு மழியா முத்தி வீடுமன்றோ
பண்ணளிக்குஞ் சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே"

அம்மையின் அருளைப் பெற்றார் இம்மை மறுமை வீடு என்ற மூன்றையும் எய்துவார் ; இது துணிவு. மற்றும்,

"கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யே தமிலாளை யெழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயிறன்னைத் தம்மால்
ஆமளவுந் தொழுவா ரெழு பாருக்கு மா திபரே"

செந்தாமரைப்போதகத்து வீற்றிருக்கும் கோமளவல்லியை, யாமளத்தின் கொழுந்து போல்பவளை, துன்பமில்லாதாளை, எழுதுதற்கு அரிய கருத்த திருமேனியை உடையவளை, எல்லாக் கலைகட்கும் உறைவிடமாகிய மயில் போன்றவளை இயன்றளவு தொழுபவர்கள் ஏழுலகிற்குந் தலைவர் ஆவார்கள்.

மண்ணுலகத்திலோ விண்ணுலகத்திலோ தேவியின் அருள்பெற்றவர்களால் அடைய முடியாதது ஒன்றுமில்லை என்று ஸ்ரீதேவீ பாகவதம் பறை சாற்றுகிறது.

ஆகவே, ஒப்பில்லாத ஒன்பது பதியில் விளங்கும் கற்பகாம்பிகை முதல் காமாக்ஷி ஈறாகவுள்ள ஒன்பது ஜோதிச் சுடரன்னை வழிபாட்டினால், அறிவு, சந்தானம் நோயின்மை, கல்வி, தனம், தான்யம், அழகு, புகழ், பெருமை, இளமை, வலிமை, துணிவு, வாழ்நாள், வெற்றி முதலியவைகளைப் பெறுவார்கள் என்பது துணிவு.

ஓம் சக்தி

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

பாலஸ்தாபனம்

சுவாமி விமானம், தேவி விமானம் ஆகியவை படத்திலோ, பித்திசித்திரத்திலோ ஆகர்ஷணம் செய்து பாலஸ்தாபனம் செய்திருக்கும் போது நைமித்திகமான உத்ஸவம் முதலானவற்றைச் செய்யக் கூடாது.

நித்யம் நைஶித்திகம் காஜ்ய உத்ஸவஃ ஶிவியொ ஹவெத்।
நித்யஶாமஙுகம் நித்யம் நைஶித்திகம் ஶஹொத்ஸவஃ।
யஜஶாநெஷு ஶாஸெ து க்ருதம் காஜ்யஶிதீரிதம்॥
ஸவ்வஶாஸெஷு கத்தவ்யம் ஶஹொத்ஸவம் விஶெஷதஃ।
விஶாந ஸ்தாபநெ ஹீநெ ஶஹொத்ஸவம் விவஜ்ஜயெத்॥
உத்ஸவொ ஊஶயா ப்ரொக்தஃ— இதி

இவ்வாறு காமிகோபபேதமான நாரசிம்மாகமம் கூறுகிறது. மற்றும் உத்தரகாரணாகமம் விமான ஸ்தாபன விதிபடலம், 64–வது ச்லோகம்

நித்யபூஜா ப்ரகத்தவ்யா நைஶித்திகம் விநா ததா।

என்றும் 66– வது ச்லோகம்

ஜெஹ்யாங்க ஶிவரெ ஜீணெ படெ சாவாஹயெத்ஸுதஃ॥
பூவொக்தவிதிநா ப்ராக்தாம் ப்ரதிஷ்டாம் காரயெத்ததஃ।
ததைவ பூஜா கத்தவ்யா நைஶித்திகம் ந காரயெத்॥

என்று படத்தில் = சித்ரத்தில் விமானம் பாலஸ்தாபனம் செய்திருக்கும் போது நைமித்திகம் செய்யாதே எனக் காணப் படுகிறது.

அங்கேயே –68– வது ச்லோகம்

ஸொஶாஸ்கந்தெஶ்வரம் சைவ ஶஹொத்ஸவம் ந காரயெத் !

ஸோமாஸ்கந்தேச்வரருக்கு உத்ஸவம் செய்யாதே என்றும், (த்விதியைக்கு ஷஷ்டியர்த்தம்) பிறகு அங்கேயே, நடராஜமூர்த்தி பாலாலயம் செய்திருந்தால் உத்ஸவம் செய்வதில் தோஷமில்லை

என்று காணப்படுகிறது. எனவே மூலமூர்த்தியின் விமானம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்தால் மஹோத்ஸவம் செய்யக் கூடாது என்பது நிச்சயமாகத்தெரிகிறது. பூர்வகாரணம் 398 வது பக்கம்,

ெஉஹம் விசா௩ஜிதூுஙகம் ெஉஹீ ஜிஜஜிஹொ௨ூதெ।

என்று லிங்கம் தேஹி, விமானம் தேஹம் எனவே தேஹத்திற்கு குறைபாடு இருக்கும்போது தேஹிக்கும் கொண்டாட்டம் கூடாது என்ற கருத்தில் கூறப்பட்டுள்ளது. பிறகு அவ்விடத்திலேயே கூறப்பட்டிருக்கிறது,

உத்ஸவம் காஈயெத்பகாக் ஊூவெயூாகஙு வியிநா ஸஹ।

என்று. மேற்கூறிய வாக்கியங்களால் விமானம் பால–ஸ்தாபனம் செய்திருக்கும் போது நைமித்திகம் கூடாது அதாவது உத்ஸவம் செய்யக்கூடாது என்று அறியப்படுகிறது.

ஆனால், மூலாலயத்தைப் போலவே பாலாலயத்தை விமானம் ஸ்தூபி முதலியவைகளுடன் கட்டி அங்கு சுவாமி, விமானம் யாவற்றையும் மூலாலயத்தில் செய்வதுபோல பாலாலயத்திலும் பிரதிஷ்டை செய்திருந்தால் அங்கு உத்ஸவம் முதலானவை வர்ஜ்யமில்லை.

நிதூகாயூாணி ஸவூாணி தயா ெநெஜித்திகாநி ச ।
பாலஸ்லாநெ தயா கூயூாக் யாவநூஜவூவெஶகூ॥

என்ற காரணாகமம் பாலஸ்தாபன விதிப் படல வாக்கியமும்,

நிதெூா த்ஸவாஜிகா த்ஸவூாநு பாலஸ்லாநெ௨வி காஈயெக்।

என்ற காமிகாகம வாக்யமும் மூலஸ்தானம் போல் அமைக்கப்பட்ட பாலாலய விஷயமாகும். இதை காமிகம் பாலஸ்தாபனவிதி படலத்தில் லிங்கம், விமானம் முதலிய அமைக்கும் முறை கூறியிருப்பதால் அறியலாம்.

மஹாகும்பாபிஷேகம்

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளைச் சிவாசாரியார் மந்திரம், பாவனை, கிரியைகளின் மூலமாக அக்னியிலும் கும்பத்திலும் ஆவாஹனம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திலே ஒடுக்கி நிலை பெற்றிருந்து ஆன்மகோடிகளுக்கு அருள் புரியுமாறு செய்தலே, மஹாகும்பாபிஷேகத்தின் நோக்கமாகும்.

இக்கிரியையயின் தத்துவார்த்த உட்பொருளைச் சிறிது சிந்திக்கலாம். பரம்பொருள் பிரபஞ்சம் முழுதும் பரவியுள்ளவன் என்பதும், கட்புலனாகாதவனாகவும், உணர்வுகளுக்கு எட்டாதவனாகவும் அதே நேரம் அடியார்க்கு எளியவனாகவும் இருப்பவன் என்பதும் சாஸ்திரநூற்தெளிவு.

பாலிலே தோன்றாது மறைந்திருக்கும் நெய்யைப் படிப்படியான கிரியை முறைகளினால் தோற்றுவித்துக் கையிலே பெறுவது போல, (பாலைக் காய்ச்சித் தயிராக்கி அதனைக் கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கி நெய்யைப் பெறுதல் படிமுறையான கிரியைகள்.) பிரபஞ்சமூலங்களான பஞ்சபூதங்கள் மார்கமாகப் படிப் படியாக பரம்பொருளை அழைத்து வரச்செய்பவை கும்பாபிஷேகக் கிரியைகள்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன பஞ்சபூதங்கள். பஞ்சபூதங்களின் வடிவாக இருப்பவன் பரம்பொருள். பஞ்சபூதங்கள் மட்டுமின்றி சூரியன், சந்திரன், யஜமானன் ஆகியனவும் சேர்ந்த அஷ்டமூர்த்திகளின் வடிவாகவும் இறைவன் இருக்கிறான்.

ஆகாய வடிவில் எங்கும் பரந்துள்ள ஆண்டவனை உணருதல் மிகவும் சிரமம். எமது புலன்களால் சிறிது உணரும் வகையில் வாயுவாக அவனை அறிதல் முதற்படி. வாயுவும்

கண்ணால் தரிசிக்க முடிவதில்லை. அதற்கடுத்தபடியில் அக்னியாக ஆண்டவனைக் காண்கிறோம். மூன்றாவது படி நீராக இறைவனை அறிதல். அதற்கும் அடுத்தபடி எந்நேரமும் எல்லா வகைகளிலும் எம்மோடு தொடர்புற்றதும், நிலை பெற்றிருப்பதும், நாம் நிலை பெற்றிருக்க வகை செய்வதுமாகிய மண் என்னும் ஐந்தாவது நிலை. இந்நிலையில் இறைவனைக் கண்டு வழிபடுதலே எம்மனோர்க்கு இசைந்த எளிய நிலை.

இவ்வகையில் மண்ணோடு தொடர்பு கொண்டிருக்கும் கருங்கல்லும், செம்பு முதலிய உலோஹங்களும் இறையருளை ஆகர்ஷித்து எமக்கு வழங்கும் பெரும் சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

ஆத்மந ஆகாஶஸ்ஸம்பூத:। ஆகாஶாத் வாயு:। வாயோரக்நி:। அக்நேராப:। அத்ப்ய: ப்ருதிவீ।

என்று இந்தப் பஞ்சபூதப் படிமுறையை எடுத்துக்கூறுகிறது தைத்திரீய உபநிஷத்.

இவ்வைந்தும் தழுவியதாகக் கும்பாபிஷேகக் கிரியைகள் அமைவது கண்கூடு. யாகசாலையில் ஆகாயவெளியும் காற்றும் உள்ளன. அங்கு அக்னி வளர்க்கப்படுகிறது. கும்பங்களில் நீர் நிறைக்கப்பெற்று அதிலேயே இறையருட்சக்தி ஆவாஹனமாகிப் பின் மூர்த்தியில் அபிஷேகமாகிறது.

கும்பம் உருவாக்கப்பட்ட உலோஹம் ப்ருத்வி அம்சம். மண்ணோடு தொடர்புபட்டது. (மண்குடமே பயன்படுத்தப்படுவதும் உண்டு) இறுதியில் அபிஷேகமாகி ஸ்தாபிக்கப்பெறும் ஸாதனமும் ப்ருத்வியுடன் தொடர்பான கருங்கல் விக்ரஹம் அல்லது உலோஹ விக்ரஹமாகும்.

இத்தகைய ப்ரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நால்வகைப்படும் என்று சிவாகமங்கள் வகுத்து உரைக்கின்றன.

ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து அங்குப் புதிதாக ஒரு மூர்த்தியைப் ப்ரதிஷ்டை செய்வது அநாவர்த்தனப் ப்ரதிஷ்டை.

முன்பிருந்த ஆலயம் முற்றாய் அழிந்து விட்டால், அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தல் ஆவர்த்தனப் ப்ரதிஷ்டை.

பூஜை வழிபாடுகள் நிகழும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்து திருத்த வேலைகள் முடிந்தபின் மறுபடி மூர்த்தியைப் ப்ரதிஷ்டை செய்வது புனராவர்த்தனப் ப்ரதிஷ்டை.

ஆலயத்தினுள் மரணம் நிகழுதல், கள்வர் முதலிய ஆசாரக் குறைவுடையோர் நுழைதல் போன்ற காரணங்களுக்காக நிகழும் ப்ரதிஷ்டை அந்தரிதப் பிரதிஷ்டை.

இந்நான்கு வகைகளில் அந்தரிதப் ப்ரதிஷ்டைக்குச் சுப முஹூர்த்த நிர்ணயம் கிடையாது. ஏனைய மூன்றுவகைப் ப்ரதிஷ்டைக்கும் சுபமுஹூர்த்தம் நிர்ணயித்தல் அவசியம்.

திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தும் சுத்தமாக இருக்கும்படியும், லக்னம் ஸ்திரராசியாக இருக்கும்படியும், க்ரஹங்கள் அனுகூலமான இடங்களில் இருக்குமாறும் நன்கு கவனித்து முஹூர்த்தம் நிச்சயிக்கப்படும்.

மேலும் மஹா கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கும் சிவாசாரியாருக்கும், ஆலய தர்மகர்த்தாவுக்கும் அநுகூலமான–தாகவும் இம் முஹூர்த்தத்தைக் கணித்துக்கொள்வர்.

கும்பாபிஷேகமானது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையாவது நடைபெறவேண்டும் என்பது விதி. தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி, அருட்சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம். கருங்கல்லினால் செய்யப்பட்ட பீடத்திலே கருங்கல் விக்ரஹத்தை வைத்து எட்டுப் பொருட்களின் கலவையான அஷ்டபந்தனம் என்ற மருந்தினால் அவை இணைக்கப்படுகின்றன.

ப்ருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய அஷ்டமூர்த்திகளின் அம்சமாகக் குங்கிலியம், கொம்பரக்கு, சுக்கான்கல், தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் என்னும் எட்டுப் பொருட்களையும் உரிய அளவில் சேர்த்து இடித்துத் தயாரிக்கப் படுவதே அஷ்டபந்தனமாகும்.

பூரணமான ஒரு மஹாகும்பாபிஷேகமானது அறுபத்தி நான்கு வகையான அங்கக் கிரியைகளைக் கொண்டது எனச் சில ஆகமங்களும் வேறு சில ஆகமங்கள் அதனை திருத்தியும் காட்டும்.

இவற்றுள் முஹூர்த்த நிர்ணயம், ஆசார்யவரணம், சல்ய உத்தாரணம், திரவிய விபாகம், கர்பநியாசம், கணேசபூஜை, அனுஜ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம், சாந்திஹோமம், மூர்த்தி ஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரக மகம், ம்ருத்–ஸங்கிரஹணம், அங்குரார்பணம், ரக்ஷா–பந்தனம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயனோன்மீலனம், கிராமப் பிரதக்ஷிணம், சயநாரோபணம், அக்னிகாரியம், நாமகரணம், பிம்பசுத்தி, பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், ஷடத்வநியாசம்,

சாங்கோபாங்க ப்ரத்யங்க நியாசம், ஸ்பரிசாஹுதி, யாத்ராதானம், கும்ப உத்தாபனம், ஸகளீகரணம், ஆவாஹனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரக்ஷாவிஸர்ஜனம், அவப்ருதம், ஆசார்யோத்ஸவம் என்பன முக்கியமான சில கிரியைகளாகும்.

சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயனோன்மீலனம், க்ராம–ப்ரதக்ஷிணம், சயனாரோபணம், நாமகரணம் முதலிய கிரியைகள் புதிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும்போது மட்டுமே நடைபெறும். ஏனையவற்றுக்கு இவை கிடையா.

கும்பாபிஷேகத்தின் அங்கக்கிரியைகளை நோக்கும்முன் பாலஸ்தாபனம் என்பது பற்றிச் சிறிது நோக்குவோம்.

வழிபாடு நடந்துவரும் ஒரு ஆலயத்திலே திருத்த வேலைகள் செய்யப்படவேண்டிய ஒரு தேவை ஏற்பட்டால், அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருட காலகட்டம் கடந்துவிட்டால் அங்குப் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற வேண்டும்.

அதற்காக அங்குள்ள மூலமூர்த்தியிடம் உள்ள தெய்வ சாந்நித்தியத்தைக் 'கலாகர்ஷணம்' முதலிய கிரியைகளின் மூலம் கும்பத்திலும் சித்திரத்திலும் ஆவாஹனம் செய்து, பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் வேறொரு பாகத்தில் புதிதாக விதி முறைப்படி அமைக்கப்பெற்ற பாலாலயத்தில் (இளங்கோயில்) ஸ்தாபித்து, அங்கு அபிஷேகம் செய்து மூர்த்தியை மறுபடி ஆவாஹனம் செய்து வைப்பர். இதுவே பாலஸ்தாபனம் எனப்படும்.

கும்பாபிஷேகத்தின் சில முக்கியமான அங்கக் கிரியைகளின் அர்த்தமும், நோக்கமும், இனிக்கூறப்படும். இக்கிரியைகள் மிக விரிவானவை என்பதால் கிரியைகளின் போது

நடைபெறுகின்ற யாவற்றையும் விரிவாக எடுத்துக் கூறுவதற்கில்லை.

ஆசார்ய வரணம்

ப்ரதிஷ்டா மஹாகும்பாபிஷேகத்தை நிகழ்த்தப்போகும் சிவாசாரியரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துமாறு வேண்டுவதே அதன் அர்த்தம்.

சிவாசாரியரை சிவனாகவே பாவித்து அவரைப் பூஜித்து கும்பாபிஷேகத் திரவியங்களை அவரிடம் ஒப்புவித்தல் கோயில் எஜமானனது கடமையாகும்.

திரவிய விபாகம், திரவிய சுத்தி

கும்பாபிஷேகத்திற்குரிய பொருட்களை முறைப்படி மந்திர ஸஹிதமாக அந்தந்தத் தேவைகளுக்கேற்பப் பிரித்தல் திரவிய விபாகம் எனப்படும்.

கும்பாபிஷேகத்திற்கென ஒதுக்கிய பணத்தை (ஏறக்குறைய ஆலய நிர்மாணத்திற்குச் செலவான தொகைக்கு சமனான தொகையையே கும்பாபிஷேகத்திற்கும் செலவிட வேண்டும் என்றும், இரண்டு பங்கு யாகசாலைக்கும், ஒரு பங்கு அபிஷேகத்திற்கும், ஒரு பங்கு சிவாசார்யாருக்கும், இரண்டு பங்கு ருத்விக்களுக்கும், ஒரு பங்கு வேதாத்தியனத்திற்கும், ஒரு பங்கு தக்ஷிணைகளுக்கும், ஒரு பங்கு ப்ராஹ்மண போஜனம் அன்னதானம் என்பவற்றுக்கும், ஒரு பங்கு பரிசாரகர், வாத்தியகாரர், சிற்பாசாரியர் முதலியவர்களுக்கும், ஒரு பங்கு யாகத்திரவியங்களுக்குமாகப் பங்கிடுவர்.

இதன் பின் இவற்றை முறைப்படி சுத்திசெய்தல் திரவிய சுத்தி எனப்படும்.

ப்ரவேச பலி

இடையூறுகள் நீங்கி ஆரம்பிக்கும் காரியம் இனிது நிறைவேறும் பொருட்டாகவும் குற்றம் குறைகள் தவிர்க்கப் படுவதற்காகவும் செய்யப்படும் இக்கிரியையும் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, இவைகளைப் போன்றதே.

ஆயினும், இதில் ப்ரஹ்ம ஸ்தானத்திலும், இந்திரஸ்தானம் முதல் ஈசானஸ்தானம் வரையிலுமான நவஸந்திகளிலும் அந்தந்த தேவதைகளை அவர்களுக்குரிய மண்டலங்களை அரிசிமாவினால் வரைந்து அங்கு ஆவாஹனம் செய்து, வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், கமுகம்பூ, நெற்பொரி, இளநீர் என்பவற்றை நிவேதித்து பலி உருண்டைகளையும் வழங்கி நிவேதிப்பர்.

ரக்ஷோக்ன ஹோமம்

ரக்ஷோக்ன தேவரைத் (ராக்ஷசர்களை அழிப்பவர்) திருப்தி செய்யும் இக்கிரியையின் நோக்கமும், பிரவேசபலி, கிராமசாந்தி இவை போன்றதே.

ஆனால் இக்கிரியையில் அக்னிகாரியம் முக்கிய இடம் பெறுகிறது. பருத்தி, மிளகு, எள், வெண்கடுகு, முதலியவற்றால் ஹோமம் செய்வர். இக்கிரியை ஆலய மண்டபத்தினுள்ளே நிகழும்.

திசாஹோமம், சாந்திஹோமம், ஸம்ஹிதா ஹோமம், மூர்த்தி ஹோமம் முதலியன

சிவாஸ்த்ரதேவர், பாசுபதாஸ்திரம், ஸம்ஹிதாமந்திரங்கள், ப்ரதானமூர்த்தி இவர்களைத் தனித்தனியே கும்பங்களில் ஆவாஹனம் செய்து பூஜித்து அக்னி வளர்த்து அங்கும் அவர்களை ஆவாஹனம் செய்து ஹோமங்கள் நிகழ்த்தப்படும்.

நவக்ரஹமகம்

பரிவார தெய்வங்களில் நவக்ரகஹங்களுக்குத் தனியிடம் உண்டு. ஆன்மகோடிகளோடு நேரடித் தொடர்பு கொண்டு கதிர் வீச்சுக்களால் உலகியல் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களையும், பலாபலன்களையும் செய்கின்றவர்கள் நவக்ரஹ நாயகர்கள்.

இவர்களைக் கும்பத்திலும் அக்னியிலும் ஆவாஹனம் செய்து உபசாரங்கள் ஆஹுதிகள் வழங்கி வழிபடுவது நவக்ரஹ மகம் எனப்படும். (மகம் – யாகம்)

நயனோன்மீலனம்

நயன உந்மீலனம் எனப் பிரிந்து கண்திறத்தல் என்ற பொருளை இச்சொல் வெளிப்படுத்தும். ஓவியம் சிற்பம் என்பன உருவாகி முடிந்ததும் இறுதியாகவே கண்திறத்தலைச் செய்வர்.

இங்கு முறைப்படி பூஜை, அக்னிகாரியம் என்பவற்றை நிகழ்த்தித் திரையிட்டு, மூர்த்தியின் திருவுருவத்திலே தங்க ஊசியால் கண்களைத் திறந்து, தானியக்குவியல் மீது விக்ரஹத்தை வைத்துப் பொன், தேன், நெய், தான்யங்கள், ப்ராஹ்மணர்கள், தீபம், கண்ணாடி, நிறைகுடம், ஸந்நியாசி, பக்தஜனங்கள் ஆகியோரை தரிசிக்கச் செய்வர்.

ஜலாதிவாசம்

நயனோன்மீலனம் செய்யப்பட்ட விக்ரஹத்தை நீரில் அழுத்தி வைத்தல் ஜலாதிவாசம் எனப்படும்.

இதற்கெனத் தயார் செய்யப்பட்ட சிறு கிணற்றிலே (தொட்டி) புனித தீர்த்தங்களை நிரப்பி, அதனுள் ஆசனத்தின் மீது கழுத்தளவு

நீரில் கிழக்கு நோக்கி விக்ரஹத்தை இருக்கச் செய்வர். தொட்டி தயார் செய்யும் சிரமத்திற்காகப் பெரிய பாத்ரங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.

மீன், தவளை, பாம்பு முதலிய நீர்வாழ் பிராணிகளைப் பொன்னால் அல்லது வெள்ளியால் செய்து இதனுள் போடுவதுமுண்டு.

தான்யாதிவாசம்

இதன்பின் விக்ரஹத்தைத் தான்யங்களால் மூடிவைப்பர். இதுவே தான்யாதிவாசம் எனப்படும்.

ப்ரஸன்னாபிஷேகம்

புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்திற்கு மட்டும் இக்கிரியை உண்டு. மூலமூர்த்தியிலுள்ள தெய்வ சாந்நித்தியத்தைக் கும்பத்திலே ஒடுக்கும்முன் விசேஷ ஸ்நபனாபிஷேகம் செய்து தீபாராதனை, பூஜைகள் செய்வது மரபு. இதுவே ப்ரஸன்னாபிஷேகம் ப்ரஸன்ன பூஜை என வழங்கப்படுகிறது.

கடஸ்தாபனம்

கும்பம் வைப்பதற்கான நெல், அரிசி, பயறு, உழுந்து, எள், நவதானியம், நெற்பொரி, தர்ப்பை இவற்றை உரிய மந்திரங்கள் ஓதியவாறு முறைப்படி பரப்பிக் குடத்தைக் கழுவி, நூல் சுற்றி, தூபம் காட்டி, அதனுள் சந்தனம், நீர், பவித்ரம், நவரத்னம், பொன் முதலியவற்றை இட்டு மாவிலை, தேங்காய் என்பவற்றை வைத்து, பட்டு, பூணூல், கூர்ச்சம், மாலை, பூ, சந்தனம் இவற்றைச் சாத்தி இதேபோல் பரிவார கும்பங்களையும் முறையே அமைத்தலே

கடஸ்தாபனமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேத மந்திரங்கள் உள்ளன.

விசேஷ சந்தி

பூர்வாங்கக் கிரியைகள் நிறைவுற்றதும் சிவாசாரியர்கள் எல்லோரும் தமது நித்யகர்மானுஷ்டானங்களை முடித்தபின் ஓரிடத்தில் வரிசையாக அமர்ந்து விசேஷசந்தியாவந்தனத்தில் ஈடுபடுவர். இது ஸகளீகரணம், அங்கநியாசம், காயத்திரி ஜபம் மற்றும் பல்வேறு வகையான தர்பணங்களும் அடங்கிய கிரியையாகும். (தர்பணம் – மந்திர நீர் சொரிந்து தேவர்கள் முதலானோரை மகிழ்வித்தல்.)

சயனாரோபணம்

தானியங்களைப் பாயிலே பரப்பி அதன்மேல் மெத்தைகள், தலையணை, விரிப்பு என்பவற்றை அமைத்து மூர்த்தியை அங்கு எழுந்தருளச் செய்து கிழக்கே தலை வைத்து, மேல் நோக்கியபடி சயனிக்கச் செய்து, செந்நிறத் துணியினால் மூடி இறைவனைத் துயிலவைக்கும் பாவனையே சயனாரோபணம் ஆகும். (ஆரோபணம் – ஏற்றுதல்)

தீபஸ்தாபனம்

மண்டபத்திலே வைத்து ஸர்வாலங்காரங்களுடனும் கூடிய தீபமொன்றை ஏற்றி, அதனை அர்ச்சித்து ஒரு சுமங்கலிப் பெண்ணை அதனை ஏந்தியபடி வீதிவலம் வரச் செய்து, மூலஸ்தானத்தில் அதனை வைத்தலே தீபஸ்தாபனம் எனப்படும்.

இத்தீபம் கும்பாபிஷேகம் முடியும்வரை அணையாது பாதுகாக்கப்பட வேண்டும்.

பிம்பஸ்தாபனம்

ஆதாரசிலை எனப்படும் பீடக்கல்லினை உரிய முறைப்படி பொருத்தி அமைத்தபின், அதன்மேல் நவரத்னங்களையும், பஞ்சலோஹம் முதலியவற்றையும் உரிய முறைப்படி மந்திர ஸஹிதமாகப் பதித்து நியாசம் செய்து, அதன்மேல் யந்த்ரத்தையும் ஸ்தாபித்து அது சேதமுறாவண்ணம் அதன்மேல் பஞ்சினைப் பரப்பி வைப்பர்.

சயனத்திலிருந்து மூர்த்தியை எழுந்தருளச் செய்து வீதிவலமாகக் கொண்டுவந்து, இந்த ஆசனத்தின்மீது வைத்து அஷ்டபந்தன மருந்தினைச் சாத்தி, மூர்த்தியைப் பீடத்துடன் இறுகப் பொருத்துவர்.

யந்த்ரபூஜை

இங்கு பதிக்கப்பெறும் யந்த்ரமானது உலோஹத்தகட்டிலே வரையப்பட்ட அந்தந்த மூர்த்தியினது அம்சங்களைக் கொண்டதாக அமையும்.

இது கும்பாபிஷேகத்திற்கு சுமார் ஒரு மண்டலம் முன்பதாகவே தயார் செய்யப்பட்டு தினமும் அபிஷேகம், பூஜை செய்யப்பெற்ற தெய்வசாந்நித்தியத்தைக் கொண்டதாக இருக்கும்.

தைலாப்யங்கம்

(எண்ணெய் சாத்துதல்) விக்ரஹம் ஸ்தாபிக்கப்பட்டதும் சிவாசாரியார் அதற்கு எண்ணெய் சாத்திய பின்பு பக்தர்கள் யாவரும் தாமே தமது கைகளால் எண்ணெய் சாத்தி வணங்குவர். நல்லெண்ணெய், சந்தனாதித் தைலம் முதலிய வாசனைத் தைலங்கள் இதற்குப் பயன்படும்.

பிம்பசுத்தி

மூர்த்தியின் திருவுருவத்தில் உள்ள தோஷங்கள் நீங்குவதற்காக பிம்பசுத்தி செய்யப்படுகிறது. பலவிதமான புண்ணியதீர்த்தங்களையும், இதற்கென விதிக்கப்பட்ட பலவிதமான பொருட்களையும் தட்டிப் பூஜித்தபின் அவற்றால் மூர்த்தியை அபிஷேகம் செய்கின்றனர். இதனால் பிம்பம் சுத்தமடைகிறது.

விசேஷ திரவிய ஹோமம்

பலவிதமான ஸமித்துக்கள், தானியவகைகள் என்பவற்றை அவற்றுக்குரிய மந்த்ரங்களுடன் சேர்த்து அக்னியில் இட்டு ஆஹுதி வழங்குவர். இந்த விசேஷ திரவியங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன்கள் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன.

யாகசாலையின் அமைப்பு

பஞ்சபூத விளக்கமாக யாகசாலை அமைவதை முன்னர் கண்டோம். யாகசாலை கோயில் ப்ராகாரத்தினுள்ளே ஈசானம், அக்னி, வடக்கு, மேற்கு ஆகிய திசைகளில் அமையலாம்.

நன்கு மெழுகித் தூய்மைப்படுத்திய தரையையும், நடுவிலே வேதிகை என்று சொல்லப்படும் மேடையையும், யாகசாலையின் ப்ரமாணத்திற்கு ஏற்ற எண்ணிக்கையுள்ள தூண்களையும் கொண்டதாக, மேலே வேயப்பட்ட வெள்ளை கட்டிய விதானத்துடன் யாகசாலை அமையும்.

ஐந்து வகையான யாகசாலைகள் உள்ளன. யாகசாலையைப் பதங்களாக பிரிப்பதில்தான் இந்த வேறுபாடுகள் ஏற்படுகின்றன. மாவில் தோய்த்த நூலினால் சூத்திரங்களை அடித்து (கோடுகள்) பதங்களை ஏற்படுத்துவர்.

நாற்பத்து நான்கு சூத்ரங்களை இருபுறமும் இடுவது ருத்ரசூத்ரக்ரமம் எனப்படும். இதில் 43 x 43 = 1849 பதங்கள் உண்டாகும். முப்பத்து நான்கு சூத்ரங்கள் அடிப்பது விஷ்ணு சூத்ரக்ரமம். இருபத்திநான்கு சூத்ரங்கள் அடிப்பது ப்ரஹ்ம சூத்ரக்ரமம். பதிநான்கு சூத்ரங்கள் அடிப்பது மனு சூத்ரக்ரமம். பன்னிரண்டு சூத்ரங்கள் அடிப்பது ரவிசூத்ர க்ரமம்.

ரவிசூத்ரக்ரமத்தில் நூற்று இருபத்தொரு பதங்கள் உருவாகும். கும்பங்களுக்கான வேதிகை நடுவில் அமையும். அதனைச் சுற்றிலும் சஞ்சார பதங்கள், ஓமகுண்டங்கள், பரிவார யாககும்பங்கள் என்பன அவற்றுக்குரிய இடங்களில் அமையப்பெறும்.

ருத்ரசூத்ரக்ரம யாகசாலையில் முப்பத்து மூன்று குண்டங்களும், விஷ்ணு சூத்ரக்ரமத்தில் இருபத்தைந்து குண்டங்களும், ப்ரஹ்மசூத்ரக்ரமத்தில் பதினேழு குண்டங்களும், மநுசூத்ரக்ரமம், ரவிசூத்ரக்ரமம் இரண்டிலும் ஒன்பது குண்டங்களும் உள்ளது.

வசதிகுறைந்த இடங்களில் ரவிசூத்ரக்ரம யாகசாலை அமைத்து அங்கு ஐந்து குண்டங்கள் அமைப்பர்.

ஒவ்வொரு வரிசையிலும், கிழக்கே சதுரக் குண்டமும் தென்கிழக்கே யோனிகுண்டமும், தெற்கில் அர்த்தசந்திரகுண்டமும், தென்மேற்கில் த்ரிகோணகுண்டமும், மேற்கில் விருத்த குண்டமும், வடமேற்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும், ஈசானத்தில் எண்கோணகுண்டமும் அமையும். பிரதான குண்டம் வேதிகைக்கு முன்பாக அல்லது ஈசானத்திற்கும் கிழக்குக்கும் இடையே அமையும்.

ஐவகை யாகசாலைகளுக்கும் முறையே நூறு, அறுபத்துநான்கு, முப்பத்தாறு, பதினாறு என்ற எண்ணிக்கையில் தூண்கள் அமையும்.

மாவிலை, தோரணம், மாலைகள், பட்டு, கொடி, கரும்பு, கமுகு, இளநீர் முதலியவற்றால் யாகசாலையை அலங்கரிப்பர். அஷ்டமங்கலம், தசாயுதம் என்பனவும் யாகசாலையை அலங்கரிப்பன.

யாகபூஜை

யாகசாலையில் பிரவேசிக்கும் சிவாசாரியார் முதலில் விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம் என்பவற்றைச் செய்த பின் சூரியபூஜை, த்வாரபூஜை, தோரணங்கள்–திரிசூலங்கள்–கொடிகள் ஆகியவற்றின் அதிதேவதைகளுக்கான பூஜை, பரிவார கும்பபூஜை, வேதிகாகும்பபூஜை, அஷ்டமங்கலபூஜை, யாகேச்வர–யாகேச்வரி பூஜை என்பவற்றையும் செய்வார்.

இதன்பின் பிரதான வேதிகையிலுள்ள ஸ்நபன கும்பங்களில் பஞ்சாஸனபூஜை, ஆவரணபூஜை என்பவற்றை நிகழ்த்திப் பலவித நியாசங்கள் மூலமாக மந்திரசக்திகளை கும்பத்திலே பதித்துப் பூஜிப்பார்.

பின்னர் பிரதான குண்டத்திலே பிரதான சிவாசாரியார் அக்னிகாரியம் செய்ததும், அதிலிருந்து அக்னியைப் பிரித்தெடுத்து ஏனைய குண்டங்களுக்குரிய சிவாசாரியார்கள் தமது குண்டங்களிலும் அக்னி காரியம் செய்வர்.

ஸ்பர்சாஹுதி

யாகசாலையிலே அக்னியிலும், கும்பத்திலும் ஆவாஹனம் செய்து பூஜிக்கப்பட்ட தெய்வசாந்நித்தியத்தை பிம்பத்திலே

ஒடுக்குவதே ஸ்பர்சாஹுதியாகும். அக்னியுடன் கும்பத்தையும், கும்பத்துடன் பிம்பத்தையும் தர்பைக் கயிறு, நூல் முதலியவற்றால் நாடீஸந்தானம் செய்து (தொடுத்து) மும்முறை யாகசாலையிலும் மூலமூர்த்தியிலுமாக ஸ்பர்சாஹுதி செய்து இறுதியில் நாடீ ஸந்தானத்தை மூலமூர்த்தியில் சேர்த்து விடுவர்.

பூர்ணாஹுதி

இறுதியில் பிரதான குண்டத்தில் மஹாபூர்ணாஹுதி வழங்கி ரக்ஷை எடுத்துக் கும்பத்திற்குச் சாற்றி அதனை அனைவரும் தரித்துக் கொள்வர்.

கும்ப உத்தாபனம்

குறிக்கப்பட்ட சுபநேரத்தில் சகலவிததோஷங்களும் நிவர்த்தியாகும் பொருட்டு நவக்ரஹதானம், யாத்ராதானம் என்பன வழங்கிய பின், பரிசாரகரை அலங்கரித்து, அவர் சிரசில் பிரதான கும்பத்தை வைத்து, மங்கள வாத்தியங்கள் முழங்க ஷோடச உபசாரங்களுடன் வீதி வலமாக எடுத்து வருவர்.

ஸ்தூபிக்கென அமைக்கப்பட்ட கும்பத்தையும் இத்தோடு வலமாகக் கொண்டு வந்து முதலில் ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்வர்.

கும்பாபிஷேகம்

மங்கள வாத்தியங்களும், வேதகோஷங்களும் முழங்க பிரதான கும்பமும், அஷ்டவித்யேச்வர கும்பங்களும் மூலமூர்த்திக்கு முன்னர்வைத்து நியாசங்கள் செய்யப்பட்டபின் அபிஷேகம் செய்யப்படும்.

விமானகலசம் மூலமூர்த்தியின் சக்தியை உலகெங்கும் பரவச்செய்து நன்மைகளை உலகிற்கு உண்டாக்கும்.

மஹாபிஷேகம்

கும்பாபிஷேகம் செய்தபின் இறைவன் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளுக்கு முறைப்படி விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வதற்கு மஹாபிஷேகம் என்று பெயர்.

மண்டலாபிஷேகம்

கும்பாபிஷேகம் செய்த நாளிலிருந்து 45 நாட்கள் மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேகம் செய்து நிறைவு பெறுவதை மண்டலாபிஷேகம் எனக்கூறுவர்.

கும்பாபிஷேக பலன்கள்

கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், கண்டுகளித்தல் ஆகியவை சிவபுண்ணியத்தை நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையதாகும். பெருஞ்சாந்தி செய்பவர், செய்து வைப்பவர், காண்பவர் அனைவரும் அனைத்து இன்பங்களையும் பெற்று இம்மை, மறுமை, அம்மை வாழ்வுறுவர்.

மஹா கும்பாபிஷேகம்

பேரருளாளராகிய கடவுள் தமது பெருங்கருணையால் ஆன்மாக்களின் பந்தத்தை நீக்கி, அவைகளின் அறிவு இச்சை செய்கைகளை விளக்கி, அவைகளுக்குத் தமது இன்பத்தைக் கொடுக்கக் கருதி, தமது அருட்சக்தியால் உலகத்தையும் உடலையும் அவைகளுக்கு ஸ்ருஷ்டித்துக் கொடுத்து உதவினார்.

அவற்றைப் பொருந்தித் தமது அறிவு இச்சை செயல்கள் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள் நன்றியறிதலாகக் கடவுளை வழிபட வேண்டியது அவசியம்.

கடவுள் வழிபாடானது அவர் அதிஷ்டித்து நிற்கும் இடத்தாலும், வழிபாட்டிற்குரிய கரணங்களாலும் வழிபடும் அறிவு வகையாலும் மூவகைப்பட்டு விளங்குகிறது.

கடவுள் எங்கும் வியாபியாய் நிறைந்திருப்பினும் பாலில் நெய்போல் விளங்காது நிற்கிறார். குருவினிடத்திலும், சிவாலயத்திலும், சிவனடியாரிடத்திலும் தயிரில் நெய்போல் வெளிப்பட்டு விளங்கியருளுகிறார்.

சிவாலயத்தையும், சிவலிங்கத்தையும் சிவமெனவே கண்டு வழிபட்டவர்கள் முத்தி அடைந்தது உண்டாகையாலும், சிவாலயமும், சிவக்குறிகளும், சிவாலயபூஜா காரியங்களும் மந்த்ர பூர்வமாக இருத்தலாலும் மந்த்ரசாந்நித்யமுடைய சிவாலயம் சிவனை வழிபடுதற்குரிய இடமாகும்.

உயிர்கள் கர்மசக்கரத்தாற் சுழன்று பிரபஞ்சவாசனையில் அழுந்தித் தாரம் தனம் முதலான பொருள்களின் மோகத்தால் சுக துக்கங்களைக் கடலைப் போல் ஓயாது, மாறிமாறி அனுபவிக்கின்றன. கடவுள் வழிபாட்டிற்கென ஒரு தனியிடத்தைக் குறிப்பிடாது கடவுள் எங்கும் வியாபகமாக இருத்தலால்

ஏந்தவிடத்திலும் அவரை வழிபடலாமென எண்ணில் சுகதுக்க ரூபமான அலைகள் எங்குஞ் சூழ்ந்து கொண்டிருத்தலால் அவை அவ்வழிபாட்டை நிலைக்கவொட்டாது தடைபண்ணும்.

தங்கள் வீட்டில் புனிதமான ஓரிடத்தில் வழிபடலாமெனில், அது அவசியமானாலும் அங்கும் குடும்ப விவகாரங்களால் மனம் அலைவுறநேரும் ஆகையாலும், அதன் காரணமாய் மனமும் அறிவும் தெளிவுறுதல் நேராதாகையாலும் திரிகரணங்களுடன் அமைதியாக வழிபடுவதற்குச் சிறந்த இடம் ஆலயம் ஆகும்.

ஆ = பசு, லயம் = ஒடுங்குதல் எனப் பொருள்படுதலால் அது ஆன்மாக்கள் தம்மை பந்தித்த ஆணவமல வலி ஒடுங்கப் பெற்றுப் பேரன்புடன் மனோ–வாக்–காயங்களென்னும் திரிகரணங்களாலும் முறையே சிந்தித்து வாழ்த்தி, வணங்கி, அருள்ஞானம் அடைந்து இறைவனிடத்து ஒடுங்குவதற்குச் சாதனமான இடமாகும்.

மற்றும் ஆ = அனைத்து, லயம் = ஒடுங்குதல் எனப் பொருள் படுதலால், அது சிவசக்திகளாலே மாயாகாரியங்களாய் தோன்றின. கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்த்ரம் என்னும் ஆறு அத்வாக்களும் அவற்றின் பேதமான அனைத்தும் தோன்றிய அடைவே தத்தம் கரணத்தில் ஒடுங்கும் என்பதை அறிவூட்டும் இடமுமாகும்.

அத்தகைய சிவாலயத்தின் நடுவில் பீடத்தை ஸ்தாபித்து அதன் மேல் லிங்கத்தை ஸ்தாபனம் செய்வது பிரதிஷ்டை எனப்படும். இது ஸ்தாபனம், பிரதிஷ்டை, ஸ்திதஸ்தாபனம், ஆஸ்த்தாபனம், உத்தாபனம் என்று ஐந்து விதமாகும்.

பீடம் சக்தி எனப்படும். லிங்கம் சிவம் ஆகும். சிவமந்த்ரங்களால் இவ்விரண்டையும் சேர்த்து அஷ்டபந்தனம் செய்வது ப்ரதிஷ்டை எனப்படும் என்றும் ஸாராவளி கூறுகிறது.

இத்தகைய ப்ரதிஷ்டையானது அனாவர்த்தம், ஆவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என்று நான்குவிதமாகும்.

ஆலயமோ லிங்கமோ இல்லாத கிராமத்திலோ, நகரத்திலோ புதியதாக லிங்கம் செய்து, ஆலயம் கட்டி, அதனுள் அந்த சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்தல் அனாவர்த்தனப் ப்ரதிஷ்டை எனப்படும். இந்த அனாவர்த்தனப் ப்ரதிஷ்டை கலியுகத்தில் கிடையாது என்றும் சிவாகமம் பறைசாற்றுகிறது.

ஸமுத்ரம், நதி முதலானவைகளால் அழிக்கப்பட்ட ஆலயத்திலிருந்து லிங்கத்தை எடுத்துவந்து வேறு ஒருவிடத்தில் ஆலயம் கட்டி அதில் அந்த லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்வது ஆவர்த்தப் ப்ரதிஷ்டை.

ஜீரணமான ஆலயத்தை மறுபடியும் ஜீரணோத்தாரணம் செய்து அஷ்டபந்தனம் சாத்திக் கும்பாபிஷேகம் செய்வது புனராவர்த்தம்.

திருடர்களாலோ வேறு தகாதவர்களாலோ லிங்கம் சலனம் செய்யபட்டும், தீண்டப்பட்டும் தூய்மைக்குக் குறைவு வரும்போது உடனடியாகச் செய்யப்படும் ப்ரதிஷ்டை அந்தரிதம் எனப்படும்.

பூர்ணமாகச் செய்யப்படும் பிரதிஷ்டை 64 கிரியைகளைக் கொண்டது. சில ஆகமங்கள் அதைச் சுருக்கி 55 கிரியைகள் என்றும் கூறுகின்றன.

அருவமாக உள்ள இறைவன் தியானம், பூஜை செய்வதன் பொருட்டு உருவத்துடன் விளங்குகிறான். இறைவனின்

திருவுருவம் மந்த்ரவடிவமாகும். அவை கலை[5] தத்துவம் [36] புவனம் [224] வர்ணம் [51] பதம் [81] மந்திரம் [11] என்று கூறப்படும் அத்வாக்களே இறைவனின் சரீரமாகும். ஐந்து கலைகளும் ஸ்தூலமான உடலைக் காட்டும் அதாவது, சாந்தியதீதகலை சிரசு, சாந்தி கலை முகம், வித்தியாகலை மார்பு, பிரதிஷ்டா கலை நாபி, நிவிருத்தி கலை பாதம்.

எனவே முழங்கால் வரையில் நிவிருத்தி, நாபி வரையில் பிரதிஷ்டை, கழுத்து வரையில் வித்தை, நெற்றி வரையில் சாந்தி அதன் மேல் சாந்தியதீதை எனப்படும்.

தத்துவங்கள் முப்பத்தாறும் எலும்பு ; மஜ்ஜை, சுக்லம், என்ற தாதுக்களாம். புவனம் இருநூற்று இருபத்து நான்கும் இறைவனுக்கு உரோமங்களாகும். அகாரம் முதலிய அக்ஷரங்கள் தோலாகும். பதம் என்ற மந்திரம் {பதமந்த்ரங்கள்} எண்பத்து ஒன்றும் மாம்ஸ தாதுவாகும். மந்த்ரம் பதினொன்றும் குருதியாகவும் விளங்குவதாகக் கற்பிக்கப்பட்ட வித்யாசரீரத்தில் நியசிக்கப்பட்ட ப்ராஸாதமந்த்ரம் இறைவன் தங்கும் ஜீவகலையாகும் என்று மூலாகமம் கூறுகிறது.

இறைவனை வழிபட மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றும் இன்றியமையாதது. மந்திரம் என்பது எழுத்தின் வடிவம், எழுத்தென்பது சொல்லுக்குக் காரணமாய்ச் சுந்தமாயையாகிய குண்டலியினின்றும் எழும் ஒலி.

எழுத்துக்கு ஒலிவடிவு, வரிவடிவு என இரண்டு வடிவுகள் உண்டு. ஒலி வடிவில் குண்டலியினின்று எழும் ஒலியானது பரை, பைசந்தி, மத்தியமை, வைகரி, என்னும் நான்கு வாக்குகளின் நிலைகளையடைந்து தன் செவிக்கு மட்டுமாகவும், தன் செவிக்கும் பிறர் செவிக்குமாகவும் கேட்கும் ஓசையாக அமைவதற்கு

மூலாதாரம் முதல் மென்மேல் எழுச்சியுறுதலின் எழுத்தெனப்பெற்றது. வரிவடிவில் எழுதப்படுவதால் எழுத்தெனப் பெற்றது.

வரிவடிவ எழுத்தானது சடமாயிருந்தாலும் காந்தம் மின்சாரம் முதலிய சடப்பொருள்களுக்குள்ள சக்திகளைப் போன்ற சக்தியை உடைத்தாயிருக்கிறது.

ஒருவன் தூரதேசத்திலிருந்து தனக்கு நேர்ந்த சம்பவங்களை கடிதத்தில் எழுதி தனது நண்பனுக்கு அனுப்பிய போது, அதைப் படித்த நண்பனுக்கு எழுதியவனது எண்ணத்தைக் தோற்றுவித்தலைக் காண்கிறோம். ஒருவன் தனது அவசர வேலை நிமித்தமாக ஒருவரை அவரது அறையிலே கண்டு பேச விரைந்து செல்லும்போது வாயிலில் "உத்தரவு இல்லாமல் உள்ளே நுழையக் கூடாது" என்று எழுதியிருத்தலைக் கண்டவுடனேயே உள்ளே செல்லத் தடைபட்டுத் தனது வேகம் தணிந்து நிற்றலைக் காண்கிறோம். ஆதலால் எழுத்துக்குச் சக்தி உண்டு எனத் துணியப்படும். எனவே மந்த்ரம் அக்ஷரவடிவம். அது அளவு கடந்த சக்தி வாய்ந்தது.

இவ்வாறு சொல்லுக்கும் சக்தி உண்டு. "சொல் என்பது எழுத்தால் ஆக்கப்பெற்று பொருளறிவிக்கும் ஓசை" என்பது நச்சினார்க்கினியர் திருவாக்கு. ஒருவனை ஒரு தொழிலை செய்யும்படி ஏவும் நிமித்தம் மற்றொருவன் சொல்லும் சொல்லால் ஏவப்பெற்றவன் ஏவினோன் குறித்த தொழிலைச் செய்யக் காண்கிறோம்.

கிரியைக்கும் (செய்கை) சக்தி உண்டு, ஒருவன் தனது உள்ளத்தை வாயினால் சொல்லாமலும் எழுத்தால் எழுதாமலும் தனது உடம்புகளின் அசைவாகிய செய்கையினால் வெளிப்

படுத்தலாம்; அதற்குப் பெரும்பான்மையும் கைகளும் கண்களுமே முக்கியமான கருவிகள்.

ஒருவன் ஒரு தீயகாரியத்தைச் செய்யும்போது மற்றொருவன் அதைச் செய்யாதே என்று கையை அசைத்தாலும், கோபத்துடன் நோக்கினாலும் செய்யத் தொடங்கியவன் செய்யாதிருத்தலைக் காண்கிறோம்.

பாவனை என்பது எண்ணம். ஒருவன் தனது எண்ண வன்மையாலும் பிறரைத்தொழிற்படுத்தலாம். அவ்வெண்ணம் மனோசக்தி எனப்படும். கருடபாவனையால் விஷநீக்கத்தைக் காண்கிறோம். எனவே அக்ஷரவடிவமான மந்திரங்களுக்கும் செய்யும் செய்கைக்கும் எண்ணும் எண்ணத்திற்கும் சக்தி உண்டு. இத்தகைய மந்த்ரம், கிரியை, பாவனையால் இறைவனை லிங்கத்தினின்று கும்பத்திலும், மீண்டும் கும்பத்திலிருந்து லிங்கத்திலும் ஆகர்ஷணம் செய்து ஸ்தாபிக்கும்போது மந்திரக் கிரியா பாவனையின் சக்தியினால் இறைவன் ஆசாரியனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி விருப்பத்தை நிறைவேற்றி அருளுகின்றான்.

இறைவனோடு இறைவியைச் சேர்த்தல் அதாவது லிங்கத்துடன் பீடத்தைச் சேர்த்தல் பிரதிஷ்டை என்று முன் கூறப்பட்டது. இடைவெளியின்றி பீடத்தையும் லிங்கத்தையும் இணைத்து இறைவனின் அருட்சக்தியை மக்களின் பக்குவத்திற்கு ஏற்ப உலகுக்கு அளிக்கவல்ல வல்லமை வாய்ந்தது அஷ்டபந்தனம் எனப்படும் ஔஷதம்.

சுக்கான், குங்குலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, பூங்காவி, செம்பஞ்சு, வெண்ணெய், சாதிலிங்கம் என்ற எட்டும், அஷ்டமூர்த்திகளின் அம்சம்பெற்று உலகில் ப்ருத்வி, அப்பு, தேயு,

வாயு, ஆகாயம், ஆதித்யன், அம்புலி, இயமானன் என்பவைகளின் சக்தியை வீரியப்படுத்தி மூவுலகும் செழிக்க ஹேதுவாகும். எனவே பீடத்தையும் லிங்கத்தையும் இணைக்கும் அஷ்டபந்தன மருந்து சாத்துதல்தான் மஹாகும்பாபிஷேகத்தின் முக்கியக்கிரியை.

அஷ்டபந்தன மருந்தானது இறைவனின் திருவருள் சக்தியின் வாயிலாக பிரபஞ்சத்தைத் தத்தமது காரியத்தில் ஈடுபடுத்த அவ்வருட் சக்தியை பீடத்தில் சேர்ப்பது அசாதாரணமான செயல். அம்மருந்தின் மூலமாக ஒளிபெற்ற பீடசக்தி உலகத்திற்குக் காரணமான பஞ்சபூதசக்திகளையும் சூரியன், சந்திரன், இயமானன் இவர்களுடைய உஷ்ணத்வ–சீதத்வ–ப்ரபுத்வ சக்திகளையும் மின்சார அலைபோல் உலகில் பரவச்செய்து உலக சுபிக்ஷத்திற்கு ஹேதுவாக ஆகிறது.

கும்பாபிஷேக யாகசாலை சிவஸ்வரூபம். வேள்வி சிவஸ்வரூபம். யாகவேதிகையில் இருக்கும் கும்பம் சிவஸ்வரூபம். ஆசாரியன் சிவஸ்வரூபன்.

எனவே எல்லாம் சிவமயம் என விளங்கும் மஹா கும்பாபிஷேகத்தில் யாகசாலையில் சிவாகாரமான அக்னியில் எழுந்த புகையும் வெப்பமும், வேதவோசையும், சிவாகம தோத்திர ஓசையும், திருமுறை ஓசையும், சிவனடியார்கள் தோத்திர ஓசையும், சிவாசாரியர், சாதகர் முதலியோர்களுடைய சிவமந்திரக் கிரியா பாவனையோடு கூடிச்செய்யப்படும் செயல்களும் சேர்ந்து எங்கும் வியாபித்திருக்கும் இறைவனது அருட்சக்தியைத் தூண்டி எழுப்பி, அர்ச்சகனுடைய தவவலிமையால் இறைவன் கும்பத்திலும் கும்பாபிஷேகத்திற்குப் பிறகு லிங்கத்திலும் சாந்நித்தியம் பெற்று யார் யார் எதை எதை விரும்புகின்றார்களோ அவரவர் அதை அதை அருளும்படி செய்வது பிரதிஷ்டையின் சிறப்பு.

கும்பாபிஷேக தரிசனத்தால் தீவினைகள் நீங்கி புத்திரப் பேறு முதலான பேறுகளையும் சிவபக்தியையும் பெற்றுச் சிவானந்த அனுபவமுறுவர் என்பது திண்ணம். வெகு ஜென்மத்தில் செய்த தவப்பயனால் சிவதருமம் செய்யமுடியும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

ஈழத்துச் சிதம்பரம் ஸ்ரீசௌந்தராம்பிகா ஸமேத ஸ்ரீசுந்தரேச்வர ஸ்வாமி கோவில் கும்பாபிஷேகம் செய்யும் பிரதிஷ்டா குருமார்களும், கோவில் ஆதீன கர்த்தர்களும், திருப்பணிச் சபையார்களும், இவர்களின் முன்னோர் செய்த புண்ணியத்தினாலும், இவர்கள் முன் ஜன்மத்தில் செய்த புண்ணிய மேலீட்டாலும் சிவப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

எனவே இவர்கள் யாவரும் இறைவனின் திருவருளால் நான்குவித புருஷார்த்தங்களை அடைந்து இன்புற வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள.

–திருக்குறள்

மண்டலாபிஷேக பூர்த்தியும் மஹாபிஷேகமும்

பரமகருணாநிதியான பரமேச்வரனுக்கு மஹா கும்பாபிஷேகம் முடிந்த நாள் தொடங்கி மண்டலாபிஷேகம் செய்ய வேண்டும். ஸஹஸ்ராகமத்தில்,

த்ரிபக்ஷம் வா த்விபக்ஷம் வா பக்ஷைகம் யதாக்ரமாத்।
ஶாந்திஹோமம் ச கர்தவ்யம் பக்ஷாந் ஸம்வத்ஸராதிகம் ஜபேத்॥

அதாவது, மண்டலாபிஷேகமானது மூன்று பக்ஷத்திலாவது (45) இரண்டு பக்ஷத்திலாவது (30) ஒரு பக்ஷத்திலாவது (15 நாள்) செய்யவேண்டும்.

மஹாபிஷேகம் செய்ய முதலில் புண்யாஹவாசனத்துடன் ஸ்நபனபூஜை செய்து, வாசனை பொருந்திய தைலம் (எண்ணெய்) முதற்கொண்டு விசேஷார்க்கிய அபிஷேகம் முதலிய 25 திரவியங்களையும் அபிஷேகம் செய்து நிவேதநம் தீபாராதனை செய்யவேண்டும்.

ஸ்நபனம் என்பது ஒன்பது விதமாகும். உத்தமத்தில் உத்தமம் 1008 கலசம். உத்தமத்தில் மத்தியமம் 508 கும்பங்கள். உத்தமத்தில் அதமம் 216 கும்பங்கள். இவ்வாறு மத்தியமத்தில் உத்தமம் 108 கும்பங்கள். மத்தியமத்தில் மத்தியமம் 81 கும்பங்கள். மத்தியமத்தில் அதமம் 51 கும்பங்கள். அதமத்தில் உத்தமம் 25 கும்பங்கள். அதமத்தில் மத்யமம் 9 கலசம். அதமத்தில் அதமம் 5 கலசங்கள் ஆகும்.

இவ்வாறு ஸ்நபனம் செய்யவேண்டிய காலம் காரணாகமத்தில்,

அநாவ்ருஷ்டௌ ஜ்வரே சைவ து³ஷ்டக்³ரஹநிபீட³நே।

மழையில்லாமை நீங்கும் = மழைபொழியும். நாட்டிலோ கிராமத்திலோ பரவிவரும் ஜ்வரம், துஷ்டக்ருஹங்களுடைய பீடை

நீங்கும். மற்றும் சத்ருக்கள் அழிவார்கள். எல்லாப் பிணியும் நீங்கும். க்ஷயம், அபஸ்மாரம், குஷ்டம் முதலிய எல்லாப் பிணியும் நீங்கும். ஜயத்தையே அடைவான். பொருளைப் பெறுவான். புத்திரபேற்றைப் பெறுவான். மோக்ஷத்தை விரும்புவான் மோக்ஷத்தையடைவான் என்று காரணாகமம் மஹாபிஷேக விதிபடலத்தால் அறியப்படுகிறது.

மற்றும் காரணாகமத்திலே ருத்ராபிஷேகமும் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ரு"ஓா.ஹிஷெகஃ கூதபூவூ: உதூஜொ ஐயூஜொ$யஃ:।

ருத்ராபிஷேகமானது செய்யப்படவேண்டும். அது உத்தமம், மத்யமம், அதமம் என மூவகைப்படும் என்றும் அதன் விதியும் கூறப்படுகிறது.

ருத்ராபிஷேகம்

ஓங்காரத்தை முதலாக ஆரம்பித்து, ஓங்கார முடிவாக ஓத வேண்டியது எழுதாமறை என வழங்கும் வேதமாகும். அவை ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் என நான்கு.

அதனுள் அதர்வணவேதத்தை நீக்கி அமரசிம்மன் நிகண்டுவில் " ஐதி வெஉா: குய: " மூன்று வேதங்கள் என்றார். அந்த மூன்றினுள் நடுநாயகமாக உள்ளது யஜுர்வேதம். அதில் உள்ள "தைத்திரீய சாகை" 7 காண்டங்களை உடையது. அவ்வேழு காண்டத்தில் நடுவாகவுடைய நான்காவது காண்டத்திலிருக்கிறது ஸ்ரீருத்ரம். அதன் நடு அனுவாகத்தின் நடுவில் அமைந்துள்ள "நம: சிவாய" என்னும் பஞ்சாக்ஷர மந்த்ரம் பிரகாசமாயுள்ளது.

இதனாலே இச்சிவமந்திரம் சகல வேத ஜீவாத்மாவாயும், பரமபாவநகரமாயும், அதிரஹஸ்யமாயும், ஸர்வவேதாந்த ஸாரமாயும்

உள்ளதோர் மந்த்ரமாகும். இதுவே நான்கு வேதங்களின் மெய்ப்பொருள் எனவும் ப்ரதிபூஜா காலங்களிலும் ஓதுதற்குரிய மந்திரம் எனவும் கூறப்படுகிறது.

"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே"

என்று வேதசாரமாகிய சிவஞானப்பாலை உண்டருளிய ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானார் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

ருத்ரன் என்றால் பரமேச்வரன் எனப் பொருள். "ஸம்ஸார த்ராவணாத் ருத்ர:" ஸம்ஸாரம் என்ற வ்யாதியின் கட்டிலிலிருந்து விடுவிப்பதால் ருத்ரன் எனப் பெயர் வந்தது. இந்த ருத்ரத்திற்கு ஸ்ரீருத்ரம், சதருத்ரீயம், ருத்ரோபநிஷத், நமகம் என நான்கு பெயர்கள் உண்டு.

மிக்காரும் ஒப்பாரும் இல்லாத பரமசிவனின் பரமகல்யாண குணங்களையெல்லாம் எடுத்துக்கூறும் ருத்ரத்தில் 169 மந்த்ரங்கள் இருக்கின்றன. அவைகளை நன்கு அறிந்து தியானித்து ஆஹுதி செய்தால் இஷ்டசித்திகளைப் பெறலாம்.

ருத்ரஹோமமானது 3 ஒருவகை, 6 மற்றொருவகை. 6, 16, 48, 169 என்று 6 விதமான பிரிவுகளில் ருத்ரபாராயண ஸங்கியையில் சதாம்ச ஹோமம், தசாம்ச ஹோமம், ஸம்பூர்ண ஹோமம் எனக் கணக்கிட்டு ஹோமம் செய்யப்படும் முறைகள் உண்டு.

இவ்வாறு ருத்ரபாராயணம் மற்றும் ஹோமத்தினால் ப்ரீதியடைந்த சிவபெருமானிடத்தில் நமக்கு வேண்டியவற்றை எல்லாம் தொகுத்துப்பார்த்து கேட்டுக்கொள்வதற்காகவே "சமகம்" அமைந்திருக்கிறது. சமகத்தில் கூறப்படாத பயன்கள் வேறு எதுவும்

உலகத்தில் இருப்பதாக நினைப்பதற்குக் கூட இல்லை. ருத்ரஹோம பூர்த்தியில் வசோத்தாரையில் சமகம் வினியோகிக்கப் படுகிறது. "வாஜஶ்சமே" என ஆரம்பித்து "புவனஶ்சாதிபதிஶ்ச ஸ்வாஹா!" என்பது வரையில் 371 ப்ரார்த்தனா மந்த்ரங்களை ஜபித்துக் கொண்டு இடைவிடாமல் தாரையாக ஆஜ்யத்தால் ஹோமம் செய்வதுதான் வசோத்த்ரா ஹோமம் எனப்படும்.

இவ்வசோத்தாரையின் ப்ரார்த்தனையில் எல்லாவிதமான தனம் தான்யம் முதலியவைகளோடு அக்கினி, இந்திரன், சந்திரன், சூரியன், சரஸ்வதி, பிரம்மா, விஷ்ணு முதலிய தேவதைகளும் வேண்டப்படும் பொருளாகப் பிரார்த்தித்துக் கேட்கப்படுகிறது.

பரமேச்வரனுக்கு சமகத்தில் (சம்பந்தமில்லை) பெயரில்லை. இதனால் கொடுப்பவர் பரமேச்வரன். தேவர்களும் உலகிலுள்ள எல்லாப்பொருள்களும் கேட்கப்படும் பொருள் எனத் தெரிகிறது!

சுருதி சூக்தி மாலையில்,

விஷ்ணு-வ்ரஜாவதி-வுஈநூர-வூவபூகெஷு
வாஜாதி தூ௵ஃ உதரெஷ்வபி ஜெவதெஷு।
சூஶஂஸிதெஷு உஃகா꞉ வஶிஶிஷ்யாணஂ
உாதாஶஃ ஈுஶ்வர! ஹவஜஃ கூஶஸூஃ சூஹு꞉॥

எனக்கூறப்படுகிறது.

ஸ்ரீருத்ரபாராயண ஹோம முறைகள் பலவிதமாக கூறப்பட்டுள்ளது! அவைகளில் ஏகாதசருத்ரம், ருத்ரைகாதசினீ, மஹாருத்ரம், அதிருத்ரம் என நான்கு முறைகள் உள்ளன.

ஸ்ரீருத்ரம் என்பது பதினோரு அனுவாகம் கொண்டது.

ஸ்ரீருத்ரம் முழுதும் ஒருமுறை பாராயணம் செய்து சமகத்தில் 1வது அனுவாகத்தை மட்டிலும் பாராயணம் செய்து,

மறுபடி ருத்ரம் முழுமையும் பாராயணம் செய்து, சமகம் 2 வது அனுவாகம் பாராயணம் செய்ய வேண்டும்.

இவ்வாறு 11 முறையிலும் சமகத்தில் பதினோரு அனுவாகங்கள் ஒரு முறையும் பாராயணம் செய்வது ஏகாதசருத்ர பாராயணமாகும்.

ஏகாதசருத்ரத்தைப் போல 11 மடங்கு அதிகம் கொண்டது ருத்ரைகாதசினீ.

ருத்ரைகாதசினியைப் போல பதினோரு மடங்கு அதிகம் கொண்டது மஹாருத்ரம்.

மஹாருத்ரத்தைப் போல 11 பங்கு அதிகம் கொண்டது அதிருத்ரமாகும்.

ஏகாதச ருத்ராபிஷேகம் என்பது ஒரு தடவை மஹாநியாஸம் ஜபம் செய்து சுற்றிலும் 11 கலசம் வைத்து நடுவில் சிவகும்பவர்த்தினியை வைத்துப் பூஜித்து, ஹோமம் வசோத்தாரை செய்து 11 திரவியங்கள் கொண்டு இறைவனுக்கு அபிஷேகம் செய்து, நிவேதனம் முதலிய உபசாரம் செய்து ருத்ரத்ரிசதியுடன் முடிப்பது.

இவ்வாறு ஒரு நாளில் 121 கலசமும் சிவ கும்ப வர்த்தினிகளையும் ஸ்தாபித்து, 121 வேத பாராயணம் செய்பவர்களைக் கொண்டு 121 ஆவர்த்தி ருத்ரஜபம் செய்து, அவ்வாறே ஹோமம் செய்து, கும்பங்களை இறைவனுக்கு அபிஷேகம் செய்வது மஹாருத்ரம்.

இவ்வாறு பதினோரு நாட்கள் செய்வது அதிருத்ரம். இவ்வாறு ருத்ராபிஷேகம் செய்பவர்களடையும் பயனைக்கூற ஆயிரம் நாவு வேண்டும்.

இத்தகைய ருத்ராபிஷேகம் செய்ய எவர்களுக்கு எண்ணம் உண்டாகிறதோ அவர்கள் மிகவும் புண்யசாலிகள்.. எல்லோராலும் வணங்கத்தகுதியுள்ளவர்கள். அவர்கள் இவ்வுலகிலே சகல சௌபாக்கியங்களையும் அடைந்து, நூறு நூறு ஆண்டு நோயற்ற வாழ்வுடன் வாழ்ந்து முடிவில் சிவசாயுஜ்யம் பெறுகிறார்கள்.

𑌏𑌵𑌂 𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ।
𑌇𑌹𑌐𑌵 𑌯𑌶𑍋𑌵𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌸𑍋𑌽𑌨𑍍𑌤𑍇 𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥

வருண ஜபம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்வண்ணம் 15, 16, 17-12-74 ஆகிய தேதிகளில் பர்ஜன்யசாந்தி (வருணஜபமும் வேள்வியும்) உலகநலன் கருதி நடைபெற்றது. இது மழையில்லாமல் வாடும் பயிர்களுக்கு மழை பெய்யும்படிச் செய்ய வருணபகவானை வேண்டிச் செய்யப்படும் ஒரு சிறந்த வேள்வியாகும்.

இதன் விபரம் :

சிறந்த வேதவிற்பன்னர்களான வேதியர் பலரை நியமித்து, நாடு செழிக்கவும், நல்ல மழை பொழியவும் பர்ஜன்யசாந்தி செய்கிறேன் என்று சங்கல்பம் செய்து கொள்ளவேண்டும்.

(பர்ஜன்ய என்றால் மேகம். சாந்தி என்றால் மழைபொழியாமல் இருப்பதற்குள்ள தடையை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் வேள்வி.) (சங்கல்பம் என்றால் மனதினால் நாம் செய்யும் காரியத்தையும், அதனால் நமக்குக் கிடைக்கும் நன்மையையும் நினைத்து உறுதிப்படுத்திக்கொள்ளல்.)

இவ்வாறு சங்கல்பம் செய்துகொண்டு புண்யாஹவாசனம் என்ற கிரியையால் இடத்தைத் தூய்மைப்படுத்தி ஒரு கலசத்தை ஸ்தாபனம் செய்து, அதில் ஜலங்களுக்கு அதிபதியான வருணனையும், மேகங்களுக்கு அதிபதியான இந்திரனையும், திக்பதிகளையும் பூஜித்து, அதன் எதிரில் ஒன்பது மண்டலம் போட்டு, காலங்களை நடத்துபவர்களான சூரியன் முதலான ஒன்பது கோள்களையும் அவரவர்களுடைய மந்திரம் கூறிப் பூஜித்து, நமது வேண்டுகோளைத் தெரிவிக்க வேண்டும்.

அப்போது வேதத்தை நன்கு கற்றறிந்த அந்தணர்கள் மார்பளவு தண்ணீரில் நின்றுகொண்டு ருக்வேத மந்திரங்களுடன் யஜூர்வேதத்தின்கண் உள்ள ஸம்ஹிதை, சாகை என்ற பகுதிகளில் உள்ள மழையின் தடையை நீக்கும் அறிய பல மந்திரங்களை ஆகாயத்தை நோக்கியவண்ணம் பாராயணம் செய்யவேண்டும்.

ஆசாரியன் புரசு சமித்து, நெய், அன்னம் என்ற மூன்று பொருள்களால் மற்றும் இரு ரித்விக்குகளுடன் (ரித்விக் என்பவர் ஆசாரியனுக்கு உதவியாய் இருந்து கூட ஹோமம் செய்பவர்) ஜலதேவதையான வருணனுடைய காயத்ரி மந்திரத்தினால் பதினாயிரம் தடவை ஹோமம் செய்து முடிவில் நவக்கிரஹ மந்த்ரங்களால் இயன்றளவு ஹோமம் செய்யவேண்டும். ஜபம் ஹோமம் இவற்றை முடித்துப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

பிரார்த்தனையின் கருத்து :

சந்திரனுக்கு ஒப்பான காந்தியுடையவராயும், கமலத்தின் மீது வீற்றிருப்பவராயும், பாசம், அங்குசம், அபயம், வரதம் என்றவைகளைத் தரித்திருப்பவராயும், முத்துக்களால் அலங்கரிக்கப் பட்ட எல்லா அவயவங்களையும் உடையவராயும், மலர்ந்த முகம் உடையவராயும் உள்ள வருணனை நல்ல மழையின் பொருட்டு தியானம் செய்கிறேன்; ஹே வருண! நீர்! ஜலபதியாக ஆகி முன்பு மஹேச்வரனால் மூவுலகங்களையும் காக்க, எல்லாப்பயிர்களும் வளர்ச்சியடைய நியமனம் செய்யப்பட்டீர். மழை இல்லாமையால் துன்புறுத்தப்பட்டவர்களான எங்களால் மந்த்ரங்களால் வேண்டப்பட்ட (நீர்!) இப்போது மூவுலகையும் காப்பாற்ற சீக்கிரமாகவே மழையைப் பொழிவாய் !

மேகத்தின் மீது வீற்றிருப்பவனாயும், எல்லோருக்கும் ஈசனாயும், வஜ்ராயுதம் பாசாயுதம் இவ்விரண்டையும் அணிந்தவனாயும் இருக்கிற ஜலாதிபதியின் பொருட்டு நான் நமஸ்காரம் செய்கிறேன். எவனுடைய கேசங்களில் மேகங்கள் இருக்கின்றனவோ, எவனுடைய எல்லா அங்கங்களின் சந்திகளில் நதிகள் இருக்கின்றனவோ, எவனுடைய குக்ஷியில் நான்கு கடல்களும் இருக்கின்றனவோ ஜலரூபியான அவன்பொருட்டு நமஸ்காரம்.

புஷ்கராவர்த்தங்களான மேகங்களாலே பூமியை நனைப்பவராயும், மின்னலுடன் கூடியவராயும் உள்ள ஜலரூபியின் பொருட்டு நமஸ்காரம். பிராணிகளின் பிராணரக்ஷகராயும் இணையற்ற பலசாலியாயும் இருக்கிற வருணன் எல்லாப் பயிர்களுடைய வளர்ச்சியின் பொருட்டும் வரவேண்டும்.

இவ்வாறு வருணனை வேண்டி, மழையைத் தருவிக்கும் ஆற்றலுடையவரான ரிஷ்யச்ருங்கரையும் வேண்டவேண்டும்.

அஃது விபண்டகரின் பிள்ளையாயும், பொறுமைக்கு அதிபராயும் இருக்கிற சிஷ்யச்ருங்க முனிவரை உடனே மழை பொழியவேண்டி வணங்குகின்றேன்.

இதன் பிறகு அங்காரகனுடைய காயத்ரிமந்திரம் சொல்லி அங்காரகனையும் வணங்கவேண்டும்.

ஹோமத்திற்கு முக்கியமாக இடம்பெற வேண்டிய மந்த்ரம் வருணகாயத்ரியாகும்.

முடிவில் ஒலிமிக்க கோஷத்துடன் ஹே வருண, ஹே ஜலாதிபதே, ஹே பாசத்தை அணிந்தவனே, ஹே மேகத்தை வாஹனமாகக் கொண்டவனே, எல்லா மேகங்களையும் இழுத்துக்

கொண்டு வா, இங்கு விடு விடு, பெரிய மழையைப் பொழி பொழி. ஹே இந்திர வா வா. ஹே வருண வா வா, ஹே ரிஷ்யச்ருங்க வா வா. ஹே அகத்திய முனிவரே வா. ஹே மேகங்களே வா, ஹே வருண கீழ்காற்றை உண்டு பண்ணு. மேற்காற்றை அழி. ஹே நவக்ரஹங்களே! நிறைவான நல் மழையைக்கொடு, மேகங்களே மழையைக்கொடு என்று துதித்து ஜபிக்கவேண்டும்.

இவ்வாறாகச் செய்யும்முறை சாந்திகுசுமாகரம், சாந்தி ரத்னாகரம் என்ற நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன.

சிவவிஷ்ணு மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்விக்க வேண்டும். வேள்வி செய்யும் அந்தணர்களுக்குப் போஜனம் செய்விக்க வேண்டும். இவ்வாறு வேள்வி செய்தால் கண்டிப்பாய் மழை வரும் என்பது அந்த நூல்களில் கூறப்படும் பலன்களாகும்.

சான்றோர்கள் மழைக்கு அதிபதியான வருணனை வேண்டி உலக நலன்கருதி வருண ஜபம் முதலியவற்றைச் செய்து வழிபட்டு உய்வார்களாக.

மழை வேண்டிப் பிரார்த்தனை :

15–12–74 அன்று வியாசபாரதத்தில் உள்ள விராடபர்வம் சிரோமணி, திரு கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களாலும், வில்லிபாரதத்தில் உள்ள விராட பர்வம் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களாலும் மழையைவேண்டிப் பாராயணம் செய்யப்பெற்றது.

உபநிஷத் கதை

𑌅𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋 𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌃𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌦𑍃𑌗𑍍𑌵𑍇𑌦𑍋
𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃

– ப்ருஹதாரண்யகோபநிஷத்.

𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌨𑌾𑌮𑍇𑌤𑌾𑌸𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌭𑌿𑌨𑍍𑌨𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍।
𑌆𑌦𑌿𑌕𑌰𑍍𑌤𑌾 𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑍍𑌛𑍂𑌲𑌪𑌾𑌣𑌿𑌰𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ||

– வாயுசங்கிதை.

"வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்."

– சிவபுரம் தேவாரம்,
திருநாவுக்கரசர்.

என்றபடி ஸர்வஜ்ஞனாயும் ஸர்வசக்திமானாயுமுள்ள பரமேச்வரனின் நிச்வாசம் போல அனாயாசமாய் உண்டானதாயும், ஸமஸ்தவஸ்துக்களின் உண்மையை விளக்குவதாயுமுள்ள வேதத்தில், யஜுர் வேதம் ஸகல புருஷார்த்தங்களையும் அறிவிப்பதாயும் மேன்மையுள்ளதாயும் விளங்குகிறது.

அது சுக்லயஜுர்வேதம் என்றும், கிருஷ்ணயஜுர்வேதம் என்றும் இருவகைப்படும்.

முன்னொரு சமயம் பரமகாருணிகர்களாயும், எல்லா உலகங்கட்கும் ஹிதம் செய்பவர்களாயும், ஞானிகளாயும் உள்ள ரிஷிகளுடைய கூட்டமொன்று, ஏதோ ஒரு தத்வநிர்ணயத்தின் பொருட்டு நடைபெற்றது. எல்லா மஹரிஷிகளுக்கும் அன்புடன் வரவேற்புப் பத்திரிக்கை அனுப்பப்பட்டது. அப்பத்திரிகை சாதாரணமாக வரவேற்பை மாத்திரம் குறிப்பிடவில்லை ஆனால், மிகக் கடுமையாக

𑌋𑌷𑌿𑌯𑍇𑌪𑍂𑌰𑌾𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌮𑍇𑌰𑍋𑌃 𑌸𑌮𑌾𑌜𑍇 𑌨𑌾𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌤𑌸𑍍𑌯 𑌵𑍈 𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

என்ற சப்தத்தோடும் கூடியிருந்தது. இக்கடும் சப்தமென்னும் பாணத்தைத் தாங்கிவரும் வரவேற்புப் பத்திரிக்கையானது யாஜ்ஞுவல்கியர் என்ற மஹரிஷிக்குக் குருவாயும், யஜுர்வேத ஆசார்யராயுமுள்ள வைசம்பாயன மஹரிஷிக்கும் அனுப்பப்பட்டது.

அவ்வைசம்பாயன ரிஷியானவர் அப்பத்திரிக்கையிலுள்ள பிரதிஜ்ஞையை அறிந்தும், காரியாந்தரத்தில் ஈடுபட்டதினால், சிரமப் பட்டும் போகமுடியவில்லை.

ஆதலால், சதாசாரம் உள்ளவராக இருந்த போதிலும், தடைப்படாத வார்த்தைகளையுடைய ரிஷிசமாஜத்தின் உத்தரவை மீறியதனாலேயோ, தெய்வதுர்விபாகத்தினாலேயோ, ப்ரஹ்ம ஹத்யா தோஷத்தினாலே பீடிக்கப்பட்டார்.

உடனே அந்தத் தோஷத்தினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சி உள்ளவராய் ஸஹாயமின்றி எவ்வளவு சிரமப்பட்ட தப–அனுஷ்டானத்தினாலேனும், அரிய யாகத்தினாலேனும் இந்தப் பாதகத்தைப் போக்கிக் கொள்வது முடியாதகாரியம் என்று மனதில் எண்ணி, வைசம்பாயன முனிவரானவர், தமது சிஷ்யர்களைத் தமக்குப் பிரதிநிதிகளாகச் செய்து, தம்மாலே செய்யத்தகுந்ததாயும், ப்ரம்மஹத்யாதோஷத்தைப் போக்க வல்லமையுடையதாயுமுள்ள கடுந்தவத்தில் ஏவ இச்சித்தார்.

அவருடைய சிஷ்யரான யாஜ்ஞுவல்கியர் வித்தை, வயசு இவைகளிற் பெரியவராயும் தவஞ்செய்வதிற் பிரசித்தியுள்ளவராயும் இருந்தபோதிலும், அப்பொழுது சமீபத்தில் உள்ளவராக இல்லை. அதனால் அவரைத் தவிர்த்து, மற்ற சிஷ்யர்களைத் தாம் குறிப்பிட்ட தவத்தில் ஏவினார்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்ட யாஜ்ஞவல்கியர் மிகுந்த கர்வமுள்ளவராய், தமது சாமர்த்தியத்தைப் புகழ்ந்து பேசி, சாந்தர்களையும், தவத்திலிருப்பவர்களாயுமுள்ள எல்லோரையும் இகழ்ந்து பேசினார். குருவான வைசம்பாயனர் சிஷ்யனின் ப்ராஹ்மண நிந்தையைப் பொறுக்காதவராய் அதனின்று தடுத்தார். இவ்வாறு பலதரம் தடுத்தும், யாஜ்ஞவல்கியர் சிஷ்யஜனத்திற்கு அழகில்லாத வினயமற்ற துராலாபத்தினின்றும் ஒழிவடைய வில்லை.

வைசம்பாயன மஹரிஷியானவர், கோபத்தை ஜயித்தவராயும், இயற்கையிற் குளிர்ச்சியுடையராயும் இருந்த போதிலும், அக்னியினால் கொதிக்கும் ஜலம் போல, உள்ளே குமுறும் கோபாக்னியினால் தபிக்கும் இதயத்தை உடையவராய், யாஜ்ஞவல்கியரைச் சிஷ்யசமூஹத்தினின்றும் விலக்கி விட்டதோடு, தன்னிடத்தில் கற்ற யஜுர்வேதத்தையும் கொடுத்து விடும்படிக் கூறினார்.

இதைக் கேட்ட யாஜ்ஞவல்கியர் சகிக்க முடியாத குருவின் வாக்பாணத்தினால் புண்படுத்தப்பட்ட மனதை உடையவராயும், பொறாமையினால் ஆசாரியரின் கௌரவத்தையும் சகிக்காதவராயும், உடனே அவரிடத்திற் கற்ற யஜுர்வேதத்தைப் பக்வமடையா அமுதம்போற் கக்கினார்.

யாஜ்ஞவல்கியரால் கக்கப்பட்டதாயும் நசித்துப்போவதாயும் உள்ள அந்த யஜுர்வேதத்தை வித்யார்த்திகளான மஹரிஷிகள், அதைக் காக்க இச்சை உடையவர்களாய், தமது சரீரத்தோடு அதைக் கிரஹிப்பதற்கு முடியாததினால், தித்திரிபக்ஷி உருவெடுத்துக் கொண்டு கிரமமாக கிரஹித்தார்கள்.

யாஜ்ஞவல்க்யரால் கக்கப்பட்டதினாலும், தித்திரி பக்ஷியினால் உண்ணப்பட்டதினாலும், அது {தைத்திரீயம்} க்ருஷ்ண யஜுர்வேதம் என்று கூறப்படுகிறது.

பிறகு யாஜ்ஞவல்க்யர் வேதமற்றவராய், மிகவும் கிலேசம் அடைந்தார். வேதவித்தை அற்றவனுடைய ஜீவனம் ப்ரயோஜனமற்றது என்று நினைத்து, மறுபடியும் வேதாத்யயனம் செய்யக் குருகுலவாசம் அவசியம் வேண்டுமென்றும், ஆனால் முன்போல மனிதரில் ஒருவரை குருவாக அடைந்தால் அவரும் வைசம்பாயனரை போல ஆகமாட்டார் என்பது என்ன நிச்சயம் என்றும், இவ்வாறு யோசித்துக் கடைசியாக மனிதரல்லாத ஒருவரையே குருவாக அடைவேன்; கஷ்டம்; யார் இப்பொழுது அஞ்ஞானகடலில் ஆழ்ந்த என்னை, வேதம் என்ற ஓடத்தினால் கரையேற்றப் போகிறார்கள்? என்று துக்கிக்கும் யாஜ்ஞவல்க்யருடைய மனதில் சூரிய பகவானுடைய மகிமையை கூறும் மந்திரம் உடனே உதித்தது.

𑌋𑌗𑍍𑌭𑌿𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌹𑍍𑌣𑍇 𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵 𑌈𑌯𑌤𑍇
𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌅𑌹𑍍𑌨𑌃
𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍇𑌨𑌾𑌸𑍍𑌤𑌮𑌯𑍇 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇
𑌵𑍇𑌦𑍈𑌰𑌶𑍂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍇𑌤𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 ।

என்னும் இம் மந்த்ரத்தின் உட்கருத்தை அறிந்து, சூரியபகவானைப் பூஜை முதலியவைகளால் சந்தோஷிக்கச் செய்தார். அதனால் சந்தோஷமடைந்த சூர்யபகவான் தயவினால் யஜுர்வேதங்களை உபதேசம் செய்து யாஜ்ஞவல்க்யருடைய இதயத்திலுள்ள இருளைப் போக்கினார்.

பின்பு யாஜ்ஞுவல்க்யரும் இப்படி சூர்யபகவானுடைய அனுக்ரஹத்தில் திவ்யஞானத்தை அடைந்த க்ருதக்ருத்யராக ஆனார்.

யாஜ்ஞுவல்க்யர் சூரியனிடத்திலிருந்து க்ரஹித்ததினால் இது சுக்ல யஜுர்வேதம் என்று பிரசித்தி அடைந்தது.

உபநிஷத் கதை

க்ருஷ்ண யஜுர்வேதத்தில் கடோபநிஷத் என்பது மிகச் சிறந்ததாக விளங்குகின்றது.

அதில் யமனையும் நசிகேதஸ் என்ற குழந்தையையும் பற்றிய கதை பரதத்துவத்தை உபதேசிக்கின்றது.

அது பின்வருமாறு:- கௌதமர் என்ற மஹா மஹிமை வாய்ந்த மஹரிஷி ஒருவர் இருந்தார். அவர்,

சுஷூா ஶ்ரிதா.நி ஹூ௦தா.நி சுஷூ௦ ஒ்ராணஜிதி ஶ்ரு ‘தி:।
தஸ்ஹாஉஷூ௦ ஒ்ரஉூாதவ்யு் சுஷூ௦ ஹி ஒாஉ௦ ஹவி:॥

என்றபடி மிகுந்த அன்னதானச் சிறப்பினால் (வாஜ௦ - சுஷூ௦ தெந ஜாத௦ ஶ்ரவ: - கீதி: யஸ்ூ ஸ: என்றபடி) வாஜச்ரவஸ் என்ற பெயரினால் புகழடைந்தார்.

அவருக்கு நசிகேதஸ் என்று இளம் வயதுள்ளவனாயும், பித்ருவத்ஸலனாயும், அழகுள்ளவனாயும் ஒரு புத்திரனிருந்தான்.

அம் மஹரிஷியானவர், ஒருசமயம் தமது வயது முதிர்ச்சியை யோசித்தும், தமக்குப் பரலோகத்தில் க்ஷேமத்தைக் கருதியும் *விஶ்வ*ஜித் என்ற யாகத்தை நடத்தினார்.

ஸமஸ்த ஐச்வர்யங்களையும் தக்ஷிணையாகக் கொடுக்கும் அந்த யாகத்தில், தக்ஷிணையின்றிப் பலன் கிடைக்காதென்றும், ஆயினும் பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுப்பது மேல் என்றும் உணர்ந்த அந்த மஹரிஷியானவர், வயதுமுதிர்ந்தவையும், தனக்குச் சமீபத்தில் வரும் ஒவ்வொருவரையும் யமனாக நினைத்து நடுங்குபவையும், உணவு உட்கொள்வதற்கும் திடமற்றவையுமான பசுக்களை ருத்விக்குகளுக்குத் தக்ஷிணையாகக்கொடுக்க ஏற்பாடு செய்தார்.

அதைக் கண்ட நசிகேதஸ் குழந்தையாயிருந்தபோதிலும் மனதில் இவ்வாறு எண்ணலானான்.

ஏன் நமது தந்தைக்கு கார்யசித்தியின் முடிவில் பிரயோஜனமற்ற செய்கை? இப்படிக் கொடுக்கத்தகாத பசுக்களை, தமது ஹிதத்திற்கெனச் செய்யப்பட்ட யாகத்தில் உதவி புரிந்தவர்களுக்குத் தக்ஷிணையாகக் கொடுக்க இச்சிக்கிறார். இவைகளைத் தக்ஷிணையாகக் கொடுப்பவர்களுக்குப் பலன் தான் ஏது?

வீதொஉகா ஜழுதூணா உ¯ழுஹொஹா நிரிந்ரியாঃ।
சூநநா நாঃ தெ லொகாஸ்தாநு ஸ மஹுதி தா உஉகி॥

என்று மனதில் எண்ணுபவனாய், தகப்பனுக்குப் பிள்ளையும் ஒரு மேன்மையான ஐச்வரியம்: இவர் எல்லாவற்றையும் தக்ஷிணையாகக் கொடுப்பரேல் என்னையும் ஒருவருக்குக் கொடுக்க யோக்கியமுள்ளவராக ஆவார்: அப்பொழுது நானும் ஒருவரிடம் செல்ல நேரும்: அப்படியானால் அதுவும் என்னாற் செய்யத்தக்கதே என்று நினைத்து மனதிலுண்டான சிரத்தா விசேஷத்தினால் வசப்படுத்தப்பட்டவன் போலவும், கிரஹங்களால் பீடிக்கப்பட்டவன் போலவும், பைத்தியம் பிடித்தவன் போலவும்

உடனே தகப்பனின் சமீபத்திற்கு ஒடிவந்து, "தந்தையே! என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்கள்?, என்று வினவினான்.

இவ்வாறு கூறின குழந்தையின் வார்த்தையைக் கேட்ட தகப்பனார், அயோக்கியப் பிள்ளை என்று நினைத்துப் பேசாதிருந்தார். அவ்வாறிருந்தபோதிலும் நசிகேதஸ் சிரத்தா பலத்தினால் பரவசனாய், மறுபடியும் "என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?„ என்று கேட்டான் . அதனையும் பாலனின் பிதற்றல் என்று நிராகரித்தார். இப்படி இரண்டு மூன்று தரம் நிராகரித்தும், நசிகேதஸ் "என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?, என்று கேட்டான். அப்பொழுது மஹரிஷியானவர் பொறுமை என்னும் ஜலத்தினால் அலம்பப்பட்டவராய், முறைப்படி செய்யும் அனுஷ்டானங்களால் மலரஹிதராயிருந்தபோதிலும் உடனே கோபத்தினாற் சூழப்பட்டவராயினார்.

உலகத்தில் கோபமுள்ளவர்கள் நன்மை தீமைகளையும், செய்யத்தக்கன செய்யத்தகாதனவற்றையும் அறியாதவர்களாய்த் தமக்கே தீங்கிழைத்து கொள்கிறார்கள்.

கோபத்தினாற் குருடரான மஹரிஷி, தன் உயிருக்குச் சமானமுள்ளவனாய், அபராதமற்றவனாய் இருந்தபோதிலும் கோபாக்னியாற் கொளுத்துகிறவர் போல் "எமனுக்கு உன்னைக் கொடுக்கிறேன்", என்று கூறினார்.

இவ்வார்த்தையாகிய வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்ட நசிகேதஸ் மலைபோல் அசையாதவனாய், கொஞ்சமும் வித்தியாசம் அடையவில்லை. அவன் பின்பு தனியாக ஓரிடத்தில் இருந்து கொண்டு யோசிப்பானாயினான். எனது தந்தை கோபத்தினால் தான் இவ்வாறு கூறினார்: கோபத்திற்கு விஷயமில்லாதது ஒன்றும் இல்லை. இல்லாவிட்டால் பிரியமுள்ளவனாயும் நிரபராதியாயும்

உள்ள என்னை ஏன் இப்படிக் கூறுவார்? நடந்த காரியத்தில் யோசிப்பதில் பயனில்லை. இப்பொழுது என்னால் என்ன செய்யத் தகுந்தது என்பதைக் குறித்துத்தான் யோசிக்க வேண்டியது முக்கியம்.

உலகத்தில் பிள்ளை, சிஷ்யன் இவர்கள் உத்தமன், மத்திமன், அதமன் என்று மூவகைப்படுவார்கள்.

அதில் குருவுடைய இங்கிதத்தை அறிந்துகொண்டு, அவர் உத்தரவின்றியே அவருக்கு இஷ்டமுள்ள காரியத்தில் எவர்கள் ப்ரவ்ருத்திக்கிறார்களோ அவர்கள் உத்தமர்கள்.

எவர்கள் குருவின் இங்கிதத்தை அறிந்தும் உத்தரவை அபேக்ஷிக்கிறார்களோ அவர்கள் மத்திமர்கள்.

எவர்கள் இங்கிதத்தை அறிந்தும் உத்தரவைக்கேட்டும் அசையாமல் இருக்கிறார்களோ அவர்கள் அதமர்கள்.

நானும் அதமனாக மாட்டேன்: பித்ருவாக்கிய பரிபாலனமே மேன்மை என்று நிச்சயம் செய்து கொண்டு, தனயனின் பிரிவினால் வருந்தும் தந்தைக்குச் சரியான சமாதானம் கூறிவிட்டு, யமனுடய பட்டணத்திற்குக் கிளம்பிச் சில நாளில் யமஸதனம் = யமனின் வீடு போய்ச் சேர்ந்தார்.

அப்போது யமன் தன் அதிகாரத்திற்கு விரோதம் இன்றிப் ப்ரஹ்மஸதனத்தைக் குறித்துச் சென்றிருந்தார்.

நசிகேதஸ் அங்கு யமராஜன் இல்லை என்பதை மந்திரிகள் மூலம் அறிந்துகொண்டு, தன் காரியசித்தியின் தாமதத்தை நினைத்து, பசி தாகம் இவைகளாற் பீடிக்கப்பட்டவனாயிருந்த போதிலும், உண்ணாவிரதத்தையே அநுஷ்டிப்பவனாய், மூன்று இரவுகள் அங்கு வசித்தான். அதன் பிறகு யமராஜனும் தன்

வீட்டிற்கு வந்து, மந்திரிகள் மூலம் அதிதியின் வரவையும் அவன் நடத்தையையும் கேட்டு, இப்படி யோசிக்கலானார்.

𑌆𑌶𑌾𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑍇 𑌸𑌙𑍍𑌗𑌤𑌂 𑌸𑍂𑌨𑍃𑌤𑌾𑌂 𑌚
𑌇𑌷𑍍𑌟𑌾𑌪𑍂𑌰𑍍𑌤𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑌶𑍂𑌂𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍।
𑌏𑌤𑌦𑍍𑌵𑍃𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯𑌾𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑍋
𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑌶𑍍𑌨𑌨𑍍 𑌵𑌸𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌗𑍃𑌹𑍇 ॥

இம் மஹாராஜன் வார்த்தையை மனதில் நினைத்துத் தான் செய்த பிழைக்குப் பிரதீகாரத்தைத் தேடுகிறவனாய், விசுவாசத்தோடு நசிகேதஸ்ஸைப் பார்த்து,

𑌤𑌿𑌸𑍍𑌰𑍋 𑌰𑌾𑌤𑍍𑌰𑍀𑌰𑍍𑌯𑌦𑌵𑌾𑌤𑍍𑌸𑍀𑌰𑍍𑌗𑍃𑌹𑍇 𑌮𑍇-
𑌽𑌨𑌶𑍍𑌨𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍𑌨𑌤𑌿𑌥𑌿𑌰𑍍𑌨𑌮𑌸𑍍𑌯𑌃 ।
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇𑌽𑌸𑍍𑌤𑍁
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌵𑌰𑌾𑌨𑍍𑌵𑍃𑌣𑍀𑌷𑍍𑌵 ॥

என்று இப்படிச் சந்தோஷமுள்ளவரான யமராஜன் மூன்று தினங்கள் தன் வீட்டில் வசித்ததினால் மூன்று வரங்களை கொடுக்குங் காலத்தில், சுத்தமான மனதையுடைய நசிகேதஸ் இதுதான் நல்ல சமயமென்று யோசிக்கலானான்.

நான் பிறந்தது முதலாகத் தந்தைக்குப் பிரியம் உள்ளவனாயிருந்தும், அவர் கோபத்தினால் கலக்கத்தை அடைந்து குற்றமற்ற என்னிடம் இடிபோன்ற கடுமொழியை மொழிந்தார். பின்பு அவ்வாறு கூறியதற்கு விசனத்தையும் அடைந்தார். தடுக்க முடியாமையினால் யமனுடைய வீட்டிற்கும் செல்ல உத்தரவு அளித்தார். இப்படிச் சாதுஜனங்களால் நிந்திக்கத்தகுந்த கார்யத்தினால் தபிக்கின்ற எனது தந்தை ஆஹாரம் நித்திரைகளை விட்டு, இதுவரையில் எந்த அவஸ்தையை அடைந்தார் என்பதை யான் அறியேன். ஆன்மாவை விட்டும் நான் அவருக்குள்ள இந்தக்

கஷ்டத்தை நிவ்ருத்திசெய்ய முடியவில்லை: அதிஷ்டமற்ற நான் என்ன செய்வேன்: கஷ்டம்:

தெய்வச்செயலாய் இப்பொழுது யமனின் அநுக்ரஹம் கிடைத்தது. இவரே நமது பிதாவிற்கு நல்ல மனதை உண்டுபண்ணத் தகுந்தவர். ஆதலின் முதல் வரத்தினால் எனது தந்தைக்கு நல்ல மனதை யாசிக்கிறேன். அப்படிச் செய்தால் எனது பெரிய அபராதமானது கொஞ்சம் சாந்தமாகும் என்று மனதில் நினைத்துக் கொண்டு, யமனுக்கு நமஸ்காரம் செய்து,

𑌶𑌾𑌨𑍍𑌤𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 𑌸𑍁𑌮𑌨𑌾 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌵𑍀𑌤𑌮𑌨𑍍𑌯𑍁𑌰𑍍𑌗𑍌𑌤𑌮𑍋 𑌮𑌾𑌭𑌿 𑌮𑍃𑌤𑍍𑌯𑍋 ।
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌮𑌾𑌭𑌿𑌵𑌦𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌃
𑌏𑌤𑌤𑍍 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌵𑌰𑌂 𑌵𑍃𑌣𑍇 ॥

ஓ யமராஜனே! எனது தந்தையான கௌதமர் இப்பொழுது என்னிடத்தில் உண்டான கோபத்தினின்றும் சமாதானம் அடையட்டும். மறுபடியும் உம்மால் என் தகப்பனுடைய சமீபத்திற்கு அனுப்பப்பட்ட என்னிடத்தில் முன்போல் அன்பினால் இனிமையாயும் கருணையுடையதாயும் உள்ள பார்வை உண்டாகட்டும். இது தான் முதல் வரத்தின் விஷயம் என்றான். இவ்வாறாக யாசிக்கப்பட்ட யமராஜன் புன்முறுவலோடு அப்படியே ஆகுக என்று கூறினான்.

மறுபடியும் இரண்டாம் வரம் யாசிக்கும் காலத்தில் ஜராமரணம் முதலிய தோஷங்களோடு கூடிய ஐஹிக சுகசாதனமான ரத்தினம் முதலியவைகளில் விருப்பமற்று, மங்களங்களுக்கு இருப்பிடமாயும், மூப்பு இறப்பு இல்லாததாயும்

ஸ்வர்கலோகத்தை அடையும்படி சேர்ப்பிக்கிறதாயும் உள்ள அக்னி வித்தையை அடைய யாசித்தான்.

அப்படி அவனால் ப்ரார்த்திக்கப்பட்ட அக்னிவித்தையையும் யாகவிதியையும் முறைப்படி உபதேசித்தான். ஒருமுறை சொன்ன மாத்திரத்திலேயே புத்திசாலியான நசிகேதஸ், யமராஜன் கூறிய யாவற்றையும் திரும்பக்கூறினான். யமராஜனும் உலகத்திற் சிறந்த புத்தியின் தேர்ச்சியைக் கண்டு, மிகுந்த சந்தோஷம் உடையவனாய், அவ்வக்னி உன் பெயரினால் விளங்குக என்று அநுக்ரஹித்தார். இப்போதும் நசிகேதஸ் என்ற பெயரினால் அவ் அக்னி விளங்குகிறது. இவ்வாறு முதல் இரண்டு வரங்கள் வாங்கிய பின்னர், சந்தோஷமுள்ள யமராஜன், மூன்றாவது வரத்தின் பொருட்டு அன்போடு அனுமதி அளித்தார்.

நசிகேதஸ் வர்ஷகாலத்தில் கரைபுரண்டு ஓடும் மலையருவியில் முழுகிய புற்போல, அனேகம் யோசனையினால் அழன்ற மனதைத் தடுக்கமுடியாதவனாய் ஆலோசிக்கின்றான்.

உலகத்தில் ஸத், அஸத் என்ற பதார்த்தங்களை உணர்ந்த மஹான்களுக்கும் கலக்கத்தை உண்டுபண்ணும் பதார்த்தங்கள் அநேகம் இருக்கின்றன. அநேக மஹான்கள் மேன்மை அடைந்தும் ஸ்வல்பத்திலேயே சந்தோஷத்தை அடைகின்றார்கள். அவர்கள் ரத்னாகரத்தை அடைந்தும் சகதியினாலேயே சந்தோஷத்தை அடைகிறார்கள். இப்பொழுது அப்படியுள்ள விஷயங்கள்தாம் பிரார்த்திக்கப்படவேண்டும்.

எவைகள் தேசத்தினாலேயும், காலத்தினாலேயும், முயற்சியினாலேயும், வேறு இடத்திலிருந்தும் அடைய முடியாதனவோ, அவைகளே பிரார்த்திக்கத்தக்கன. ஆனால், அவ்

வஸ்து எது? என்று மனதில் சிந்திக்கும் நசிகேதஸுக்குப் பரமேச்வரனின் அனுக்ரஹத்தினால் ஓர் எண்ணம் உதித்தது.

அதாவது, ஒருவரும் ஒருகாலத்தும் உயிரோடு யமபுரத்திற்குப் போவதில்லை. போனாலும் மறுபடியும் உயிரோடு பூலோகத்திற்குத் திரும்புவதும் இல்லை. இறந்தவர்களாலே தமது கர்மாவுக்குத் தக்க யாதனைகளை அனுபவிப்பதற்கு யமனுலகத்திற்கு வருகிறார்கள். அனுபவம் முடிந்தவுடன் கர்மாவை அனுசரித்து மற்றொரு தேஹத்தை அடைந்து ஏதோ ஒரு லோகத்தில் வசிக்கிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சமும் முன் ஜன்மத்து நடத்தை அறியப்படவில்லை.

எனக்கோவெனில், பெரியபாக்யத்தினால் உயிருடனேயே யமலோகத்திற்கு வருகையானது ஏற்பட்டது. இது மிகவும் அரிதே. ஆகையால், சரியான காலத்தை வீணாய் விடமாட்டேன். மூன்றாவது வரத்தினால் அடைய முடியாத பரகதியையே பிரகாசம் செய்கிறேன். உலகத்தில் பரதத்துவத்தை அறிய இச்சை உள்ளவர்களான சாதுக்களுக்குள் விவாதம் அநேகம் இருக்கின்றன என்று இப்படிப் பலவாறு எண்ண மிட்டுக்கொண்டு,

𑌯𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌤𑍇 𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇
𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 𑌨𑌾𑌯𑌮𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌚𑍈𑌕𑍇 ।
𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌨𑍁𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌹𑌂
𑌵𑌰𑌾𑌣𑌾𑌮𑍇𑌷 𑌵𑌰𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 ॥

பிராணிகளுக்குத் தேஹம் போன பிறகு அது இருக்கிறது என்றும் இல்லையென்றும், அந்த விஷயத்தில் விவாதமானது இருக்கின்றது. இவைகளில் ஒன்றை நிச்சயம் செய்யாவிடில் மத்யஸ்தர்களுக்கு அதற்கு உசிதமான காரியத்தில் ப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தியும் உண்டாகாது. இதில் பிரத்தியக்ஷமாகப் பார்த்தவர்கள்

சாக்ஷிகளாகக் கிடைக்கமாட்டார்கள். பெரியோர்கள் பிரேதபுரத்திற்கு அதிபதியான தங்களையே இதற்குப் ப்ரமாணமாகக் குறிக்கிறார்கள்., நான் தங்களுடைய அனுக்ரஹத்தில் உண்டான மஹிமையை உடையவன் ஆதலால் தங்களைக்கேட்க முறை உள்ளவனாய் மிகுந்த வணக்கத்தோடும் நிர்பந்தத்தோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் உண்மை என்ன? என்பேரில் தயவினால் நியாயப்படி இதை உபதேசித்து, சந்தேஹத்தைத் தாங்கள் போக்க வேண்டும். இது தான் எனது மூன்றாவது வரம் என்று கூறினான். பிறகு யமராஜன் மிக்கமேன்மையான அவ் வார்த்தையைக் கேட்டு மனதில் சந்தோஷம் உடையவனாய் இருந்தபோதிலும் ப்ரீதி அடையவில்லை.

(இக்கட்டுரை முழுமையாகக் கிடைக்கவில்லை)

இலங்கையிலிருந்து வெளிவந்த "சைவசாஸ்த்ர பரிபாலனம்" என்ற பத்திரிகைக்கு சிவபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்ய சுவாமிகள் வழங்கிய ஆசிச்செய்தி:–

ஶாமூபஶீஷூாவூ ஶாஸொ யா உகுிகா ஸெைவவாஙிஙீ।
ஸஹஸா ஸாரஸா உஜாவூா ஜூாகெஷவ ஶயுஶிஶ்ரிதா॥

வேத ஆகம உபநிடதங்கள்

வேத–சிவாகமங்கள் வேத உபப்ரும்ஹணங்களான உபநிஷதங்கள் ஆகியவை இஹ–பர–சுகங்களை விரும்புகிறவனுக்குச் சிவனை உபாசிக்குமாறு விதிக்கின்றன.

சிவம் ஞானானந்த ஸ்வரூபியாதலின் ஆன்மா அதனை வழிபடுதலால் அச்சிவம் அருட்பிழம்பாகலின் வணங்கியவர்க்கு அருள்புரியும் தன்மையுடையதாகும்.

ஆன்மா பளிங்குபோன்று எதையெதைச் சார்ந்ததோ அதனதன் குணத்தைத் தன்குணமாகக்கொள்ளும் இயல்பினது. அதனால் அனாதியே தன்னோடு இயைந்துள்ள மல–மாயா – கன்மங்களின் தன்மைகளை தன்தன்மையாகக் கொண்டு இடர்படுகின்றது. ஆணவமலக் குணத்தைத் தன் குணமாகக் கொண்டதனால் யான் எனது என்னும் அஹம்பாவமும், மாயையின் குணத்தைத் தன் குணமாகக் கொண்டதனால், சுக–துக்க–மோஹங்களும், கன்மத்தின் குணத்தைத் தன் குணமாகக் கொண்டதால் எண்ணரிய பிறவிகளும் உண்டாயின.

ஆன்மா ஞானஸ்வரூபியாக இருந்தும் தன்னதல்லாத பிற குணங்களைத் தன்னதாகக் கொள்ளுதற்கு ஏதுவாயிருந்தது சார்ந்த தன்வண்ணமாம் இயல்புடைமையேயாம். அதனால் அவ் உபாதியினின்றும் நீங்கவேண்டின் மல–மாயா–கர்மங்களின் சேர்க்கையை விடவேண்டும்.

இவ்வாறு உள்ள பந்தநிலையினின்று விடுதலை பெற சிவோபாஸனை விதிக்கப்பட்டிருக்கிறது.

தானே எல்லாம் உணர்ந்து, உணர்த்திவரும் முதற்பொருளாய், அண்டத்தினும் பிண்டத்தினும் காணப்படும்

உயிர்ப்புக்கெல்லாம் அடிநிலையாய், அருவாய், உணர்வாய், ஸதஸத்தாய் உள்ளது சிவம்.

இந்தச் சிவத்தின் ஸ்வரூபத்தை உணர்ந்து வழிபட்டு இஷ்ட ஸித்திகளைப் பெறும் விதிமுறைகளைக் கூறுவது வேத ஆகமங்களும், வேதோபப்ருஹ்மணங்களான உபநிஷதங்களும் ஆகும். வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் கர்த்தா ஒருவனே. அவன் சிவபெருமான்.

"தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம் வகுத்தனன்' என்பது திருஞானசம்பந்தருடைய திருவாக்கு.

𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌭𑌾𑌰𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑍍𑌯𑍁𑌪𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑍍𑌯𑌾𑌗𑌮𑌾𑌨𑌪𑌿 ॥
.... ……………………… எனத் தொடங்கி
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍

– சூதசம்ஹிதை.

வேதங்கள், தர்மசாஸ்திரங்கள், புராணம், பாரதம், வேதாங்கங்கள், உபவேதங்கள், காமிகம் முதலிய ஆகமங்கள் யாவையும் சாக்ஷாத் சங்கரன் செய்தார் என்று சூதசம்ஹிை கூறுகிறது.

ஆகவே, வேதம் ஆகமம் இரண்டிற்கும் கர்த்தா ஒருவன் எனப்படுகிறது. ஊர்த்துவமுகமான ஈசானமுகத்தினின்றும் காமிகம் முதலிய சிவாகமங்கள் தோன்றியதால், அவை பரசுருதி என்றும், தத்புருஷம் முதலிய நான்கு முகங்களினின்றும் இருக்கு(ரிக்), யஜுர், ஸாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்கள் தோன்றினமையால், அவை அபர சுருதி என்றும் கொள்ளப்படும்.

வேதம் பசுவும், சிவாகமம் அதன் பாலும், வேதம் கனியும் சிவாகமம் அதன் சாறும், வேதம் உடலும் சிவாகமம் அதன் உயிரும், வேதம் ஒரு நதிக்குச் செல்லும் வழியும் சிவாகமம் அந்நதியிற் சென்று படியும் துறையும் ஆயிருத்தலால், வேதவழியில் நின்று ஆகமஞானத்தைக் கைக்கொண்டவர்களுக்குப் பரமேச்வரன் விரைவில் பேரருள் புரிவான் என்பது இதனால் தெளிவிக்கப் படுகிறது.

வேதம் பல பொருள்படத்தோன்றும் சூத்திரமும் சிவாகமம் அதனை அவ்வாறாக்கவொட்டாத பாஷ்யமாயிருத்தலாலும், வேதத்தினது ஞானபாகத்தில் சித்தாந்த முடிவு அற்பமும், சிவாகமத்தின் ஞானபாதத்தில் சித்தாந்த முடிவு அதிகமுமாய் விளங்குவதாலும் சிவாகமஞானமே சிவப்பிரஸாதமடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படும்.

இதை "தாயுமானவர், ஆரணமார்க்கத்து ஆகமவாசி(ஜி) அற்புதமாய் நடந்தருளும்" என்று கூறினார். ஆகவே வேதாந்த சித்தாந்தமாகிய முடிவையே ஆகமம் விரித்துரைக்கின்றது.

"த்ரயீ" என்று ஸ்ம்ருதி முதலியவைகளில் கூறப்படும் வேதமானது ருக், யஜுர், சாமம் என்று மூன்று விதமாகப் பிரித்து விளங்கும். இம்மூன்றனுள் நடுவேயுள்ளது யஜுர் வேதம் . இந்த யஜுர்வேதம் நூற்றொரு சாகைகளாக விரிந்துகிடக்கின்றது. இவற்றின் நடுச்சாகை ஐம்பத்தோராவது சாகையாகிய ஸ்ரீபோதாயன சாகை. இந்தச் சாகை ஏழு காண்டங்களாக அமைந்துள்ளது. இதன் மத்தியிலுள்ள காண்டமே நாலாவது காண்டமாகிய சதருத்ரீயம்; இதன் நடுவிலுள்ளது ஐந்தாவது பிரச்னம் , அதில் " நஜஷெல்லாஜாய ச ஙூஹாய ச் " என்னும் அனுவாகத்தின் இதயத்தில், " நஜஶ்ஶிவாய ச" என்னும் பஞ்சாக்ஷர

மந்த்ரம் பிரகாசிக்கின்றது. இதனாலே இச்சிவமந்த்ரம் ஸகல வேத ஜீவரத்னமாயும், பரமபாவனகரமாயும், அதிரஹஸ்யமாயும், ஸர்வ வேதாந்த–ஸாரமாயும் உள்ளதோர் மந்த்ரமாகும்.

இதனை, சிவஞானப்பாலை உண்டருளிய ஸ்ரீஞான சம்பந்தப் பெருமானார் "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பஞ்சாக்ஷர வாச்யப்பொருளான பரமேச்வரன் பஞ்சாக்ஷர நடுவிலுள்ள 'சி' என்ற சிவபீஜத்தை முகத்திலேற்று, வகாரமாகிய அம்ருத–வாருணபீஜத்தைத் தம்மை பின்பற்றப்பெற்று, அகில வேதரஹஸ்யமாயும் அவற்றிற்கு ஜீவரத்னமாயும் நின்று "சிவ:" என்னும் நாமத்தால் பிரகாசிக்கின்றான்.

ருக்வேதம் இருபத்தொரு சாகைகளிலும், யஜுர்வேதம் நூற்றொரு சாகைகளிலும், சாமவேதம் ஆயிரம் சாகைகளிலும், அதர்வண வேதம் ஒன்பது சாகைகளிலும் இந்தச் சிவ என்ற சொல்லானது பேரணியாய் நின்று துரீயஸ்தானத்தை விளக்குதலானும், பரப்ரஹ்மத்திற்கு இடுகுறிப்பெயராய் நிற்றலானும், மாண்டூக்யோபநிஷதம், ந்ருஸிம்ஹ தாபிந்யோபநிஷதம் முதலிய எல்லா உபநிஷதங்களும் இதனை அளவிலாது புகழ்கின்றன.

நூல்கள் எல்லாவற்றிலும் வேதம் சிறந்தது, வேதங்களுள் ஸ்ரீருத்ரம் சிறந்தது, ஸ்ரீருத்ரத்தினுள் ஸ்ரீபஞ்சாக்ஷரியும், அதனுள் சிவ என்னும் இரண்டக்ஷரமுமே சிறந்தது.

ஆகவே வேத புருஷனுக்கு ருத்ரைகாதசினி கண்ணும், பஞ்சாக்ஷரம் கண்மணியும், சிவசப்தம் கட்பார்வையுமாக இருக்கின்றன.

தேஹத்தின் மத்தியிலுள்ள ஹ்ருதயத்தில் ஆன்மா அணு ரூபமாயிருந்து தேஹமுழுமையும் இயக்குமாறு போல், வேதத்தின் நடுவில் சிவசப்தம் இருந்துக் கொண்டு, வேதமுழுமையையும் சிவமணம் கமழச் செய்கின்றது.

இக்காரணம் பற்றியே வேத வித்துக்கள் யாவரும், பதினான்கு வித்யைகளின் ஸாரமாயுள்ளதும், பாவங்களை எல்லாம் நசிக்கச்செய்வதும் பரப்ரஹ்ம வாசகமாய் இருப்பதும் சிவநாமமே என்று நுண்ணறிவு கொண்டு கூறியுள்ளார்கள்.

திருமூலர்,

"சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிட தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்றிடச் சிவகதி ஆமே"

என்றும், அப்பைய தீக்ஷிதர்

ஶிவநா௩நி ஸாவிதெ௨ஜாஜெ
௩ஹதிஜொ௱திஷி ௨ாநிமீ ௩யாயெ௰ ।
௨ஶிதாநூவயாநி ௨௰௨௰ெ
௩ஹ௰ாயாநி ௩ஹாநி ௩ஜஸாநி ॥

என்றும் கூறியுள்ளார்கள்.

மகத்தான ஒளிப்பிழம்பாயும், தேவியைப் பாதியில் உடையதாயும் உள்ள சிவநாமாவானது நினைக்கப்பட்ட பொழுது, தீமைகள் வெகுதூரத்திற்கு ஓடும், மங்களங்கள் அடிக்கடி வந்து சேரும். எனவே இவ்விரண்டு அக்ஷரத்தை உச்சரிப்பவர்கள் மங்களத்தை அடைவார்கள்.

பஞ்சாக்ஷரத்திற்குப் பொருள் கூறும் ஆகமவாக்யம் 'சி' என்பது சிவன், 'வ' என்பது சத்தி, 'ய' என்பது ஆத்மா, 'ம' என்பது மலம் முதலானது, 'ந' என்பது மலநிவாரகம் என்று கூறுகிறது.

ஆதலால் பஞ்சாக்ஷரத்தை உச்சரிப்பவர்கள் ஆணவம் முதலிய மலநீக்கம் பெற்று, அம்மையப்பரின் ஸாலோகாதி பதவியை அடைகிறார்கள் என்பது காணப்படுவதால், 'சிவ' என்ற சொல் சக்தியுடன் கூடிய சிவத்தைக் குறிக்கிறது.

இந்தப் பஞ்சாக்ஷரத்தையும் அதன் பேதங்களையும் சிவாகமம் விளக்கிக் கூறுகிறது.

அஃது, தாரபஞ்சாக்ஷரம்; ப்ராஸாதபஞ்சாக்ஷரம், மிச்ர பஞ்சாக்ஷரம், ஸ்தூலபஞ்சாக்ஷரம், ஸூக்ஷ்மபஞ்சாக்ஷரம், சுத்த பஞ்சாக்ஷரம் என்று அறுவகைப்படும்.

அஃதெவ்வாறு எனில் "ஓம்–நமச்சிவாய" என்பது தாரபஞ்சாக்ஷரம்.

ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: என்பது ப்ராஸாத பஞ்சாக்ஷரம்.

நமச்சிவாய சிவாய நம: என்பது மிச்ரபஞ்சாக்ஷரம்.

நமச்சிவாய என்பது ஸ்தூலபஞ்சாக்ஷரம்.

சிவாய நம: என்பது சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம்.

சிவாய என்பது சுத்தபஞ்சாக்ஷரம்

என்று கூறி இந்தப் பஞ்சாக்ஷரங்களை குருமுகமாக உபதேசம் பெற்றுச் சிவத்யானத்துடன் ஜபம் செய்பவர்கள் "தேவர்கோ அறியாத தேவதேவனின்" ஸ்வரூபஸாக்ஷாத் காரத்தைப் பெறலாம்.

ப்ரஹ்மோபநிஷத்தில்: –

𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑌯𑌂 𑌶𑌮𑍍𑌭𑍁𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑌮𑍍।
𑌨𑌕𑌾𑌰𑌾𑌦𑌿 𑌯𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍॥

பஞ்சாக்ஷரமயனாய் பரப்ரஹ்மஸ்வரூபியான சம்புவை நகாரம் முதல் யகாரம் வரையில் உள்ளதாகத் தியானித்து ஜபம் செய்யவேண்டும் என்று வேத உபப்ரஹ்மணமான ப்ரஹ்ம உபநிஷத் ஸ்தூலபஞ்சாக்ஷரத்தைக் கூறியது. திருநாவுக்கரசு அடிகளாரும்,

"கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலிய சிவாய நம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே"

திருப்பாதிரிப்புலியூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்றவனே! கருப்பையிற் கிடந்து உன்னுடைய திருவடிகளையே சிந்தித்துக்கொண்டிருந்தவனாகிய நான்; உனது பேரருட்டிறத்தினால், உனது திருநாமமாகிய அஞ்செழுத்தை ஓதிப் பழகினேன்; உனது பேரருட்டிறத்தால் மலத்துவம் நீங்கி சிவத்துவ விளக்கம் அடைவதற்காக, சிவாயநம என்ற சூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தை நினைத்து ஓதி திருநீறணிந்து உன்னுடைய திருவடிகளை வணங்கினேன்; இவ்வாறு நான் செய்ததனால் உண்டான பயனாக நீ எனக்குச் சிவஞானத்தைத் தந்தருளுவாய் என்று திருநாவுக்கரசர் சூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தைக் கூறியுள்ளார்.

திருநீறணிந்து பஞ்சாக்ஷரத்தை ஓதவேண்டும் என்று வாகீசர் கூறினார். இது பற்றி சுருதி . "பூத்யை ந ப்ரமதிதவ்யம் " பூதியை அணிவதின்றும் நழுவக்கூடாது என்றது . 'ஐச்வர்ய காரணாத்பூதி:' ஐச்வர்யத்துக்குக் காரணமாயிருத்தலால் பூதி

எனப்படும் என்று ப்ருஹஜ்ஜாலோபநிஷதம் அப்பொருளை விளக்கியது. பூதி:, பஸிதம், பஸ்ம, விபூதி, ஐச்வர்யம் என்பவை பஸ்மாவின் பெயர்களாகும்.

த்ரிபுண்ட்ரகம் ஸதா குர்யாந்மந்த்ரபூதேந பஸ்மநா।
வைதிகேந விதாநேந ஶிவஸாயுஜ்யகாங்க்ஷயா॥

வைதிகமுறைப்படி சுத்தமாக எடுக்கப்பட்ட மந்த்ரபூதமான விபூதியினால் எப்போதும் திரிபுண்டரதாரணம் செய்து கொள்பவன் சிவஸாயுஜ்யத்தை அடைகிறான் என்று முன் வேதவாக்யத்தை அனுசரித்து ஸ்மிருதி கூறுகிறது.

இதை சிவாகமத்தில் விபூதி எடுக்கவேண்டிய முறைகளும், அதைத் தரித்துக்கொள்ள வேண்டிய முறைகளும், யார் யார் எந்தெந்த அளவில் தரிக்கவேண்டும் என்ற விஷயமும், விளக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டிருக்கிறது.

" கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வாரேயாம் ஆகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான சிவனடி சேர்வரே "

என்றது திருமூலரின் திருவாக்கு.

வாக் என்பது பற்றியும் வேதத்திலும் ஆகமத்திலும் கூறப்படுவதைக் காணலாம். வேதத்தில் சுருக்கமாகவும் ஆகமத்தில் விளக்கமாகவும் காணப்படுகிறது.

சத்வாரி வாக் பரிமிதா பதாநி
தாநி விதுர்ப்ராஹ்மணா யே மநீஷிண꞉ ॥
குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி
துரீயம் வாசோ மநுஷ்யா வதந்தி ॥

– வேதம்

அறிஞர்கள் நான்கு வாக்குகள் என்று உணர்ந்தார்கள். அதில் மூன்று வாக்குகள் = சூக்ஷுமை, பைசந்தி, மத்தியமை உள்ளேயே இருக்கும். நான்காவதான வைகரி வாக்கினால் மக்கள் பேசுகிறார்கள் என்று வேதத்தில் கூறப்படுகிறது. சிவாகமத்தில் இந்த வாக்குகள் மிகவும் விரிவாகக் கூறப்படுகின்றன. இதை பௌஷ்கராகமம்,

> ஶஸ்தாஶதுஃவிழுயாஷெ்ஹ்ஃஷி வைவயூாஉி விஹெஉதஃ ।
> வைவரீ ஃயூாஹ்யா உ வஶூஜீ ஸூக்ஷ்ஷஸஂஜ்ஞிதா॥

என்று தொடங்கி விஸ்தாரமாகக் கூறியுள்ளது.

வைகரிவாக்கு:–

அதாவது, வைகரி தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்பட்டு நினைத்த பொருளைச் சொல்லுஞ் சொல்.

சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் சவிகற்பஞானம் உண்டாவதற்கு ஏதுவானது; அஹங்காரத்தால் செலுத்தப்படும் பிராணன் என்னும் காற்றால் உந்தப்பட்டு எழுந்து புறத்தேயடையும் அக்ஷரங்கள் இவ்வாக்காதற்குமுன் மத்தியமைத்தானத்தில் உதானன் என்னும் காற்றால் உந்தப்பட்டுச் சூக்ஷ்மரூபமாய்ப் பிரிந்து தோன்றின.

மத்தியமை வாக்கு:–

மத்தியமை வாக்கு செவியிற் கேட்கப்படாதது. மெல்லோசையானது, கண்டத்தில் விளங்குதலுள்ளது. அதனால் சொல்பவன் தன்னுள் உணரும் சவிகற்பஞானத்திற்கு ஏதுவாகி உள்ளே உணரப்படும் ஓசையாயிருப்பது. சூக்ஷ்மரூபமாய் அக்ஷரம் பிரிந்து தோன்றினாலும் பல், இதழ், நா, அண்ணங்களிற்பட்டுச் சிதறிப்போகா. அதற்குக் காரணம் அங்கு உதானவாயுவின் தொழிற்

பாடேயன்றிப் பிராணவாயுவின் தொழிற்பாடு இல்லாமையாகும். இது பைசந்திக்கும் வைகரிக்கும் வேறாய் அறியப்படுவது.

பைசந்திவாக்கு : –

ஐந்துநிறங்களையும் சூக்ஷ்மரூபமாய் அடைவுபட ஒடுக்கி நிற்கும் மயில் முட்டையில் நீர் போலப் பலவகைப்பட்ட எழுத்துக்கள் பிரிவுபடவிளங்கித் தோன்றாநிலையிற் சூக்ஷ்ம ரூபமாகக் கொண்டு சிந்தையில் நிற்கும். நிர்விகற்பஞானத்திற்கு ஏதுவாகும்.

இதுவே அக்ஷரங்கள் பிரிவுபட விளங்கித் தோன்றும் மத்தியமை வாக்காக விருத்தியடைகிறது

சூக்ஷமை வாக்கு : –

பரசரீரத்துள் நாதமாத்திரையாய் விளங்குதலுள்ளது. ஞானத்திற்கு மட்டும் ஏதுவாதலுடையது.

இதுவே பைசந்தி, மத்தியமை, வைகரி என விருத்தியடைகிறது. இதன் விருத்திகளாகிய அவை அழியும். இது என்றும் அழிவதில்லை. அழிவின்றிச் சுத்தமாயா ரூபமாய் நிலைபெற்றிருக்கும்.

தவவிசேடத்தால் இதைக் காணப்பெறுவார்க்கு அந்தச் சுத்தமாயா புவனத்திலுள்ள அபரமுத்திப் பெரும்போகம் உண்டாகும்.

இந்நான்கு வாக்கும் நிவ்ருத்தி முதலிய பஞ்சகலைகளைப் பற்றுக்கோலாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய ஐந்து தத்துவங்களிலுமிருக்கும் என்று, வேதத்தில் கூறப்பட்டிருக்கும் நான்கு வாக்கையும் சிவாகமம் விஸ்தாரமாகக் கூறியுள்ளது. எனவே வேதாகமம் இரண்டிற்கும் கர்த்தா ஒருவன்; அவன் ஆப்தன் எனப்படுவதால் ஆப்த வாக்கியம் பிரமாணம். மற்றும்

ஆப்தோக்திஸ் ஸித்தாந்த: ஶிவ ஏவாப்திமாந் யத: ।
ந தாப்யாம் ஸத்ருஶம் கிஞ்சித் ஶ்ரேயஸோऽஸ்தி விதாயகம் ॥

ஆப்தனுடைய வசனம் ஈண்டு சித்தாந்தம், எதனால் எனின் ஆப்திமான் சிவன். இவ்விருவருக்கும் ஒத்ததாய்ச் சிரேயஸ்ஸைக் கொடுப்பதாகிய எப்பொருளுமில்லை, என்னும் வசனத்தால் ஈண்டு வேதத்திற்குறிய உபவர்ணனம் சிவாகமத்திற்கும் பொருந்தும்.

வேதம் சிவாகமம் இரண்டிற்கும் கர்த்தா ஒருவன் ஆதலால் வேதத்தில் கூறப்பட்ட விஷயங்கள் சிவாகமத்தில் விரிவாகக் கூறப்படுகின்றன. சிவாகமத்தில் காணப்படும் விஷயங்கள் வேதங்களிலும் அதன் உப-ப்ருஹ்மணங்களான உபநிஷதங்களிலும் காணப்படுகின்றன. ஆகவே வேதம், ஆகமம், உபநிஷதங்கள், ஒன்று சொல்லும் பொருளை மற்றொன்று அனுவாதம் செய்து சுருக்கமாயும் விரிவாயும் கூறுகின்றன.

வையம் நீடுக, மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத் தோங்குக
தெய்வ வெண் திரு நீறு சிறக்கவே.

மீன – மந்தன்

"எப்போதகத்து நினைவார்க் கிடரில்லை
கைப் போதகத்தின் கழல்"

கதிரவனுக்குச் சாயாதேவியிடம் தோன்றியவர் சாயாபுத்ரர். இவர் ஒரு இராசியினின்றும் மற்றொரு இராசிக்கு இரண்டரை ஆண்டுக்கு ஒருமுறை செல்வதால் சனைச்சரன் (மெதுவாக சஞ்சரிப்பவன்), மந்தன் (மெதுவாகவுள்ளவன்) என்ற பெயர் உண்டாயிற்று.

இவருடைய உடல் கருநிறம், காகத்தை வாகனமாகக் கொண்டவர்.

𑌨𑍀𑌲𑌾𑌞𑍍𑌜𑌨𑌸𑌮𑌾𑌭𑌾𑌸𑌂 𑌰𑌵𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌯𑌮𑌾𑌗𑍍𑌰𑌜𑌮𑍍 ॥
𑌛𑌾𑌯𑌾-𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌣𑍍𑌡𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑌂 𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌶𑌨𑍈𑌶𑍍𑌚𑌰𑌮𑍍 ॥

நீலமான ஆடை அணிந்தவர், கருத்த திருமேனியுடையவர், சூரியனின் புதல்வர், இயமனுக்கு முன் பிறந்தவர். (சனிபகவானின் சகோதரன் இயமன்) சாயாதேவியினிடம் பிறந்தவர்; மெல்ல சஞ்சரிப்பவர் என்று அவருடைய வடிவம் விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் சௌராஷ்டிரதேசத்தில் ஜனித்தவர். காச்யப கோத்திரத்தில் உதித்தவர். ஸ்ரீவிகாரி வருஷத்தில் பிறந்தவர். இவருடைய நக்ஷத்திரம் ரோஹிணி, இவருக்குச் சொந்தமான வீடு மகரம் கும்பம் என்ற இரண்டு. இவருக்கு உச்சஸ்தானமாகவுள்ள வீடு துலாம் என்ற இராசியாகும்.

இந்த சனிபகவான் நாளது மாசிமாதம் 26 (10–3–67) சுக்ரவாரம் இரவு மணி 1–56க்கு கும்பராசியினின்றும் மீனராசியில் பிரவேசிக்கிறார்.

சனிபகவான் அந்த மீனராசியில் பிரவேசிக்கும்போது கடகத்திலிருக்கும் குருவால் பார்க்கப்படுகிறார். ஆகவே

மீனராசிக்குப் பாபியாக இருந்தாலும், குரு வீக்ஷண்யம் பெற்றதால் சுபத்தைச் செய்வார். ஆயினும் ஒவ்வொருவருடைய சந்திரலக்ன ரீதியாக எட்டாம் இடத்திலோ, பன்னிரண்டாம் இடத்திலோ அந்த ஜன்மராசியிலோ சனிபகவான் வரும்போது உடல் பொருள் முதலியவைகளுக்கு உபாதைகள் ஏற்படலாம். அவ்வாறு ஒன்றும் நிகழாதிருக்க இந்த சனி பகவானை வழிபட்டால் மகிழ்ச்சிபெற்ற அவர் நலனையே செய்வார்,

கோசரே வா(அ)த வர்கே வா விஷமஸ்தோ யதா ஶநி:॥
துஷ்டோ ராஜ்யம் ததாதி ஏவ ருஷ்டோ ராஜ்யாபஹாரக:॥

என்றும்,

ஜந்மஸ்தோ சாஷ்டமஸ்தோ வா த்வாதஶே வாபி குத்ரசித்॥
ஸதா ஶநிவாரேஷு தைலாந்நதாநத:॥
ஶநைஶ்சரோ(அ)ஹம் ஸுப்ரீத: க்ரஹபீடாம் நிவாரயே॥

கோசரத்திலோ வர்க்கத்திலோ விஷமஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான் மகிழ்ச்சிபெற்றால் இன்னல் நீக்கி கிரஹ பீடைகளை அகற்றி நன்மை செய்வார். இராஜ்யத்தையே அளிப்பார். கோபம் கொண்டாலோ கொடுத்த ராஜ்யத்தை அபஹரித்து தாளாத்துயரை அளிப்பர்.

சனிபகவான் ஜன்மத்திலோ அல்லது அஷ்டமத்திலோ அல்லது பன்னிரண்டிலோ இருந்தாலும் சனிவாரத்தில் எள்ளெண்ணெய் தீபம் போட்டுதல், எள்ளன்னம் அர்ப்பணம் செய்தல், எள் தானம் செய்தல் முதலிய வழிபாட்டினால் "நான் அவர்களுக்கு நன்மை செய்வேன்"என்று சனிபகவானே சொல்லுவதாக தசரத மகாராஜன் கூறுகிறார்.

முன்னொரு சமயம் தசரத சக்ரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில் ஈராறாண்டு தேசத்தில் விளைவு குன்றி, மழையின்றி கடும் பஞ்சத்தினால் வருந்தி வாடும் மக்களைக்கண்டு மனம் சகியாத அவ்வரசன் தனது குலகுருவான வசிஷ்டர் மூலமாக சனிபகவானின் வக்ரகதியால் இவ்வாறு நிகழ்கிறது என்பதை அறிந்து சினங்கொண்டு சனிபகவானுடன் போர்புரிய விண் எய்தினான். இதையறிந்த சனிபகவான் அவ்வரசனின் வீரத்தையும், அவர் மக்கள்பால் செலுத்திய மன இரக்கத்தையும் கண்டு மகிழ்ச்சி அடைந்து தசரதர் முன்தோன்றி நாடுவளம் பெற ஆசிகூறி தானும் வக்ரகதியினின்றும் நேர்மையடைந்து மானிலத்தில் மாரி நல்கும்படிச் செய்து மக்களை இன்புறச் செய்தார் என்று ஒரு வரலாறு கூறுகிறது.

எள்ளெண்ணெய் தீபம், எள்ளன்ன நிவேதனம், எள் தானம் கருப்பு வஸ்திரதானம் முதலியன சனிப்ரீதியாகும். இவ்வாறு சனிப்ரீதியான திரவியங்களால் சனிபகவானை வழிபடுகிறவர்கள் க்ரஹபீடையினின்றும் விடுதலைபெற்று இன்பத்தை நுகர்வார்கள்.

பொதுவாக ஒவ்வொருவருக்கும், ஜன்மராசிக்குப் பனிரெண்டு, ஜன்மராசி, ஜன்மராசிக்கு இரண்டாமிடம் ஆகிய இடங்களில் சனி பகவான் வரும்போது அவர்களுக்கு ஏழரை ஆண்டுச் சனி எனப்படும். அந்த நாட்கள் அந்த ராசிக்காரர்களுக்கு ஒரு சோதனைக் காலம் ஆயினும், அந்தக்காலங்களில் சனிக்கிழமை மற்றும் தனது ஜன்ம நக்ஷத்திரம் சனிக்கிழமை வரும் காலத்திலும் வன்னிப்பத்திரத்தினால் அர்ச்சனை செய்யச் செய்து எள்ளன்ன நிவேதனம் எள்ளெண்ணெய் தீபம் முதலியவைகளால் சனிபகவானை மகிழ்வித்தால், தானும், சனி பகவானால் ஏற்படும் இன்னல் நீங்கி மகிழ்வுபெறுவான்.

கோசாரம் என்பது – சூரியன் முதலிய கோள்கள் தன் தனது காலவரைப்படி மேஷம் முதலிய இராசிகளில் சஞ்சரிக்கும் நிலை. இம்முறையில் சூரியன் ஒவ்வொரு ராசியிலும் ஒருமாதம் இருந்து பிறகு அடுத்த ராசிக்குப் போவார். இஃதுபோல் சந்திரன் இரண்டரை நாள் வீதமும், செவ்வாய் ஒன்றரை மாதமும், புதன் ஒருமாதமும், குரு ஒரு வருஷமும், சுக்ரன் ஒருமாதமும், சனி இரண்டரை வருடமும், ராகு, கேது தனித்தனி ஒன்றரை வருஷமும் நின்று சஞ்சரிப்பார்கள்.

இந்த கோசார முறையில்:–

"முடவன்றான் ஜன்மத்தில் முன்னிய இரண்டு நான்கில்
திடமறும் எட்டில் பத்தில் சேர்ந்த பன்னிரண்டில் நின்றால்
இடன் மன்னர் பொருள் மாடாடு பெண்டணி மக்கள் சேதம்
அருமையும் பதியும் விட்டே யரசராலலைச்ச லாமே"

– சோதிட சிந்தாமணி.

ஜன்மராசி, அதற்கு இரண்டாம் ராசி, நான்காவது ராசி, எட்டாவது ராசி, பத்தாவது ராசி, பன்னிரண்டாவது ராசிகளில் சனிபகவான் வீற்றிருக்கும் காலம் அந்தந்த ராசிக்காரர்கள் முக்கரணத்துடன் சனிபகவானை துதித்து வழிபட நலம் பெறுவார்கள்.

"மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்,
பழைய வைதிக சைவம் பரக்கவே"

ஸ்ரீமாரியம்மன் மஹிமை

உலகில் தோன்றியுள்ள பலவிதப்பிறப்புகளுள் மானிடப் பிறவியே மிகச்சிறந்தது. மற்ற பிறவிகள் நன்மை–தீமை என்பவைகளைத் தெரிந்துகொள்ளாமல் வாழ்கின்றன. பசி வந்தபோது உண்டு, களைப்புற்றபோது தூங்குகின்றன. இம்மை மறுமைக்கு வேண்டியதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. அதற்கேற்ற பகுத்தறிவு அவற்றுக்கில்லை.

இத்தகைய மற்ற பிறவிகளுக்கு இல்லாத பகுத்தறிவு மனிதனுக்கு இருக்கின்றது. இதனால் மனிதனுக்கு ஒரு பெருமை.

உலகத்தில் கிடைக்க அரிதாக உள்ளது மூன்று; அவை, மனிதப் பிறவி, மோக்ஷ இச்சை, மகான்களுடன் சேர்ந்து வாழுதல் என்பது ஒரு முதியோரின் வாக்கு.

சுகம் உண்டாகட்டும், துக்கம் உண்டாகக் கூடாது என்றுதான் எல்லோராலும் விரும்பப்படுகின்றது. ஒரு மனிதனுடைய முயற்சியும் இருவகையில் எழும்புகிறது: ஒன்று இன்பத்தைப் பெற, மற்றொன்று துன்பத்தை நீக்க. இன்பத்தைப் பெறுவது மாத்திரம் போதாது. அது இன்பமாக ஆகாது. துன்பத்தை நீக்குவதும் இன்பம்தான். இந்த இரண்டும் ஒருசேரக் கிடைக்கும் இன்பந்தான் இன்பமாகும்.

இத்தகைய துன்பநீக்கத்தையும் இன்பப்பேற்றையும் பெற மனிதன் தன் பகுத்தறிவைக் கொண்டு முயற்சிக்கின்றான். இன்பம் பெறுகின்றான். பெருமுயற்சி செய்தும் சில இன்பங்கள் பெற முடியாமற்போகின்றது. சில சிறு முயற்சியால் அடையப்படுகின்றது. இது மனிதனின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி. அந்த சக்திதான் ஊழ்வினையின் சக்தி.

வினையின் வன்மையை வெல்ல வேண்டும். அவ்வாறு வென்றால் தடையற்ற இன்பம் கிடைக்கும். இத்தகைய தடையில்லாத இன்பத்தைப் பெற இறைவனின் அருள் வேண்டும்.

அன்பினால் இன்பத்தைப் பெறலாம் – இன்பமும் அன்பும் காரண காரியத்தொடர்புடையது. இறைவனே இன்ப அன்பு வடிவன்.

உலகிற்கு முழுமுதற் கடவுளாக விளங்குபவர் அம்மையப்பரான சிவபெருமான். அவனை விட்டுப்பிரியாது அவனுடனாய் நிற்கும் அருள் அம்மை எனக் கூறப்படுகின்றது. அந்தச் சக்தியின் சேர்க்கையினால் சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலைச் செய்கின்றார். அந்தச் சக்தியின் சேர்க்கையில்லையேல் சிவன் ஒன்றும் செய்ய முடியாதவன் ஆகின்றான்.

சிவம் சக்தியோடு சேரில் எத்தொழிலும் நடத்தவல்லதாம். இச்சக்தி பிரிந்திடில் அச்சிவம் அசைதற்கும் அரியது என்று சுருதி முழங்கா நிற்கும்.

அக்னிக்குச் சூடுபோலவும், தினகரனுக்குச் சந்திரிகை போலவும் சிவபெருமானுக்குச் சக்தி இணை பிரியாமல் கூடத் தோன்றியவள்.

ஏகாநேகத்வதாம் யாதி ஶிவஶக்திருபாதித:॥

– சிவாகமம்.

சிவசக்தி ஒருத்தியாயினும், உபாதிபேதத்தால் அனேக சக்தியாகிறாள்.

ஒன்றதா இச்சாஞானக் கிரியையென்றொரு மூன்றாகி
நின்றிடுஞ் சக்தியிச்சை யுயிர்க் கருணேசமாகும்
நன்றெலா ஞானசக்தி யானயந் தறிவனாதன்
அன்றருட் கிரியை தன்னாலாக்குவ னகிலமெல்லாம்.

– சிவஞான சித்தியார்

பராசக்தியானது பொதுவகையால் ஒன்றாய், இச்சை, ஞானம், கிரியை என்னும் வியாபாரபேதத்தால் மூவகைப்படும். உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளிக்கும் பொருட்டுப் பரமசிவன் கொண்ட கருணை இச்சாசக்தியும், அதற்குச் செய்ய வேண்டிய உபாயங்களை அறியும் அறிவு ஞானசக்தியும், அவ்வுபாயங்களைச் சங்கற்பித்துச் செய்யும் சங்கற்பம் கிரியாசக்தியுமாம்.

சிவசக்தி ஒருவனையே பரமயோகிகள் முனிபுங்கவர்கள் பலவாறாகக் காண்கிறார்கள் என்று ப்ருஹந்–நாரதீயம் என்ற நூல் கூறுகிறது. அதாவது உமை, லக்ஷ்மி, பாரதீ, கிரிஜா, பாலா, அன்னபூர்ணா, பகளா, காயத்ரீ, துரகாரூடா, காளீ, சியாமா, சின்னமஸ்தா, பத்ரகாளீ மாயாப்ரகிருதி என்று,

நாயகி நான்முகி நாராயணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயாகி யாதியுடையாள் சரண மரணமக்கே.

– அபிராமி பட்டர்

இறைவி, சரஸ்வதி, நாராயணி, கைத்தாமரையின்கண் புஷ்ப பாணங்களைத் தரித்தவள். சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சு வாயகி மாலினி = நல்லபாம்பை மாலையாகக்கொண்டவள், வாராகி, சூலத்தை உடையவள், மாதங்கி = மதங்க முனிவரின்

புத்திரி இவ்வாறு உமா தேவியே எல்லாச் சக்திகளாயும் விளங்குகிறாள், இத்துணை பெருமைவாய்ந்த எண்ணிறந்த சக்திகளுள் ஒருத்தியே மகாமாயீ என்றும் மகாமாரீ என்றும் கூறப்படும் சத்தியும் ஆவாள்.

ஊஹாஊயா ஊஹாகாஸீ ஊஹாஊாஸீ க்ஷுூயா த்ருஷா॥

என்று ஸ்ரீதேவீ மாஹாத்ம்யம் கூறுகின்றது.

ஆதிசத்தியானவள் சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டும் துஷ்டநிக்ரஹத்தின் பொருட்டும் பல வடிவங்களில் தோன்றுகிறாள்.

சண்டன், முண்டன் என்ற இரண்டு அரக்கர்களை கொன்றதனால் சாமுண்டீ என்ற பெயர்பெற்றாள்.

மஹிஷாசுரனை வதம்செய்ததால் மஹிஷமர்த்தினி (துர்கை) என்ற பெயர்பெற்றாள். இவ்வாறே மாரன் என்ற அசுரனை மரணம் செய்வித்ததனால் மாரி என்ற பெயர்பெற்றாள்.

முன்னொரு சமயம் மாரன் என்னும் ஒரு அசுரன் தன் தவத்தின் வலிமையால் யாராலும் மரணம் அடைவிக்க முடியாத பேறுபெற்று அதன்பயனாக தேவர் முதலிய யாவரையும் துன்புறுத்தினான். தருமங்களுக்கு இடையூறு செய்தான். தேவர்குழு தேவியிடம் சென்றுமுறையிட்டது.

இத்தம் யதா யதா பாதா தானவோத்தா பவிஷ்யதி॥
ததா ததாவதீர்யாஹம் கரிஷ்யாம்யரிஸங்க்ஷயம்॥

– ஸ்ரீதேவீ மாஹாத்ம்யம்

அரக்கர்களின் அட்டகாசம் எப்போது எப்போது உண்டாகிறதோ, அப்போதைக்கு அப்போது நான் அவதரித்து சத்துருநிக்ரஹம் செய்கிறேன் என்ற அருள்வாக்கின்படி பராசக்தி

மஹாமாயை என்றவடிவங்கொண்டு விஸ்போடம் (வைசூரி) என்ற நோயை அந்த மாராசுரனுக்கு உண்டாக்கி அவனை சங்காரம் செய்து உலகைக்காத்தாள். மஹாமாரி என்ற பெயரையும் பெற்றாள்.

இந்த மஹாமாரியை மனஉறுதியுடன் துதிப்பவர்களுக்குத் தாயுள்ளம் போல் குளிர்ந்த அன்பையளிப்பவளாக இருப்பதனால் சீதளாதேவி என்ற பெயரும், இந்திரனின் கண்கள் போல ஆயிரம் கண்களைத் தோற்றுவிப்பவளாய் விளங்குவதால் இந்திராக்ஷி = ஆயிரம் கண் உடையாள் என்றும் துதிக்கப்படுகிறாள். அவளுடைய திருவுருவத்தை மனதினால் தியானம் செய்பவர்களுக்கு ஜுரம், விஸ்போடம் முதலிய நோய்கள் அணுகாது.

𑌹𑌸𑍍𑌤𑍈 𑌪𑌾𑌶𑌂 𑌕𑌪𑌾𑌲𑌂 𑌛𑍁𑌰𑌿𑌕𑌸𑌹𑌿𑌤𑌡𑌮𑌰𑍁𑌕𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌕𑍇𑌶𑌂 𑌕𑌰𑍍𑌣𑍍𑌯𑌂
𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑌾𑌟𑌙𑍍𑌕𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌸𑍍𑌤𑌨𑌭𑌰𑌯𑍁𑌗𑌲𑌂 𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌂 𑌵𑌹𑍍𑌨𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌮𑍍।
𑌰𑍌𑌦𑍍𑌰𑌂 𑌵𑍀𑌰𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂 𑌜𑍍𑌵𑌰𑌭𑌯𑌹𑌰𑌿𑌤𑌂 𑌸𑍍𑌫𑍋𑌟𑌕𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌦𑌾𑌤𑍍𑌰𑍀𑌂
𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌨𑌿𑌮𑍍𑌬𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌥𑌿𑌤𑌶𑌰𑌣𑌨𑌿𑌲𑌯𑌂 𑌶𑍀𑌤𑌲𑌾𑌦𑍇𑌵𑌿 𑌵𑌨𑍍𑌦𑍇॥

– (தியான ரத்னாவளி)

கத்தி, உடுக்கு, பாசம், கபாலம் என்ற நான்கு ஆயுதங்களுடன் கூடிய நான்கு திருக்கரமுடையவள். அக்னி ஜ்வாலை போன்ற மேல்நோக்கிய பூங்குழலை உடையவள். இரண்டு தாடங்கங்களை அணிந்திருப்பாள். கொங்கையின் பாரத்தை அடக்கிக்கட்டிய நற்கஞ்சுகம் உடையவள். அக்கினிக்கு ஒப்பான கண்களுடன் உருத்திர வடிவமுடையவள். வேம்பின் அடியில் வீராசனத்தில் அமர்ந்து அன்பர்களுக்கு அருள் வழங்கும் பராசக்தி என்று மஹாமாரியின் வடிவத்தை அன்பர்கள் தியானித்து விரும்பிய வரம் பெறவே சிவாகமத்தினால் இவ்வாறு தியானம் விளக்கப்பட்டிருக்கிறது.

சகல செல்வங்களையும் தருபவளான ஜோகூர்பாரு ஸ்ரீ இராஜமாரியம்மனுக்கு கும்பாபிஷேகம் செய்பவர்களுக்கும், துதித்து வணங்குபவர்களுக்கும், கைங்கர்யம் செய்பவர்களுக்கும் கருணைகொண்ட தேவியானவள் அறிவு, சந்தானம், நோயின்மை, கல்வி, தனம், தான்யம், அழகு, புகழ், பெருமை, இளமை, வலிமை, துணிவு, வாழ்நாள், வெற்றி முதலியவைகளை அளிப்பாள்.

ஸ்ரீ வீரபத்ரர்

நூலாசிரியர்

இந்நூலாசிரியர் சிவபுரம் சிவஸ்ரீ **S. சுவாமிநாத சிவாசார்யார்** அவர்கள், சிவபுரம் என்ற திருமுறைத் திருத்தலத்து இறைவன் சிங்காரவல்லி உடனுறை சிவகுருநாதப் பெருமானைத் தொட்டுத்திரு முழுக்காட்டும் ஆதிசைவ வம்சத்தில் அவதரித்தவர்.

வேதம், சிவாகமம், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சில்பசாஸ்திரம், ஜோதிடம் ஆகிய பல துறைகளிலும் ஆழங்கால் பட்டவர்.

தருமை ஆதீனம் 24வது குருமஹாஸந்நிதனத்தின் அருளாணைக்- கிணங்கத் திருமடத்தில் 1942ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வேதசிவாகம பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டு, தனது இறுதி மூச்சுவரைப் பணியாற்றி வாழ்வை சிவாகம வளர்ச்சிக்கும், ஆசார்யர்களை உருவாக்குவதற்கும் அர்ப்பணித்தவர். நூற்றுக் கணக்கணக்கான மாணவர்களை உருவாக்கியவர்.

ஏராளமான அன்பர்களுக்கு சிவதீக்ஷை செய்துவைத்து வழிகாட்டியவர்.

சிவாகமக் கிரியைகள் பலவற்றைப் புதுமைப்படுத்திச் செய்து காட்டியவர்.

தருமை ஆதீனத் திங்கள் இதழான **ஞானசம்பந்தம்,** ஆதிசைவர் மாத இதழான **சைவாலயம்,** யாழ்ப்பாணத்திலிருந்து வந்த **சைவசாஸ்த்ர பரிபாலனம்** ஆகியவற்றிலும் **தமிழகம், இலங்கை, மலேஷியா** ஆகிய நாடுகளிலுள்ள **திருக்கோயில் கும்பாபிஷேக மலர்கள்** மற்றும் **விழா மலர்கள்** பலவற்றிலும் பல அரிய கட்டுரைகள் எழுதியவர். அவர்கள் எழுதிய கட்டுரைகள் சிலவற்றின் தொகுப்பே **ஆகமச் செல்வம்** எனும் இந்நூல்.